

# காதலின் தீபம் - I

Ramya Rajan

ரம்யா ராஜன்

2013

1

திங்கள் அன்று காலை R.K.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அலுவலகம் பரபரப்பாக இயங்கி கொண்டிருந்தது. அப்போது அங்கே ஒரு பைக் வந்து நிற்க, அதிலிருந்து இறங்கியவன் தான், நம்ம ஹீரோ ”கௌதம் வாசுதேவன்”. பனை மரத்தில் பாதி உயரமும்.... அதற்கேற்ற உடலமைப்பும்.... மாநிறத்தில் கலையான முகத்தோடும், பார்பதற்க்கு நிஜமாக ஹீரோ மாதிரி தான் இருப்பான். வேகமாக உள்ளே வந்தவன், அவனுடைய கேபின்னுக்கு வந்ததும், இன்டெர்காம்ல் சூப்ர்வைசரை வரச்சொன்னான்.

அவர் வந்ததும் கௌதம் ”என்ன நெனச்சிட்டு இருக்கீங்க மனசுல? R.K.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்ஸ இழுத்து மூடி பெரிய பூட்டு போடலாமன்னு நெனச்சிட்டு இருக்கீங்களா...?”என்று கோபமாக கேட்க.... சூப்ரவைசர் “அப்படியெல்லாம் எதுவும் இல்லை கௌதம் சார்”

கௌதம் ”என்ன இல்லை..., நேத்து தாம்பரம் சைட்ல கஸ்டமர்ட்ட என்ன பேசுனீங்க. உங்களுக்கு அவசரமா வீட்டு வேலை முடிக்கனும்னா வேற பில்டர்ஸ் பார்த்துக்க சொன்னீங்களா இல்லையா?”



Ramya Rajan

*"ஆமா சார், அது வந்து.... " என்று சூப்ரவைசர் இழுக்க....*

*கௌதம் "நிறுத்துங்க.... எனக்கு எந்த விளக்கமும் வேண்டாம். கஸ்டமர்ஸ் அப்படி தான் அவசரபடுவாங்க, அவங்ககிட்ட நாம தான் பொறுமையா நிலைமைய எடுத்து சொல்லனும், அதவிட்டுட்டு கோபபட்டா...கம்பெனிய இழுத்து மூட வேண்டியது தான். எங்க அப்பாவும், மாமாவும் கஷ்ட்டப்பட்டு உருவாக்கின கம்பெனி இது, இனிமேலாவது பார்த்து நடந்துகோங்க" என்றவன் சரி போங்க என்று சொல்ல....*

*சூப்ரவைசர் "சாரி சார், இனிமே இப்படி நடக்காது" என்றவர் ஆளை விட்டால் போதும் என்று அந்த இடத்தைவிட்டு வேகமாக வெளியே சென்றார்.*

*சூப்ரவைசர் வெளியே போனதும், தானும் வெளியே வந்த கௌதம், அப்போதுதான் வெளியே நின்ற ராமமூர்த்தியை பார்த்தான், ஆனால் அவர் அங்கே நிற்ப்பதை பார்க்காத மாதிரியே வெளியே போய்விட்டான்.*

*ராமமூர்த்தி சிரித்துக்கொண்டே, நேராக தன்னுடைய நண்பன் கிருஷ்ணகுமார் கேபின்னுக்கு சென்றார்.*

*"டேய் கிருஷ்ணா... நம்ம கௌதம் நம்மைவிட நல்லாவே நம்ம கம்பெனிய பார்த்து கொள்கிறான், இனிமே எனக்கு கவலையே இல்லை" என்று சொன்னதும்,*

***கிருஷ்ணகுமார் தாங்கள் எப்படி இந்த கம்பெனிய ஆரம்பித்தோம் என்று நினைத்து பார்த்தார்.***

***R.K. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சென்னையில் இருக்கும் பெரிய கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனிகளில் இதுவும் ஒன்று. ஆரம்பித்த எட்டு ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சி அடைந்த நிறுவனம்.***

***இதன் உரிமையாளர்கள் ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் நண்பர்கள் மட்டும் அல்ல, தூரத்து உறவினர்களும் தான். மாமன், மச்சான் முறை சிறு வயது முதல் கல்லூரி வரை ஒன்றாக படித்தாலும், ராமமூர்த்தி வேலை பார்த்தது சென்னையில், கிருஷ்ணகுமார் வேலை பார்த்தது டெல்லியில். திருமணம் முடிந்து தொடர்பில்லாமல் இருந்த இருவரும் ஒன்பது ஆண்டுகள் முன்பு ஒரு விழாவில் சந்தித்து, தங்கள் நட்பை புதுப்பித்து கொண்டனர்.***

***அதன் விளைவாக இருவரும் சேர்ந்து ரியல் எஸ்டேட் மற்றும் கன்ஸ்டரக்ஷன் கம்பெனி ஆரம்பிப்பது என்றும் சென்னையில் ரியல் எஸ்டேட் தொழில் நன்றாக நடப்பதால்... அங்கேயே ஆரம்பிக்கலாம் என்றும் முடிவு செய்து கொண்டனர். அதன்படி கிருஷ்ணகுமார் குடும்பம் சென்னையில் தாம்பரம் பகுதியில் குடிபுகுந்தது. கிருஷ்ணகுமாருக்கு சாருமதி என்ற மனைவியும், கௌதம், ஷ்ருதி என்ற பிள்ளைகளும் உள்ளனர்.***

Ramya Rajan

***ராமமூர்திக்கு.... ஜானகி என்ற மனைவியும், முரளி, ப்ரியதர்ஷினி என்ற பிள்ளைகளும் உள்ளனர். இவர்கள் வீடு இருப்பது சென்னை க்ரோம்பேட்டில்.***

***ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் கம்பெனி ஆரம்பித்த முதல் சில வருடங்கள் சிரமபட்டாலும், தங்களின் அயராத உழைப்பினால், நல்ல வளர்ச்சி அடைந்தனர்.***

***ஆனால் மிகப்பெரிய வளர்ச்சி அடைந்தது, கடந்த நான்கு ஆண்டுகளாக தான். சரியாக சொல்லப்போனால்... கௌதம் அவர்களுடன் தொழிலில் இணைந்த உடன்தான்.***

***கௌதம் B.E., சிவில்இன்ஜினியரிங் படித்தவன், திறமையானவன், கட்டுமான தொழிலில் அவனுக்கு இருந்த ஆர்வத்தால், B.E படிக்கும் போதே.... தங்கள் நிறுவனத்திலேயே தன்னையும் இனைத்து கொண்டான். அதோடு M.B.A மார்க்கெட்டிங்கும் படித்தவன்.***

***மாலையில் அலுவலகம் வந்த கௌதம் தன் உயிர் நண்பனும், R.K.கன்ஸ்ட்ரக்ஷன்ஸின் ஆர்க்கிடெக்ட்டுமான, கார்த்திக்கிடம் "டேய் கார்த்தி, எனக்கு அந்த பெருங்களத்தூர் அப்பார்ட்மெண்ட் எளிவேஷேன் பிளான் வேணும்டா, நாளைக்கு கொடுக்க முடியுமா...?"***

***கார்த்திக் "ம்ம்.. கண்டிப்பா கௌதம்"அப்புறம் நம்ம காலேஜ்ல இருந்து இன்னைக்கு உன்னை பார்க்க வந்திருந்தாங்களே எதுக்கு"***

*"நம்ம காலேஜ் லைட் மியூசிக் காம்படிஷனுக்கு என்னை போய் ஜட்ஜா கூப்பிடுறாங்கடா" என்று வேண்டா வெறுப்பாக கௌதம் சொல்ல….*

*"சோ வாட்?… நீ சூப்பரா பாடுவ, நம்ம காலேஜ் படிக்கும் போது, எல்லா இன்டெர் காலேஜ் லைட் மியூசிக் காம்படிஷன்லையும் நீ தான் முதல் பரிசு வாங்குவ, அது தான் கூப்பிடுறாங்க" என்று தன் நண்பனின் பெருமைகளை கார்த்திக் அடுக்கினான்…*

*கௌதம் "போடா … எனக்கு போக இஷ்டமில்லைடா… "*

*"கௌதம்…. நீ அங்க தான் B.E படிச்சே, M.B.A -வும் அங்க தான் முடிச்ச. போதாகுறைக்கு கொஞ்சம் நாள் முன்னாடி வரை எதாவது சாக்கு சொல்லிட்டு, காலேஜ் போவ… இப்ப என்ன…?" என்ற கார்த்திக் தொடர்ந்து….*

*"பிரின்சி…. நினைச்சிருப்பாரு வெளியே இருந்து யாரையோ கூப்பிடுறதுக்கு… தினமும் காலேஜ் வெளியே நிற்கிற உன்னையே கூப்பிடலாமன்னு….செலவும் மிச்சம்…. நீ என்ன நினைக்கிற…?" என்று கௌதமிடமே அபிப்ராயம் கேட்டான்.*

*"கொழுப்பா… நான் தான் இப்ப போறது இல்லையே" என்று கௌதம் பதில் சொல்ல….*

கார்த்திக் “அவருக்கு தெரியுமா, நீ அப்ப.. அப்ப,, அந்நியன் மாதிரி

மாறிட்டே இருப்பேன்னு...ஏன்டா முறைக்குற? இதுக்கெல்லாம் வேற ஆளை பாரு....ஒழுங்கா, உன்னை கூப்பிட்ட மரியாதைக்கு காலேஜ் போயிட்டு வா.... ”

”சரி போறேன், ஆனா நீயும் என் கூட வரணும்” என்று கௌதம் கார்த்திக்கு உத்தரவுயிட்டான்.

”கண்டிப்பா வரேன், நீ என் நன்பேண்டா கௌதம், வர மாட்டேன் என்று சொல்வேன்னா” என்ற கார்த்திக்கின் ஆர்வத்தை பார்த்த கௌதம்”நீ எதுக்கு இவ்வளவு ஆர்வமா வரேன்னு தெரியும், அங்க வந்து எதாவது பாசமலர் படம் காட்டின பிச்சிடுவேன்” என்று மிரட்ட....

”நாங்க காட்டினாலும், நீ பார்த்திட்டு தான் மறு வேலை பார்ப்ப, போடா.... போய் வேலைய பாரு” என்று அவன் வேலையை பார்க்க ஆரம்பித்தான் கார்த்திக்.

”சரி நாளைக்கு சாயங்காலம், நான்கு மணிக்கு ரெடியா இரு” என்று சொல்லிவிட்டு கௌதம், அந்த இடத்தை விட்டு சென்றான்.

மறுநாள் காலேஜ் வாசலில் அடி எடுத்து வைத்த கௌதமிற்கும், கார்த்திக்கும், அவர்களின் கல்லூரி காலங்கள் நினைவுக்கு வந்தது.

Ramya Rajan

***"கல்லூரியில் கௌதமிற்க்கு, கிடைத்த வரவேற்ப்பை பார்த்து கார்த்திக், என்னடா கௌதம், உன்னை எதோ தலைதீபாவளிக்கு வந்த மாப்பிள்ளை மாதிரி வரவேற்கிறாங்க" என்று நக்கல் அடிக்க...***

***கௌதம், கார்த்திக்கை பார்த்து முறைத்துவிட்டு, ஆடிட்டோரியம் உள்ளே சென்றான்.***

***அங்கே கௌதமை மேடைக்கு அழைத்து... அவனை வாழ்த்தி பேசி... பாட சொல்ல... அவனும் உடனே பாடினான், என்ன பாட்டு தெரியுமா?...***

***"காதல் ரோஜாவே எங்கே நீ எங்கே***

***கண்ணீர் வழியுதடி கண்ணே***

***காதல் ரோஜாவே எங்கே நீ எங்கே***

***கண்ணீர் வழியுதடி கண்ணே***

***கண்ணுக்குள் நீ தான் கண்ணீரில் நீ தான்***

***கண் மூடி பார்த்தால் நெஞ்சுக்குள் நீ தான்***

***என்னானதோ எதானதோ சொல் சொல்"***

***கௌதம் ஒவ்வொரு வரியையும் ரசித்து பாடினான், எல்லோரும்***

Ramya Rajan

***அவன் குரலில் மயங்கி இருக்க, பாடி முடித்த கௌதம், கார்த்திக் பக்கத்தில சென்று உட்கார்ந்தான்.***

***"டேய், பாடும்போது உன்னோட கண்கள் சுத்தி... சுத்தி... யாரையோ தேடிட்டு இருந்த மாதிரி இருந்ததே" என்று கார்த்திக் கௌதமை வம்பிழுக்க....***

***கௌதம் "உதை... வாங்க போரடா..... "***

***"ஓகே... நோ டென்ஷன்... வந்த வேலைய பாரு..." என்று கார்த்திக் வெற்றிகமாக பின் வாங்கினான்.***

***கௌதமிடம், லைட் மியூசிக்ல் பாட போறவங்களோட பெயர் பட்டியலை... ஒருவர் வந்து கொடுக்க...அவன் அதில் இருந்த பெயர்களை ஒவ்வொன்றாக பார்த்து கொண்டே வந்தவன்,***

***அதில் இருந்த ஒரு பெயரை பார்த்து அதிர்ச்சி அடைந்தான், அந்த பெயரை கார்த்திக்கிடம் தொட்டு காட்ட,*** *R.ப்ரியதர்ஷினி* ***என்ற பெயரை பார்த்ததும், வாயை பிளந்த கார்த்திக்,***

***"ப்ரியா... பாடப் போறாளா....*** *Why this kollaveri Priya?....* ***டேய் கௌதம்... உன்ன நம்பி காலேஜ் வந்ததுக்கு தண்டனையா....கண்ணுக்கு குளிர்ச்சியா கலர், கலரா பொண்ணுங்கள பார்க்கலாம்ன்னு வந்தா.... இப்படி பாட்டுன்னா என்னனே***



Ramya Rajan

***தெரியாதவ....பேர் எல்லாம் லிஸ்ட்ல இருக்கு.....என்னடா கௌதம் நடக்குது இங்க?" என்று கொதிக்க ....***

***கௌதம்.... எனக்கு யாரு பாடுனா என்ன, என்ற நினைப்பில் மேடையை பார்க்க, அப்போது அங்கே போட்டி ஆரம்பம் ஆனது,***

***ஒவ்வொருத்தரா மேடை ஏறி பாட, கடைசியில் மேடை ஏறிய ப்ரியாதர்ஷினி, பிங்க் கலர் டிசைனர் புடவையில் புதிதாக பூத்த...பன்னீர் ரோஜா மாதிரி இருந்ததாள். கௌதம் டோட்டலி ப்ரீஸ், மைக் முன்னாடி வந்த ப்ரியா, கௌதமை பார்த்து....***

***"ஹே துஷ்யந்தா..., ஹே துஷ்யந்தா...***

***உன் சகுந்தலா தேடி வந்தா ...***

***ஹே துஷ்யந்தா, நீ மறந்ததை***

***உன் சகுந்தலா மீண்டும் தந்தா... "***

***என்று பாட, பாட்டை கேட்ட கௌதமின் முகத்தை பார்த்த கார்த்திக்கால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை.....***

***கௌதமிற்க்கு மட்டும் நெற்றிக்கண் இருந்திருந்தால், ப்ரியாவை சுட்டு எரிச்சிருப்பான், அவ்வளவு கோபம்...அந்த பார்வையில், ஆனா... நம்ம ப்ரியா, எதோ கௌதம், கண்ணில் இருந்து காதல் வழிகிற மாதிரி தொடர்ந்து பாடியவள், அவனை***

***பார்த்து.....***

Ramya Rajan

”பார்த்த நியாபகம் இல்லையோ

பருவ நாடகம் தொல்லையோ

வாழ்ந்த காலங்கள் கொஞ்சமோ

மறந்ததே இந்த நெஞ்சமோ” என்று

நெகழ்ந்த குரலில் பாடி முடிக்க, அரங்கம் முழுவதும் கைதட்டல். ஒரு வழியா நிகழ்ச்சி முடிந்து, ரொம்ப நல்லா பாடின வேற இரண்டு பேருக்கு பரிசை கொடுத்துவிட்டு, வெளியே வந்த கௌதம், கார்த்திக்கோடு கார் பார்கிங் சென்றான்.

அங்கே ப்ரியா, நின்று கொண்டிருந்தாள். ப்ரியா கௌதமை பார்த்துக்கொண்டே, ”ஹாய் கார்த்திக் அண்ணா” என்றாள்.

கார்த்திக் “ஹாய் ப்ரியா, உனக்கு கண்ணில் ஒன்றும் பிரச்சனை இல்லையே? ஏன் கேட்கிறேன்னா... பார்க்கிறது ஒருத்தர, பேசுறது வேறோருத்தரிடம்”

ப்ரியா சிரித்துக்கொண்டே... “போங்கண்ணா.....எப்பவும் உங்களுக்கு விளையாட்டு தான்” (கௌதம் ப்ரியாவை முறைத்துக்கொண்டே காரில் போய் உட்கார்ந்துவிட்டான்)

கார்த்திக் “நீ இப்ப எப்படி வீட்டுக்கு போவ ப்ரியா?...”

*ப்ரியா "ஆட்டோவுல தான் போகணும்... "*

*"நைட் நேரத்துல... தனியா போக வேண்டாம். எங்க கூட காரில் வா" என்று கார்த்திக், ப்ரியாவுக்கு கார் கதவை திறந்து விட்டான்.*

*ப்ரியா, கௌதமை பார்க்க... அவன் வேற எங்கோ பார்த்து கொண்டிருந்தான்.*

*கார்த்திக் "நீ வா, நான் இருக்கேன் இல்ல.... அவன் ஒன்னும் சொல்லமாட்டன்" என்று சொல்ல....*

*ப்ரியா சரி என்று காரில் ஏறினாள்.*

*கௌதம் எதுவும் பேசாமல் காரை ஓட்ட, கார்த்திக், ப்ரியாயாவை வம்பு இழுத்தான். "நீ இன்னைக்கு என்ன ரொம்ப ஏமாத்திட்ட, ப்ரியா".*

*"நான் உங்களை ஏமாத்திட்டேனா... எப்படி?"*

*"உன் பாட்டை கேட்டு முட்டை, தக்காளி எல்லாம் வரும், அதை வச்சி இன்னைக்கு நைட் டின்னெர் முடிச்சிடலாம்ன்னு நினைச்சேன், இப்படி ஏமாத்திட்டியே" என்று கார்த்திக் வருத்தப்பட....*

ப்ரியா கார்த்திக்கை முறைத்தாள்,

கார்த்திக்"ஏன் ப்ரியா... நீ சத்தமா பேச கூட மாட்ட .... இப்ப என்ன பாட்டெல்லாம் பாடற..... ஒரு வேலை.... நீ இதுக்கு முன்னாடி பாடி... நான் தான் கேட்டதில்லையோ" என்று கார்த்திக் வலைவிரிக்க....

"ச்ச ச்ச ..நான் இப்ப தான் முதல் தடவை பாடியிருக்கேன்" என்று ப்ரியா கார்த்திக்கின் வலையில் விழ....

"மாட்டினியா, அப்ப கௌதம் தான் ஜட்ஜா வரான் என்று தெரிஞ்சதால பாடியிருக்க கரெக்டா... " என்றான் கார்த்திக்,

ப்ரியா பதில் எதுவும் சொல்லாமல், கண்களால் கார்த்திக்கிடம் கெஞ்ச, அவன் ஓகே பொழச்சி போ என்று பேசாமல் இருந்தான்.

ப்ரியா, கௌதமை பார்க்க, அவன் முகம் கல் மாதிரி இருந்தது. ப்ரியா மனசுக்குள், இவன் எப்ப தான் மலை இறங்க போறான்னோ என்று நினைத்தாள்,

கௌதம், காரை தாம்பரத்தில் இருக்கும் R.K.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் வாசலில் நிறுத்திவிட்டு, எதுவும் பேசாமல், இறங்கி ஆபீஸ் உள்ளே செல்ல....,

*அதுவரை அவனுடைய உதாசீனத்தை பொறுத்த ப்ரியாவால், அதற்க்கு மேல் முடியாமல் அழுதாள்.*

*கார்த்திக் பதறி போய் ”ப்ரியா, அவனை பற்றி என்னைவிட உனக்கு நல்லா தெரியும்....அப்புறம் இப்படி அழலாமா சொல்லு....அவன் உன் மேல் உயிரையே வச்சிருக்கான்.... எதோ இப்ப உங்களுக்கு டைம் சரியில்லை.... சீக்கிரம் சரியாகிடும் கவலைபடாத.....கண்ணை தொட.. வா உள்ளே போகலாம்” என்று ப்ரியாவை அழைத்து கொண்டு உள்ளே சென்றவன், ப்ரியாவை அங்கே இருந்த சோபாவில் உட்கார சொல்லிவிட்டு, கௌதமின் கேபினுக்கு செல்ல, அவன் அங்கே தலையை பிடித்து கொண்டு அமர்ந்திருந்தான்.*

*கார்த்திக் இதுங்க ரெண்டும் 'தேறாத கேஸ்ன்னு' மனதிற்க்குள் நினைத்தவன் ”கௌதம்...” என்று அழைக்க....*

*”ப்ளீஸ் கார்த்திக், நீ என்ன சொல்ல போறேன்னு எனக்கு தெரியும்...ஆனா இப்ப என்னால எதுவும் பண்ண முடியாது.... விட்டுடு” என்றவன் கண்கள் கலங்கி சிவந்திருக்க,*

*கௌதமை முறைத்துக்கொண்டே கார்த்திக் வெளியே செல்ல, அங்கே ப்ரியாவும், அவள் அப்பாவோடு, வீட்டுக்கு*

*செல்ல கிளம்பி கொண்டிருந்தாள்.*

*தன்னுடைய வீட்டுக்கு வந்த கௌதமிற்க்கு, ப்ரியாவின் அழுத முகமே கண்ணில் இருந்தது, தூங்க முடியாமல் தவித்தான்.*

***யாரிந்த ப்ரியா? அவள் தான் கௌதமின் உயிர் என்றால்...இப்போது இருவருக்கும் இடையில் என்ன பிரச்சனை? ஏன் கோபம்? என்று தெரிந்து கொள்ள, ஒரு ஒன்பது எட்டு வருடங்கள் பின்னோக்கி செல்வோமா...***

Ramya Rajan

2

**ஒன்பது வருடங்களுக்கு முன் ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் சென்னையில் தங்கள் கம்பெனியை தொடங்கிய போது, ராமமூர்த்தியின் குடும்பம் சென்னையில் இருந்ததால், அவர்களுக்கு மாற்றம் என்று எதுவும் இல்லை.**

**ஆனால் கிருஷ்ணகுமார் குடும்பம் டெல்லியில் இருந்ததால், அவர்களுக்கு அங்கிருந்து இங்கு மாற்றி கொண்டு வர, நிறைய பிரச்சனை இருந்தது. கௌதம் இந்த ஆண்டு பன்னிரெண்டாம் வகுப்பு செல்வதால், அவன் தான் மட்டும் இங்கேயே ஹாஸ்டலில் தங்கி, பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து விட்டு வருகிறேன் என்று சொல்ல கௌதமிற்க்கும், அவன் அம்மா சாருமதிக்கும், இடமாற்றம் குறித்து தினமும் வாக்குவாதம் நடந்தது.**

**சாருமதி "நீ என் பேச்ச கேட்கவே மாட்டேங்கிற, அப்பா மட்டும் இந்த வருஷம் சென்னைக்கு போகட்டும். நீ, நான், ஷ்ருதி மூணு பேரும் அடுத்த வருஷம் போகலாம் " என்று ஆரம்பிக்க....**

**"அம்மா சொன்னா புரிஞ்சிக்கோங்க, ஷ்ருதி அடுத்த வருஷம் டென்த். அதனால இந்த வருஷம் போனா தான் அட்மிஷன் கிடைக்கும், நாம இங்கிருந்து...அப்பா அங்கிருந்தா...அப்பாவுக்கு ரொம்ப கஷ்டம்மா இருக்கும், அதவிட நான் மட்டும்.... இங்க ஹாஸ்ட்டல்ல இருக்கறது ரொம்ப நல்லது....என்னை பத்தி கவலை**

படாதிங்க....ஒரு வருஷம் தான் ...சீக்கிரம் போய்டும்" என்று கௌதம் சொல்ல,

அதற்க்கு மேல் சாருமதியால் மறுக்க முடியாமல்"நீ ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும் கௌதம்" என்றார்.

"கண்டிப்பாம்மா, நீங்க கவலைபடாம போயிட்டு வாங்க" என்றான் கௌதம்.

அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்த போது, அந்த வீட்டின் கடைக்குட்டி ஷ்ருதி அங்கே வந்தவள்" என்ன ஒரே பாச மழை தான் போல அம்மாவும்...பையனும்...ஒரே கொஞ்சல்ஸா இருக்கு....நானே டெல்லிய விட்டுபோறேன்னு கவலையா இருக்கேன், இதுல உங்க இம்சை வேற" என்று அலுத்துக்கொள்ள.

"உனக்கு தான் கஷ்டம் ஆனா... இங்க நிறைய பேருக்கு ரொம்ப சந்தோஷம், நீ போறது சென்னைக்கு... அங்க நம்ம சொந்தகாரங்க நெறைய பேர் இருக்காங்க.... அதனால அங்க போயாவது பொண்ணா லட்சணமா இரு .... தலை முடியை பாரு ...... பையன் மாதிரி" என்றவன் தொடர்ந்து,

"அம்மா நேத்து என் ப்ரெண்ட் சொன்னான், உன் தம்பிய ரோட்ல பார்த்தேன்னு, ஆளை பார்த்தா... பொண்ணா... பையனா என்று கூட தெரியலை" என்று ஷ்ருதியை கௌதம் வம்பு இழுக்க....

"டேய் அண்ணா… கொழுப்பாடா… உனக்கு… நானும் அப்போதிருந்து பார்க்கிறேன்…என்ன ரொம்ப ஓவரா பேசுற… உன் ப்ரெண்ட போய் கண் டாக்டர பார்க்க சொல்லு" என்றாள் ஷ்ருதி கடுப்புடன்.

"அவன் போய் கண் டாக்டரை பார்க்கிறது இருக்கட்டும், நீ போய் முதல்ல கண்ணாடியை பாரு, அப்ப தெரியும், அவன் சொன்னது உண்மைன்னு" என்று கௌதம் சொன்னதும்....

"கரெக்டா சொன்ன கௌதம், தலைமுடியை பாய்கட் பண்ணிட்டு, எப்ப பாரு ஜீன்சும், டி-ஷர்ட்டும் போட்டா, பையென் மாதிரி இல்லாம... பொண்ணு மாதிரியா இருக்கும்" என்ற சாருமதி இனிமேயாவது ஒழுங்கா முடியை வளர்க்க பாரு என்றார்.

"அம்மா இதுதான் மா.... வசதியா இருக்கு, நிறைய தலைமுடி இருந்தா.... அதை சிக் எடுக்கணும்.... தலை பின்னனும் ...... ரொம்ப கஷ்டம் மா" என்று ஷ்ருதி சிணுங்க....

"ஆமா... உனக்கு தலைக்கு மேல வேலை இருக்கு, அதனால தலை வார நேரம் இல்லை தான்" என்ற சாருமதி சமையல் அறைக்கு செல்ல...



Ramya Rajan

***அவரை தடுத்த ஷ்ருதி "ஆமா மா.... எனக்கு நிஜமாவே நிறைய வேலை இருக்கு... என்னோட ப்ரண்ட்ஸ்க்கு எல்லாம் கிபிட் வாங்கணும்.... ட்ரீட் கொடுக்கணும்.....அதுக்கு எனக்கு பணம் வேண்டும்" என்றதும்***

***"ஒதை வாங்குவ ஷ்ருதி, அதெல்லாம் உன் பாக்கெட் மணியில கொடுத்துக்கோ" என்று சாருமதி திட்டவட்டமாக சொன்னதும், "அம்மா .. அம்மா .. ப்ளீஸ் மா.... பாக்கெட் மணி பத்தாது மா....." என்று ஷ்ருதி கெஞ்சி கொண்டே... அவர் பின்னே செல்ல....***

***"அதெல்லாம் எனக்கு தெரியாது, என்னை ஆள விடு, எனக்கு நைட்க்கு டிபன் பண்ணனும்" என்று சாருமதி உள்ளே சென்றதும், ஷ்ருதி ஹாலில் இருந்த சோபாவில் சென்று சோகமாக அமர்ந்தாள்.***

***ஷ்ருதியை பார்த்து கௌதமிற்க்கு பாவமா இருந்தது, ஷ்ருதி பக்கத்தில போய் உட்கார்ந்தவன், அவளிடம்"ஹே பொம்மகுட்டி, என்ன உம்முன்னு இருக்கே, அம்மா பணம் தரலைனா....இதுக்கு போய் யாராவது சோகமா இருப்பாங்களா.....நான் பணம் தரேன்" என்றதும்,***

***"நிஜமாவா... சோ ஸ்வீட் ....ரொம்ப தேங்க்ஸ்...."***

***என்று கௌதமை அணைத்து கொண்டு ஷ்ருதி துள்ளி குதித்தாள்....***

***"அதை விடு... நான் உன்கிட்ட இப்ப ஒன்று சொல்வேன், நல்லா கேட்டுக்கோ... சரியா... இப்ப நீ சின்ன பொண்ணு இல்லைடா....***

Ramya Rajan

நைந்த் படிக்கிற....புது ஊருக்கு போற.... இப்படியே விளையாட்டு தனம்மா இல்லாம... கொஞ்சம் மெச்சூர்டா நடந்துக்கோடா... ப்ளீஸ்" என்று கௌதம் தன் தங்கைக்கு அறிவுரை வழங்கியதும்,

"ஓகே கௌதம் அண்ணா" என்று சொல்லி ஷ்ருதி உள்ளே ஓடிவிட்டாள்.

கிருஷ்ணகுமாரின் குடும்பம், கௌதமை மட்டும் டெல்லியில் விட்டுவிட்டு, சென்னைக்கு வந்தது. அவர்களுக்கு ராமமூர்த்தியின் குடும்பம், தேவையான உதவிகளை செய்ய, ஜானகியும், சாருமதியும் தோழிகள் ஆகினர்.

மே ஒன்று உழைப்பாளர் தினம் அன்று.... *R.K.*கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் திறப்பு விழா..... ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் நெருங்கின உறவினர்களையும், நண்பர்களையும் மட்டுமே விழாவிற்க்கு அழைத்திருந்தனர்.

முரளி முதல் வருடம் *M.B.B.S* கோயம்புத்தூர் கல்லூரியில் படிக்கிறான். அவனுக்கு இப்போது தேர்வு என்பதால் அவன் விழாவிற்க்கு வரவில்லை.

விழா அன்று சாருமதியின் பார்வை, ப்ரியதர்ஷினி மீதே இருந்தது. அழகான பட்டு பாவாடை சட்டையில், படிய தலைவாரி பின்னலிட்டு, பூ சூடி, கண்களுக்கு மைதீட்டி, மிதமான நகை அணிந்து, பார்பதற்க்கு அவ்வளவு அழகாக இருந்தாள். அதுமட்டும் இல்லாமல்... அவள் அம்மா சொன்ன சின்னச்சின்ன

Ramya Rajan

***வேலைகளையும் அக்கறையாக செய்தாள். ஆனால் ஷ்ருதி ஜீன்ஸூம், டாப்பும் தான் அணிந்து வந்தாள். சாருமதி, சுடிதாராவது போடு என்று சொன்னதையும் கேட்கவில்லை.***

***விழா சிறப்பாக நடந்து முடிந்தது. வீட்டுக்கு வந்த சாருமதி செல்லில் கௌதமை அழைத்தார்.***

***கௌதம்"ஹலோ… அம்மா, எப்படி இருக்கீங்க.. விழா எப்படி நடந்தது?" என்று கேள்விகளாக அடுக்க….***

***"நல்லா இருக்கேன் கௌதம், விழா நல்லா நடந்தது "***

***என்று ஆரம்பித்த சாருமதி, அன்றைக்கு நடந்த விழா பற்றி மட்டும் இல்லை, ப்ரியதர்ஷினி பற்றியும் புகழ்ந்து தள்ள….***

***அதை கேட்ட கௌதம்"அம்மா ப்ளீஸ் ..ப்ளீஸ்… போதும் மா… நான் ஒத்துக்கிறேன்.. ப்ரியதர்ஷினி*** *ஒரு குட்டி மஹாலக்ஷ்மி* ***என்று போதும் மா ஆளை விடுங்க… "***

***"டேய் கௌதம், நம்ம ஷ்ருதியும், ப்ரியதர்ஷினி மாதிரி பொறுப்பா இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்" என்று சாருமதி தன் ஆதங்கத்தை மகனிடம் வெளியிட….***

Ramya Rajan

*"அதுக்கு நான் சொல்றபடி கேளுங்க இந்த அமைதிப்படை (ப்ரியா) +அதிரடிப்படை (ஷ்ருதி) சேர்த்து விடுங்க, அப்புறம் எல்லாம் சரியாகிடும்" என்றான் கௌதம்.*

*"யாரு, உன் தங்கச்சியா…. நல்லா இருக்கிற ப்ரியாவையும் இவ கெடுக்காம இருந்தா சரிதான்" என்று சாருமதி அலுத்து கொண்டார்,*

*கௌதம்"நீங்க சொல்றதும் கரெக்ட் தான், விழா போட்டோஸ் மெயில் பண்ணுங்க மா…"*

*சாருமதி சரி என்று சொல்லி போன்னை வைத்தார்.*

*அன்று இரவு கௌதம், தனது லாப்டாப்பில்… சாருமதி அனுப்பி இருந்த போடோஸ் ஒவ்வொன்றாக பார்த்து கொண்டே வந்தான், அதில் ஒரு போட்டோ… சாருமதி சொன்ன…. சர்வ லக்ஷணமும் பொருந்திய…. ப்ரியதர்ஷினி கோலம் போடுவது போல் இருந்தது. கௌதம் நினைத்தான், நிஜமாகவா இவ "குட்டி மஹாலக்ஷ்மி" தான் அதுவும் அவளுடைய அந்த பெரிய கண்கள் அவ்வளவு அழகு என்று,*

*அவனே ஒரு நாள்… அந்த கண்களுக்குள்… விழப்போவது… தெரியாமல்.*

Ramya Rajan

3

***ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் தங்களின் கவனத்தை தொழிலில் செலுத்தியதால், அவர்களால் குடும்பத்திற்கு நேரம் ஒதுக்க முடியவில்லை, அதனால் ஜானகியும், சாருமதியும் ஒருவர்க்கொருவர் உதவியாக இருந்தனர்.***

***முரளி எப்போதாவது ஒருமுறை சென்னைக்கு வந்துவிட்டு செல்வான். அவனுக்கு படிப்பு ஒன்றே குறிக்கோள்.***

***ஒவ்வொரு ஞாயிறும் இரு குடும்ப தலைவிகளும், சேர்ந்து தங்கள் பெண்களை அழைத்துக்கொண்டு எங்காவது போய் வருவது உண்டு கோயில்... சினிமா... பீச்... பார்க்...ஷாப்பிங் அல்லது இருவரில் ஒருவர் வீட்டில் அன்றைய மதிய விருந்து இப்படி.***

***ப்ரியதர்ஷினியும், ஷ்ருதியும் தோழிகளாக பழகினர். ஷ்ருதியிடம் சில நல்ல மாற்றங்கள் ஏற்பட்டது.ப்ரியதர்ஷினி, சாருமதியிடம் அத்தை என்று மிகவும் பாசமாக பழகுவாள். வாரத்தில் ஒரு நாளாவது ப்ரியதர்ஷினி, சாருமதியின் வீட்டிற்க்கு வந்து விடுவாள்.***

Ramya Rajan

ப்ரியதர்ஷினி, முதல் நாள் சாருமதி வீட்டுக்கு வந்த போதே, ஹால்லில் மாட்டியிருந்த குடும்ப போட்டோவில், கௌதமை பார்த்துவிட்டாள். பனைமரத்தில் பாதி உயரமும், மாநிறமும், திருத்தமான முகத்தோட பார்க்க அழகாத்தான் இருக்கான் என்று நினைத்து கொண்டாள்.

சாருமதி, எப்போதும் ப்ரியதர்ஷினியிடம், கௌதமை பற்றியே புலம்புவார் "சரியா சாப்பிடறானா... தூங்குகிறானோ .... தெரியலையே " என்று....

ப்ரியதர்ஷினியும் அவருக்கு ஆறுதலாக "அதெல்லாம் நல்லா தான் அத்தை இருப்பாங்க கவலை படாதீங்க " என்று சொல்வாள்,

அதே போல் கௌதமிடம் செல்லில் பேசும் போது, ப்ரியதர்ஷினி பற்றி கண்டிப்பாக எதாவது சாருமதி சொல்லுவார். அப்படி அவர் எதுவும் சொல்லவில்லை என்றாலும், கௌதம் "என்னமா... இன்னைக்கு குட்டி மஹாலக்ஷ்மி பத்தி வரலாற்று தகவல் இல்லையா?" என்று கேட்டு விடுவான்.

இப்படி கௌதமும், ப்ரியதர்ஷினியும் நேரில் பார்க்கவில்லை என்றாலும் ஒருவரை பற்றி மற்றவருக்கு அதிகம் தெரியும். நாட்கள் வேகமாக சென்றது. பரீட்சை நெருங்குவதால் முரளி, ப்ரியதர்ஷினி, கௌதம் மற்றும் ஷ்ருதி படிப்பில் தங்கள் கவனத்தை செலுத்தினர். முதலில் தேர்வு முடிந்த கௌதம் அடுத்த நாளே விமானம் மூலம் சென்னை வந்து இறங்கினான்.

Ramya Rajan

*கௌதமை பார்த்த அவன் குடும்பத்தாருக்கு மிகுந்த மகிழ்ச்சி. சாருமதி மகனுக்கு பிடித்த உணவுகளை செய்தார்.*

*ஷ்ருதிக்கு பரீட்சை நடப்பதால், சாருமதி, கௌதமை மட்டும் அழைத்துக்கொண்டு, பீச்... சினிமா.. ஷாப்பிங் என்று ஊரை சுற்றிக்கொண்டு இருந்தார். சென்னைக்கு வந்த இந்த இரண்டு வாரத்தில் ஓரளவு அவனுக்கு சென்னை அத்துப்படி ஆனது.*

*கௌதம் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பான், இங்கு அவனுக்கு நண்பர்கள் யாரும் இன்னும் இல்லாததால், அவன் தினமும் தனது அப்பாவின் ஆபீஸ்க்கு சென்று விடுவான். அங்கே அவன் அப்பா சொல்லும் வேலைகளை செய்வதுடன், அவனுக்கே கட்டிட துறையில் மிகுந்த ஈடுபாடு உண்டு, அதனால் வேலை நடக்கும் சைட்க்கும் சென்று பார்ப்பான். அங்கே ஒவ்வொருவரும் செய்யும் வேலைகளை உன்னிப்பாக கவனிப்பான்.*

*அன்றும் கிரோம்பெட் சைட்ல் நடக்கும் கட்டிட வேலையை சென்று பார்த்துவிட்டு, பைக்கில் வீடு திரும்பி கொண்டிருந்தான். வண்டி சிக்னலில் நிற்கும்போது, பக்கத்தில் ஒரு ஸ்கூட்டி வந்து நின்றது.*

*அந்த ஸ்கூட்டியில் இருந்த பெண்ணும் ஹெல்மெட் அணிந்து இருந்ததாள், அவள் கண்கள் மட்டும்தான் தெரிந்தது. எதார்த்தமாக அவள் கௌதம் பக்கம் திரும்பிய போது, அவள் கண்களை பார்த்த கௌதமிற்கு அவள் ப்ரியதர்ஷினியோ என்று தோன்றியது. ஆனால் அதற்குள் சிக்னல் மாறிவிட அவள் கிளம்பிவிட்டாள்.*

Ramya Rajan

***கௌதமிற்கு, அவள் ப்ரியாவாக இருக்குமோ... என்ற ஆர்வமே, அந்த பெண்ணின் பின் செல்ல தூண்டியது. கௌதம் அந்த ஸ்கூட்டி பின்னாடியே சென்றான். அந்த பெண் ஒரு கோவிலின் முன் வண்டியை நிறுத்தினாள், கௌதம் அங்கே வருவதற்குள், அவள் கோவில் உள்ளே சென்று விட்டாள். அவள் வண்டி பக்கத்திலேயே தன் வண்டியை நிறுத்திய கௌதமும் கோவில் உள்ளே சென்றான்.***

***அந்த கோவில் பெரியதாக இருந்தது. அங்கே பிள்ளையார், முருகன், சிவன், அம்மன் சாமிகளுக்கு என்று தனித்தனி சந்நிதிகள் இருந்தது. பிள்ளையார் சந்நிதி முன் நின்று கொண்டிருந்த ப்ரியதர்ஷினியை பார்த்த கௌதமிற்கு, ஆனந்த அதிர்ச்சியாக இருந்தது. அவனுக்கு சிக்னலில் பார்த்த பெண் ப்ரியா தான் என்று கண்டிப்பாக தெரியாது,***

***எதோ ஒரு நம்பிக்கையிலோ.. அல்லது ஆர்வதிலோ... வந்தான்.***

***ஆனால் அவள் ப்ரியாதான் என்று தெரிந்தவுடன், அவனுக்கு மிகுந்த***

***மகிழ்ச்சியாக இருந்தது. அவனுக்கு ப்ரியாவை வம்பு இழுக்கும் ஆசை எழுந்தது. அவனுக்கு மனதில் சந்தேகம் தான், அவளுக்கு தன்னை தெரியுமா என்று... ஆனால் சாருமதி பற்றி அவனுக்கு நன்றாக தெரியும், தன்னிடம் ப்ரியாவை பற்றி இவ்வளவு சொன்னவர்.. தன்னை பற்றியும் கண்டிப்பாக அவளிடம் சொல்லிருப்பார் என்று, அதோடு அவள் கண்டிப்பாக தன்னுடைய போட்டோவை பார்த்திருப்பாள் என்றும் தெரியும்.***

***கௌதம் பிள்ளையார் சந்நிதிக்கு சென்ற போது ப்ரியா முருகன் சந்நிதிக்கு சென்றுவிட்டாள். உடனே கௌதம் வேகமாக பிள்ளையாரை கும்பிட்டுவிட்டு... முருகன் சந்நிதியில்... அவள்***

Ramya Rajan

***எதிரில் போய்.. கண் மூடி நின்றான் (பாதி கண்ண திறந்து தான் வைத்திருந்தான்). ஆனால் ப்ரியா கௌதமை பார்க்காமல்.. அதற்க்கு அடுத்து இருந்த சிவன் சந்நிதிக்கு சென்றுவிட்டாள்...***

***கௌதம் அங்கேயும் போய் நின்றான், அவள் கண்ணை திறக்காமல் சாமி கும்பிட்டு கொண்டிருந்தாள், இது வேலைக்கு ஆகாது என்று நினைத்தவன் வேண்டும்மென்றே அச்..ச்.. என்று தும்ம...***

***சாமி கும்பிடும் போது, யாருடா இப்படி அபசகுனமா தும்முகிறது? என்று லேசாக கண்ணை திறந்து பார்த்த ப்ரியா, அங்கே நின்ற கௌதமை பார்த்ததும், ஏற்கனவே பெரியதாக இருக்கும் தன் விழிகளை இன்னும் பெரிதாக விரித்தாள், அதை பார்ப்பதற்கு ஒரு மொட்டு... மலர்வது போல் இருந்தது.***

***அவள் கண் அழகில் மயங்கி தன்னை மறந்து நின்ற கௌதம், பின் சுதாரித்து அவளை பார்க்காதது போல், அடுத்திருந்த அம்மன் சந்நிதிக்கு சென்றான்,***

***ப்ரியா அங்கேயே நின்றுவிட்டாள், அவளுக்கு இன்னும் நம்ப முடியவில்லை தான் பார்த்தது கௌதமையா என்று, அவள் சரி இன்னொரு முறை நன்றாக பார்ப்போம் என்று அவன் நின்று கொண்டிருந்த இடத்திற்கு சென்றாள்.***

***ப்ரியா வருவதை பார்த்த கௌதம், தீவிரமாக சாமி கும்பிட ஆரம்பித்தான் (மனதிற்குள் அப்பாடா அடையாளம் தெரியுது).***

Ramya Rajan

***கண்ணை திறந்த கௌதம், தன்னை பார்த்து சிரித்த ப்ரியாவை யாரோ போல் பார்த்துவிட்டு, அடுத்திருந்த நவகிரகங்களை சுற்ற சென்றுவிட்டான், ப்ரியாவும் சேர்ந்து சுற்றினாள்... அடுத்து அவன் போய் ஒரு ஓரமாக அமர...இவளும் போய் சற்று தள்ளி அமர்ந்துகொண்டாள்.***

***ப்ரியா அவனுக்கு தன்னை ஏன் அடையாளம் தெரியவில்லை என்று குழம்பினாள். சாருமதி, அவளிடம் கௌதமிற்கு திறப்பு விழா போடோஸ் மெயில் அனுப்பியதாகவும்.... அவன் தன்னை குட்டி மஹாலக்ஷ்மி என்று சொன்னதாகவும்... சொல்லியிருக்கிறார்.ஒரு வேலை அவன் தன்னை மறந்து விட்டானோ... என்று நினைக்கவே ப்ரியாவிற்கு கஷ்டமாக இருந்தது. எதற்கும் பேசி பார்க்கலாம் என்று நினைத்தாள் ஆனால் அதற்குள் கௌதம் வெளியே சென்றுவிட்டான்.***

***வெளியே வந்த கௌதமிற்க்கும், என்ன செய்வது என்று தெரியவில்லை, எதிரில் ஒரு புத்தககடை இருந்தது, அதற்குள் நுழைந்துவிட்டான்.***

***அவன் பின்னே வெளியே வந்த ப்ரியா, கௌதம் புத்தக கடைக்குள்***

***போவதை பார்த்து, சிறிது தயங்கி பின் அவளும் அங்கே சென்றாள்.***

***ப்ரியா வருவதை பார்த்த கௌதம் தன் அம்மாவிற்கு செல்லில் அழைத்தான். ”என்னடா கௌதம்?”என்ற சாருமதியிடம்,***

***"அம்மா ப்ரியா போன் பண்ணி, நான் எங்கே இருக்கேன்னு கேட்டா, ரூம்ல தூங்குறேன்னு சொல்லுங்க சரியா" என்றான்***

***"ஏன்டா... ப்ரியாவை பார்த்தியா நீ?" என்று சாருமதி கேள்விகளாக அடுக்க, கௌதம்"வந்து சொல்றேன் மா...ப்ளீஸ்... சொன்னதை செய்ங்க, ஓகே....பாய்" என்று போன்னை வைத்து விட்டான்.***

***கௌதம் கடையில் ஆள் இல்லாத இடமாக சென்று புத்தகம் பார்ப்பது போல் நின்றுகொண்டான். அவனருகில் வந்த ப்ரியா அவனிடம்"ஹலோ... என்னை உங்களுக்கு தெரியுதா?" என்று கேட்டதும்,***

***அவளை மேலிருந்து...கீழ் வரை பார்த்துக்கொண்டே.."ஏன் தெரியாம.. தெரியுதே" (என்று கௌதம் சொன்னதும் சந்தோஷப்பட்ட ப்ரியா, அவன் சொன்ன அடுத்த வார்த்தையை கேட்டு டென்ஷன் ஆகி விட்டாள்)***

***"கண்ணுக்கு முன்னாடி நிற்கறீங்க தெரியாம இருக்குமா" என்று கௌதம் நக்கலாக சொல்ல,***

***ப்ரியா "நான் அதை சொல்லலை, என்னை உங்களுக்கு யாருன்னு தெரியுதா ...?"***

***"பார்த்ததும், தெரிய... நீங்க தமிழ்நாட்டு முதல்வரா..."என்ற கௌதம் "சரி நீங்களே சொல்லுங்க, நீங்க யாரு...?" என்றதும்...***

***ப்ரியா"நான் யாருன்னு, அப்புறம் சொல்றேன், நீங்க சாருமதி அத்தையின் பையன் கௌதம் தானே... "***

***"இல்லை, என் பேரு வாசு" என்று கௌதம் சொல்ல...***

***"பொய் சொல்லாதீங்க, எனக்கு தெரியும், நீங்க கௌதம் தான்" என்று ப்ரியா அடித்து சொன்னாள்.***

***கௌதம் "அப்படியா, சரி அப்படியே வச்சுக்கோங்க.... "***

***ப்ரியா"நான் அத்தை வீட்டுக்கு போகும் போதல்லாம், அங்க உங்களை போட்டவில் பார்த்திருக்கேன்".***

***"ஹே நீ கௌதமை சைட் அடிகிறியா?" என்றதும்***

***ப்ரியா அவனை பார்த்து முறைத்துக்கொண்டே, "உங்ககிட்ட என்ன பேச்சு...இருங்க.. நீங்க யாருன்னு... இப்ப தெரியும்" என்றவள், சாருமதியை செல்லில் அழைத்தாள்,***

***சாருமதி போன்னை எடுத்து "ஹலோ ப்ரியா, எப்படி இருக்க?" என்று கேட்க,***

Ramya Rajan

***ப்ரியா"நான் நல்லா இருக்கேன் அத்தை, உங்க பிள்ளை இப்ப எங்க இருக்கார்?"***

***சாருமதி "ஏன் ப்ரியா? வீட்ல தான் தூங்கிட்டு இருக்கான்."***

***அதிர்ந்த ப்ரியா வீட்ல தான் இருக்கானா... அப்ப இவன் யாரு... என்று நினைத்தவள்"இல்லை.. இங்க கௌதம் மாதிரி ஒருத்தரை பார்த்தேன், அது தான் வேற ஒன்னும் இல்லை" என்று போன்னை வைத்துவிட்டாள்,***

***"இப்பவாவது நம்புறீங்களா மேடம்" என்று கௌதம் கேட்க,***

***"சாரி... என்னால இப்பவும் நம்ப முடியலை, நீங்க ரெண்டு பேரும் பார்க்க ஒரே மாதிரி இருக்கீங்க".***

***கௌதம்"இட்ஸ் ஓகே, எதுக்கும் நீங்க போய் நல்லா போட்டோ பாருங்க..."***

***"ம்ம் ..சரி..."***

***"நாம ரெண்டு பேரும் ப்ரண்ட்ஸ் ஆகிடலாமா?" என்று கௌதம் கேட்க,***

***"வேண்டாம்... நீங்க கௌதம் என்று நினைத்து தான்..உங்களிடம் பேசினேன்.." இதை சொல்லும் போதே ப்ரியா கண் கலங்க....***



Ramya Rajan

***கௌதம் தவித்தான்... உண்மையை சொல்லிடலாமா என்று அவன் நினைக்கும் போதே, ப்ரியா வேகமாக அங்கிருந்து சென்று விட்டாள். கௌதமும் சரி நாளைக்கு... அவங்க வீட்டுக்கு போய் சொல்லி கொள்ளலாம் என்று நினைத்தான், ஆனால் நாளைக்கு அவனுக்கு நடக்க போவதை தெரியாமல்.***

***வீட்டிற்க்கு வந்த பின்பும் ப்ரியாவிற்க்கு டென்ஷன் குறையவில்லை. நேற்று தான் அவளுக்கு பரிட்சை முடிந்திருந்தது. கோவிலுக்கு போய் ரொம்ப நாள் ஆனதால்... அவளதுஅம்மாவிடம் சொல்லிவிட்டு கோவிலுக்கு வந்தாள், வந்த இடத்தில் எதிர்பாராமல் கௌதமை பார்த்தது சந்தோஷத்தை கொடுக்க, அவனிடம் பேச போனால்.....அவன் தான் கௌதம் இல்லை என்கிறான்....அப்படியென்றால் கௌதம் மாதிரியே இருக்கும் இவன் யார் ?***

***போட்டோவில் பார்த்த கௌதமும்... இன்று கோவிலில் பார்த்த வாசுவும்... அச்சு அசல் ஒரே மாதிரி இது எப்படி? ட்வின்ஸ் என்றால் ஒரே மாதிரி இருப்பார்கள்... இவர்கள் ட்வின்ஸும் இல்லை.. பிறகு எப்படி? ஒரு வேளை இந்த சினிமாவில் வருவது போல் சின்ன வயதிலேயே ரெண்டு பேரும் பிரிந்து இருப்பாங்களோ.... அல்லது நாம் தான் போட்டோவை சரியாக பார்க்கவில்லையோ.... எதுக்கும் நாளைக்கு போய்... அந்த போட்டோவ நல்லா பார்க்கணும்...***

***ஆனா இதுக்கு முன்னாடியே.. நான் போட்டோவ நல்லா தான பார்த்திருக்கேன். நவராத்திரி சிவாஜி கணேஷன் மாதிரி வேற வேற கெட்டப்ல இவன் போட்டோ தான் வீடு முழுக்க இருக்கும்,***

***அப்புறம் எப்படி இந்த மூஞ்சி மறக்கும். இப்படிதாங்க ப்ரியா இரவு முழுவது யோசித்து யோசித்து பைத்தியம் பிடிக்கிற நிலைக்கு வந்திருந்தாள்.***

***அங்கே கௌதமும் ப்ரியாவை தான் நினைத்து கொண்டு இருந்தான். இன்றைக்கு அவளை பார்த்ததையும்... அப்புறம் அவளிடம் பேசினதையும்....அவனுக்கு தன்னை நினைத்தே அச்சிர்யம், தானா இன்றைக்கு ஒரு பெண் பின்னால் சென்றோம் என்று நம்பவே முடியவில்லை, அவள் ப்ரியாவாக இருந்ததினால் பரவாயில்லை.. அதே வேற பெண்ணாக இருந்திருந்தால்.***

***ப்ரியாவின் குழந்தைதனம் மாறாத முகம் நினைவு வந்தவுடன், அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அவள் பார்க்க தான் சிறு பெண் ஆனால் விவரமானவள், என்னை பற்றி கேட்டாளே தவிர...அவளை பற்றி ஒரு வார்த்தை...ஏன் அவள் பெயரை கூட சொல்லவில்லையே பார்ட்டி செம்ம உஷாரு. ஆனா.... பாவம் அவளை நாம இன்றைக்கு ரொம்ப படிதிட்டோம்....நாளைக்கு அவளிடம் சாரி கேட்டுடணும் என்று நினைத்து கொண்டே தூங்கினான்.***

***விடிந்ததும் குளித்து கிளம்பிய ப்ரியா, தன் அம்மாவிடம்"நான் சாருமதி அத்தை வீட்டுக்கு போயிட்டு வரேன்" என்றாள், அவளை ஒரு மாதிரி பார்த்த ஜானகி"என்ன ஆச்சுடி உனக்கு, இப்ப எதுக்கு அங்க?" என்று கேட்க...***

***"இல்லைமா எனக்கு ஷ்ருதியிடம், புக்ஸ் வாங்கணும்.... அதோட அத்தை வீட்டுக்கு போய் ரொம்ப நாள் ஆச்சு ப்ளீஸ் மா" என்று ப்ரியா கெஞ்ச...***

*"சரி போயிட்டு வா, ஆனா உன்னோட அப்பத்தாவுக்கு தெரிஞ்சா அவ்வளவு தான் சொல்லிட்டேன்" என்றார் ஜானகி....*

*"அவங்கதான் இப்ப ஊருக்கு போயிருக்காங்களே அடுத்த மாசம் தானே வருவாங்க, அப்ப பார்க்கலாம்" என்றவள் தன் ஸ்கூட்டியில் சிட்டாக பறந்தாள்.*

*சாருமதி வீட்டுக்கு போன ப்ரியாவிற்க்கு கதவை திறந்துவிட்ட கிருஷ்ணகுமார், அவளை ஆச்சரியமாக பார்த்துக்கொண்டே, உள்ளே வா என்று கூப்பிட்டார்.*

*ப்ரியாவுக்கு அவரை பார்க்கவே சங்கடமாக இருந்தது, பின்னே விடிய காலையிலே வந்து நின்னா...இப்படித்தான் ஆகும் என்று தன்னையே நொந்து கொண்டு.. அங்கிருந்த சோபாவில் போய் உட்கார்ந்தாள்.*

*கிருஷ்ணகுமார் "ப்ரியாவிடம் உங்க அத்தை குளிக்கிறா, ஷ்ருதி தூங்குகிறாள். நான் வேணா போய் ஷ்ருதிய எழுப்பவா" என்று கேட்க....*

*ப்ரியா"வேண்டாம் மாமா அத்தை வரட்டும் நான் வெயிட் பண்றேன்... "*

***"சரிமா நான் வாக்கிங் போயிட்டு வரேன்" என்றவர் வெளியே செல்ல....***

***வேகமாக எழுந்த ப்ரியா அங்கே டேபிள் மேலே இருந்த கௌதமின் போட்டோவை... கையில் எடுத்து...அப்படியும்.. இப்படியும்... திருப்பி திருப்பி பார்த்தாள், அந்த போட்டோவை எப்படி பார்த்தாலும்... அதில் இருந்தவனும்... நேற்று கோவில்ல பார்த்தவனும்... ஒண்ணு தான் என்று தெரிந்தது.***

***அப்போது அந்த போட்டோவில் இருந்தவனே நேரில் வந்தான். ப்ரியாவை அந்த நேரத்தில் எதிர் பார்க்காத கௌதம், போச்சு.. நம்மளை இப்ப நல்லா மொத்த போறா... என்று நினைத்தான், ஆனால் ப்ரியா ஓ...என்று அழ ஆரம்பித்தாள், அவ அழறதை பார்த்து அதிர்ச்சி அடைந்த கௌதம் "ப்ரியா ப்ளீஸ்... அழாத ப்ரியா.... நான் சும்மா விளையாட்டுக்கு உன்னை ஏமாத்தினேன்" என்று சமாதானம் செய்ய...***

***ப்ரியா இன்னும் சத்தமாக அழுதாள், அதை பார்த்த கௌதமின் பொறுமை போய்"எய் நிறுத்து... இப்ப எதுக்கு இப்படி அழற... நிறுத்துன்னு சொல்றேன்ல... இப்ப அழுகைய நிறுத்தல..... அடி பிச்சிடுவேன்" என்று மிரட்டும் போதா... அவங்க அம்மா வரணும்,***

***"டேய் கௌதம் என்னடா செஞ்ச அவளை" அப்படின்னு அவங்க கேட்டு கொண்டு இருக்கும் போதே, ஷ்ருதியும் அங்கே வந்து விட்டாள்.***

***அவர்களை பார்த்ததும் ப்ரியா இன்னும், சத்தமாக அழ, கௌதம் தலையில் கை வைத்தான்.***

***சாருமதியும், ஷ்ருதியும் மாற்றி, மாற்றி சமாதனம் செய்து ப்ரியாவிடம் என்ன நடந்தது என்று கேட்க, அவளும் ஒரு வழியா நேற்று கோவிலில் நடந்த எல்லாவற்றையும் சொன்னாள், அதை கேட்ட சாருமதியும், ஷ்ருதியும்,அங்கு திவான் மேல் இருந்த தலையனையை, ஆளுக்கு ஒன்று எடுத்து, கௌதமை மொத்து மொத்து என்று மொதிட்டாங்க. கடைசியில் ப்ரியா பாவம் விட்டுடுங்கன்னு சொன்னதும் தான் விட்டாங்க.***

***கௌதம் மனதிற்குள், இவ நான் தூங்கும் போது தலையில தண்ணி ஊத்திற்கலாம்..... இல்லை, இவ பட்டு கையாள நாலு அடி அடிச்சி இருக்கலாம்....அட்லீஸ்ட், இவளே தலையனையாள அடிச்சி இருக்கலாம்... அதை எல்லாம் விட்டுட்டு, ஆள வச்சு அடிக்கிறா... ராட்சஷி என்று நொந்து போய் விட்டான்.***

***சாருமதி, ப்ரியாவிடம்"நேற்று, இவன் நீ போன் பண்ணா… அவன் தூங்குகிறான் என்று சொல்ல சொன்னான்....நான் கூட நம்ம ஆபீஸ்ல உன்னை பார்த்திருப்பான்... எதோ விளையாடுறான்னு நினைச்சேன், ஆனா உன்னை இந்த பாடு படுத்தி இருப்பான்னு தெரியாது" என்றவர், சரி நான் போய் டிபன் ரெடி பண்றேன்... நீங்க பேசிட்டு இருங்க என்று உள்ளே செல்ல.***

***ப்ரியாவும், ஷ்ருதியும் ஹாலில் அமர்ந்து பேச ஆரம்பித்தனர். ஷ்ருதி"உங்க அண்ணா கூட இப்படி தானா" என்று கேட்க, இல்லை"எங்க அண்ணன் ரொம்ப அமைதி, எங்க அண்ணா எப்பவும்***

***படிச்சிட்டே இருப்பாங்க....ட்வெல்த் பரிட்ச்சையில்... ஸ்டேட்ல செகண்டா வந்தாங்க...... அதனால அவங்களுக்கு மெரிட்ல டாக்டர் சீட் கிடைத்தது" என்று ப்ரியா தன் தலையை ஆட்டி, கைகளில் அபிநயம் பிடித்து, கண்களை உருட்டி பேசுவதை ரசித்து கேட்டு கொண்டிருந்தான் கௌதம்.***

***அப்போது ப்ரியா எதேட்சையாக, அவன் புறம் திரும்ப... தன்னையே பார்த்து கொண்டிருந்த கௌதமை அவளும் பார்க்க... இருவர் விழிகளும் ஒன்றுடன் கலந்தது..... அதில் இருவருக்குள்ளும் மாற்றம் ஏற்பட... அதை மற்றவருக்கு காட்ட கூடாது என்று இருவரும் வேகமாக வேறு பக்கம் திரும்பினர்.***

***கௌதம் "உன்னை பார்த்த பின்பு நான் நானாக இல்லையே என் நினைவு தெரிந்து நான் இது போல இல்லையே" என்று பாடிக்கொண்டே அவனது அறைக்கு சென்றான்.***

***அடுத்த வாரம் பரீட்சை முடிந்து வந்த முரளிக்கு, வீட்டில் ராஜ உபச்சாரம் நடந்தது. முரளி அமைதியானவன் அதேசமயம் இந்த வயதுக்கே உரிய குறும்பு தனமும் உண்டு. அவனுக்கு அவனுடைய குட்டி தங்கை ப்ரியா மீது பாசம் அதிகம்... அவளுக்கும் அவன் மீது உயிர். இரண்டு பேரும் ரொம்ப நாள் கழித்து பார்ப்பதால்...ஒருவர் மீது ஒருவர் பாச மழை பொழிந்தனர்.***

***முரளி விடுமுறைக்கு வந்தவன், தங்கள் கம்பெனிக்கு சென்றான். அங்கே கௌதமை பார்க்க... இருவரும் அப்போது தான் முதல் முறை ஒருவரை ஒருவர் பார்ப்பதால்... கைகுலிக்கி, நலம் விசாரித்து***

Ramya Rajan

***கொண்டனர்.***

***பிறகு இருவரும் அடிக்கடி சந்திக்க ஆரம்பித்தனர், ஒரு நாள் கௌதம் செல்லவிருந்த சைட்க்கு முரளி தானும் வருவதாக சொல்ல... இருவரும் ஒரே பைக்கில் சென்றனர்.***

***அங்கே சைட்ல் இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது முரளி "கௌதம் ரிசல்ட் வந்துடுச்சு... நல்ல மார்க்ஸ் எடுத்திருக்க.. மேல என்ன படிக்க போறே... "***

***"B.E., சிவில் இன்ஜினியரிங் சேரலாம் என்று இருக்கேன். "***

***"ஏன் நம்ம அப்பாக்கள், கன்ஸ்டரக்ஷன் கம்பெனி வைத்து இருக்காங்க என்றா?" என்று முரளி பட்டென்று கேட்டுவிட....***

***"இல்லை.... நம்ம அப்பாக்கள், இந்த கன்ஸ்டரக்ஷன்***

***கம்பெனி ஸ்டார்ட் பண்ணலைனாலும், நான் B.E.,சிவில் இன்ஜினியரிங் தான் படிப்பேன். உங்களுக்கு எப்படி சின்ன வயசுலிருந்து டாக்டர் ஆகனும் என்று ஆசையோ, அதே மாதிரி எனக்கும் சின்ன வயசிலிருந்து சிவில் இன்ஜினியரிங் படிக்கணும் என்று ஆசை"என்ற கௌதம் தொடர்ந்து,***

***"எங்க அப்பா டெல்லியில், ஒரு கன்ஸ்டரக்ஷன் கம்பெனில தான் இன்ஜினியரா வேலை பார்த்தாங்க. அப்ப லீவ் நாள்ல என்னை***



Ramya Rajan

***அவங்களோட வேலை நடக்கிற சைட்க்கு கூடிட்டு போவாங்க. எனக்கு எப்பவுமே கட்டிட வேலைய பார்கிறது ரொம்ப பிடிக்கும். காலி நிலத்துல அஸ்திவாரம் போட்டு ஆரம்பிக்கற கட்டிடம், ஒரு பெரிய மாளிகையா நம்ம கண் முன்னால நிற்கும் போது பார்க்கவே பிரம்மிப்பா இருக்கும். எனக்கும் அப்போது இருந்து அது மாதிரி பெரிய...பெரிய பில்டிங் கட்டணும் என்று ஆசை" என்று தன் லட்ச்சியத்தை சொன்னவன், முரளியின் அருகே சென்று நின்றான்.***

***"சாரி கௌதம் நான் சரியா தெரிஞ்சிக்காம கேட்டுட்டேன்" என்று முரளி சொல்ல,***

***"பரவாயில்லை முரளி, என்னிடம் தான கேட்டீங்க, நமக்குள்ள என்ன. நமக்கென்று கன்ஸ்டரக்ஷன் கம்பெனி இருக்கிறது எனக்கு வசதிதான், எனக்கு பிரக்டிகல் நாலெட்ச் அதிகம் இருக்கும். அதுமட்டுமில்லை நான் படிப்பு முடிச்சு வெளியில வேலை தேட வேண்டாம்".***

***முரளி "கௌதம் நீ நம்ம கம்பெனிக்கு வந்தா... நம்ம அப்பாகளுக்கு ரொம்ப சப்போர்ட்டா... இருக்கும்.அதுவுமில்லாம நீ இவ்வளவு ஆர்வமா இருக்கும் போது, நம்ம கம்பெனி பெரிய கன்ஸ்டரக்ஷன் கம்பெனியா ஆகும்னு எனக்கு நம்பிக்கை இருக்கு... "***

***"ம்ம்.. பார்க்கலாம்..." என்று சொல்லிவிட்டு, முரளியை அழைத்து கொண்டு கௌதம் கிளம்பினான்.***

Ramya Rajan

***அன்று ஞாயிற்று கிழமை சாருமதி, ஜானகியின் குடும்பத்தை மதிய உணவிற்கு அழைத்திருந்தார். முரளியும் அடுத்த வாரம் கோயம்புத்தூர் செல்கிறான், அதற்க்கு முன்பு எல்லோரும் சேர்ந்து இருக்க ஆசைப்பட்டு அழைத்திருந்தார்.***

***இரு குடும்பமும் ஒரே இடத்தில் இருந்தால் கேட்கவா வேண்டும், ஒரே கலாட்டா தான். சாருமதி ஜானகியிடம் "நீங்க எல்லாம் வரிங்கன்னு சந்தோஷத்துல ஷ்ருதி வீட்டையே ரெண்டு பண்ணிட்டா...அதை பண்றேன்... இதை பண்றேன் என்று ஒரே ரகளை தான் போங்க " என்றார்.***

***முரளி ஷ்ருதியை அன்று தான் முதல் முறை பார்க்கிறான். அவன் "ஷ்ருதி நீ உன் சந்தோஷத்த இன்னைக்கு சமையல்ல காமிச்சிடலையே....ஏன்னா அதவச்சு தான் நாங்க இன்னைக்கு இங்க சாப்பிடலாமா...வேண்டாமான்னு... முடிவு பண்ணனும்" ஷ்ருதி, முரளியை பார்த்து முறைத்து கொண்டே.. "இன்னைக்கு உங்களுக்கு அந்த பாக்கியம் இல்லை.... ஏன்னா எனக்கு இன்னைக்கு சமைக்க மூட் இல்லை.. "***

***"என்னது மூட் இல்லையா....மூட் இருந்தாலும்... இந்தம்மா சமச்சி.... கிழிசிடுவாங்க... சமைக்க.. தெரியாதுன்னு.... சொல்லு" என்று கௌதம் சொன்னதும், ஷ்ருதி "டேய் கௌதம் வேண்டாம்" என்று சொல்ல, அதை பொருட்படுத்தாமல் தொடர்ந்த கௌதம்,***

***"இவ ஒரு தீபாவளியின் போது, என் ப்ரண்ட்ஸ் எல்லாம் ஸ்வீட் செய்றாங்க...நானும் செய்ய போறேன்னு சொன்னா....சரின்னு அம்மாவும் சொல்லிட்டாங்க, இவளும் சமையல் ரூம்ல***

***ஏனென்னவோ பண்ணா... ரொம்ப நேரம் கழிச்சு வெளிய வந்தவ.... இப்பதான் செஞ்சு முடிச்சேன்.... கொஞ்சம் நேரம் கழிச்சு சாப்பிடுங்கன்னு சொல்லிட்டு போய்ட்டா....***

***நானும், அம்மாவும் ரொம்ப ஆர்வமா... என்ன செஞ்சான்னு பார்க்க போனோம், அங்க பாத்திரத்தில கருப்பு கலர்ல எதோ உருண்டை, உருண்டையா இருந்தது, கருப்பு கலர்ல ஸ்வீட்டா! என்று நினைத்து கொண்டே... ஸ்பூண உள்ள விட்டா... எடுக்கவே வரலை, சுரண்டி கூட பார்த்துட்டோம், ஏன் பாத்திரத்தையே கவுத்தி கூட பார்த்ட்டோம் ம்.. ம். கடைசி வரை... அது என்ன ஸ்வீட்டு என்றே தெரியலை. இவ வந்ததுக்கப்புறம் என்ன ஸ்வீட் செஞ்சே என்று கேட்டா...? குலாப்ஜாமுன்! அப்படின்னு சொன்னா... நான் அன்னைலிருந்து ஜாமுன் சாப்பிடுறதையே நிறுத்திட்டேன், என்னால முடியல... ஒரு அழகான ஸ்வீட்ட கர்ண கொடூரம்மா பார்த்தத இப்பவும் என்னால மறக்க முடியல" என்று கௌதம் எதோ சினிமாவில் வர்ற சோக சீன் மாதிரி சொல்ல....***

***அங்கே எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள், ப்ரியாவால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை, அவளுக்கு சிரித்து, சிரித்து கண்ணிலிருந்து தண்ணியே வந்து விட்டது. அதை பார்த்த ஷ்ருதி "நீ கூட என்னை பார்த்து சிரிக்கிற இல்ல...நான் இந்த வருஷ தீபாவளிக்கு பாதுஷா செஞ்சு.. எப்படி அசத்துறேன்" பாருன்னா உடனே எல்லோரும் கையை தலைக்கு மேல தூக்கி கும்பிட்டு... அம்மா தாயே! எங்களை விட்டுடு என்று அலறிட்டாங்க .***

***"சரி நீங்க கொடுத்து வச்சது அவ்வளவுதான்" என்று ஷ்ருதி அலுத்து கொண்டாள் .***

***"என்னது! கொடுத்து வச்சதா! கொலை கேசுல… உள்ளே போய்டுவ ஜாக்கிருதை" என்று கௌதம் மிரட்டினான்.***

***எல்லோரும் சேர்ந்து பேசி, சிரித்து, சாப்பிட்டு முடித்ததும் பெரியவர்கள் ஓய்வெடுக்க செல்ல, இளையவர்கள் கேரம்போர்ட் விளையாட உட்கார்ந்தனர்.***

***கேரம்போர்ட் விளையாட நான்கு பேரை, இரு அணிகளாக பிரிக்க வேண்டும். முரளியும், ப்ரியாவும், ஒரு அணி என்றும் கௌதமும், ஷ்ருதியும் ஒரு அணி என்றும் பிரித்தனர்.***

***ஆனால் ஷ்ருதி"நான் கௌதமோடு சேரமாட்டேன், அவன் என்னை திட்டிட்டே இருப்பான்" என்றாள். உடனே கௌதம்"அப்ப நீயும் ப்ரியாவும் ஒரு டீம்ல இருங்க" என்று சொன்னான் அதற்க்கு ஷ்ருதி"அஸ்கு… புஸ்கு… அவ சின்ன பொண்ணு… அவளுக்கு விளையாட தெரியாது… நீ எங்களை ஈசியா ஜெயிக்க பார்க்கிற" என்று சொன்னதும், ப்ரியா ஷ்ருதியை ஒரு பார்வை பார்த்தாள் ஆனால் ஒன்றும் சொல்லவில்லை.***

***ஷ்ருதி பேசியதை கேட்டு ப்ரியா வருத்தபட போறா என்று நினைத்த கௌதம், ஷ்ருதியை திட்டினான், இரண்டு பேரும் சண்டை போட தொடங்க…. உடனே முரளி"கௌதம்…. நீயும் ப்ரியாவும் ஒரு டீம்ல இருங்க, நானும் ஷ்ருதியும் ஒரு டீம்" என்று சொல்லி விளையாட ஆரம்பித்தான்.***

Ramya Rajan

***முதலில் ஆட ஆரம்பித்த முரளி ஒரு காயின் போட்டான், அடுத்து ஆடிய கௌதமும் ஒரு காயின் போட்டான், அதுக்கடுத்து விளையாடின ஷ்ருதியும் ஒரு காயின் போட்டு விட்டாள். இப்போது ப்ரியாவின் ஆட்டம், அவள் டென்ஷன் ஆனாலோ இல்லையோ, நம்ம கௌதம் ரொம்ப டென்ஷன் ஆகிட்டான்***

***"நீ காயின் போடலைன்னா பரவாயில்லை ப்ரியா கூலா விளையாடு… நாம ஜெயிச்சிடலாம் பயப்படாத" என்று அவன் பதட்டபடுவதை பார்த்து ஷ்ருதி, நீ இவ்வளவு நல்லவனா டா… அதே நான் காயின் போடலைனா… திட்டுவ என்று நினைத்து கொண்டாள்.***

***ப்ரியா விளையாட ஆரம்பித்தாள்… நிறுத்தவே இல்லை… கடைசியில் ஒரு காயின் மட்டும் தான் மிச்சம் இருந்தது, அந்த ஒரு காயினையும் இவங்க யாரும் போடவில்லை மறுபடியும் ப்ரியா தான் அந்த காயினையும் போட்டாள்.***

***அசடு வழிந்த முரளியையும், கௌதமையும் பார்த்து தலையிலேயே அடித்த ஷ்ருதி "உங்களை போய் பெரிய இவனுங்கனு… நினைச்சேன் பாரு… என்னை சொல்லணும். ப்ரியா செல்லம், நீ கேரம்போர்ட் சாம்பியன் என்று … சொல்லவே இல்லையேடா…. "***

***"நீ என்னை கேட்கவே… இல்லையே ஷ்ருதி" என்று ப்ரியா சொல்ல… அதை கேட்டு முரளியும், கௌதமும் சிரித்தார்கள்.***

***அன்று இரவு தனக்காக கௌதம் தவித்ததை, நினைத்து பார்த்த ப்ரியாவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.***

4

***ஜூலை ஒன்றாம் தேதி, அன்று கௌதமிற்க்கு கல்லூரி திறந்தது, மாணவர்கள் அவரவர் தேர்ந்தெடுத்த பிரிவுக்கு சென்றனர். கௌதம் தனது சிவில்இன்ஜினியரிங் கிளாஸ்ல் சென்று அமர்ந்தான்.***

***அப்போது அங்கே வந்த ஒரு மாணவன், நேராக ஆசிரியர் பாடம் நடத்தும் இடத்தில் சென்று நின்று கொண்டு" ஹலோ ப்ரண்ட்ஸ்! நான் இப்ப உங்களுக்கு நீங்க காலேஜ் உள்ள எப்படி நடந்துக்கணும் என்று சொல்ல போறேன். (மாணவர்கள் எல்லாம் சீனியர் ஸ்டுடென்ட் நமக்கு முக்கியமா எதோ சொல்ல போறாரு என்று கேட்க ஆர்வமா இருந்தாங்க)***

***முதல்ல இப்படி நாய்குட்டி மாதிரி பம்மி போய் இருக்காம... சிங்கம் மாதிரி சிலிர்திட்டு இருங்க... அப்ப தான் சீனியர் யாரு...? ஜூனியர் யாரு...? என்று வித்தியாசம் தெரியாது.***

***கிளாஸ்ல பாடம் நடத்தும் போது சார்/மேடம் புரிஞ்சுதா என்று கேட்டா.... ஆர்வக்கோளாறுல புரிஞ்சிது என்று சொல்லாதீங்க அப்புறம் என்ன புரிஞ்சது என்று கேட்பாங்க, பிறகு உங்களுக்கு தான் கஷ்டம்.***

Ramya Rajan

***ராகிங் இப்ப காலேஜ்ல இல்லைனாலும், இந்த சீனியர், ஜூனியர் பிரச்சனை இருக்கும், அதை வேண்டாம் என்று நினைத்தா கிளாஸ் தொடங்கறதுக்கு அஞ்சு நிமிஷம் முன்னாடி காலேஜ் உள்ள வாங்க, அதே மாதிரி காலேஜ் முடிஞ்சதும் எஸ்கேப் ஆகிடுங்க, அதைவிட்டு காலேஜ் கேம்பஸ் உள்ள சுத்தினா சீனியர்ஸ்ட்ட மாட்டிபீங்க ஜாக்கிருதை .***

***இதல்லாம் மட்டும், நீங்க இப்ப தெரிஞ்சிட்டா போதும், மிச்சத்த அப்ப....அப்ப... நான் சொல்றேன், சரியா"என்றதும்,***

***மாணவர்கள் எல்லாம் கோரசாக "சரி சீனியர்"என்று பாட....***

***"என்னது சீனியரா..../ நானும் உங்க கிளாஸ் தான், என் பெயர் கார்த்திக். எதோ எனக்கு தெரிஞ்ச விஷயத்த, உங்களுக்கு சொல்லலாம் என்று நினைத்தா... இப்படி என்னை சீனியர் ஆகிட்டீங்களே ப்ரண்ட்ஸ்."***

***கார்த்திக்கும்.... அவங்க கிளாஸ் என்று தெரிந்தவுடன் மற்ற மாணவர்கள், அவனை பார்த்த பார்வையில்... கப் சிப் என்று அடங்கி போய், கௌதம் பக்கத்தில் சென்று உட்கார்ந்து விட்டான்.***

***கார்த்திக் வந்து கௌதம் பக்கத்தில் அமர்ந்ததும். ப்ரொபசர் கிளாஸ்க்கு வந்துவிட்டதால், இருவராலும் எதுவும் பேசிக்கொள்ள முடியவில்லை. ப்ரொபசர் பாடம் நடத்துவதை இருவரும் கவனமாக கேட்டனர். கார்த்திக் பார்க்க ஆள் விளையாட்டு தனமா இருந்தாலும்,***

Ramya Rajan

***படிப்பில அக்கறையா தான் இருக்கான் என்று கௌதம் நினைத்து கொண்டான்.***

***ப்ரொபசர் சென்றதும் இருவரும், ஒருவருக்கொருவர் அறிமுகம் படுத்தி கொண்டனர். "ஹாய் நான் கார்த்திக்", "ஹாய் நான் கௌதம், உங்க இன்ட்ரோ சூப்பர்... கலக்கிடீங்க போ.... "***

***கார்த்திக் "தேங்க்ஸ் கௌதம், இனிமே நாலு வருஷம் நாம சேர்ந்து இருக்க போறோம் இல்லையா, இன்னைக்கு தான் முதல் கிளாஸ் எல்லோரும் டென்ஷன்னா இருப்பாங்க, அதுக்கு தான் கொஞ்சம் கூல் பண்ணலாம்ன்னு..."***

***"நல்ல எண்ணம் தான் பார்த்து சீனியர்ஸ்க்கு தெரிஞ்சா அவ்வளவு தான். "***

***"நீ சொல்றத பார்த்தா..... நீயே போய் அவங்கட்ட சொல்லிடிவியோ...?"***

***"சொல்லமாட்டேன் கவலைபடாதே" என்ற கௌதம், ப்ரண்ட்ஸ் என்று கையை நீட்ட.... கார்த்திக் "ஓகே ப்ரண்ட்ஸ்..." என்று அவன் கையை பற்றி குலிக்கினான், அதன் பிறகு கௌதமிறக்கும், கார்த்திக்கும் இடையே நெருங்கிய நட்பு உருவானது.***

***ஒரு நாள் கார்த்திக்கை வீட்டுக்கு அழைத்து வந்த கௌதம், அவனது***



Ramya Rajan

***நண்பன் என்று தனது குடும்பத்தாருக்கு அறிமுகப்படுத்தினான். அன்றிலிருந்து கௌதம் குடும்பத்தினர் கார்த்திக்கையும் தங்கள் குடும்பத்தில் ஒருவராகவே கருதினர். அவர்களுக்கு தெரியும் கௌதம் யாரையாவது நண்பன் என்று அழைத்து வந்தால், அவன் நம்பிக்கையானவன் என்று அதனால் அவர்கள் அவனுடன் அன்பாக பழகினர்.***

***கார்த்திக் அவர்கள் வீட்டிற்க்கு ஒரு வாரிசு, அதுவும் அவன் பெற்றோர் இருவரும் வேலைக்கு செல்வதால்.... அவன் பெரும்பாலும் கௌதம் வீட்டில் தான் இருப்பான். ஷ்ருதிக்கு கார்த்திக்கை ரொம்ப பிடித்து விட்டது, அவள் கார்த்தி அண்ணா என்று அழைப்பதை கார்த்திக் மிகவும் விரும்புவான். கார்த்திக்கும், ஷ்ருதியும் பண்ணும் அட்டகாசத்தில் வீடே அதிரும்.***

***கௌதம் வீடும் கார்த்திக் வீடும் தாம்பரத்தில் இருந்ததால், இரண்டு பேரும் ஒன்றாகவே பைக்கில் காலேஜ் சென்று திரும்பினர். இப்படியே இரண்டு வருடங்கள் செல்ல.. கௌதம், இப்போது கல்லூரியில் மூன்றாம் வருடம் படித்து கொண்டிருந்தான்.***

***ப்ரியா, இதனை நாள் தன் வீட்டின் அருகில் இருந்த பள்ளியில் படித்தவள், இப்போது தாம்பரத்தில் இருந்த பள்ளியில் பதினோராம் வகுப்பு சேர்ந்திருந்தாள். அவளோடு அவள் தோழி காவ்யாவும் அதே பள்ளியில் சேர்ந்ததால், இருவரும் சேர்ந்து ஸ்கூல் பஸ்சில் சென்று வந்தனர்.***

Ramya Rajan

காவ்யா தான் எப்போதும் பஸ்சில் ஜன்னல் ஓரம் அமர்வாள், ஆனால் ஸ்கூல் திறந்து ஒரு வாரம் கழித்து, ப்ரியா"காவ்யா நான் இனிமே ஜன்னல் ஓரம் உட்கார்ந்துக்கிறேன்" என்றாள்.

"ஏன் ப்ரியா? நான் தானே எப்போதும் உட்காருவேன்."

"எனக்கும் ஜன்னல் ஓரம் உட்காரணும் என்று ஆசையா இருக்கு" என்று ப்ரியாவும் பிடிவாதம் பிடித்தவள்"ப்ளீஸ் காவ்யா இப்படி வேணா பண்ணலாம் போகும் போது நான் ஜன்னல் ஓரம் உட்கார்ந்துகிறேன், திரும்பி வரும் போது, நீ உட்கார்ந்துக்கோ சரியா..."

"அப்படி என்ன காலையில கண்டிப்பா உட்காரணும், எதோ சரியில்லையே..." என்று காவ்யா, ப்ரியாவை சந்தேகமாக பார்க்க...

"அதெல்லாம் ஒன்னும் இல்லை, ஜன்னல் ஓரம் உட்கார்ந்தா நல்லா வேடிக்கை பார்க்கலாம் இல்லை அதுக்குத்தான்" என்றதும் காவ்யா சரி என்றாள்.

பஸ்ஸில் காவ்யா மற்ற தோழிகளோடு அரட்டை அடித்துக்கொண்டு வர, ப்ரியா அவள் பேசுவதை வேடிக்கை பார்த்து கொண்டு வருவாள். ப்ரியாவின் ஸ்கூல் பஸ் R.K.கன்ஸ்டரக்ஷன்ஸ் வழியாக தான் போகும். ப்ரியா தினமும் அவர்கள் ஆபீஸை பார்ப்பது போல் கௌதமை தான் பார்ப்பாள், ஆனால் அது யாருக்கும் தெரியாது, ஏன் கௌதமுக்கே தெரியாது. இப்படியே மூன்று மாதங்கள் சென்றது.



Ramya Rajan

***கௌதம் தான் தினமும் காலை 8.30 மணிக்கே வந்து ஆபீஸ் திறப்பான். பிறகு அங்கிருந்தே கல்லூரிக்கு செல்வான். ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் 9.30 மணிக்கு மேல் தான் வருவார்கள். கௌதம் ஆபீஸ் கதவை திறந்து வைத்துவிட்டு வெளியே நின்று பேப்பர் படிப்பான். அப்போது தான் ப்ரியாவின் ஸ்கூல் பஸ் போகும், கௌதம் பேப்பர் படிப்பதிலேயே கவனமாக இருப்பதால் ப்ரியாவை கவனித்தது இல்லை. எடுபிடி வேலை செய்யும் ஒருவர் வந்து ஆபீஸ்சை சுத்தம் செய்வார், அதற்க்குப்பிறகு ஆபீஸ்ல் வேலை செய்பவர்கள் வருவார்கள்.***

***ப்ரியாவிற்க்கு, தன் மனது செல்லும் பாதை நன்றாகவே புரிந்தது, தன் மனதில் கௌதமிற்க்கு என்று தனி இடம் கொடுத்துவிட்டதை, அவளும் அறிவாள். அவனிடம் தன் மனது சென்றதற்க்கு காரணம் அவளுக்கு தெரியவில்லை, ஆனால் அவனை முதல் முறை பார்க்கும் போதே அவனை அவளுக்கு மிகவும் பிடித்தது. அதனால் தான் தன் இயல்பையும் மீறி அவனிடம் தானே சென்று பேசினாள்.இப்போதைக்கு அவனை பார்ப்பதே போதும், வேறு எந்த சிந்தனையும் இப்போது வேண்டாம். இப்போதைக்கு படிப்பில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்று தன் மனதிற்குள் தானே உறுதி எடுத்துக்கொண்டாள். அதை இரண்டு ஆண்டுகளாக காப்பாற்றியும் வருகிறாள்.***

***கௌதமும், கார்த்திக்கும் ஆபீஸ் வாசலில் நின்று பேப்பர் படிக்கும் போது, கார்த்திக் பேப்பரை மூடி விட்டு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான். அப்போது கடந்து சென்ற ஸ்கூல் பஸ்ல், ஒரு பெண் கௌதமையே பார்ப்பதை பார்த்தான், முதலில் அவனுக்கு ஒன்றும்***

Ramya Rajan

***தோன்றவில்லை ஆனால் இதுவே இரண்டு நாட்கள் தொடர... பொறுக்க முடியாமல்....***

***கௌதமிடம், ''டேய்... உன்னை ஒரு பொண்ணு சைட் அடிக்கிதுடா... ''***

***''தெரியும்.... ''***

***''தெரியுமா... யாரடா சொல்ற...? ''***

***''ஸ்கூல் பஸ்ல கோழி முட்டை கண்ணோட, பார்க்கவே அப்பாவியா... அமுல் பேபி... மாதிரி இருப்பாளே... அவளை தானே சொல்ற... ''***

***''ஆமா... உனக்கு எப்படி தெரியும்? நீ தான் அவளை பார்க்கவே***

***இல்லையே... '' என்ற கார்த்திக் முழிக்க....***

***''ம்ம்.. நான் பார்த்தா அவ என்னை பார்க்க மாட்டாடா... ''***

***.***

***''டேய் கௌதம், என்னடா நடக்குது இங்க, உன்னை.. நான் அந்த கௌதம புத்தர் மாதிரி நினைச்சேன்டா... ''***



Ramya Rajan

***"உன்னை யாருடா அப்படியெல்லாம் நினைக்க சொன்னது கார்த்திக்."***

***"உனக்கு அந்த பெண்ணை முன்னாடியே தெரியுமா...? யாருடா அந்த பொண்ணு...?"***

***"நல்லா தெரியும், சொல்றேன் இப்ப இல்ல.... காலேஜ் போயிட்டு சொல்றேன் பைக் எடு" என்று கார்த்திக் பைக்கின் பின்னால் அமர்ந்த கௌதம், சில மாதங்கள் முன்பு நடந்ததை நினைத்து பார்த்தான்.***

***அன்றும் ஆபீஸ் வெளியே நின்று பேப்பர் படித்தவன், தனது மொபைல் ரீசார்ஜ் செய்ய வேண்டி.. இரு கடைகள் தள்ளி இருக்கும் கடைக்கு சென்றுவிட்டு.... திரும்பி வரும் போது, எதிரே வந்த ஸ்கூல் பஸ் ஜன்னல் வழியாக ப்ரியாவை பார்த்ததும், அவனுக்கு சந்தோஷமாக இருந்தது. ஆனால் ப்ரியா இவனை பார்க்கவில்லை. தங்களின் ஆபீஸயே பார்த்துக்கொண்டிருந்தாள், அவள் பார்வை யாரையோ தேடுவது போல் இருந்தது.***

***கௌதமை கடந்து சென்ற பஸ்சில் இருந்த ப்ரியாவின் முகம் வாடி இருந்தது.கௌதமிற்க்கு ஒன்றும் புரியவில்லை... ஆனால் பிறகு யோசிக்கும் போது, ஒரு வேலை அவள் என்னை தான் தேடினாலோ... நான் அங்கே இல்லை என்று தான் வாடி விட்டாலோ...நாளைக்கு பார்க்கலாம் என்று நினைத்தான்.***

***மறு நாள் கௌதம் பேப்பர் படிக்காமல்... ப்ரியாவின் பஸ்சிற்க்காக காத்திருந்தான். தூரத்திலேயே கௌதம் வெளியே நிற்பதை பார்த்த ப்ரியா ஆவலாக அவனையே பார்த்தாள்... ஆனால் அவன் பேப்பர் படிக்காமல் பஸ்சையே பார்க்கவும்... அவனை பார்க்காதது போல் முகத்தை திருப்பி கொண்டாள்.***

***கௌதமிற்க்கு குழப்பமாக இருந்தது, இவ என்னை பார்க்கிறாளா இல்லையா... அடுத்த நாள் வேண்டுமென்றே கௌதம், வெளியே நிற்காமல் உள்ளே மறைந்து நின்று பார்த்துக்கொண்டிருந்தான்,***

***அப்போது ஸ்கூல் பஸ்சில் வந்த ப்ரியா, கௌதம், வெளியே இல்லாததை கண்டு அவனை தேட... திடிரென்று வெளியே வந்த கௌதமை பார்த்தும் மலர்ந்த முகத்தை மறைத்துக்கொண்டாள். இதை பார்த்த கௌதமிற்கு புரிந்து விட்டது அவள் தன்னை தான் பார்க்கிறாள். ஆனால் அவள் அதை வெளிகாட்ட விரும்பவில்லை என்று, சரி இப்படியாவது பார்கிறாளே அதுவே போதும்.. என்று அவனும் அன்றிலிருந்து பார்த்தும் பார்க்காத மாதிரி இருந்து விடுவான்.***

***காலேஜ்க்கு வந்து சேர்ந்ததும் கார்த்திக்"கௌதமிடம் இப்ப சொல்லு யாரு அந்த பெண் மான்?" என்று கேட்க....***

***"மான்னா..."***

***"நான் மான் விழியாள் என்று கேள்வி பட்டிருக்கேன், ஆனா இப்ப தான் நேர்ல பார்க்கிறேன் யார் அது?"***

***"அவ எங்க அப்பாவின் பார்ட்னர் ராமமூர்த்தி மாமாவோட பொண்ணு" என்று ஆரம்பித்து ப்ரியதர்ஷினியை அவன் முதல் முறை போட்டோவில் பார்த்ததில் இருந்து, எல்லாவற்றையும் கௌதம் சொன்னான்.***

***"அதெல்லாம் சரி அவ உனக்கு யாரு?" என்று கார்த்திக் கேட்டதும்,***

***கௌதமின், முகம் புன்னகையில் மலர்ந்தது "அவ தாண்டா எனக்கு எல்லாம், நான் அவளை லவ் பண்றேன்" என்று தெளிவாக கௌதம் சொல்ல....***

***"இது அவளுக்கு தெரியுமா?" என்று கார்த்திக் கேட்டதும்,***

***"தெரியலை.... நாங்க அடிகடி சந்திச்சது கிடையாது, எப்போதாவது தான் பார்த்திருக்கோம், ஆனா இப்ப கொஞ்ச நாளா தான்... அவளை தினமும் பார்கிறேன்.. அவளிடம் சொல்லணும்" என்ற கௌதம் கார்திக்கோடு வகுப்பிற்க்குள் சென்றான்.***

***கௌதம் காலேஜ்ல் இன்று கல்ச்சுரல்ஸ், அதில் நடக்கவிருக்கும் லைட் மியூசிக் போட்டியில்... அவனும் கலந்து கொள்ககிறான். ஆடிடோரியம் உள்ளே முதல் வருடம் மாணவிகள்... சிலர் வந்து அமர்ந்தனர். அதில் இருந்த வர்ஷா பக்கத்தில் இருந்த சுபாவிடம் "ஏண்டி... இங்க போய் கூடிட்டு வந்த...அங்க கான்டீன்ல***

Ramya Rajan

***இருந்தா... அரட்டையாவது அடிக்கலாம்... இங்க பேச வேற கூடாது, யாருடி இந்த பாட்டெல்லாம் பொறுமையா உட்கார்ந்து கேட்கறது?"***

***" உன்னை நான் பாட்டு கேட்க... இங்க கூட்டிட்டு வரலை, கௌதம் BE., சிவில் படிக்கிறான். பாடறதல மட்டும் இல்லை... ஆளும் பார்க்க சூப்பரா இருப்பான்...இன்னைக்கு காலையில தான் பார்த்தேன்... அதுதான் உனக்கு காட்டலாம் என்று நினைத்தேன்".***

***"சூப்பரா இருப்பான்னா.. என் கண்ணுல இருந்து எப்படி தப்பிச்சான். பார்ப்போம்.." என்று வர்ஷா அசால்ட்டாக உட்கார்ந்து இருந்தவள், கௌதம் மேடை ஏறும் போதே பார்த்துவிட்டு... ஐயோ சூப்பரா! இருக்கானே...இவனை போய் இத்தனை நாள் தெரியாம இருந்திருக்கேன் என்று நினைத்து வருத்தப்பட்டாள்.***

***மேடை ஏறின கௌதம் தனக்கு மிகவும் பிடித்த பாடலை... பாட ஆரம்பித்தான். தன் மனதில் இருக்கும் ப்ரியாவை நினைத்து கொண்டே பாடியதால்... அவன் கண்களில் காதலும்...குரலில் குழைவும்... இருந்தது. அவன் ரசித்து பாடின பாட்டு அனைவரையும் வசிகரீத்தது.***

***"யார் இந்த பெண் தான் என்று கேட்டேன் முன்னாலே***

***இவள் எந்தன் பாதி என்று கண்டேன் தன்னாலே***

***என்னை பார்க்கிறாள் ஏதோ கேட்கிறாள்***

எங்கும் இருக்கிறாள் ஹோ ஹோ ஹோ

கண்ணால் சிரிக்கிறாள் முனனால் நடக்கிறாள்

நெஞ்சை கிழிக்கிறாள் ஹோ ஹோ ஹோ

கூட்டத்தில் இருந்தும் தனியாக தெரிந்தாள்

தோட்டத்தில் மலர்ந்த பூவாக திரிந்தால்

என்னை ஏதோ செய்தாள்

நான் கொஞ்சம் பார்த்தாள் எங்கேயோ பார்ப்பாள்

பார்க்காத நேரம் என்னை பார்ப்பாள்

என்னை பார்த்து சிரிப்பாள் நான் பார்த்தாள் மறைப்பாள்

மெய்யாக பொய்யாக தான் நடிப்பாள்

**பெண் நெஞ்சம் புதிர் அதை போல எப்போதும்**

**யாரும் யாரும் அறிந்ததே இல்லை**

**ஆண் நெஞ்சின் துடிப்பும் அன்றாட தவிப்பும்**

**பெண்கள் மதிப்பதே இல்லை**

**மனம் நொந்த பிறகே முதல் வார்த்தை சொல்வாள்**

**மழை நின்ற பிறகே குடை தந்து செல்வாள்**

**என்னை ஏதோ செய்தாள்**

**யார் இந்த பெண் தான் என்று கேட்டேன் முன்னாலே**

**இவள் எந்தன் பாதி என்று கண்டேன் தன்னாலே"**

**கௌதம் பாடி முடித்ததும் கைதட்டல் அடங்க வெகு நேரம் ஆனது இந்த தடவையும் அவன் தான் முதல் பரிசு வாங்கினான்.**

Ramya Rajan

***இதையெல்லாம் பார்த்து கொண்டிருந்த வர்ஷா அவன் எதோ இவளை பார்த்து பாடியதை... போல் மகிழ்ச்சி அடைந்தாள்...அவள் முகத்தை பார்த்த சுபா"வேண்டாம் வர்ஷா... உன் விளையாட்ட இவன்கிட்ட வச்சிக்காத... பார்க்க ஆள் அழகா... இருந்தாலும், ரொம்ப திமிர் பிடிச்சவன்....அவன் கிளாஸ் பெண்களிடமே... அளவாத்தான் பேசுவானாம்... அப்புறம் உன் இஷ்டம்."***

***"அவன் கிளாஸ் பொண்ணுங்க... என்னை மாதிரி அழகா இருக்கமாட்டாங்களா இருக்கும். நீ வேணா பாரு... அவனை.... என் பின்னாடி சுத்த வைக்றேனா... இல்லையான்னு.இப்பவே உனக்கு ப்ரூப் பண்றேன் என்னோட வா" என்று சுபாவையும் தன்னோடு அழைத்து கொண்டு வர்ஷா, கௌதமை தேடி போன்னாள்.***

***வர்ஷா BE (CS) முதல் வருடம்.ரொம்ப அழகா இருப்பா... அதனால அவளுக்கு கர்வமும் ஜாஸ்த்தி...காலேஜ் பசங்க நிறைய பேர்... அவள் பின்னாடி சுத்துறத... தனக்கு சாதகமா எடுத்து கொண்டு.... அவர்களை அவ இஷ்டத்துக்கு ஆட்டி வைப்பா....இப்ப கௌதமை தேடி போறா என்னாக போகுதோ...***

***ஆடிடோரியத்தில் இருந்து வெளியே வந்த கௌதமிற்க்கு வாழ்த்து சொல்ல அவனுடைய நண்பர்களும்... கூட படிக்கும்... சக காலேஜ் மாணவர்களும்... அவனை சுற்றி நின்றனர். அவனும் எல்லோரிடமும் சிரித்து பேசி... தன் நன்றியை தெரிவித்தான். அப்போது அங்கே வந்த வர்ஷா கௌதமிடம்"சூப்பரா... பாடினீங்க" என்று சொல்லி ஒரு பேப்பரை நீட்டி ஆட்டோகிராப் கேட்க, அவன் அவளை நிமிர்ந்து பார்த்து"நான் ஆட்டோகிராப் போடற... அளவு பெரிய ஆள்***

***இல்லைங்க.... நீங்க யாரவது சினிமாவுல... பாடறவங்க கிட்ட கேளுங்க" என்று சொல்லிவிட்டு கௌதம் போய் விட்டான்.***

***இதை பார்த்து சுற்றி நின்னவர்கள்... எல்லாம் சிரிக்க... வர்ஷா, தன்னை அவன் பார்த்தும் கூட... தான் கேட்டத செய்யலியே இரு... என்னை அவமான படுத்தின உன்னை பார்த்துகிறேன்... என்று மனதில் நினைத்துக்கொண்டு கோபமா அங்கே இருந்து போய் விட்டாள்.***

Ramya Rajan

5

***ஆறு மாதத்திற்கு பிறகு, கௌதமிற்க்கு ப்ரியாவும் தன்னை விரும்புகிறாள் என்று உறுதியாக தெரிந்தது. ஆனால் அவள் அதை ஒத்துக்கொள்வாளா... என்று சந்தேகமாக இருந்தது, எதற்கு அவள் என்னை பார்ப்பதை மறைகிறாள்? ஏன் நான் பார்க்கும் போது என்னை பார்க்க மாற்றாள் என்று யோசித்தவனுக்கு, அவள் மேல் கோபம் வந்தது, இவள் மனதில் என்னை பற்றி என்ன நினைக்கிறாள்? பொறுக்கி என்றா... அவள் என்னை பார்ப்பது தெரிந்தால்... நான் அவள் பின்னாடியே சுற்றுவேன் என்று நினைக்கிறாளா... என்று கோபம் கொண்டான்.***

***அடுத்த நாள் காலை வழக்கம் போல் கௌதம், ப்ரியாவின் ஸ்கூல் பஸ் வரும் நேரம் வெளியில் நின்றான். பேப்பர் படிக்காமல் பஸ் வரும் வழியே பார்த்து கொண்டிருந்தான். ப்ரியாவும் தூரத்திலேயே கௌதமை பார்த்துவிட்டு.... எப்போதும் போல் பார்க்காத மாதிரியே இருந்தாள், பஸ் கௌதமை கடந்து செல்லும் போது லேசாக திரும்பி பார்க்க... அவன் அவளையே தான் பார்த்துக்கொண்டிருந்தான்.***



Ramya Rajan

***அவன் கண்களில் தெரிந்த கோபத்தை பார்த்து அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.அன்று முழுவதும் அவள் அதையே நினைத்து கொண்டிருந்தாள், ஏன் கோபமா பார்த்தாங்க?***

***ஒரு வேலை நான் தினமும் அவங்களை பார்ப்பது அவங்களுக்கு தெரிந்து விட்டதோ, அவங்களுக்கு என்னை பிடிக்க வில்லையோ என்று குழம்ப அதற்க்கு அடுத்த நாளில் இருந்து... கௌதம் வெளியில் நிற்கவே இல்லை, கௌதமை பார்க்காதது... ப்ரியாவிற்கு வருத்தமாக இருந்தது.***

***அவளின் சோர்ந்த முகத்தை பார்த்து காரணம் கேட்ட காவ்யாவிடம்,***

***கௌதம் பற்றி எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள்.***

***"அடிப்பாவி இதுக்குதான் ஜன்னல் சீட் கேட்டியா... "***

***"ஆமா... ஆனா ஏன்...? அவங்க இப்ப கோபமா இருக்காங்க எனக்கு ரொம்ப பயமா இருக்கு " என்று ப்ரியா சொல்ல...***

***"இங்க பாரு கிட்டத்தட்ட ஒரு வருஷமா... நீ தினமும் காலையில் பார்ப்பது.... அவங்களுக்கு ஒன்னும் தெரியாம இருக்காது... அப்ப எல்லாம் நல்லா தானே இருந்தாங்க...அவங்க இப்ப வேற எதுக்கோ கோபமா இருக்கலாம்" என்று காவ்யா ப்ரியாவை சமாதனம் செய்ததும், ப்ரியாவும் அமைதியானாள்.***

Ramya Rajan

***ப்ரியா பரிட்ச்சைக்கு போகும் போது, கௌதம் இருக்கிறானா என்று பார்த்துக்கொண்டே போவாள், ஆனால் கௌதம் வெளியே வரவே மாட்டான். கார்த்திக்கு ஒன்றும் புரியவில்லை... நல்லா தானே இருந்தான், என்ன ஆச்சு? என்று நினைத்தவன் ஒரு நாள் பொறுக்க முடியாமல்"ஏன்டா இப்படி பண்ற?, பாவம் அந்த பொண்ணு... தினமும் நீ இருக்கியான்னு பார்த்துட்டே போகுது."***

***அதை கேட்டு கோபபட்ட கௌதம்"என்னை ஏன்டா கேட்கிற? அவளை போய் கேளு... நானா அவளை பார்த்திட்டு... பார்க்காத மாதிரி போறேன்... இப்பவெல்லாம் எங்க வீட்டுக்கு கூட வர்றது இல்லை... நான் தான் 3 வருஷமா அவளையே மனசுல நினைச்சிட்டு***

***இருக்கேன், ஆனா... அவ மனசுல நான் இருகேனான்னு கூட தெரியலை. முன்னாடி தான் சின்ன பொண்ணு... இப்ப என்ன?***

***இப்பவும் என்னை பார்த்திட்டு பார்க்காத மாதிரி போனா... என்னை என்ன பண்ண சொல்ற...."***

***கார்த்திக்கு கௌதமின் வருத்தம் புரிந்தது அவன்"நான் சொல்றத கேளு அவகிட்ட நேரடியா பேசிடு"*** *என்றான்.*

***"நானும் அப்படி தான் நினைச்சேன், எக்ஸாம் முடியட்டும் பேசறேன்..."***

***ப்ரியாவிற்கு பரிட்ச்சை முடிந்துவிட்டது, அவளால் இப்போது கௌதமை பார்க்க முடியவில்லை... அவளுக்கு அவனை பார்க்க வேண்டும் போல் இருந்தது.. அதனால் அவளது அம்மாவிடம்***

Ramya Rajan

***சென்று"லீவ் தான ஷ்ருதி வீட்டுக்கு போயிட்டு வரட்டுமா" என்று கேட்க....***

***ப்ரியாவும் அவர்கள் வீட்டிற்க்கு சென்று ரொம்ப நாள் ஆனதால்,"சரி போயிட்டு சீக்கிரம் வா" என்று சொல்லி அனுப்பி வைத்தார்***

***ஜானகி.***

***ப்ரியா சந்தோஷமாக கௌதம் வீட்டிற்க்கு கிளம்பி சென்றாள், அங்கே நடக்க போவது தெரியாமல்.***

***அன்று சனிக்கிழமை என்பதால் ஷ்ருதியும், கௌதமும் வீட்டில் தான் இருந்தார்கள். ப்ரியாவை அந்த நேரத்தில் எதிர்பார்த்திராத சாருமதி"வா ப்ரியா... இப்ப தான் எங்களை பார்க்க வரணும் என்று தோணுச்சா..."***

***"இல்ல அத்தை பரிட்ச்சை முடிந்ததும் வரலாம் என்று நினைத்தேன் எப்படி இருக்கீங்க?" என்று சாருமதியிடம் கேட்டவளின் கண்கள் என்னவோ கௌதமை தான் தேடியது.***

***"நல்லா இருக்கேன்" என்றவர்,"ஷ்ருதி.... ப்ரியா வந்திருக்கா பாரு.... என்று சத்தமாக" குரல் கொடுத்தார். அவர்கள் இருப்பது அடுக்கு மாடி குடியிருப்பில்... மூன்று படுக்கை அறைகள்... கொண்ட வீடு. சாருமதியின் குரல் கௌதம் காதிலும் விழுந்தது.***

Ramya Rajan

***என்ன அதிசயம்? என்று நினைத்து கொண்டே அவன் வெளியே வந்தான். கௌதம் வெளியே வந்த போது ஷ்ருதியுடன், பேசிகொண்டிருந்த ப்ரியாவை பார்த்து "என்ன மேடம் அதிசயமா... நம்ம வீட்டுக்கு வந்திருக்காங்க என்றான்." அவன் குரலில் இருந்த கோபத்தை உணர்ந்த ப்ரியா பயந்து அவனை பார்க்கவே இல்லை, உடனே அதற்கும் கௌதமிற்க்கு கோபம் வந்துவிட்டது.***

***"அம்மா... நான் வெளியே போயிட்டு வரேன்" என்று கிளம்பி கார்த்திக் வீட்டுக்கு சென்று விட்டான்.***

***கௌதம் வெளியே சென்றதும் ப்ரியா ஏமாற்றமாக உணர்ந்தாள், அவனை பார்க்க வந்துவிட்டு இப்போது அவன் வெளியே போய்விட்டானே என்று வருந்தினாள்.***

***"ரொம்ப திமிர் நிமிர்ந்தாவது பார்க்கிறாளா பாரு...." என்று அவளை திட்டிக்கொண்டே கார்த்திக் வீட்டிற்கு சென்றான்.***

***கௌதமை அந்த நேரத்தில் எதிர் பார்க்காத கார்த்திக், அவனை தன்னுடைய அறைக்கு அழைத்து சென்றான்.அங்கிருந்த டிவி முன் உட்கார்ந்த கௌதம், டிவி ரிமோட் வைத்து சேனல் மாற்றி கொண்டே இருந்தான்.***

***கொஞ்ச நேரம் பேசாமல் இருந்த கார்த்திக், "டேய் கௌதம்... இப்ப என்னதாண்டா உனக்கு பிரச்சனை..."***

Ramya Rajan

***"அவ வந்திருக்காடா..."***

***"யாரு ப்ரியாவா....? உங்க வீட்டுக்கா..."***

***"ஆமா..."***

***"அப்ப நீ இங்க என்ன செய்யற...?" என்று கார்த்திக் கேட்க,"அவ என்னை நிமிர்ந்து கூட பார்க்கலை அதுதான் இங்க வந்துட்டேன்"என்றான் கௌதம் கோபமாக.***

***"நீ என்ன...? அவ உன்னை பார்த்தாலும் கோப படற... பார்க்களைனாலும் கோப படற.... நீ உன் மனசுக்குள்ள என்ன தாண்டா.... நினைச்சிட்டு இருக்க? சரி வா உங்க வீட்டுக்கு போகலாம்... அவளிடம் மனசுவிட்டு பேசு.... சரி ஆகிடும்" என்று கார்த்திக் கௌதமை இழுத்து கொண்டு சென்றான்.***

***அங்கே சாருமதி சமையல் செய்ய, ஷ்ருதி மற்றும் ப்ரியா அவருடன் பேசிக்கொண்டே... உதவி செய்தார்கள். பிறகு கிருஷ்ணகுமாரும் வர அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தினர். கிருஷ்ணாகுமார் உணவு முடித்து கிளம்பி விட, சாருமதி சிறிது நேரம் தூங்க சென்றார். ஷ்ருதியும், ப்ரியாவும் பேசிக்கொண்டே டிவி பார்த்து கொண்டிருக்கும் போது அங்கே கௌதமும், கார்த்திக்கும் வந்தனர்.***

ஷ்ருதி கார்த்திக்கிடம் ப்ரியாவை அறிமுகம் செய்தாள், கார்த்திக் ப்ரியாவிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தான். பிறகு நான்கு பேரும் டிவி பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது ப்ரியா கௌதமை, அவன் பார்க்காத போது பார்ப்பதும்... அவன் அவளை பார்க்கும் போது... பார்க்காததை போல் இருந்தாள். அதை பார்த்து கௌதம் மனதிற்குள் கோபம் கொண்டான்.

இவளுக்கு இதே வேலையா போச்சு... ஷ்ருதி இருப்பதால் அவன் அமைதியாக இருந்தான். கார்த்திக் ஷ்ருதியிடம் கண்ஜாடை காட்டிவிட்டு"ஷ்ருதி... இந்த அண்ணன் வந்து எவ்வளவு நேரம் ஆச்சு... குடிக்க எதாவது கொடுக்கணும் என்று உனக்கு தோணலையா" என்றதும் ஷ்ருதி"சாரி கார்த்தி அண்ணா இருங்க ஜூஸ் கொண்டு வரேன்" என்று உள்ளே செல்ல... கார்த்திக்கும் அவளுடன் சென்றான்.

அவர்கள் இருவரும் சென்றதும், தானும் எழுந்து அவர்களுடன் செல்ல பார்த்த ப்ரியாவை"நீ உட்காரு... உன்னிடம்... நான் கொஞ்சம் பேசணும் என்றான்" கௌதம்.

அவன் அப்படி சொன்னதும்... பயந்து போன... ப்ரியாவின் உடல் நடுங்க ஆரம்பித்தது. அதை பார்த்து... சற்று இளகிய கௌதம்"ஒன்னும் இல்லை பயப்படாத... எனக்கு... உன்னிடம் ஒரு விஷயம்... கேட்கணும் அவ்வளவு தான்."

"என்ன கேட்கணும் சீக்கிரமா கேளுங்க, நான் போகணும்... அம்மா தேடுவாங்க..."என்ற ப்ரியாவின் குரலில் அழுகை இருந்தது.

***"நீ என்னை பார்க்கிற... தான, அதுவும் நான் பார்க்காத போது. நீ என்னை பார்க்கிறதும்...அதே நான் உன்னை பார்த்தா... முகத்தை திருப்பிகிறதும்..ஏன்...? என்னை பார்த்தா பொறுக்கி மாதிரி இருக்கா... நீ பார்க்கிறது தெரிஞ்சா..... நான் உடனே உன் பின்னாடியே சுத்துவேன் என்று நினைத்தியா... நீ என்னை பார்க்கிறது... எனக்கு ரொம்ப முன்னாடியே தெரியும். நான் உன்னை இது வரை எதாவது தொந்தரவு செய்தேனா...நீ பார்க்கிறதே போதும் ன்னு தான் நினைச்சேன். ஆனா உன் மனசுல நான் இருக்கேன்னா…. இல்லையான்னு... எனக்கு இப்ப தெரியனும், நீ என்னை உண்மையாவே விரும்புறியா இல்ல... ஜஸ்ட் டைம் பாஸ்ஸா... சொல்லு... "***

***கௌதம் சொன்னதை கேட்ட ப்ரியா"அப்ப இவனும் நம்மை விரும்புறானா" என்று நினைக்க...***

***அவள் இல்லை என்று தான் சொல்லுவா, அவள் சொல்லும் பதிலை கேட்டு அவளை அறைந்து விட கூடாது என்று கௌதம் கையை கட்டி அமர்ந்திருக்க,***

***ப்ரியா"ஆமாம்... நான் உங்களை விரும்புறேன்" என்றாள் தெளிவாகவும்.... அழுத்தமாகவும்.***

***ப்ரியா சொன்னதை கேட்ட கௌதம் சிறகில்லாமல்***

***வானத்தில் பறந்தான். அவனால் இன்னும்... அவள் சொன்னதை... நம்ப முடியவில்லை, அவன் அவளையே பார்க்க... அவள் முகம் சிவந்து அமர்ந்திருந்தாள். கௌதம், அவள் அருகில் சென்று***

அமர்ந்தவன். அவளது கையை எடுத்து... தன் கைகளுக்குள்... வைத்து கொண்டான். ப்ரியா பயந்தாள்...பயப்படாத... நான் ஒன்னும் செய்ய மாட்டேன்."

"நீ... எப்போது இருந்து என்னை விரும்புற" என்று கேட்க, ப்ரியா பதில் சொல்லாமல் மௌனமாக அமர்ந்திருந்தாள், கௌதம்"ஒரு வருஷம் என்றதும் ப்ரியா இல்லை என்று தலை ஆட்ட, அப்ப ரெண்டு வருஷமா என்றதும் அதற்கும்... அவள் இல்லை என்று தலை ஆட்ட... அப்ப மூனு வருஷமா.. என்றதும் ப்ரியா"ஆமாம்..." என்றாள்."அப்ப நீயும் என்னை போல... நாம முதல் தடவை பார்த்ததில் ... இருந்து லவ் பண்றியா" என்று கௌதம் கேட்க ப்ரியா அமாம் என்று தலை ஆட்டினாள்.

"அப்புறம் ஏன்...? ப்ரியா என்னை பார்த்தும்... பார்க்காத மாதிரி இருந்த... நான் உன்னை தொந்தரவு செய்வேன் என்று நினைத்தா... "

"இல்லை... தப்போன்னு பயமா இருந்தது... "

"லவ் பண்றது ஒன்னும் தப்பில்லை...எனக்கும்...உனக்கும்... இன்னும் எவ்வளவோ காலம் இருக்கு... வீனா மனச போட்டு குழப்பிக்காத...காதலிக்கிறவங்க எல்லாம் கண்டிப்பா... ஊர் சுத்தணும்ன்னு எந்த சட்டமும் இல்லை" என்ற கௌதம் தொடர்ந்து,

"எனக்கு உன் மனசுல நான் இருக்கேனா என்று தெரிஞ்சுக்கணும் என்று ஆசையாக இருந்தது... அவ்வளவு தான். இதுக்கு முன்னாடி நாம எப்படி இருந்தமோ.... இனிமேலும் அப்படியே இருக்கலாம்....



Ramya Rajan

***ஆனா ஒன்னு மட்டும் நியாபகம் வச்சுக்கோ... நீ இன்னைக்கு எடுத்த முடிவு... எடுத்தது தான்.. அதை யாரவது மாற்ற நினைத்தா... நான் விட மாட்டேன், உன்னை தூக்கிட்டு போயாவது... கல்யாணம் பண்ணிப்பேன்."***

***"நானும் மாற விடமாட்டேன்" என்று சொன்ன ப்ரியாவின் குரலில் இருந்த உறுதி கௌதமிற்கு மகிழ்ச்சியை தந்தது.***

***அப்போது கார்த்திக் "டேய் எவ்ளோ நேரம்டா பேசுவீங்க... நாங்க***

***வரட்டுமா... "*** *என்று கேட்க...*

***"வா கார்த்திக் என்றதும்..." கார்த்திக்கும், ஷ்ருதியும் ஹாலுக்கு வந்தார்கள். கார்த்திக் "ஜாடையில் சொல்லிட்டியா அவ என்ன சொன்னா" என்று கேட்க, கௌதம்***

***"சொல்லிட்டாலே அவ காதல***

***சொல்லும் போதே சுகம் தாலல***

***இதுபோல் ஒரு வார்த்தையை யாரிடமும் நெஞ்சு கேட்கல***

***இனி வேறொரு வார்த்தைய கேட்டிடவும் எண்ணி பார்க்கல***

Ramya Rajan

அவ சொன்ன சொல்லே போதும்

அதற்க்கு ஈடே இல்லை ஏதும், ஏதும்" என்று பாட

அவனுடைய பாட்டின் அர்த்தம் புரிந்த, கார்த்திக், சந்தோஷம் அடைந்தான். ப்ரியா சந்தோஷமாக.... தன்னுடைய வீட்டுக்கு கிளம்பி சென்றாள். அவளுக்கு கௌதமை நினைத்து பெருமையாக இருந்தது. கௌதமை அவள் தன்னுடைய உயிராகவே கருதினாள்.

ப்ரியா வீட்டிற்க்கு சென்றதும், ஷ்ருதி"டேய் அண்ணா... எப்ப ட்ரீட் கொடுப்ப" என்று கேட்க, அவள் சொன்னதை கேட்டு கௌதம்"எதுக்கு ட்ரீட்" என்றதும்."அது தான் உன் லவ் ஓகே ஆகிடுச்சு இல்லை... அதுக்கு தான்" என்ற ஷ்ருதி கண்சிமிட்ட, "டேய் கார்த்திக் இவளிடம் எதுக்குடா சொன்ன" என்று கௌதம் அலற...."நான் எங்க சொன்னேன் என்றான் கார்த்திக் பதிலுக்கு. அப்ப எப்படி இவளுக்கு தெரியும் என்று இருவரும் ஷ்ருதியை ஆச்சிர்யமாக பார்க்க,

"ப்ரியா ஒரு தடவை கௌதம் இல்லாத போது.... வீட்டுக்கு வந்திருந்தா... அப்ப கௌதமின் சின்ன வயசுலிருந்து....இப்போ வரை எடுத்த.... எல்லா போட்டோ ஆல்பத்தையும்.... அவளோட முட்ட கண்ண வச்சு... ரொம்ப ரசிச்சு... பார்த்திட்டு இருந்தா... அப்பவே லேசா சந்தேகம் வந்தது, இன்னைக்கு கிளியர் ஆகிடுச்சு."

"இங்க பாரு அவளை முட்ட கண்ணுன்னு சொன்ன கொன்னுடுவேன்...உனக்கு அவ கண்ணு மாதிரி அழகா... இல்லை

***என்று பொறாமையில பேசாத" என்று ப்ரியாவுக்கு கௌதம் பரிந்து பேச,***

***"பார்த்திங்களா கார்த்தி அண்ணா.... இப்படிதான் இவன் ப்ரியாவ ரொம்ப... ப்ரடெக்ட் பண்ணுவான், ம்ம்...எப்படியோ நல்லா இருந்தா சரி" என்று ஷ்ருதி பெரிய மனுஷி போல் சொல்ல, கௌதமும், கார்த்திக்கும் விழுந்து....விழுந்து சிரித்தனர்.***

6

***ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் என்ன தான் தங்களின் முழு நேரத்தையும்.... உழைப்பையும்.... திறமையையும்... தங்களின் கட்டுமான தொழில் செலுத்தினாலும்.... அவர்களால்... தாங்கள் நினைத்த உயரத்தை... முதலில் அடைய... முடியவில்லை, ஏனென்றால்... நிறைய பேர் இந்த கட்டுமான தொழில் இருப்பதே அதற்க்கு காரணம்.***

***கட்டுமான தொழில் செய்வதற்கு படித்திருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை...படிக்காதவர்கள் கூட அனுபவம் இருந்தால்... இந்த தொழில் செய்வது முறையே. அதனால் ராமமூர்த்திக்கும், கிருஷ்ணகுமாருக்கும் தங்களின் கம்பெனி முன்னேற வேண்டும் என்றால்... தாங்கள் கட்டிடத்திற்க்கு உபயோகிக்கும் பொருள்களின் தரம்...மற்றும் வாடிக்கையாளர்களின் திருப்தி... இவை இரண்டும் முக்கியம், என்பதை நன்றாக அறிந்திருந்தனர்.***

***இதன் காரணமாக இவர்கள் கட்டும் கட்டிடங்களுக்கு.... வாங்கும் பொருள்கள்.... தரமானதா... என்பதை நன்றாக தெரிந்து கொண்டுதான் வாங்குவார்கள். அதுமட்டுமில்லாமல் வேலைநடக்கும் கட்டிடங்களை நேரில் சென்று காலையும்...மாலையும்... தவறாமல் பார்த்து வருவார்கள். இவர்கள் கட்டும் கட்டிடங்களின் தரத்தை அறிந்த வாடிக்கையாளர்கள்... எண்ணிக்கை பெருகியது....இதனால் இவர்கள் கட்டும் கட்டிடங்களும் அதிகமாகியது.***

***அப்போது அவர்களுக்கு சரியான நேரத்தில் தோள் கொடுத்தான் கௌதம். கௌதம் தங்கள் நிறுவனத்தில்... முதலில் சின்ன... சின்ன... வேலைகள் தான் செய்தான். பின்பு அவனே அதிக வேலைகள் இருப்பதை பார்த்து அவனது அப்பா... மற்றும் மாமாவின்... வேலைகளை தானும் செய்ய ஆரம்பித்தான்.***

***அதிகாலையிலேயே கௌதமின் நாள் தொடங்கிவிடும்.காலை ஐந்து மணிக்கு எழுபவன்... தங்கள் வீட்டின் அருகில் இருக்கும் பார்க்கில் சிறிது நேரம் ஓடி விட்டு... வருவான், பின்பு வீட்டில் உடற்பயிற்சி செய்துவிட்டு...குளித்து 6.30 மணிக்கெல்லாம் ரெடி***

***ஆகிவிடுவான். தங்களின் கட்டுமான வேலை நடக்கும் சைட்க்கு சென்று... அன்று செய்ய வேண்டிய வேலைகளுக்கு தேவையான பொருட்கள் இருகிறதா...இதற்க்கு முன்பு நடந்த வேலைகளை.... சரியாக செய்து இருக்கிறார்களா... என்று சரி பார்ப்பான்.நேரம் இருந்தால் வீட்டுக்கு வந்து சாபிட்டு விட்டு காலேஜ் செல்வான்...***

***இல்லையென்றால் நேராக காலேஜ் சென்றுவிடுவான்.அவனுக்கு கார்த்திக் சாருமதி கொடுக்கும் உணவை கொண்டு வந்து கொடுப்பான். மாலையில் காலேஜ் முடிந்து அவர்கள் ஆபீஸ் சென்று***

Ramya Rajan

எதாவது வேலை இருந்தால் பார்த்துவிட்டு வீட்டுக்கு சென்று படிப்பான்.

கௌதம் விரும்பியே தங்களுடன் வேலை செய்வதால்

கிருஷ்ணகுமார், ஒன்றும் நினைக்கவில்லை....ஆனால் ராமமூர்த்திக்கு தான் உருத்தள்ளாக இருந்தது. இந்த கல்லூரி பருவம் எல்லோருடைய வாழ்விலும் மிக முக்கியமானது... இந்த வயதில் கௌதம் தங்களுடன் வேலை...வேலை... என்று அலைவதை ஜானகியிடம் சொல்லி வருத்தப்பட்டார்.

கௌதம், காலையில் ப்ரியாவின் பஸ் வரும் நேரம் நின்று பார்த்துவிட்டே... செல்வான். அவனை கண்டதும் மலரும்... அவளின் அழகிய பெரிய கண்களை... பார்ப்பதற்காகவே செல்வான். ப்ரியா இப்போதெல்லாம் கௌதமை பார்க்கும் போது முகத்தை திருப்பிகொள்லாமல் அவனை பார்த்து லேசாக சிரித்துவிட்டே செல்வாள்.

முரளி.... ஒரு நாள் அவன் நண்பர்களோடு உணவகத்திற்கு சென்றிருந்தான். அப்போது எல்லோரும் சேர்ந்து முதலில் ஸ்வீட் ஆர்டர் செய்ய... முரளி தனக்கு குலப் ஜாமுன் சொன்னான்... அப்போது அவனுக்கு ஷ்ருதி நியாபகம் தான் வந்தது. அவனுக்கு அவளை மிகவும் பிடித்திருந்தது...அவனால் அவளை அடிக்கடி பார்க்க முடியாது எப்போதாவது ஒரு முறை தான் பார்ப்பான்... ஆனால் அப்போது அவள் செய்யும் குறும்பும்... பேசும் பேச்சும் ... தினமும் இரவு துங்கும் போது நினைத்து பார்ப்பான்.



Ramya Rajan

***முரளிக்கு கல்லூரியில் இன்டர்ன்ஷிப் நடந்து கொண்டிருப்பதால், அவனுக்கு வாரத்தில் ஒரு நாள் தான் விடுமுறை... அதுவும் எல்லா வாரமும் கண்டிப்பாக விடுமுறை இருக்கும்... என்று சொல்ல முடியாது... அதனால் அவனுக்கு சென்னைக்கு வர முடியவில்லை. அவனுக்கு இது கடைசி வருடம் என்பதால்... அவனுக்கு படிக்க நிறைய இருந்தது.... அவன் நல்ல மதிப்பெண்கள் பெற்றால் தான் அவனால் MS சேரமுடியும்.... அவன் அதற்க்கான முயற்ச்சியில்... தீவிரமாக இருந்தான். அவனுக்கு இப்போது ஷ்ருதியை பற்றி நினைக்க நேரம் இல்லை... அதனால் முதலில் MS சேர்வோம் பிறகு பார்த்துக்கொள்ளலாம்... என்று நினைத்தான்.***

***கல்லூரியில் வர்ஷா கௌதமோடு, பேசி...பழக... ஆவலாக இருந்தாள். ஆனால் கௌதம் சரியாக வகுப்பு தொடங்கும் நேரத்திற்கு தான் வருவான் ...அதனால் அவளால் அவனோடு நின்று பேசமுடியாது... வெறும் ஹாய்...என்று மட்டும் தான் சொல்லமுடியும். அவனும் பதிலுக்கு ஹாய்... என்று சொல்லிவிட்டு நிற்காமல் சென்றுவிடுவான்.***

***மதியத்தில் கார்த்திக், கௌதம் இரண்டு பேரும் வீட்டில் இருந்து உணவு கொண்டுவருவதால்... வகுப்பிலேயே அமர்ந்து சாப்பிடுவார்கள், அதனால் அப்போதும் வர்ஷாவால் கௌதமுடன் பேச முடியவில்லை. மாலையில் மட்டுமே கௌதமோடு பேச முடியும் என்று தெரிந்து கொண்ட வர்ஷா அவனோடு பேசும் சந்தர்பத்திற்காக ஆவலோடு காத்திருந்தாள்.***

***மாலையில் வகுப்பு முடிந்ததும் தன் நண்பர்களோடு சிறிது நேரம் பேசிகொண்டிருக்கும் கௌதம், பேசி முடித்ததும் சில நாள் லைப்ரரி செல்வான். ஒரு நாள் லைப்ரரிக்கு சென்று கொண்டிருந்த***

Ramya Rajan

கௌதமை பின் தொடர்ந்த வர்ஷா புத்தகம் எடுத்துக்கொண்டிருந்தவனை அப்போதுதான் திடிரென்று பார்ப்பது போல் பார்த்து"ஹாய் கௌதம்" என்றாள், அவனும் பதிலுக்கு ஹாய்... என்று சொல்லிவிட்டு புத்தகத்தில் கவனமாக இருந்தான், அவனது செயலில் எரிச்சல் அடைந்தாலும் அதை காட்டிகொள்ளாமல் மேலும் பேச முயன்றவளை... இது லைப்ரரி... இங்க பேச கூடாது அப்புறம் பேசலாம்.... என்றான்.

அவள் விடாமல் எப்போது? என்றாள். கௌதம் வர்ஷவை புரியாத பார்வை பார்க்க ....அதற்க்கு வர்ஷா"அப்புறம் பேசலாம் என்று சொன்னீங்களே.... அது தான் எப்போ" என்று கேட்டேன் என்றாள். அவளை ஆழ்ந்து நோக்கிய கௌதமின் கண்களில் தெரிந்த கோபத்தை பார்த்து பயந்தாலும் அதைக்காட்டிக்கொள்ளாமல் வர்ஷா அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவளின் தீவிரத்தை பார்த்த கௌதம் இவள் பேசாமல்... அடங்க மாட்டாள் என்று நினைத்து, அவளிடம் எதுவும் பேசாமல்... வெளியே செல்ல... வர்ஷாவும் அவனை பின் தொடர்ந்து சென்றாள், வெளியே வந்த கௌதம் அங்கிருந்த ஒரு மரத்தடியில் சென்று நிற்க... வர்ஷாவும் அவனருகில் சென்று நின்றாள்.

"உங்களுக்கு என்னிடம் என்ன பேசணும்" என்று நேரடியாக கௌதம் வர்ஷாவை பார்த்து கேட்க,

வர்ஷா" எனக்கு உங்களை ரொம்ப பிடித்திருக்கு.....ஐ தினக், ஐ லவ் யு".

***கௌதம்.... வர்ஷா மீது முதலில் ஆத்திரப்பட்டாலும், அவளின் வயதை நினைத்து… சின்ன பெண்… சொன்னால் புரிந்து கொள்வாள் என்று நினைத்து"லவ் பண்றது ஒன்னும் தப்பில்லை... ஆனா அதுக்கு லவ் பண்ற ரெண்டு பேருக்கும்... விருப்பம் இருக்கணும். எனக்கு உங்க மேல விருப்பம் இல்லை" என்றான் தெளிவாக.***

***வர்ஷா "ஏன்? நான் அழகா… தானே இருக்கேன்."***

***கௌதம் "அழகா… இருந்தா மட்டும் போதுமா... எனக்கு உங்களை பிடிக்க வேண்டாமா..."***

***"இப்ப உங்களுக்கு என்னை பிடிக்க வில்லை சரி ஒரு வேலை கொஞ்ச நாள் கழிச்சு... உங்களுக்கு என்னை பிடிக்கலாம் இல்லையா..."***

***"எவ்வளவு நாள்... ஆனாலும்... என் முடிவு மாறாது" என்ற கௌதம் "ஆமா உங்க பேரு என்ன?" என்று கேட்டதும் வர்ஷாவின் முகம் மாறியது,***

***"என்னை தெரியாதவங்களே இந்த காலேஜ்ல் இல்லை... உங்களுக்கு... என் பேர் நிஜமாவே தெரியாதா...?"***

Ramya Rajan

*"தெரியாது..."*

*"வர்ஷா.."*

*"நல்லது... வர்ஷா நான் கடைசியா ஒன்னு சொல்றேன்..,*

***கேட்டுக்கோங்க. எனக்கு உங்க மேல விருப்பம் இல்லை, என்னை நினைத்து... உங்க டைம் வேஸ்ட் பண்ணாதீங்க..." என்று சொல்லிவிட்டு, விறுவிறு என்று அங்கிருந்து கௌதம் சென்றுவிட்டான்.***

***அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்த... வர்ஷா, இப்பதானே என் கூட பேச ஆரம்பிச்சிருக்க... இரு கொஞ்ச நாளில் ... உன்னை மாற்றி காட்றேன் என்று மனதுக்குள் நினைத்து கொண்டாள்.***

***கௌதமின் முகத்தை பார்த்தே... அவனுக்கு பிடிக்காத... விஷயம் எதோ நடந்திருக்கு என்று கண்டு பிடித்த கார்த்திக் அவனே சொல்லட்டும் என்று இருந்தான். சிறிது நேரத்தில் இயல்புக்கு திரும்பிய கௌதம், கார்த்திக்கிடம் வர்ஷா சொன்னதை சொல்ல...***

***"அவளுக்கு தான் பெரிய உலக அழகி... அதனால தன்னோட அழக பார்த்து... எல்லோரும் அவ பின்னாடி வருவாங்க என்று நினைப்பு.... இது எல்லாம் திருந்தாத கேசு...நீ... சொன்னதும் கேட்கும் என்று நினைச்சியா.... இதெல்லாம் கண்டுக்கவே கூடாது" என்றான் கார்த்திக்.***

Ramya Rajan

***அன்றிலிருந்து கௌதம்.... வர்ஷா எதிரில் வந்து.. ஹாய்... என்றாலும் பார்க்காத... மாதிரியே போய் விடுவான்.***

***வர்ஷாவும், என்னனவோ செய்து பார்த்தால்... ஆனால் அவளால் கௌமை தன பக்கம் திரும்பி கூட பார்க்க... வைக்க முடியவில்லை, இதில் எங்கிருந்து காதலிப்பது.***

***ப்ரியா அன்று பனிரெண்டாம் வகுப்பிற்கான ஸ்பெஷல் கிளாஸ் சென்றுவிட்டு திரும்பி கொண்டிருந்தாள். லீவில் ஸ்கூல் பஸ் கிடையாது என்பதால்... தனது ஸ்கூட்டியில் தான் சென்று வந்தாள். திரும்பி வரும் போது வண்டி டயர் பஞ்ச்சர் ஆனதால்... என்ன செய்வது? என்று தெரியாமல் நின்றவள்... பக்கத்தில் எதுவும் பஞ்ச்சர் கடை இல்லாததால்... தனது அப்பாவை செல்லில் கூப்பிட்டு சொன்னாள். அவர் தான் இப்போது செங்கல்பட்டில் இருப்பதால்.... யாரையாவது அனுப்புவதாக சொன்னார்.***

***ராமமூர்த்திக்கு சட்டென்று கௌதம் நியாபகம் தான் வந்தது. அவர் கிருஷ்ணகுமாரிடம் சொல்ல... உடனே அவர் தன் மகன் கௌதமை செல்லில் அழைத்து... ப்ரியா வண்டியுடன் நிற்கும் இடத்தை சொல்லி உதவ சொன்னார்.***

***கௌதம் அடைந்த சந்தோஷத்திற்க்கு அளவே இல்லை, ப்ரியாவை பார்க்க போகும் ஆவலில்.... வேகமாக கிளம்பினான், அவனின் வேகத்தை பார்த்து ஷ்ருதி"எங்கே போறே?" என்று கேட்டதிற்க்கு, வந்து சொல்கிறேன்... என்று கிளம்பிவிட்டான். போகும் வழியில் மெக்கானிக் கடைக்கு சென்று மெக்கானிக்கையும் அழைத்து கொண்டு சென்றான்.***

ப்ரியா தூரத்திலேயே.. கௌதம் வருவதை பார்த்து முகம் மலர்ந்தாள்.அவளருகில் வந்து வண்டியை நிறுத்திய கௌதம் அவளிடம் வண்டி சாவியை வாங்கி... மெக்கானிக்கிடம் கொடுத்தான்...அவர் வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு... டயரை கழட்டி எடுத்துக்கொண்டு... இன்னும் ரெண்டு மணி நேரத்தில்... அவர்கள் ஆபீசில் வண்டியை விடுவதாக... சொல்லி கிளம்பிவிட்டார்.

அவர் சென்றதும் ப்ரியாவும், கௌதமும், சிறிது நேரம் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்தபடி நின்றுவிட்டனர். முதலில் சுயநினைவு அடைந்த கௌதம் "ஹாய் ப்ரியா, எப்படி இருக்க?" என்று கேட்க....

"ம்ம்.. நல்லா இருக்கேன்... நீங்க எப்படி இருக்கீங்க?, இப்போது எல்லாம் உங்களை பார்க்கவே முடியலை...."

"நல்லா இருக்கேன், ஆமா.... நீ கேட்கிறதை பார்த்தா... என்னை ரொம்ப தேடினியோ...?"

"இல்லையே சும்மா தான் பார்த்தேன்... நீங்க இல்லை அதுதான் கேட்டேன்."

"ஏய் சும்மா ரீல் சுத்தாத.... உன் கோலிகுண்டு.. கண்ண...வச்சு... உருட்டி உருட்டி... நீ என்னை தேடுறதை... நானும் பார்த்திருக்கேன்."

Ramya Rajan

***அவன் சொன்னதை கேட்டு வெட்கப்பட்ட ப்ரியா”தெரியுது இல்ல அப்புறம் ஏன் வரலை....” என்றாள் உரிமையாக....***

***”வேலை இருந்தது ... அதனால தான். சரி வண்டி வர ரெண்டு மணி நேரம் ஆகும். அதுவரை ரோட்ல நிற்க முடியாது...எங்க வீடு பக்கத்தில் தானே இருக்கு அங்க போகலாமா... ”***

***சரி என்ற ப்ரியா, ஜானகிக்கு போன் செய்து சொல்லிவிட்டு, கௌதமுடன் கிளம்பினாள். அவனுடன் பைக்ல் செல்வது மகிழ்ச்சியை கொடுக்க... அதனால் அவள் முகம் மலர்ந்த தாமரை போல் அழகாக இருந்தது. ப்ரியாவை பைக் கண்ணாடியில் பார்த்து ரசித்துக் கொண்டே... கௌதம் வண்டியை ஓட்டினான். கௌதமிற்கு இப்போதும் நம்ப முடியவில்லை தானும், ப்ரியாவும் ஒன்றாக ஒரே வண்டியில் செல்வதை.... ப்ரியா... கௌதமை மெதுவாக வண்டி ஓட்ட சொல்ல...***

***”ஏன்... ப்ரியா?”***

***“இல்லை... வேகமா போன்னா... வீடு சீக்கிரம் வந்துடும்” என்றாள், முதலில் அவள் சொன்னதன் அர்த்தம் கௌதமிற்கு புரியவில்லை... பிறகு தான் அவள் தன்னுடன் அதிக நேரம் இருக்க... நினைக்கிறாள் என்று புரிந்து கொண்ட கௌதம், வண்டியை அவள் சொன்னபடியே... மெதுவாக ஓட்டினான்.***

***ஒன்றாக வீட்டுக்குள் நுழைந்த கௌதமையும், ப்ரியாவையும் பார்த்து வாயை பிளந்த ஷ்ருதி”ஏய் நீங்க ரெண்டு பேரும் எப்படி?***



Ramya Rajan

ஒன்னா வர்றீங்க" என்றாள், அவளுக்கு ப்ரியா எல்லாவற்றையும் சொன்னவுடன் ஷ்ருதி "அதுதானே பார்த்தேன்... இவன் ஏன் இப்படி குதிச்சிட்டு ஓடரான்னு.... உன்னை பார்க்க தான் அந்த ஓட்டமா..."

ப்ரியாவை, சாருமதி சந்தோஷமாக வரவேற்றார், அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தினர்... பின்பு சிறிது நேரம் அவர்களுடன் பேசிவிட்டு... ப்ரியா கௌதமுடன்

கிளம்பினாள். இந்த முறை கௌதமே மெதுவாக வண்டி ஓட்டி கொண்டே,

"என்ன ப்ரியா இப்பவாவது முடிவு பண்ணிட்டியா.... மேல என்ன படிக்க போறேன்னு...."

"நானும் சிவில் இன்ஜினியரிங்... தான் படிக்க போறேன்..."

"ஏன் ...?"

"எனக்கு இன்டீரியர் டிசைனர் ஆகணும் என்று ரொம்ப ஆசை... நான் B.E சிவில் இன்ஜினியரிங் படித்து முடித்து... மேலே இன்டீரியர் டிசைன்னிங் கோர்ஸ் படிக்கலாம் என்று இருக்கேன், நம்மளிடம் வீடு கட்ட வர்ற கஸ்ட்டமர்ஸ்ட்ட... நீங்க எனக்காக சிபாரிசு செய்ய மாட்டிங்களா...."



Ramya Rajan

கௌதம்”சிவில் இன்ஜினியரிங் படிச்சாதான் இன்டீரியர் டிசைனிங் படிக்கனும் என்று இல்லை, நீ... சிவில் இன்ஜினியரிங் படிக்கனும் என்று சொல்றதுக்கு வேற எதோ காரணம் இருக்கு... ”

”கரெக்ட்! எங்கப்பாவும், உங்கப்பாவும் பார்ட்னர்ஸ்... உங்க அப்பாவோட பிசினஸ் பார்த்துக்க... நீங்க இருக்கீங்க... ஆனா முரளி அண்ணா டாக்டர்க்கு படிகிறதால... எங்க அப்பாவோட பிசினஸ்.. நான் பார்த்துக்க போறேன். நீங்க எங்களை ஏமாத்திட... கூடாது இல்ல... ”

அவள் சொன்னத கேட்டு வாய்குள்ளையே சிரித்த கௌதம், எதுவும் சொல்லாமல்... வண்டியை அவர்கள் ஆபீஸ் முன் நிறுத்திவிட்டு, அங்கே இருந்த ப்ரியாவின் வண்டியை... சரி பார்த்து.. அவளிடம் கொடுத்து ”பார்த்து போ...” என்றான்.

ஸ்கூட்டியில் உட்கார்ந்த ப்ரியா”என்ன கௌதம்? நான் சொன்னது உங்களுக்கு இந்நேரம் கோபம் வந்திருக்கணுமே... வரலை.. திட்டுவீங்கன்னு பார்த்தா ஒண்ணுமே சொல்லலை... ”

”எதுக்கு திட்டனும் ப்ரியா....? வீட்ல மட்டும் இல்லை ஆபீஸ்ளையும்... என் கூட இருக்கனும் என்று ஆசைப்படறன்னு .. எனக்கு தெரியாதா... ” என்று கௌதம் சிரித்துக்கொண்டே சொல்ல....

கௌதம் சொன்னதை கேட்ட ப்ரியாவின் முகம், உடனே சிவந்து விட்டது. அடப்பாவி...! கண்டுபிடிச்சிட்டானே.... என்று



Ramya Rajan

***நினைத்தவள், அவன் முகத்தை மெதுவாக நிமிர்ந்து பார்க்க... அவளை பார்த்து கண் சிமிட்டியவன் "கரெக்ட் ..." தான என்றான்.***

***ப்ரியா சிரிப்பை மட்டும் பதிலாக தந்து விட்டு... அங்கிருந்து வேகமாக செல்ல... அவள் போவதையே பார்த்த... கௌதமின் முகம் புன்னகையில் ஒளிர்ந்தது.***

7

***முரளி MS படிப்பதற்க்கான... நுழைவு தேர்வை எழுதிருந்தான்.*** *அவன்* ***தேர்வை நல்ல முறையில் எழுதி இருந்ததால், MS படிக்க இடம் கிடைக்கும் என்று நம்பிக்கை இருந்தது, அதுவரை அவன் படித்த கல்லூரியில் இருக்கும் மருத்துவமனையில்... துணை பொது நல மருத்துவன் ஆக இருக்க கல்லூரியில் இருந்து கேட்டதால், அவனும் சரியென்று பணியில் சேர்ந்தான்.***

***வேலைக்கு சேர்ந்த இந்த இரண்டு மாதத்தில் அவனால் விடுமுறை எடுக்க முடியவில்லை, இப்போது தான் அவனுக்கு தொடர்ந்து நான்கு நாட்கள் விடுமுறை கிடைத்தது. எப்போதடா வீட்டுக்கு வருவோம், அப்பாவை பார்ப்போம்...அம்மா சமையலை ருசிப்போம்...தங்கையுடன் பேசுவோம் என்று இருந்தவன், வீட்டுக்கு வந்து அனைவரையும் பார்த்ததும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான்.***



Ramya Rajan

அவன் படித்து...படித்து களைத்து விட்டான். அவனுக்கு இந்த விடுமுறை கண்டிப்பாக தேவைப்பட்டது, படிப்பு டென்ஷன் இல்லாமல் ரிலாக்ஸ் ஆக இருந்ததால்.... ப்ரியாவை வம்பு இழுத்து கொண்டிருந்தான்.

அப்போது ப்ரியாவை செல்லில் அழைத்த ஷ்ருதி"ப்ரியா... உனக்கு நாளைக்கு சண்டே லீவ் தான, என்னோட 'ஸ்கை வாக்' வரியா... நான் அங்க லாஸ்ட் டைம் போயிருந்த போது... ஷாப்பிங் பண்ண கடையில ஒரு ப்ரைஸ் கூப்பென் குடுத்தாங்க... நான் நெக்ஸ்ட் டைம் ஷாப்பிங் பண்ணிக்கலாம் என்று வந்துட்டேன், நாளைக்கு தான் லாஸ்ட் டேட் ப்ளீஸ் ப்ரியா... கூட வரியா..."

"ஏன் உங்க அண்ணன் கூட போக வேண்டியது தானே...?"

"நான் கூப்பிட்டேன்...அவன் ஓசியில கொடுக்கிறத.. எல்லாம் வாங்க வர மாட்டானாம்...அது அவனுக்கு கவுரவ குறைச்சலாம்...அம்மாவும் நாளைக்கு ஒரு கல்யாணத்துக்கு போறாங்க அதனால தான்."

"நான் அம்மாட்ட கேட்டுட்டு போன் பண்றேன்....ஷ்ருதி" என்று போனை வைத்த ப்ரியா, ஜானகியிடம் ஷ்ருதி சொன்னதை சொல்ல...அதற்க்கு ஜானகி "நீயும்...ஷ்ருதியும் மட்டும் அங்க எல்லாம் போக வேண்டாம். நாளைக்கு எங்களோட, ஷ்ருதி அம்மா, அப்பாவும் கல்யாணத்துக்கு வராங்க... நாங்க காலையிலேயே... சீக்கிரம் கிளம்பனும்... வரதுக்கு சாயங்காலம் ஆகிடும், உங்களை வேற அனுப்பிட்டு யாரு பயந்திட்டே இருக்கிறது."



Ramya Rajan

ப்ரியாவும், ஜானகியும் பேசிக்கொண்டிருந்ததை கேட்ட முரளி”அம்மா எனக்கும் கொஞ்சம் ஷாப்பிங் பண்ண வேண்டியது இருக்கு...நான் வேணா அவங்க கூட போறேன்” என்றதும் ஜானகி”நீ.. கூட போறதுன்னா சரி, சேர்ந்து போயிட்டு பத்திரமா வாங்க” என்றார்.

ஜானகி சொன்னதை கேட்ட ப்ரியா, மகிழ்ச்சியுடன் ஷ்ருதியை அழைத்து அவளிடம் நாளை வருவதாக சொன்னாள், அப்போது அவள் கையில் இருந்து போனை வாங்கிய முரளி”அம்மா தாயே! நாளைக்கு நானும் உங்க கூட வரேன், போன தடவை... மாயாஜால்ல எவனோ ஒருத்தனிடம் போய், சேல்ஸ் ஆளுன்னு நினைச்சு தகராறு பண்ணியே அது மாதிரி... எதாவது அட்டகாசம் பண்ண (அவ இல்ல இவன் தான் பண்ண போறான்) அவ்ளோ தான் சொல்லிட்டேன்.”

ஷ்ருதி”அந்த மாதிரி நடக்காதுன்னு உறுதி எல்லாம் கொடுக்க முடியாது...உங்களுக்கு பயமா இருந்தா வராதீங்க... ”

”அப்படியா.... நான் வரதுனால தான் மேடம், உங்களையே எங்க அம்மா கடைக்கு அனுப்புறாங்க....நான் வரலைன்னா.... நீங்களும் போக முடியாது தெரிஞ்சிக்கோ.... ”

”ஒரு டாக்டர் மாதிரியா பேசுறீங்க... எதோ.. இப்ப தான் ஸ்கூல் சேர்ந்த பையன் மாதிரி... சரி வேண்டாம் என்று சொன்னா... சின்ன பையன் அழுவீங்க... அதனால வாங்க, உங்களுக்கு குச்சி முட்டாய் வாங்கி தரேன். ”

Ramya Rajan

***“எல்லாம்.... என் நேரம்...” என்று அலுத்த முரளி, கௌதம் வரலையா என்றான்.***

***"வரலை என்று நேத்து சொன்னான்... ஒரு வேலை... நாளைக்கு வரலாம்... நீங்க (ப்ரியா) வர்றீங்கள்ள ... அதனால வரலாம்."***

***"சரி ஷ்ருதி.... நாளைக்கு பார்க்கலாம்."***

***ப்ரியா, முரளி ஷ்ருதியுடன் பேசுவதை ஆச்சர்யமாக பார்த்தாள், அவளுக்கு தன் அண்ணனா இப்படி பேசுவது என்று இருந்தது.***

***மறுநாள் அதிகாலையிலேயே... கிளம்பிய ராமமூர்த்தியும், ஜானகியும்..... வழியில் கிருஷ்ணகுமாரையும், சாருமதியையும், தங்களின் காரில் அழைத்து கொண்டு கல்யாணத்திற்கு கிளம்பினர். போகும் போது ஷ்ருதியிடம் அவளையும், ப்ரியாவையும் பத்திரமாக கடைக்கு போய் விட்டு வருமாறு சொல்லி சென்றனர்.***

***அப்போது தான் கௌதமிற்கு ப்ரியாவும், ஷ்ருதியுடன் கடைக்கு செல்வது தெரிந்தது, அவர்கள் சென்றவுடன் உள்ளே வந்த கௌதம் ஷ்ருதியிடம்"நானும் உங்க கூட 'ஸ்கைவாக்' வரேன்...” என்றான், அதற்க்கு ஷ்ருதி"ஒன்னும் தேவை இல்ல..., நீ உன் கவுரவத்த காப்பாத்திட்டு இங்கேயே இரு... எங்களுக்கு போக தெரியும்" என்றாள்.***

Ramya Rajan

*"ப்ளீஸ்.. ஷ்ருதி. "*

*"சரி வந்து தொலை...ஆனா... ப்ரியா கூட அவங்க அண்ணனும் வர்றார்.. அதனால உன்னோட ரொமான்ஸ் எல்லாம் மூட்ட கட்டி வச்சிட்டு வா... "*

காலை பத்து மணிக்கு தங்களின் காரில் கிளம்பிய கௌதமும், ஷ்ருதியும் வழியில் முரளியையும், ப்ரியாவையும் காரில் ஏற்றிக்கொண்டு ஸ்கைவாக் நோக்கி சென்றனர்... போகும் வழியில் கௌதமும், முரளியும் ரொம்ப நாள் கழித்து சந்தித்தால்... அவர்களுக்கு பேச நிறைய விஷயம் இருந்தது.... அதனால் பேசிக்கொண்டே வந்தனர். ஷ்ருதியும், ப்ரியாவும் அவர்கள் பேசுவதை... கேட்டுக்கொண்டிருந்தனர். கௌதம் தான் காரை ஓட்டினான்... அதனால் அவனுக்கு கண்ணாடி வழியாக ப்ரியாவை பார்ப்பது எளிதாக இருந்தது, ப்ரியாவும் அவனை பார்த்து கொண்டு தான் இருந்தாள்.

மாலிற்குள் சென்றவுடன்.... நேராக ஷ்ருதி சொன்ன கடைக்கு சென்று கூப்பனை கொடுக்க.... அவர்கள் கடையை இப்போது தான் திறந்தோம்...அதுவும், பரிசு கூப்பனுக்கு மதியம் ரெண்டு மணியிலிருந்து... நாலு மணி வரை தான்... பரிசு வழங்குவது... அதனால் அப்போது வாங்க என்று சொல்ல, கௌதமிற்கு கோபம் வந்து விட்டது. அவன் ஷ்ருதியை பார்த்து முறைக்க... அவள் அவனை பார்க்காதது... போல் வெளியே சென்றுவிட்டாள். கௌதம்"முதலில் அந்த கூப்பனை கிழித்து போடு... உன் பேச்சை கேட்டு வந்தோம் பாரு மானமே போச்சு... "



Ramya Rajan

*"உன்னை யாரு? வர சொன்னா... நாங்க ஒன்னும் உன்னை கூப்பிடலை... நீயா தான் வந்த" என்று ஷ்ருதி எகிற... எப்போதும் போல் முரளியே அவர்கள் சண்டையை நிறுத்தினான். முரளி தன்னுடைய முதல் மாச சம்பளத்தில் வீட்டில் அனைவருக்கும் உடைகள் வாங்க வேண்டும் என்றும் ஷாப்பிங் முடிந்த பின் இங்கே இருக்கும் ஹோடலில் சாப்பிட்டு விட்டு... ஷ்ருதி, வாங்க வேண்டிய கடைக்கு சென்றால்... நேரம் சரியாக இருக்கும் என்று சொன்னதற்கு மற்றவர்களும் சரி என்றனர்.*

*முரளியும், கௌதமும் ஆண்கள் உடைகள் இருக்கும் கடைக்கும், ஷ்ருதியும், ப்ரியாவும் சுடிதார்கள் இருக்கும் கடைக்கும் சென்றார்கள். முரளி, ப்ரியாவிடம் அவளுக்கு பிடித்த சுடிதார் வாங்கி கொள்ள சொல்லி சென்றான். முரளி தனது அப்பாவிற்கு உடைகள் வாங்கி விட்டு தனக்கு என்று சிலது வாங்கினான். கௌதம்.... முரளிக்கு உடைகள் தேர்வு செய்வதில் உதவினான்... இவர்கள் இருவரும் கடையில் இருந்து வெளியில் வந்து பார்த்த போது... அப்போதும் பெண்கள் இருவரும் வந்த பாடில்லை...ஏன் இன்னும் வரவில்லை? என்று உள்ளே சென்றனர்.*

*அங்கே ப்ரியா இன்னும் உடைகளை பார்த்து கொண்டிருந்தாள், முரளி அவளிடம் வாங்கிவிட்டயா என்று கேட்டதற்கு இன்னும் இல்லை என்றாள். முரளிக்கு கோபம் வந்துவிட்டது"என்ன ப்ரியா ? ஒரு டிரஸ் எடுக்க இவ்வளவு நேரமா..." "சாரி அண்ணா .... எனக்கு இங்க எதுவுமே பிடிக்கல....வேற கடைக்கு போகலாம்ன்னு நினைச்சேன் ஆனா... ஷ்ருதிக்கு, இந்த கடைதான் பிடிச்சிருக்கு அதனால அவ வாங்கினதும் போகலாம்" என்று ப்ரியா சொல்லி கொண்டிருக்கும் போதே...அங்கே கைநிறைய... துணியோடு வந்த*

Ramya Rajan

ஷ்ருதியை பார்த்து கௌதம்"எதுக்குடி இவ்வளவு துணி... இங்க இருந்து வாங்கிட்டு போய்... தாம்பரத்தில கடை வைக்க போறியா..." அதற்க்கு ஷ்ருதி"நான் இப்ப காலேஜ் படிக்கிறேன்... உனக்கு ஞாபகம் இருக்கா..." என்று கேட்டாள்.

"நீ காலேஜ் சேர்ந்தே மூனு மாசம் தான் ஆகுது... காலேஜ் திறகறத்துக்கு முன்னாடி இதே காரணத்த சொல்லி... ஒரு கடையவே காலி பண்ண... அப்ப வாங்கின எல்லா டிரஸ்சையும் அதுக்குள்ளவா... போடுட்ட, ஒழுங்கா இதுல இருந்து ஒரே ஒரு டிரஸ் மட்டும் எடுத்துக்கோ... நான் வேற எந்த டிரஸ்க்கும் காசு கொடுக்க மாட்டேன்" என்று கௌதம் உறுதியாக சொல்லி விட,

ஷ்ருதி முகத்தை தொங்க போட்டு கொண்டே... தான் தேர்ந்த் எடுத்த டிரஸ்களில்... இருந்து ஒன்றை மட்டும் எடுத்துக்கொடுத்தாள், கௌதம் அதை எடுத்துக்கொண்டு பில் போட சென்றுவிட...முரளி, ஷ்ருதியிடம் இருந்த மற்ற டிரஸ்களில்... இருந்து ஒரு அழகான சுடிதார்.... எடுத்து அவன் பில் போட சென்றான். ஷ்ருதி நினைத்தாள் அது ப்ரியாவிற்காக இருக்கும் என்று... ஆனால் பணம் கட்டிவிட்டு வந்த முரளி, ப்ரியாவை பார்த்து"நீ போய் வேற கடையில டிரஸ் பாரு" என்றவன் ஷ்ருதியிடம் "நீ என் கூட வா... எங்க அம்மாவுக்கு சாரீ... எடுக்கணும், நீ தான் வேகமா செலக்ட் பண்ற" என்று கூட்டி சென்றான். கௌதமிற்கு ஒன்றும் புரியவில்லை... தான் இப்பொது முரளியுடன், போவதா... இல்லை ப்ரியாவுடன் போவதா...முரளி, அவனை கூப்பிடமல் சென்றதை வைத்து அவன் ப்ரியாவுடன் சென்றான்.

கௌதம் தன்னுடன் வருவதை பார்த்து மகிழ்ந்த ப்ரியா, அவனிடம் தனக்கு ஐஸ் கிரீம் வேண்டும் என்று கேட்டாள்.

*"முதல்ல டிரஸ் செலக்ட் பண்ணு... அப்புறம் நாம நிதானமா... உட்கார்ந்து ஐஸ் கிரீம் சாப்பிடலாம். இல்லைனா இந்த தடவையும் நீ லேட் பண்ணா... உங்க அண்ணனுக்கு கோபம் வந்திடும்"*

*"உங்களுக்கு முரளி அண்ணாவ பார்த்து பயமா... "*

*"ஆமா இவங்க அண்ணன் பெரிய பூச்சாண்டி! பார்த்தோன பயப்படறதுக்கு...அவர் உன் அண்ணனா இருந்தாலும்... என், முன்னாடி உன்னை திட்றது... எனக்கு கஷ்டமா இருக்காதா.... "*

*"நீங்க மட்டும் ஷ்ருதியை ... திட்டலாமா... "*

*"நல்லா மடக்கி... மடக்கி... கேள்வி கேளு.. பேசாம.. நீ லா படி... "*

*"நீங்க ஷ்ருதிய மட்டும்மா திட்றீங்க...என்னையும் தான் திட்டி இருக்கீங்க... திடீர், திடிர்ன்னு கோபம் வேற வருது... நான் எப்படி தான் உங்களை சமாளிக்க போறேன்னோ.... "*

*"இப்ப நீ என்ன சொல்ல வர்ற ப்ரியா? ...எனக்கு கோபம் வர்றதுனால, என்னை உனக்கு பிடிக்கலையா....? "*

*கௌதம் சொன்னதை கேட்டு திடுகிட்ட ப்ரியா, எதுவும் பேசாமல் அருகில் இருந்த கடைக்குள் நுழைந்தாள், கௌதமும் அவளுடன்*

Ramya Rajan

***சென்றான். ப்ரியா அவள் பாட்டுக்கு உடைகளை பார்த்து கொண்டிருந்தாள்... ஆனால் அவள் கண்கள் கலங்கி இருந்தது... அவளை பார்த்த கௌதம்"நகரு... நான் உனக்கு டிரஸ் செலக்ட் பண்றேன்" என்று அவனாகவே ஒவ்வொரு டிரஸ் ஆக எடுத்து அவள் மேல் வைத்து பார்த்தான்... அப்படி, அவன் ஒவ்வொரு முறை உடையை அவள் மேல் வைக்கும் போதும்... அவன் விரல்கள் அவள் மீது உரசியது... அவன் தொடுகை ஏற்படுத்தும் மாற்றத்தை அறியாத கௌதம், மற்றொரு உடையை எடுத்துக்கொண்டு அவளருகில் வர.. வேகமாக பின்னால் நகர்ந்த ப்ரியா"மேல வச்சு பார்க்க வேண்டாம் நீங்களே... ஒரு டிரஸ் செலக்ட் பண்ணுங்க" என்றாள், அவள் சொன்னதை கேட்ட கௌதம், இவ என்ன என்னை பொறுக்கின்னு நினைகிறாளா... என்று கோபத்தோடு அவள் முகத்தை பார்த்தவன், அவள் முகம் சிவந்து...நாணத்தோடு... இதழ்களில் புன்னகையுடன் இருந்தவளை பார்த்ததும்... அவனுக்கு புரிந்தது...கோபம் போய் சிரிப்பு வந்தது... அவன் வேண்டும் என்றே உடையுடன் அவள் அருகில் செல்ல... அவன் கை பிடித்து தடுத்த ப்ரியா"வேண்டாம் கௌதம்.... ப்ளீஸ்.." என்றாள், அவள் பிடித்த கையை விடாமல் பற்றிக்கொண்டு அவளுக்கு ஒரு உடையை தேர்ந்தெடுத்தவன்...அந்த உடைக்கு பணத்தை கொடுத்துவிட்டு... அவளை அழைத்துக்கொண்டு ஐஸ் கிரீம் கடைக்கு சென்றான்.***

***அங்கு சென்று வேறு வழியில்லாமல்... அவள் கையை விட்டவன். இருவருக்கும் ஐஸ்கிரீம் வாங்கிவிட்டு... அங்கே இருந்த இருக்கையில் இருவரும் அமர்ந்தனர். ப்ரியா ருசித்து ஐஸ்கிரீம் சாப்பிடும் அழகை ரசித்தவன்...அவளிடம்"மேடம்க்கு கோபம் போச்சா..." என்றான், அவள் இல்லை என்று தலை ஆட்டினாள்..."என்னை பிடிக்கலையா என்று கேட்டா... இல்லை ரொம்ப பிடிக்கும் என்று சொல்லணும், அதை விட்டுட்டு அழ கூடாது" என்று கௌதம் சொல்ல... ப்ரியா சிரித்தாள்.***

***கௌதம் எழுந்து ஐஸ்கிரீம்க்கு பணம் கொடுக்க சென்றான்...அவனுடனே தானும் எழுந்த ப்ரியா, அவன் பணம் கொடுக்கும் போது... அவன் சட்டையை பிடித்து இழுத்து... அவன் காதில்"ஐ லவ் யு..." என்றாள், இன்னொரு ஐஸ்கிரீம் தான் கேட்க போகிறாள் என்று நினைத்தவன்... அவள் சொன்னதை கேட்டதும் திகைத்து நின்றான்...சொல்லிவிட்டு வேகமாக அங்கிருந்து நகர்ந்த ப்ரியா மாலின் நடுப்பகுதிக்கு வந்து... கிழே குனிந்து அடுத்த தளத்தை பார்க்க... அங்கே முரளி, ஷ்ருதியுடன் தோளில் கைபோட்டு செல் போனில் போட்டோ எடுத்துக்கொண்டிருந்தான். அதைக்கண்டு அதிர்ச்சி அடைந்தவள்...கௌதம் பார்த்தால் என்னை சொல்வான்னோ என்று பயந்து... தன்னை நோக்கி வந்த கௌதமிடம் வேகமாக சென்று"எனக்கு இன்னொரு ஐஸ்கிரீம் வேண்டும்" என்றாள். அவனும் இன்று அவள் வைரத்தையே கேட்டாலும் வாங்கி கொடுக்கும் மனநிலையில் இருந்ததால், அவளை அழைத்துக்கொண்டு மீண்டும் ஐஸ்கிரீம் ஷாப் சென்றான்.***

***கௌதமும், ப்ரியாவும் மறுபடியும் ஐஸ்கிரீம் ஷாப்ல்... சென்று அமர்ந்தனர். ஐஸ்கிரீம்க்கு ஆர்டர் கொடுத்துவிட்டு... வந்து அமர்ந்த கௌதமிடம், ப்ரியா அவள் ஸ்கூல் கதைகளை... சொல்லிக்கொண்டிருந்தாள்.***

***கௌதம் ப்ரியாவை ரசித்து பார்த்துக் கொண்டிருந்தான், அவள் பேசும் போது ஆடும்... காது தோட்டையும், கண்களை உருட்டி... பேசும் அழகும், அவனை கட்டி... இழுத்தது, கௌதம் பேசாமல் அவளையே பார்ப்பதை பார்த்து என்னவென்று ப்ரியா கேட்க,***

Ramya Rajan

*"இல்ல நீ பேசும் போது... டான்ஸ் ஆடாம... பேசமாட்டியா..."*

*அவன் சொல்வது புரியாத ப்ரியா"நான் எப்போது டான்ஸ் ஆடினேன்" என்றாள்.*

*"இரு... ஒரு நாள் உனக்கு தெரியாம... நீ பேசும் போது... வீடியோ எடுத்து காமிக்கிறேன், அப்போ தெரியும் உனக்கு, நீ எப்ப டான்ஸ் ஆடறேன்னு" அவன் சொன்னதை கேட்டு முறைத்த ப்ரியா முடியாமல் சிரித்துவிட... அப்போது முரளியும், ஷ்ருதியும் அங்கே வந்து சேர்ந்தனர்.*

*முரளி, ஷ்ருதி இருவர் முகத்திலும்... மகிழ்ச்சி வெளிப்படையாக தெரிந்தது. அதை கண்டும் காணாமல் இருந்தாள் ப்ரியா. நான்கு பேரும் அங்கே இருந்த உணவகத்தில் உணவு அருந்தினர், பின்பு ஷ்ருதியின் பரிசு பொருளை வாங்கி கொண்டு வீட்டிற்க்கு கிளம்பினார்கள்.*

*போகும் வழியில் நான்கு பேரும்... அவரவர் சிந்தனையில் இருந்ததால்...யாரும் பேசவில்லை. ஷ்ருதி காரின் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்ப்பது போல்... இன்று மாலில் நடந்ததை நினைத்து பார்த்தாள்.*

*ஷ்ருதியும், முரளியும் சாருமதிக்கு புடவை வாங்க சென்ற போது முரளி, ஷருதியிடம் அவள் படிப்பை பற்றி கேட்டான். அதற்க்கு ஷ்ருதி தான் மாலை நேர கல்லூரியில் B.com படிப்பதாகவும், காலையில் CA preliminary எக்ஸாமிற்க்காக கோச்சிங் கிளாஸ்*

Ramya Rajan

செல்வதாகவும் சொன்னாள், அதை கேட்டு மகிழ்ந்த முரளி அவளுக்கு வாழ்த்து தெரிவித்தான். அவர்கள் இருவரும் பேசிக்கொண்டே கீழ் தளத்தில் இருந்த புடவை கடைக்கு சென்றனர்.

முரளி ஷருதியிடம் தனது அம்மாவிற்கு புடவை செலக்ட் செய்ய சொல்ல... அதற்க்கு ஷ்ருதி மறுத்து "நீங்க பணம் மட்டும் குடுக்காம நீங்களே பார்த்து வாங்கினாதான், உங்க அம்மாவிற்கு சந்தோஷமா இருக்கும். அதனால நீங்க செலக்ட் பண்ணுங்க, அந்த புடவை நல்லா இருக்கா... இல்லையா... என்று நான் சொல்றேன்" என்றாள். அவள் பார்ப்பதற்கு விளையாட்டுத்தனமாக தெரிந்தாலும் அவள் சொன்னது உண்மை தான் என்று அவள் சொன்னபடியே செய்தான்.

புடவை வாங்கி முடித்ததும் ப்ரியா, கௌதமிற்கு இன்னும் கொஞ்சம் நேரம் தனிமை கொடுக்க நினைத்த ஷ்ருதி, முரளியிடம் "எனக்கு கொஞ்சம் புக்ஸ் வாங்கணும்... புக் ஷாப் போகலாமா" என்றாள், அவனும் சரி என்று சொல்ல... இருவரும் அதே தளத்தில் இருந்த புக் ஷாப் சென்றனர்.

முரளி தனது துறை சம்பந்தமான புத்தகம் இருக்கிறதா என்று பார்க்க வந்தவன், கண்களில் அங்கு இருந்த வாழ்த்து அட்டைகள் பட அவற்றை பார்த்துக்கொண்டே வந்தவன், அதில் காதலன் காதலிக்கு கொடுப்பது போல் இருந்த வாழ்த்து அட்டையை கையில் எடுத்தான்.

அதில் இருந்த வரிகளை படிக்க... அது ஷ்ருதிக்காகவே, எழுதியதை போல் இருந்தது. அந்த கார்டு அவனுக்கு ரொம்பவும் பிடித்ததால்.. அதை வாங்குவது என்று முடிவு செய்தான் ஆனால்.. தன்னால்

*அவளுக்கு இந்த கார்டை கொடுக்க முடியுமா என்று நினைத்தவன், இன்னும் அவளிடம் காதலை சொல்லவே இல்லை, இதில் எங்கே போய் கிரீடிங் கார்டு கொடுப்பது என்று, அந்த கார்டை எடுத்த இடத்திலேயே வைத்தவன், ஷ்ருதியை தேடி சென்றான்.*

*அங்கே அவள் யாரோ ஒரு வாலிபனோடு சிரித்து பேசிக்கொண்டிருந்தாள், அந்த வாலிபனின் கையில் அவன் பார்த்த அதே க்ரீடிங் கார்டு... இருந்தது, அதை பார்த்ததும் ஷாக் ஆன முரளி, அந்த வாலிபன் அவளிடம் காதலை சொல்லவே வந்திருப்பதாக நினைத்து... வேகமாக ஷ்ருதி அருகில் சென்று... அவளை தோளோடு சேர்த்து அணைத்தவன், அந்த வாலிபனிடம்"நாங்கள் இருவரும் காதலர்கள்" என்றான். அந்த வாலிபனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை... ஏன், திடிர் என்று என்னிடம் இதை சொல்கிறான் என்று யோசித்தவன்... முரளியின் கண்கள்... அவன் கையில் இருந்த க்ரீடிங் கார்டில், இருப்பதை பார்த்து... புரிந்து கொண்டவனால்... சிரிப்பை அடக்க முடியவில்லை"அப்படியா ... சார் வாழ்த்துக்கள்" என்றவன் ஷ்ருதியிடம் விடைபெற்று சென்றான்.*

*அவன் சென்றதும் நிம்மதி பெருமுச்சு விட்ட... முரளி, ஷ்ருதியை பார்த்தான், அவள் அவனைத்தான் முறைத்து கொண்டிருந்தாள். அவள் முறைப்பதை பார்த்து அவளிடம் இருந்து விலகி நின்றவன்*

*"இங்க பாரு ஷ்ருதி, நீ சின்ன பொண்ணு அதனால உனக்கு யாரு நல்லவங்க...யாரு கெட்டவங்கன்னு ... தெரியாது, இப்படி கண்டவனும் வந்து க்ரீடிங்க்ஸ் கொடுத்தா வாங்க கூடாது... "*

Ramya Rajan

***"அவன் எனக்கு க்ரீடிங்க்ஸ் கொடுக்க வந்தான் என்று உங்களுக்கு தெரியுமா... அவன் பர்ஸ் கீழ கிடந்ததை... நான் தான் எடுத்து தந்தேன் அதுக்கு... அவன் தேங்க்ஸ் சொன்னான்."***

***முரளி தேங்க்ஸ் தான் அந்த லட்ச்சனமா... சொன்னான்னா என்று நினைத்தவன், அவளை பார்த்து சரி வா போகலாம் என்று வெளியே சென்றான், ஷ்ருதியை காணாமல் திரும்பி பார்க்க அவள் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தாள், அவளிடம் வந்தவன்"என்ன ஷ்ருதி? இங்கேயே நின்னுட்ட..." என்றதற்கு அவள்"ஆமா ... நீங்க அவனிடம் என்னமோ... சொன்னிங்களே" என்றாள்.***

***இனியும் அவளிடம் சொல்லாமல் இருக்க முடியாது என்று நினைத்த முரளி"வா வெளியே... போய் உட்கார்ந்து பேசலாம்..." என்று அவளை அழைத்துக்கொண்டு வெளியில் சென்றவன், அவளை அங்கே இருந்த இருக்கையில் அமர வைத்துவிட்டு... ஒரு நிமிஷம்... வரேன் என்று சென்றவன், வரும் போது அவன் கையில் ஒரு க்ரீடிங் கார்டு இருந்தது. அதில் அவன் எதோ எழுதி... ஷ்ருதி கையில் கொடுக்க...***

***"இப்ப தான் யாரோ கண்டவனும் வந்து க்ரீடிங்க்ஸ் கார்டு கொடுத்தா வாங்க கூடாது என்று சொன்னஙக, அது யார் என்று உங்களுக்கு தெரியுமா ...?"*** *என்று ஷ்ருதி கேட்க....*

***முரளி சத்தமாக சிரித்தவன்"சரி.... நீ கிரேடிங் கார்டு தனியா... இருக்கும் போது படி. ஆனா.... இப்ப நான் சொல்றத கேளு... எனக்கு உன்ன ரொம்ப பிடிச்சிருக்கு... நீ என் லைப் பார்ட்னரா வந்தா.. நாம சந்தோஷமா இருப்போம் என்று நம்புகிறேன் ...எல்லாத்துக்கும்***

Ramya Rajan

மேல.. நான் உன்னை விரும்புகிறேன்... நானே இதை... இப்ப கொஞ்ச... நேரத்திற்கு முன்னாடி தான் உணர்ந்தேன். நான் உன்னை நிஜமாகவே விரும்புறேன்னா... என்று தெரியாமல் தான் இருந்தேன். ஆனா.... கொஞ்சம் நேரம் முன்னாடி... நீ எனக்கு இல்லையோ என்று நினைத்து... யோசிக்காம... எதோ சின்ன பையன்... மாதிரி, நான் செய்த செயலே... எனக்கு என்னை புரிய வைச்சிடுச்சு . நீ என்ன சொல்ற ஷ்ருதி?"

"இப்படி திடிர் என்று கேட்டா... நான் என்ன சொல்றது...நான் இந்த மாதிரி எல்லாம் யோசிச்சது இல்லை... "

"வேறு யாரையாவது விரும்புறியா...?"

"இல்லை... "

"அப்ப, உனக்கு என்னை பிடிக்கலையா ...?

"அப்படியெல்லாம் ஒன்னும் இல்லை" என்று வேகமாக ஷ்ருதி சொன்னதும்,"சரி அப்போ பிரச்சனை ஒன்னும் இல்லை... நீ என்னை லவ் பண்ணலைன்னா பரவாயில்லை. ஆனா... என்னை தான் கல்யாணம் பண்ணிக்கணும்... சரியா" என்று முரளி கேட்டவுடன், ஷ்ருதிக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை..."நீங்க டாக்டர்ன்னு வெளியே சொல்லிடாதீங்க..." என்றாள்.

*" ஏன் டாக்டரும் மனுஷங்க தானே அவங்க லவ் பண்ண கூடாதுன்னு சட்டம் எதுவும் இருக்கா..." என்ற முரளி,*

*"சரி.. நான் இப்ப உன்னிடம் ப்ரொபோஸ் பண்ணதை... கொண்டாடலாம் வா... இன்னைக்கு விட்டா... அப்புறம் முடியாது...நான் இன்னைக்கு நைட் கோயம்புத்தூர்... கிளம்பிடுவேன்" என்று அவள் கையை பிடித்து இழுத்துக்கொண்டு... அங்கிருந்த கேக் ஷாப் சென்றான்.*

*ஷருதியிடம் கேட்டு அவளுக்கு பிடித்த கேக் வாங்கியவன்... முதல் பீஸ் கேக்கை... அவனே அவளுக்கு ஊட்டிவிட்டான். ஷ்ருதிக்கு நடப்பதெல்லாம் கனவு போல் இருந்தது... இன்று முரளியுடன் வெளியே வந்தது... அவன் அவளிடம் காதலை சொன்னது.... இப்போது இருவரும் ஒன்றாக அமர்ந்து கேக் சாப்பிடுவது... எல்லாமே வேகமாக நடப்பது போல்... இருந்தாலும், அவளுக்கு பிடித்து தான் இருந்தது.*

*ஷ்ருதி, முரளியிடம்"ஆமா... நம்ம கூட உங்க தங்கையும், என் அண்ணனும் வந்திருக்காங்க நியாபகம் இருக்கா... நம்மள எங்க காணோம் என்று நினைக்க போறாங்க" என்றாள்.*

*"அப்படி தேடினா... போன் பண்ணு வாங்க... பயபடாதே... "*

*"நீங்க பண்ற கூத்தெல்லாம் எங்கண்ணனுக்கு தெரிஞ்சா... என்னாகும் தெரியுமா..." என்று ஷ்ருதி முரளியை மிரட்டினாள்.*

Ramya Rajan

*"ஒன்னும் ஆகாது... இப்படி மாட்டிடீன்களே மச்சான் என்று, கௌதம் சொல்லுவான்" என்ற முரளி, ஷ்ருதியை பார்த்து சிரிக்க, ஷ்ருதி அவனை பார்த்து முறைத்தாள்.*

*முறைக்காத குலாப்ஜாமுன்... என்றவன் அவளிடம் ஒரு கவரை கொடுக்க... அதில் அவள் தேர்ந்தெடுத்த சுடிதார் இருந்தது, அதை பார்த்து ஏனென்று கேட்க..."நீயும் என் குடும்பத்தில் ஒருத்தி... என் முதல் மாத சம்பளத்தில்... அவங்களை போல்... உனக்கும் டிரஸ் வாங்கினேன்" என்றவுடன், ஷ்ருதியால், மறுக்க முடியவில்லை அவள் சுடிதாரை வாங்கி கொண்டாள்... வா போகலாம் என்று அவளோடு வெளியே வந்த முரளி, இனி இவளை எப்போது பார்ப்போம் என்று நினைத்தவன்... அவளோடு சேர்ந்து தனது மொபைலில்... போட்டோ எடுத்துக்கொண்டான். அவள் தோள் மீது கை போட்டு போட்டோ எடுப்பதை பார்த்து ஷ்ருதி "ஹலோ டாக்டர் சார்... நான் இன்னும் உங்களை லவ் பண்றேன்" என்று சொல்லலை என்றாள். அதற்க்கு முரளி"ஒன்னும் அவசரம் இல்லை... மெதுவா நமக்கு குழந்தை பிறந்தோன சொல்லு" என்றான்.அதை கேட்டு அதிர்ச்சி அடைந்த ஷ்ருதி குழந்தை பிறந்த பிறகா...! என்று வாயை பிளக்க... அவள் வாயை மூடியவன்"கல்யாணத்துக்கு அப்புறம் தாண்டி பயப்படாதே..." என்றான்.*

*இதையெல்லாம் நினைத்து பார்த்து சிரித்த... ஷ்ருதி, அப்போதுதான் தான் காரில் அமர்ந்திருப்பது... நியாபகம் வர... மற்றவர்களை பார்க்க... கௌதமும், ப்ரியாவும் எப்போதும் போல்... அவர்கள் உலகத்தில் இருக்க, முரளி அவளை போல் வெளியே ... வேடிக்கை பார்த்துகொண்டு வந்தான்.*

Ramya Rajan

அவர்கள் வீடு வந்ததும் இறங்கிய முரளியும், ப்ரியாவும் இவர்களையும் வீட்டுக்குள் அழைக்க... கௌதமும்,ஷ்ருதியும் அவர்களுடன் உள்ளே சென்றனர்.சிரித்து பேசிக்கொண்டு உள்ளே நுழைந்த நான்கு பேரும் அங்கே ஹாலில் அமர்ந்து அவர்களை முறைத்த பார்த்துக்கொண்டிருந்த, ராமமூர்த்தியின் அம்மாவை பார்த்ததும் தங்கள் சிரிப்பை நிறுத்தினார்கள். முதலில் சுதாரித்த ப்ரியா"அப்பத்தா எப்ப வந்தீங்க?" என்று கேட்க... அவளிடம் பதில் சொல்லாமல் முரளியிடம் நலம் விசாரித்தார், அவனும் அவரை விசாரித்தான்.

முரளி, ஹாலில் அமர்ந்து... கௌதம், ஷ்ருதியுடன் பேச ஆரம்பித்தான். ப்ரியாவிற்கு அப்பத்தா என்றால் பயம்... அதனால் அவள் உள்ளே அவளது அம்மாவிடம் பேசிகொண்டிருந்தாள், சிறிது நேரம் பேசிவிட்டு கிளம்பிய கௌதமையும், ஷ்ருதியையும் வாசல் வரை சென்று வழியனுப்பிய முரளி, ஷ்ருதியிடம் போன் பண்றேன் என்று செய்கை காண்பித்தான். அவளும் சரியென்று தலையசைத்து விடைபெற்றாள். வீட்டிற்க்குள் வந்த முரளி மாடியில் இருக்கும் அவனது அறைக்கு சென்றுவிட. ப்ரியா கிழே இருக்கும் அவள் ரூமில் இருந்தாள்.

வெளியே ஹாலில் ஜானகியிடம் கோபமாக பேசிகொண்டிருந்தார் அவளின் மாமியார்" உனக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கா... இப்படி தான் வயசு பிள்ளையும், பொண்ணையும் கண்டவன்களோட... ஊர் சுத்த விடுவாங்களா... ஏற்கனவே அவங்க அப்பன் கம்பெனில பார்ட்ர்ன்னு சொல்லி... என் பையன... ஏமாத்தி கொள்ளை அடிக்கிறது பத்தாதா... இன்னும் அவங்களோட சம்பந்தம் வச்சுக்க வேற ஆசை படறியா...நம்ம ஸ்டேடஸ் என்ன...? அவங்களோடது என்ன...? அவங்களுக்கு சொந்த வீடு கூட கிடையாது, நான் ஊர்ல இல்லாத போது அதுங்க இங்க தான்

***இருக்குமா" என்று கேட்டதற்கு, ஜானகி பதில் சொல்ல வாயை திறக்கும் முன், அவளது மாமியார் வேண்டும் என்றே அவரது அறைக்கு சென்றுவிட்டார்.***

***ஜானகி தலையில் அடித்துக்கொண்டு... உள்ளே சென்றுவிட... ப்ரியா தனது அப்பத்தா பேசியதை கேட்டவள்.. கண்கள் கலங்க... அப்படியே தனது அறை வாசலில் நின்றவள்... அப்போது தான் ஷ்ருதியை பார்த்தாள். கையில் ப்ரியாவின் சுடிதார் கவரை வைத்து கொண்டு வாசலில் நின்றவள்... கண்களில் கண்ணீர். ப்ரியா, ஷ்ருதி அருகில் வேகமாக சென்று பேசமுயல... அவளை தடுத்த ஷ்ருதி"உங்க பாட்டி பேசினத கௌதமிடம் சொல்லாத..." என்று சொன்னவள், தன் கையில் இருந்த கவரை ப்ரியாவிடம் கொடுத்துவிட்டு வேகமாக அங்கிருந்து சென்றுவிட்டாள்.***

***கௌதம் பார்க்கும் முன் கண்ணீரை துடைத்த ஷ்ருதி காரில்... அவன் அருகில் சென்று அமர"ப்ரியாவிடம் பேசினா.. உனக்கு நேரம் போறதே தெரியாதே" என்று சொன்னபடி காரை கிளப்பினான்.***

***அன்று இரவு ட்ரெயினில் செல்லும் போது தனது மொபைலில் தானும், ஷ்ருதியும் எடுத்துக்கொண்ட போட்டோவை... பார்த்துக்கொண்டிருந்த முரளி, ஷ்ருதியை செல்லில் அழைக்க... அவள் செல் சுவிட்ச் ஆப் என்று வந்தது.***

***கௌதம் இன்று ப்ரியாவுடன் கழித்த இனிமையான நேரங்களை பற்றி நினைத்துக்கொண்டிருந்தான்.***

Ramya Rajan

***ஷ்ருதி, முரளி கொடுத்த க்ரீடிங்க்ஸ் கார்டை... தன் நெஞ்சின் மீது வைத்து அழுது கொண்டிருந்தாள். அவளுக்கு முரளியின் பாட்டி தங்கள் குடும்பத்தை பற்றி கேவலமாக பேசியதிற்கு நியாயமாக பார்த்தால்... அவளுக்கு கோபமே வர வேண்டும், இதே முன்பிருந்த ஷ்ருதி என்றால் அவள் உடனே அந்த பாட்டியிடம் சண்டைக்கு சென்றிருப்பாள்... ஆனால் அவள் அழுவதில் இருந்தே... அவளுக்கு புரிந்தது அவளும் முரளியை காதலிக்கிறாள் என்று, எங்கே அவனை இழந்து விடுவோமோ என்ற பயத்திலேயே அழுகிறாள் என்றும்.***

***ப்ரியா முதலில் கலங்கினாலும்... பிறகு கௌதம் பார்த்க்கொள்வான் என்ற நம்பிக்கையில் நிம்மதியாக தூங்கினாள்.***

Ramya Rajan

8

ப்ரியாவின் அப்பத்தாவிற்கு ராமமூர்த்தியோடு சேர்த்து மூன்று பிள்ளைகள். மூத்தவர் ராமமூர்த்தி, அடுத்தவர் வாசுகி லண்டனில் இருக்கிறார், இளையவர் பிரபு மும்பையில் இருக்கிறார். ப்ரியாவின் அப்பத்தா வருடத்தில் சில மாதங்கள் ராமமூர்த்யின் வீட்டிலும், சில மாதங்கள் மும்பையில் பிரபு வீட்டிலும், சில நாள் தங்கள் சொந்த ஊரிலும் இருப்பார். அவர்களுக்கு அங்கே சொந்தமாக நிலங்கள் இருந்தது, அதை குத்தகைக்கு விட்டு வரும் வருமானம் நிறைய இருந்ததால் அவர் தன் பிள்ளைககளை பணத்திற்காக எதிர் பார்க்க மாட்டார் .அதே சமயம் வருடத்திற்கு ஒரு முறை இரு மகன்களிடம் இருந்தும் பணம் வாங்கி தன் மகளுக்கு தீபாவளி சீர் என்று லண்டனுக்கு அனுப்பி விடுவார்.

லண்டனில் இருக்கும் வாசுகி மீது அவருக்கு நிறைய பாசம், இரண்டு மூன்று வருடத்திற்கு ஒரு முறை லண்டனில் சென்று ஆறு மாதம் தங்கி வருவார். வாசுகியின் கணவர் லண்டனில் இருக்கும் புகழ் பெற்ற பாங்கில் முக்கியமான பொறுப்பில் இருக்கிறார். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் மூத்தவன் அருண் சாப்ட்வேர் இன்ஜினியரிங் முடித்துவிட்டு லண்டனில் தானே சொந்தமாக சிறிய

***கம்பெனி தொடக்கி ப்ராஜெக்ட் செய்து தருகிறான். திறமையானவன் அதனால் அவனுக்கு வருமானமும் நிறைய.***

***அடுத்தவள் சுமி என்கிற சுமித்ரா, தந்தையை போல் பாங்கில் வேலை செய்ய ஆசை, அதற்காக படித்து கொண்டிருகிறாள். இவர்கள் வீடு லண்டனில் அழகான தனி வீடு, சகல வசதிகளுடன் இருக்கும். ப்ரியாவின் அப்பத்தாவிற்கு ப்ரியாவை அருணுக்கு திருமணம் செய்ய ஆசை, ஆனால் இருவருக்கும் வயது வித்தியாசம் அதிகம், அதனால் முரளிக்கும்,சுமிக்கும் கண்டிப்பாக திருமணம் செய்ய வேண்டும் என்று உறுதியாக இருந்தார். தனக்கு பின்னாலும் தன் பிள்ளைகள் தன் மகள் குடும்பத்துடன் தொடர்பில் இருக்க வேண்டும் என்று நினைத்தார் அதற்காகவே இந்த திருமணம் செய்ய உறுதி கொண்டார்.***

***ஜானகியின் முக வாட்டத்தை பார்த்து ராமமூர்த்தி என்னவென்று கேட்க, அவரிடம் ஜானகி அன்று மாலை அவர்கள் வீட்டுக்கு கௌதமும், ஷ்ருதியும் வந்துவிட்டு சென்றதும், அவரின் மாமியார் பேசியதை சொல்ல ராமமூர்த்தி”நான் பார்த்துகிறேன் கவலை படாதே...” என்றார்.***

***அடுத்த நாள் காலை எழுந்தவுடன் ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்து கொண்டிருந்தவர், அருகில் அவரது அம்மா வந்து அமர... அவரிடம், நான் சொல்வதை கேளுங்க அம்மா என்றவர்”நீங்க நினைக்கிற மாதிரி கிருஷ்ணகுமார் என்னை தொழில் தொடங்க கூப்பிடல. அவன் என்னிடம், நான் சென்னைல வந்து செட்டில் ஆக போறேன், என்னோட பையனுக்கு சிவில் இன்ஜினியரிங் படிக்கனும்ன்னு ஆசை இருக்கு, அதனால நான் சொந்த கம்பெனி ஸ்டார்ட் பன்னப்போறேன், அவனும் படிப்பு முடிந்ததும் வந்து***

**சேர்ந்துக்குவான் என்றுதான் சொன்னான், நான் தான் அவனிடம், எனக்கும் சொந்த தொழில் தொடங்க ஆசை... நாம ரெண்டு பேரும் சேர்ந்து செய்வோம் என்று சொன்னேன், அவனும் ரொம்ப சந்தோஷமா ஒத்துகிட்டான்" என்றவர் தொடர்ந்து**

**"எனக்கும் அவனுக்கும் படிக்கும் காலத்திலேயே, சொந்த தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆசை இருந்ததும் ஒரு காரணம். நாங்க ரெண்டு பேரும் நண்பர்கள் என்றாலும்... பணம் விஷயத்தில்... கரெக்டா தான் இருப்போம். அவன் ஒன்னும் என்னைவிட வசதி கம்மியானவன் இல்லை, அவன் டெல்லிலயிருந்த வீடு நல்ல விலைக்கு விற்றான் அதை வைத்து இங்க தாம்பரத்தில் நல்ல இடத்தில் இடம் வாங்கி போட்டிருக்கான். வீடு கட்ட தான் டைம் இல்லை அதுவும் இல்லாம கௌதம், அந்த வீட்டை அவனே தன்னோட விருப்பபடி.. கட்ட ஆசை படறான்.... அதனால கிருஷ்ணா அவன் படிப்பு முடிய காத்திருக்கான். நீங்களே நினைச்சு பாருங்க மா..., நாங்க ஏற்க்கனவே ரொம்ப லேட்டா கம்பெனி ஸ்டார்ட் பண்ணி இருக்கோம்... இதுல தனியா வேற செஞ்சா எவ்வளவு கஷ்ட்டம். நாங்க ரெண்டு பேர் சேர்ந்து செய்யறது நாள தான் நாங்க இவ்வளவு சீக்கிரம் முன்னேறி இருக்கோம். நாங்க ரெண்டு பேர் சேர்ந்து செஞ்சே நிறைய வேலைகள் இருக்கு, எங்களால பண்ண முடியாம கௌதம், தான் பார்த்துக்கிறான். அவன் இல்லை என்றால் சமாளிக்கிறது ரொம்ப கஷ்ட்டம்... பாவம் படிக்கிற பையன வேலை வாங்குறோம் என்று நானே ரொம்ப வறுத்த பட்டிருக்கேன்.**

**பணத்தை மட்டும் தான் நான் சமமா போட்டிருக்கேன்... ஆனா உழைப்பை அவங்க தான் அதிகமா போடுறாங்க.. அதபத்தி அவங்க யாருமே இதுவரை எதுவும் சொன்னதில்லை. அதனால இனிமே**

Ramya Rajan

***உங்க பையன அவங்க ஏமாத்துறாங்க என்று நீங்களா.. எதாவது கற்பனை பண்ணிட்டு பேசாதீங்க.***

***முரளி டாக்டருக்கு படிகிறதால அவனும் இந்த பிசினஸ்க்கு வர போறது இல்லை... அதனால என்னால முடிஞ்ச வரை அவங்க கூட இருந்துட்டு, அப்புறம் நான் பிசினஸ்ல இருந்து விலகிடலாம் என்று இருக்கேன்" என்றார்.***

***அவர் பேசிமுடித்ததும் அவரது அம்மா"சரி தம்பி, நான் சரியா... அவங்களை பற்றி தெரிஞ்சுக்காம பேசிட்டேன், இனிமே அப்படி பேசமாட்டேன்" என்றார்.***

***அப்போது அங்கே வந்த ப்ரியா"ஏன்பா... நீங்க பிசினஸ்ல இருந்து விலகனும்? உங்களுக்கு முரளி அண்ணா மட்டும் தான் பிள்ளையா நானும் உங்க பொண்ணு தான், நானும் சிவில் இன்ஜினியரிங் தான் படிக்க போறேன் அதனால.. நான் உங்களோட சேர்ந்து நம்ம கம்பெனில வேலை பார்கிறேன். ஏன் அந்த கௌதம் நம்ம பிசினஸ் பார்க்க முடியும் போது... என்னால முடியாதா? என்னாலையும் பார்க்க முடியும், அதனால நீங்க பிசினஸ்ல இருந்து விலக போறேன் என்று இனிமே சொல்லாதீங்க" என்று அதிகாரமா சொன்னா,***

***அவள் சொன்னதை கேட்ட ராமமூர்த்தி"அப்படி சொல்லு என் செல்ல குட்டி, நீ இருக்கிறத நான் மறந்துட்டேன்டா, இனிமே எனக்கு கவலை இல்லை, நீயும் நம்ம பிசினஸ்க்கு வந்துட்டா நானும் விலக வேண்டியது இல்லை, ரொம்ப சந்தோசம்டா... இதை நான் முதல்ல கிருஷ்ணன்னிடம் சொல்லனும், அவன் கேட்டா ரொம்ப சந்தோஷ படுவான்" என்றார், இவர்கள் இருவரும் பேசுவதை***



Ramya Rajan

***கேட்ட ஜானகியும் அவரது மாமியாரும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக்கொண்டனர்.***

***ப்ரியா அன்று மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள், அவளுக்கு தான் சிவில் இன்ஜினியரிங் படிக்க.. தனது அப்பா ஒத்துக்கொள்ள மாட்டாரோ என்று பயம் இருந்தது, இன்று அவள் விருப்பத்திற்கு... அவர் சந்தோசமக ஒத்துக்கொள்ளவும், அவளுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அதே சந்தோஷத்தோடு வீட்டில் இருந்து ஸ்கூல்க்கு சென்றவள்... அன்று கௌதம் தங்கள் ஆபீஸ் முன் நிற்ப்பதை பார்த்து... மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள், அதனால் அவனை பார்த்து கை அசைத்துவிட்டு சென்றாள்.***

***கௌதமிற்கு இன்னும் நம்ப முடியவில்லை... அவள் தன்னை பார்த்தா... கை அசைத்தாள் என்று, அவன் சந்தேகமாக கார்த்திக்கை பார்க்க... அவனும் இவன் நினைப்பதை... தான் நினைத்து கொண்டிருந்தான்... இந்த பொண்ணு சிரிக்கவே யோசிக்கும், இப்ப என்னடான்னா டாடா காமிக்குது என்று வாய்விட்டு புலம்பினான்.***

***கௌதமும், கார்த்திக்கும் இப்போது கடைசி வருடத்தில் இருப்பதால் இன்டர்ன்ஷிப் நடந்து கொண்டிருந்தது... அதனால் அவர்கள் லேட்டாக தான் கல்லூரிக்கு செல்வார்கள், அன்று ஆபீஸ் வந்த ராமமூர்த்தி கிர்ஷ்ணகுமரிடம் காலையில் ப்ரியா சொன்னதை சொல்ல... கிருஷ்ணகுமார் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்,***

***ராமமூர்த்தி கௌதமை பார்த்து அவ சொல்றா"கௌதம் பிசினஸ் பார்த்துக்க முடியும் போது.. என்னாலையும் பார்த்துக்க முடியும்ன்னு ஆனா... எனக்கு தெரியும் கௌதம், அவளால உன் அளவு வேலை***

செய்ய முடியாதுன்னு, இருந்தும் அவ மனதை கஷ்ட்டபடுத்த வேண்டாம்ன்னு ... நான் சரி என்று சொல்லிட்டேன், நீ தான் அவளுக்கு கொஞ்சம் கொஞ்சமா நம்ம பிசினஸ் பத்தி சொல்லி குடுக்கணும் சரியா" என்றார்.

கௌதமும்"சரி மாமா நான் பார்த்துகிறேன்... நாம இத்தனை பேர் இருக்கோம் அப்புறம் என்ன? வெளி வேலைய நாம பார்த்துக்கொண்டா ஆபீஸ் வேலைய அவ பார்க்கட்டும்... அதுவும் அவளுக்கு *interior designing* பண்ண ரொம்ப ஆசை... இப்ப நம்ம கட்ற பில்டிங்களுக்கு... வெளிய தானே ஆள் வச்சு *interior designing* பண்றோம், அவ படிச்சு முடிச்சதும் அதையும் நாமலே அவ பொறுப்புள செஞ்சு கொடுக்கலாம்" என்று சொல்லிவிட்டு கல்லூரிக்கு கிளம்பினான். கௌதம் ஆர்வ கோளாரில் கொஞ்சம் அதிகமாக உளறிவிட்டு செல்ல... ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

வெளியே வந்த கௌதம் கார்த்திக்கிடம் ராமமூர்த்தி சொன்னதை சொல்ல..."அதுதான் மேடம் இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா... இருந்தாங்களா..." என்ற கார்த்திக், கௌதம் சிரிப்பதை பார்த்து"டேய்... இப்ப எல்லாம் ஆம்பிளைங்க தாண்டா... வீட்ல எல்லா வேலையும் பார்கிறாங்க, இதுல ப்ரியாவும்.. நீயும்.. ஒரே இடத்தில வேலை பார்த்தா... நீ வீட்லயும் வேலை பார்த்து.. ஆபீசளையும் உன் வேலை... ப்ரியா வேலை ரெண்டையும் பார்த்து... தொலைஞ்சடா நீ" என்றான்.

"என்னோட ப்ரியா என்கூட இருக்க நான் என்னவேனா செய்வேன்" என்றான் கௌதம், இருவரும் பேசிக்கொண்டே கல்லூரிக்கு சென்றனர்.

***ஷ்ருதி தினமும் காலையில் கோச்சிங் கிளாஸ், மாலையில் கல்லூரி என்று சென்றுவந்தாள். முரளி அவளிடம் காதலை சொல்லி ஒரு மாதம் சென்றிருந்தது,அவளுக்கு முரளி சொன்ன காதலையும் மறக்க முடியவில்லை, அவன் பாட்டி பேசிய பேச்சையும் மறக்க முடியவில்லை, தங்கள் குடும்பத்தின் மீது இவ்வளவு கேவலமான எண்ணம் வைத்திருப்பவர்கள், தாங்கள் திருமணம் நடக்க சம்மதிப்பார்களா, அதுவும் கௌதமும்,ப்ரியாவும் வேறு விரும்புகிறார்கள். நம்மால் அவர்கள் காதலுக்கு வேறு பிரச்சனை வரும், அப்படிபட்ட காதல் தனக்கு தேவையா என்ற எண்ணத்தில் அவள் முரளியோடு அதற்க்கு பிறகு பேசவில்லை, அவன் இரவில் தான் அழைப்பான் என்று இரவில் செல்லை சுவிட்ச் ஆப் செய்துவிடுவாள்.***

***முரளியும் பல முறை முயன்றும் ஷ்ருதியுடன் பேசமுடியவில்லை. அவனுக்கு அவள் ஏன் தன்னை தவிர்க்கிறாள்? என்ற காரணம் தெரியவில்லை, அவளுக்கு எதுவும் பிரச்சனையா என்று தெரிந்துகொள்ள ப்ரியாவை அழைத்தவன் அவளிடம் சாதாரணமாக கேட்பது போல் ஷ்ருதியை பற்றி கேட்க, அதற்க்கு ப்ரியா அவள் நன்றாக தான் இருக்கிறாள் ஆனால் தானும் அவர்கள் சேர்ந்து வெளியில் சென்ற அன்று பார்த்தது தான் பிறகு பார்க்கவில்லை என்றாள். ஆனால் போன்னை வைப்பதற்கு முன் ப்ரியா"அவள் மதியம் ஒரு மணியிலிருந்து இரண்டு மணி வரை ப்ரீயாக இருப்பாள், நீங்களே போன் செஞ்சு பேசுங்க அண்ணா" என்று சொல்லிவிட்டு போனை வைத்தாள்.***

***மனதிற்குள் ப்ரியாவிற்கு நன்றி சொல்லி போனை வைத்த முரளி, மறுநாள் மதியம் மருத்துவமனை எண்ணில் இருந்து ஷ்ருதியை***

அழைத்தான். தெரியாத நம்பரை பார்த்ததும் யாரோ, என்று எடுத்த ஷ்ருதி"'ஹலோ..." என்றாள் ஆனால் அந்த பக்கம் இருந்து எந்த பதிலும் இல்லை, மறுபடியும் ஹலோ என்றாள், அப்போதும் பதில் இல்லை யார் அழைத்தது என்று நம்பரை பார்க்க... அது வெளியூர் எண் போல் இருந்தது, சட்டென்று மனதில் மின்னல் அடிக்க"முரளி..." என்று மெதுவாக அழைத்தாள், அவள் அழைத்ததும் அதுவரை அடக்கி வைத்திருந்த மூச்சை விட்டவன்"அப்ப நீ இன்னும் என்னை மறக்கலை ஆனா... என்கூட பேசத்தான் பிடிக்கலை... அப்படிதானே, சரி... உனக்கா எப்ப பேசனம் என்று தோணுதோ அப்ப பேசு, நான் காத்திருக்கேன்" என்றவன் போன்னை வைத்துவிட்டான்.

ஷ்ருதிக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை, முரளியின் பேச்சு வருத்தத்தை தந்தாலும் தங்கள் காதலை வளரவிடுவது நல்லதா இல்லையா என்று புரியவில்லை, அவள் குழப்பத்துடனே கல்லூரிக்கு சென்றாள்.

அன்று மாலை 7 மணி, கல்லூரியில் இருந்து அப்போதுதான் ஷ்ருதி வீட்டுக்கு வந்திருந்தாள், கார்த்திக்கும் அவர்கள் வீட்டில் இருந்தான், கார்த்திக்கு ரொம்ப நாளாகவே ஷ்ருதியிடம் எதோ மாற்றம் இருப்பதாகவே தோன்றியது, எப்போதும் துரு துரு என்று இருப்பவள், இப்போது சில நாட்களாக அமைதியாக இருக்கிறாள், அடிக்கடி தனிமையில் அமர்ந்து எதோ யோசித்து கொண்டே இருக்கிறாள். எதோ அவளை குழப்புது என்ன என்று தான் தெரியலை இன்று அவளோடு பேசிவிட வேண்டும் என்ற முடிவோடு அமர்ந்திருந்தான்.

Ramya Rajan

***அப்போது ஷ்ருதிக்கு ப்ரியா போன் செய்தாள், முதலில் சாதரணமாக அவளிடம் நலம் விசாரித்தவள்.. பின் அன்று தன் அப்பத்தா.. அவர்கள் குடும்பத்தை பற்றி பேசியதற்கு கோபமா.. என்று கேட்டாள் அதற்க்கு ஷ்ருதி "அவங்க எங்கள பற்றி என்ன நினைச்சா எனக்கு என்ன?" என்று அலட்சியமாக பதில் சொன்னாள், அவள் பதில் சொன்ன முறையிலேயே... அவள் கோபத்தை அறிந்த ப்ரியா, இவளும் இப்படிதான், இவள் அண்ணனும் இப்படிதான் ரெண்டுக்கும் ரொம்ப கோபம் வருது, இதுங்கள கட்டிக்கிட்டு நானும் எங்க அண்ணனும் என்ன ஆகப்போறோமோ என்று நினைத்தவள், ஷ்ருதியிடம், அந்த சம்பவத்திற்கு அடுத்த நாள்.. தன் அப்பா அவளது அப்பத்தாவிடம் பேசியதை சொன்னாள். ப்ரியா சொன்னதற்கு ஷ்ருதி எந்த பதிலும் சொல்லவில்லை ஆனால் அவள் மனம் கொஞ்சம் அமைதி அடைந்தது. அதை உணர்ந்து இதுவே போதும் என்று நினைத்த ப்ரியா, அவளுக்கு தன் அண்ணனும் ஷ்ருதியும் காதலிப்பது தெரியாதது போலவே... பேசிவிட்டு போன்னை வைத்தாள், அவளுக்கு எங்கே அவர்கள் காதலிப்பதை பற்றி தெரிந்து கொண்டதை போல் காட்டிகொண்டால்... தானும் கௌதமும் காதலிப்பது... முரளிக்கு தெரிந்துவிடுமோ என்று பயந்தாள்.***

***ப்ரியாவுடன் பேசிவிட்டு வந்து அமர்ந்த ஷ்ருதி முகத்தில் குழப்பம் சற்று குறைந்தது போல் தெரிந்தது கார்த்திக்கு, அவன் என்ன விஷயம் ஷ்ருதி? என்றான், அவனிடம் ஒன்னும் இல்லை என்றவள் அவன் முகம் பார்த்து பேச தயங்க... அதை உணர்ந்த கார்த்திக் "சரி உனக்கு என்கிட்டே சொல்லவிருப்பம் இல்லைனா பரவாயில்லை, நான் கிளம்பறேன்" என்று எழுந்து வெளியே சென்றான்,***

***அவனோடு தானும் வெளியே வந்த ஷ்ருதி தனது அம்மாவிடம் "கார்த்திக், அண்ணாவோடு கடைக்கு போயிட்டு***

***வரேன் மா...″ என்று சொல்லிவிட்டு சென்றாள். இருவரும் எதுவும் பேசாமல் சற்று தூரம் நடந்தவர்கள் அங்கிருந்த ஐஸ்கிரீம் ஷாப்ல்... சென்று அமர்ந்தனர். கார்த்திக் ஷ்ருதியே பேசட்டும் என்று பேசாமல் இருந்தான். ஷ்ருதி கார்த்திக்கிடம் அன்று மாலில் முரளி, தன்னிடம் லவ் ப்ரொபோஸ் பண்ணதையும்... பின்பு அவனின் அப்பத்தா பேசியதை கேட்க நேர்ந்ததையும்... இன்று மதியம் முரளி தன்னை செல்லில் அழைத்து பேசிய அனைத்தையும் சொன்னவள். அவளின் மன குழப்பத்தையும் சொன்னாள் அவள் சொன்ன அனைத்தையும் பொறுமையாக கேட்டவன்,***

***″நம்பிக்கை தான் ஷ்ருதி வாழ்க்கை, முதல்ல நீ உன் காதல் மேல நம்பிக்கை வை. முரளி ஒன்னும் சின்ன பையன் இல்லை... வயசு கோளாறுல... உன்கிட்ட வந்து உடனே காதலை சொல்ல, நல்லா யோசிச்சு தான் சொல்லிருப்பார். ப்ரியா உன்னை விட சின்ன பொண்ணுதானே ஆனா கௌதம், அவளிடம் காதலை சொன்ன போது அவள் மறைக்காம உண்மைய சொன்னாதானே, அவளுக்கு மட்டும் தெரியுமா... அவளுக்கும் கௌதமிற்கும் கல்யாணம் நடக்கும்ன்னு, ஆனா... அவ போராட தயார் ஆகிட்டா... அவளுக்கு கௌதம் வேண்டும் அதனால அவள் எந்த தடை வந்தாலும் தாண்டி வருவா....நீயும் அந்த மாதிரி போராடு காதலிகிறது ஒன்னும் தப்பில்ல... நாம தப்பானவங்களை காதலிக்கலைன்னா, எதுக்கு பெத்தவங்களுக்கு பயப்படனும். அவங்ககிட்ட நம்ம விருப்பத்தை சொல்லி சம்மதம் கேட்கலாமே... அதுவும் உன் விஷயத்துல முரளிய உங்க வீட்ல எல்லோருக்கும் தெரியும்" என்ற கார்த்திக் தொடர்ந்து....***

***"முரளிக்கு தெரியாதா அவங்க பாட்டிய எப்படி சமாளிக்கனும்ன்னு நீ தான் தேவை இல்லாம உன்னையும் குழப்பி... முரளியையும் குழப்பற, அவங்க ஆயாவுக்கு புடிக்கலையாம் அதனால் இவ லவ் பண்ண மாட்டாளாம்... நீ எல்லாம் கௌதமின் தங்கச்சி என்று***

***வெளிய சொல்லாத, அவன் என்ன கிளியரா மேப் போட்டுட்டு இருக்கான் தெரியுமா... இன்னும் கொஞ்சம் நாள்ல... ப்ரியா அப்பா வாய்ல இருந்தே... நீ தான் என் மாப்பிள்ளைன்னு சொல்ல வைகிறான்னா.. இல்லையா என்று பாரு, ப்ரியா மட்டும் லேசுபட்டவளா என்ன.... அவளும் சிவில் இன்ஜினியரிங் தான் படிக்க போறாளாம். அவங்க அப்பாவுக்கு இந்த அம்மாதான் பிசினஸ் வாரிசாம், முதல்ல கௌதமோட பிசினஸ் பார்ட்னெர் அப்புறம் லைப் பார்ட்னெர் எப்படியெல்லாம் இப்ப இருந்தே பிளான் போடுறா பாத்தியா... அவ கிட்ட இருந்து கத்துக்கோ" என்று ஷ்ருதியை கார்த்திக் நன்றாக ஏத்திவிட,***

***சிலிர்த்து எழுந்த ஷ்ருதி"கார்த்திக் அண்ணா, நான் மட்டும் யாரு என்று நினைச்சீங்க, நான் கல்யாணம் பண்ணா முரளியதான் பண்ணுவேன், குறுக்கே.. அவங்க பாட்டி இல்ல... அவங்க பூட்டியே ...வந்தாலும் ஒரு கை பார்க்கமா விடமாட்டேன், இது உங்க மேல சத்தியம்" என்று அவன் தலையில் ஓங்கி அடித்தாள். அடிவாங்கிய கார்த்திக் ஆண்டவா என் தலைய காப்பாத்தவாவது இவளுக்கு முரளியோட கல்யாணம் நடக்கணுமே என்று நினைத்தான்.***

***ஷ்ருதியின் மனது கார்த்திக் பேசியதை கேட்டதும் தெளிவாக இருந்தது. அன்று இரவு தனது அறைக்கு வந்து படுத்தவள் முரளியை செல்லில் அழைக்க... ரிங் அடித்துக்கொண்டே... இருந்தது அவன் போன்னை எடுக்கவில்லை, முழுதாக ரிங் அடித்து முடித்ததும் மறுபடியும் போன் செய்தாள்... இந்த முறை சுவிட்ச் ஆப் என்று வந்தது. ஷ்ருதி அவன் கோபத்தில் தான் போன்னை சுவிட்ச் ஆப் செய்துவிட்டான் என்று நினைத்தவள் அழுது கொண்டே படுத்திருந்தாள்.***

Ramya Rajan

சிறிது நேரத்தில் செல்லில் மெசேஜ் ஒலி கேட்க, எடுத்து பார்த்தவள் அதில் முரளி தான் இப்போது பேசலாமா... என்று மெசேஜ் அனுப்பி இருந்தான். அதை பார்த்ததும் சந்தோஷமாக அவனுக்கு போன் செய்ய, முதல் ரிங் அடித்தவுடன், போன்னை எடுத்தவன்... ஹாய் குலாப்ஜாமுன் ... இன்னும் தூங்கலையா" என்றான்.

"இல்லை... ஆமா... நீங்க ஏன் முதல் தடவை... நான் போன் பண்ணும் போது எடுக்கலை... "

அவளின் குரலில் இருந்தே அவள் அழுது இருக்கிறாள்... என்று உணர்ந்த முரளி "நான் போன் எடுக்கலைனதும் மேடம் உட்கார்ந்து அழுதிங்கலாக்கும்" என்றான்.

"ஆமா, உங்களுக்கு என் மேல கோபம்... அதனால தான் போன்ன எடுக்கலை என்று நினைத்து அழுதேன்"

அவளின் பதிலில் உள்ளம் உருகு "ஹே.. உன்மேல கோபம் எல்லாம் இல்லடா ஷ்ருதி, வருத்தம் தான்... இப்ப அது கூட இல்ல.. நான் போன்ன எடுக்கலைன்னா.. டென்ஷன் ஆகாத... நான் வேலை நேரத்தில போன்ன எடுக்க மாட்டேன் அப்புறம் நானே உனக்கு போன் பண்றேன் சரியா..." என்று முரளி ஷ்ருதியை சமாதனம் படுத்தினான்.

Ramya Rajan

***”ஆமா, அப்ப நீங்க இன்னும ஹாஸ்பிடல்ல தான் இருக்கீங்களா... மணி இப்பவே பத்து, இனிமே எப்ப சாப்பிட்டு எப்ப தூங்குவீங்க, இப்ப ஹோட்டல் இருக்குமா” என்றாள்.***

***”நான் எங்களுக்கு தெரிஞ்சவங்க... கொஞ்சம் வசதி இல்லாதவங்க... அவங்க வீட்டு மாடியில... தான் தனியா.. ஒரு ரூம்ல தங்கி இருக்கேன், அவங்களே எனக்கு மூன்று வேலை சாப்பாடும், குடுத்திடுவாங்க, எனக்கும் ஓட்டல் சாப்பாடுல இருந்து விடுதலை அவங்களுக்கும் என்னால வருமானம், அதனால் சாப்பாடு பத்தி பிரச்சனை இல்ல. இன்னைக்கு கொஞ்சம் லேட் ஆகிடுச்சு... நான் இப்ப ஆட்டோவில வீட்டுக்கு போயிட்டு இருக்கேன், வீட்டுக்கு போயிட்டு குளிச்சிட்டு சாப்பிடுவேன்” என்று செல்லில் பேசிக்கொண்டே அவன் தங்கி இருக்கும் ரூமிற்கு வந்தவன், கதவை திறந்து உள்ளே வந்து அமர்ந்து பேச்சை தொடர்ந்தான்”அப்புறம்... நீ சாப்பிட்டியா ஷ்ருதி” என்று முரளி கேட்டதும்,***

***ம்ம் என்றவள் ஆட்டோ சத்தம் கேட்காததால்,”ரூமுக்கு வந்துடீங்களா...” என்றாள்,”ஆமா, வந்துட்டேன்” என்றான், ஷ்ருதி அவன் பசியோடு இருப்பான் என்று”நீங்க குளிச்சிட்டு சாப்பிட்டதும்... போன் பண்ணுங்க... நான் தூங்க மாட்டேன்” என்றவள், அவன் பதில் சொல்லும் முன் போன்னை வைத்து விட்டாள்.***

***முரளிக்கு தன் மீது அவள் காட்டும் அக்கறையை பார்த்து மகிழ்ச்சியாக இருந்தது, வேகமாக சென்று குளித்தவன் அதே வேகத்தோடு சாப்பிட்டு முடித்து, ஷ்ருதிக்கு, போன் செய்தான். அவன் போன்னுக்காக காத்திருந்த ஷ்ருதி போன்னை***

எடுத்ததும்”சாப்டீங்களா...” என்று விசாரித்தாள், அதற்க்கு முரளி “ரொம்ப தான் அக்கறை இப்படி அக்கறை இருகிறவ தான்.... ஒரு மாதமா போன்ன... சுவிட்ச் ஆப் பண்ணியா...”என்றான்.

ஷ்ருதி ”உங்களுக்கு என்ன, நீங்க பாட்டுக்கு யோசிக்காம... லவ் பண்ணறேன் என்று சொல்லிட்டு போய்டுவீங்க... நான் யோசிக்க வேண்டாமா...”

”நான் ரெண்டு வருஷமா உன்னை தான் மனசுல... நினைத்து கொண்டு இருந்தேன், சும்மா நான் யோசிக்காம... சொன்னேன்னு சொன்ன... கோபம் வந்துடும் பார்த்துக்க.... நீயும், என்னை லவ் பண்றேன்னு எனக்கு தெரியும், அப்புறம் நீ யோசிக்கறதுக்கு என்ன இருக்கு...”

”நீங்க பெரிய டாக்டர் ஆகப்போறீங்க.... நாளைக்கே டாக்டருக்கு படிச்ச பொண்ணு வந்தா... நீங்க அந்த பொண்ண கல்யாணம் பண்ணி கொண்டு போய்ட்டா என் நிலைமை, அதுதான் யோசிச்சேன்”

அவள் சொன்னதை கேட்டதும் முரளிக்கு சுள்ளென்று கோபம் வந்தது”என் மேல ரொம்ப நல்ல எண்ணம் தான், இவ்வளவு தானா.... இல்லை இன்னும் வேற எதாவது யோசிச்சு வச்சிருக்கியா” என்றான். ஷ்ருதி “சும்மா விளையாட்டுக்கு சொன்னேன்...” என்றாள்.

*"சும்மா விளையாட்டுக்கு சொல்றதா... இது, நீ வேற எதையோ... மனசுல வச்சிக்கிட்டு பேசற உண்மைய சொல்லு" என்று முரளி மிரட்டியவுடன்.*

*அழுதுகொண்டே அன்று அவன் அப்பத்தா பேசியதை சொன்னாள் அவள் சொல்லி முடித்தவுடன், இதுக்குதான் என்கிட்டே பேசாம இருந்தியா என்று கேட்ட முரளி "இங்க பாரு அவங்க வயசானவங்க அப்படி தான் எதாவது பேசுவாங்க.. ஆனா, நாம சொன்னா... புரிஞ்சுக்குவாங்க. உன்னை கல்யாணம் பண்ணிக்க போறது நான், எனக்கு உன்ன பிடிச்சுருக்கு... அதுக்கு மேல யாரும் எதுவும் சொல்லமாட்டாங்க, நீயா எதாவது கற்பனை பண்ணாத...." என்றதும்,*

*"எனக்கு கார்த்திக் அண்ணாவும் இதைதான் சொன்னாங்க, ஆனா என் மனசுகுள்ள எதோ கொஞ்சம் உறுத்தல் இருந்துட்டே இருக்கு" என்றாள் ஷ்ருதி.*

*"சரி... என்கிட்ட சொல்லிட்ட இல்ல நான் பார்த்துகிறேன், அப்புறம் இன்னொரு விஷயம், எனக்கு நான் டாக்டருக்கு படிக்கணும்ன்னு தான் ஆசையே தவிர, என் மனைவியும் டாக்டரா இருக்கனும் என்று எல்லாம் நான் யோசிச்சது இல்லை. எனக்கு உன்னோட கலகலப்பான பேச்சும், தைரியமும் தான் ரொம்ப புடிக்கும். நான் யார்கிட்டயும் அதிகமா பேச மாடேன், இப்ப உன்னோட சேர்ந்து தான் பேச ஆரம்பிச்சிருக்கேன், ஆனா... நீ இப்ப எல்லாம் அழு மூஞ்சி ஆகிட்ட..." என்று முரளி ஷ்ருதியை வம்பு இழுக்க...*

***அவள் பதிலுக்கு"நானும் அழுமூஞ்சி இல்ல...எல்லாம் உங்களை லவ் பண்றது நால தான், நாம சேர்வோமா மாட்டோமா என்ற பயத்தில தான் இப்படி ஆகிட்டேன்" என்றாள்.***

***அவள் பேசி முடித்ததும்"இப்பவாவது ஒத்துக்கிட்டியே என்ன லவ் பண்றேன்னு என்ற முரளி, சரி சண்டை போட்டது போதும் இனிமே வேற பேசல்லாம், ஆமா கார்த்திக்கு நம்ம விஷயம் தெரியுமா... இன்னும் வேற யாருக்கு தெரியும்?"***

***"வேற யாருக்கும் தெரியாது, இன்னைக்கு கார்த்திக் அண்ணா அவங்களா தான் கேட்டாங்க, நானும் சொன்னேன் அவங்களும் நீங்க சொன்னத தான் சொன்னாங்க"***

***"சரி... பரவாயில்லை நமக்கும் சப்போர்ட்க்கு ஆள் இருக்கு..." என்று சிரித்துக்கொண்டே சொன்ன முரளி"உங்க வீட்ல எல்லோரும் தூங்கிடாங்களா" என்று கேட்க,***

***"ம்ம்.. அம்மாவும், அப்பாவும் தூங்கிடாங்க...கௌதம் காலேஜ்ல ஊட்டி டூர் போயிருக்கான். இப்ப தான் கொஞ்சம் நேரம் முன்னாடி அவனும், கார்த்திக் அண்ணாவும் கிளம்பி போனாங்க வர நாலு நாள் ஆகும். இனிமே நீங்க போன் பண்ணாதீங்க பேசணும்னா மெசேஜ் மட்டும் அனுப்புங்க நானே போன் பண்றேன். கௌதம் வீட்ல இருந்தா படிக்கும் போது நாங்க ஒன்னா தான் உட்கார்ந்து படிப்போம், சில நேரம் ஒரே ரூம்ல நான் கட்டில்ளையும், அவன் கீழயும் படுத்து தூங்குவோம், அதுக்கு தான் தப்பா எடுத்துக்காதீங்க" என்றாள் ஷ்ருதி....***

Ramya Rajan

*"அதற்க்கு முரளி இதுல தப்பா நினைக்க என்ன இருக்கு, நானுமே இன்னும் கொஞ்ச நாள் தான் ப்ரீ, ms சேர்ந்து டெல்லி போய்ட்டா எனக்கு டைம் கிடைகிறது கஷ்டம் தான். நீ நான் போன் பண்ணலை என்று உட்கார்ந்து அழாம, மெசேஜ் அனுப்பு... சரியா... இப்ப தூங்க போகலாமா" என்று முரளி கேட்க...*

*"சரி குட் நைட்..." என்று ஷ்ருதி போன்னை வைத்தாள்.*

*முரளி எவ்வளவு தைரியமான பொண்ணு ஷ்ருதி, ஆனா... அவளையே இந்த காதல் கோழை ஆகிடுச்சே, நம்ம ப்ரியா மாதிரி அமைதியான பெண் லவ் பண்ணா என்ன ஆகும் என்று நினைத்துக்கொண்டே படுத்திருந்தான். (டேய்... அவ ஏற்க்கனவே லவ் பண்றா டா)*

Ramya Rajan

Ramya Rajan

9

**கௌதம், ஊட்டிக்கு வந்து... இரண்டு நாட்கள்... ஆகி விட்டது. நண்பர்களோடு நன்றாக ஊரை சுற்றினாலும்... மனதில் ப்ரியா தான் நிறைந்து இருந்தாள். ப்ரியாவோடு வர வேண்டிய இடத்துக்கு... இப்படி இந்த தடியன்களோட வந்திருக்க... தன் நேரத்தை நினைத்து நொந்தான்.**

அப்போது அவன் செல்லில் ஷ்ருதி அழைத்தாள்”டேய் அண்ணா, நான் லிஸ்ட் கொடுத்துவிட்டேனே... அதிலிருந்த பொருள் எல்லாம் வாங்கிட்டியா...”

”அதெல்லாம் வாங்கணும் என்றால்... நான் இன்னும் ஒருவாரம்... இங்க தான் இருக்கணும், அதனால ஊட்டி தைலமும், சாக்லேட்ஸ் தான் வாங்கிட்டு வருவேன்.”

”சரி எனக்கு தான் ஒன்னும் வாங்கலை... உன் கண் அழகி ப்ரியா, அவளுக்கு எதாவது கண்டிப்பா... வாங்கிட்டு வருவேயில்ல... அதை நான் எடுத்துக்கிறேன்.”

”அவளுக்கு வாங்கினா... உனக்கு வாங்காம... இருப்பேன்னா.. தங்கம், அவளுக்கும் எதுவும் வாங்கலை...”

“ஆமா... இப்ப எதுக்கு என்னை தங்கம்ன்ன...” என்று ஷ்ருதி கேட்க.... கரெக்டா கண்டுபிடிச்சிடுவா ராட்சஸி என்று மனதிற்குள் ஷ்ருதியை திட்டிய கௌதம்”அண்ணனுக்கு.... ஒரு உதவி செய்டா செல்லம்... ப்ரியாவ எனக்கு போன் பண்ண சொல்றியா” என்றான்.

”அதெல்லாம் நான் சொன்னாலும் அவ பண்ண மாட்டா... அவங்க பாட்டி இருக்காங்க...”

*"நீ நான் சொன்னத மட்டும் அவகிட்ட சொல்லு, அவ கண்டிப்பா எனக்கு போன் பண்ணுவா" என்று கௌதம் போன்னை வைத்துவிட்டான்.*

*ஷ்ருதி, ப்ரியாவிற்கு அழைத்து கௌதம் போன் பண்ண சொன்னதை சொல்ல, "அவள் சரி ஷ்ருதி... எங்க அம்மாவும், பாட்டியும் 6 மணிக்கு கோவிலுக்கு போவாங்க.. அப்ப நான் போன் பண்றேன் என்று உங்க அண்ணன்னிடம் சொல்லு" என்று போனை வைத்துவிட்டாள்.*

*அடிப்பாவி பார்க்க ஆள், 'இந்த கேட்ட்டும் மில்க் குடிக்குமா' மாதிரி இருந்துகிட்டு என்ன வேலையெல்லாம் பண்றா... உண்மையிலேயே கார்த்திக் அண்ணன், சொன்ன மாதிரி இவகிட்ட இருந்து நான் கத்துக்கணுமோ என்று தனக்குள்ளேயே புலம்பிகொண்டிருந்தாள். தன்னுடைய விதியை நினைத்து நொந்து கௌதமுக்கு போன் செய்து ப்ரியா, சொன்னதை சொல்லி போன்னை வைத்தாள்.*

*கௌதம், ப்ரியா செல்லில் அழைத்த போது தொடர்பை துண்டித்து விட்டு, அவன் அழைத்தான்.*

*"ஹாய்.... ஐஸ்கிரீம் எப்படி இருக்க.... "*

*ப்ரியா''எதுக்கு, என்னை ஐஸ்கிரீம்ன்னு கூப்பிடீங்க... "*

*"பின்ன.. நீ அன்னைக்கு.. மால்ல ஐஸ்கிரீம் சாபிட்டதை பார்த்து... உனக்கு ஐஸ்கிரீம் வாங்கி குடுக்கவே... நான் நிறையா*

சம்பாதிக்கணும் போல... அப்புறம் உன்னை வேற எப்படி கூப்பிடரது சொல்லு, பேசாம உங்க அப்பாவ நம்ம கல்யாணத்தின் போது... உனக்கு ஐஸ்கிரீம் வாங்கி கொடுக்க தனியா... டௌரி குடுக்க சொல்லு சரியா... "

"அதெல்லாம் தர முடியாது... வேணும்னா பதிலுக்கு உங்களுக்கு பிடிச்ச ஐஸ்கிரீம் சொல்லுங்க, நான் வாங்கி தரேன். "

"நீ இப்ப சொன்னத மாத்திக்க மாட்ட தானே... நான் கேட்கிற ஐஸ்கிரீம் கொடுக்கணும், சரியா... "

"ப்ராமிஸ், நீங்க கேட்கிற... ஐஸ்கிரீம் நான் தரேன், அப்படி எந்த ஐஸ்கிரீம் உங்களுக்கு பிடிக்கும்" என்று ப்ரியா வெள்ளந்தியாக கேட்க ....

"உன்னோட எக்ஸாம் முடிந்ததும் கேட்கிறேன்" என்றான் கௌதம். "பரவாயில்லை... நீங்க சொல்லுங்க" என்று ப்ரியா விடாபிடியாக சொல்ல ....

கௌதம் பார்க்கில் உட்கார்ந்து இருந்தவன், தன்னை சுற்றி ஒரு முறை பார்த்துவிட்டு போனில் "இச்..'' என்று முத்தம் வைக்க, அந்த பக்கம் இருந்து எந்த சத்தமும் இல்லை, போன்ன கோபத்தில் வைச்சிட்டாளோ என்ற சந்தேகத்தில் "ப்ரியா..." என்றான், உடனே ப்ரியா "ஒரு ஐஸ்கிரீம் பேர் சொல்ல இவ்வளவு நேரமா சீக்கிரம் சொல்லுங்க " என்றாள்.

***அவளுக்கு கேட்கவில்லையோ என்று மீண்டும் போன்னில் இச்... என்று சத்தமாக முத்தம் வைத்த கௌதம்"என்ன ப்ரியா***

***கேட்டுச்சா?..." என்றான்***

***"இல்லையே சத்தமா சொல்லுங்க, ஒண்ணுமே கேட்கல... எதோ உச்ன்னு தான் கேட்டுச்சு... "***

***அவள் சொன்னதை கேட்டதும், தலையில் கை வைத்த கௌதம்,"இதுக்கு மேல சத்தமா சொல்ல... என்னால முடியாது நேர்ல சொல்றேன்" என்றான்.***

***சரி என்ற ப்ரியா"எனக்கு ஊட்டி ப்ளம்ஸ்... ரொம்ப பிடிக்கும்.. வாங்கிட்டு வரீங்களா... " என்றாள்.***

***"பின்ன நான் வேற எதுக்கு ஊட்டிக்கு வந்தேன், உனக்கு ப்ளம்ஸ் வாங்கவும், உன் நாத்தனாருக்கு முகத்தில பூச கிரீம், வாங்கவும் தான் வந்தேன்" என்றான் கௌதம் ஆத்திரமாக.***

***"ஏன்...? ஒரு மாதிரி பேசுறீங்க, கோபமாவா இருக்கீங்க "***

***"ச்ச..ச்ச.. இல்லை, நீ தமிழ் சினிமா பார்க்கமாட்டியா ப்ரியா?"***

*"பார்ப்பேனே, இந்த வருஷம் ட்வெல்த் படிகிறதால... ரொம்ப பாக்கிறது இல்லை, என் கேட்கறீங்க?"*

*"ரொம்ப நல்லது, எக்ஸாம் முடிந்ததும், நல்லா சினிமா பாரு... சரி போன்ன வச்சிடவா"*

*"ஏன் அதுக்குள்ள, இன்னும் கொஞ்சம் நேரம் பேசுங்க ப்ளீஸ்... கௌதம் அங்க ரொம்ப குளுருதா..."*

*"குளிருதுன்னு சொன்னா... நீ உடனே கிளம்பி இங்க வர போறியா..."*

*"நான் வந்து என்ன பண்ண போறேன்... நீங்க ரொம்ப குளுருச்சுன்னா ஸ்வட்டர் போட்டுக்கோங்க" என்று ப்ரியா ஐடியா கொடுக்க...*

*அவளின் பதிலில் கடுப்பானவன்"வேண்டாம் ப்ரியா,அழுதுடுவேன்..." என்ற கௌதம் பாய் என்று சொல்லி போன்னை வைக்க ...*

*ப்ரியா சிரித்து கொண்டே போன்னை வைத்தாள்.*

*முரளி mbbsல் அதிக மதிப்பெண்கள் பெற்று, ms நுழைவு தேர்வில் வெற்றியும் பெற்றதால், அவனுக்கு டெல்லியில் உயர் மருத்துவ*



Ramya Rajan

***படிப்பு படிப்பதற்கான aiims கல்லூரியில் சேர்வதற்கான அழைப்பு வந்தது. முரளி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை, முரளிக்கு அவனுடைய லட்சியமே ms முடித்து, வெளிநாட்டுக்கு சென்று சிறப்பு மருத்துவம் மேல் படிப்பு படித்து, தனது நாட்டில் மருத்துவனாக பணிபுரிந்து கொண்டே சேவை செய்ய வேண்டும் என்பதே ஆசை.***

***முரளி தான் ms படிக்க தேர்வானதை முதலில் தனது பெற்றோரிடமும், ப்ரியாவிடமும் பகிர்ந்து கொண்டு ஆசியும், வாழ்த்தும் வாங்கியவன் அடுத்து ஷ்ருதிக்கு அழைத்து தனது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டான். ஷ்ருதியும் தனது வாழ்த்தை சந்தோஷமாக தெரிவித்தாள். முரளி தான் சென்னையில் இருந்து டெல்லி கிளம்பும் முன் அவளை நேரில் சந்திப்பதாக கூரி போன்னை வைத்தான்.***

***இன்னும் ஒரு வாரத்தில் முரளி டெல்லிக்கு சென்று கல்லூரியில் சேரவேண்டும். அதனால் கோயம்பத்தூரில் தனது வேலையை முடித்து கொண்டு, சென்னைக்கு வந்தான்.***

***ராமமூர்த்தியும் ஜானகியும் முரளியை நினைத்து மிகுந்த சந்தோஷமும், பெருமையும் அடைந்தனர். தனது வீட்டுக்கு வந்த முரளிக்கு பயண ஏற்பாடு செய்யவே நேரம் சரியாக இருந்தது, ஷ்ருதியை எப்படி நேரில் சென்று சந்திப்பது என்று யோசித்துக்கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு உதவி அவனது அப்பா மூலமாக கிடைத்தது, முரளியிடம் அவனது அப்பா"நான் கிருஷ்ணகுமாரிடம் சொல்லிட்டேன், இருந்தாலும் நீ கிருஷ்ணகுமார் வீட்டுக்கு நேரில் சென்று... ஸ்வீட் கொடுத்து விஷயத்த சொல்லிட்டு வா..." என்றார்.***

*அவன் மனதில் அவனது அப்பாவுக்கு நன்றி சொல்லி சந்தோஷமாக ஷ்ருதி வீட்டுக்கு கிளம்பி சென்றான். முரளி இரண்டு ஸ்வீட் பாக்ஸ் வாங்கி கொண்டு சென்றான். ஒன்றில் எல்லா ஸ்வீட்டும் கலந்தது, இன்னொரு பாக்ஸ்ல் குலாப்ஜாமுன் மட்டும் இருந்தது. அன்று சண்டே என்பதால் கிருஷ்ணகுமார் வீட்டில் தான் இருந்தார், முரளி வருவதை ராமமூர்த்தி அவரிடம் ஏற்கனவே சொல்லி இருந்ததால், வீட்டில் சாருமதி முரளிக்கு விருந்தே தயாரித்து கொண்டிருந்தார். அவருக்கு ஷ்ருதி உதவி செய்து கொண்ருந்தாள்.*

*முரளியை நேரில் பார்க்க போகும் சந்தோசம் அவளை ஒரு இடத்தில் நிற்க விடாமல் செய்தது. வீட்டு கால்லிங் பெல் அடிக்க... முரளிதான் என்று நினைத்து ஓடிவந்து கதவை திறக்க... அங்கே கார்த்திக் நின்று கொண்டிருந்தான்.*

*அவனை பார்த்ததும் ஷ்ருதியின் முகம் போன போக்கை வைத்தே கார்த்திக் கண்டுபிடித்து விட்டான், இவ வேற யாரையோ எதிர் பார்க்கிறா என்று, ஒரு வேலை முரளி வராரோ... என்று அவன் நினைத்துகொண்டிருக்கும் போதே முரளி உள்ளே நுழைந்தான். உள்ளே நுழைந்த முரளி, ஷ்ருதியை பார்த்ததும்*

*மற்றவரை மறந்து அவளையே பார்த்து கொண்டு நிற்க... ஷ்ருதியும் முரளியை பார்த்துகொண்டு நின்றாள், அவர்கள் இருவரும் கனவுலோகத்தில் இருப்பதை பார்த்த கார்த்திக் இது ஒன்னும் வேலைக்கு ஆகாது என்று நினைத்தவன் சத்தமாக"ஹாய் முரளி எப்படி இருக்கீங்க?" என்று கேட்க ...அவன் பேசியதில் இருந்து முரளி வந்துவிட்டான் என்று அறிந்த வீட்டில் இருந்த சாருமதியும், கிருஷ்ணகுமாரும் வெளியே வந்து அவனை வரவேற்றனர்.*

முரளி கார்த்திக்கை நன்றியுடன் பார்க்க... ஆனால் அவனை தீ பார்வை பார்த்துக்கொண்டிருந்தாள் ஷ்ருதி. அவளின் பார்வைக்கு அர்த்தம் அறிந்த கார்த்திக், கிருஷ்ணகுமார் பக்கம் கண்ணை காண்பிக்க அப்போது தான் அவர் ஹாலில் அமர்ந்து, பேப்பர் படித்து கொண்டிருந்தது ஷ்ருதிக்கு நியாபகம் வந்தது, அவள் சாரி என்று கார்த்திக்கை பார்த்து வாய் அசைத்தாள், அவன் அவளை பார்த்து சிரித்துக்கொண்டே முரளியுடன் உள்ளே சென்று அமர்ந்தான்.

முரளி சிறிது நேரம் தனது படிப்பை பற்றி கிருஷ்னகுமாருடன் பேசிக்கொண்டிருந்தவன் கௌதம் எங்கே என்று கேட்க அவன் வெளியே வேலையாக சென்றிருகிறான், இன்னும் கொஞ்சம் நேரத்தில் வந்துவிடுவான் என்று சொன்ன கிருஷ்ணகுமார் அவன் வருவதற்குள் தான் சென்று குளித்து வருவதாகவும் அதன் பின் அனைவரும் ஒன்றாக உணவு அருந்தலாம் என்றார்.

ஆனால் முரளி உணவை மறுத்து தனக்கு வேலை இருக்கிறது அதனால் இன்னொரு நாள் வரும் போது சாப்பிடுகிறேன் என்று எழுந்தவன், ஷ்ருதியின் முகம் வாடுவதை பார்த்து வருந்தியவன் என்ன செய்வது என்று யோசிக்க அதற்குள் சாருமதி"கொஞ்சம் நேரம் இரு முரளி, சமையல் முடிஞ்சிடிச்சு, நீயே... எப்போவோ ஒரு தடவை தான் இங்க வருவ, அதுவும் நீ டெல்லிக்கு போறத கௌதமிடம் சொல்ல வேண்டாமா... அவன் உன்ன பார்க்க ரொம்ப ஆவலா இருந்தான்... இரு இப்ப வந்திடுவான்" என்றார்.

***முரளி "சரி அத்தை... இருக்கேன்" என்றான். முரளிக்கு குறைந்தது ஆறு மாதமாவது ஆகும் அவன் மறுபடியும் ஷ்ருதியை பார்க்க... அதனால் இன்று இன்னும் கொஞ்ச நேரம் அவளுடன் இருப்போம் என்று நினைத்தான். சாருமதி மிச்ச சமையலை கவனிக்க உள்ளே சென்றுவிட்டார். முரளி டிவி பார்த்துகொண்டிருக்க... ஷ்ருதி அவனுக்கும் கார்த்திக்கும் ஜூஸ் கொண்டு வந்து கொடுத்தாள். முரளியும் ஷ்ருதியும் இங்கிருந்தால் ஒன்றும் பேச முடியாது என்று அறிந்த கார்த்திக்"வாங்க முரளி.... இங்க பக்கத்தில் ஒரு பார்க் இருக்கு போயிட்டு வரலாம்" என்றான். முரளி ஷ்ருதியை பார்த்துக்கொண்டு தயங்க, கார்த்திக் ஷ்ருதியிடம்"நீயும் எங்க கூட வா இங்க வெட்டியாத்தானே இருக்க வா..." என்றான். அவன் சொன்னதை கேட்ட முரளி, ஷ்ருதி இருவரின் முகமும் மலர்ந்தது. சாருமதியிடம் சொல்லி விட்டு மூவரும் பார்க் நோக்கி சென்றனர்.***

***ஷ்ருதியின் வீட்டு அருகில் இருக்கும் பார்க் மிகவும் பெரியது, அதில் நிறைய மரங்கள்...பூ செடிகள் இருக்கும். வாக்கிங் செய்ய சுற்று பாதையும் இருந்தது. இவர்கள் சென்றது நல்ல உச்சி வெய்யில் நேரம் அதனால் பார்க்கில் யாரும் இல்லை.***

***பார்க்கின் நடைபாதையில் முரளியையும், ஷ்ருதியையும் முன்னே நடக்க விட்டு பின்தங்கிய... கார்த்திக், அங்கிருந்த பெஞ்சில் அமர, முரளியும், ஷ்ருதியும் பேசிக்கொண்டே... மெதுவாக முன்னே நடந்து சென்றனர். சற்று தூரம் தள்ளி வந்ததும், ஒரு பெரிய மரத்தின் நிழலில் இருவரும் நின்றனர்.***

***முரளி பேசுவதை நிறுத்திவிட்டு ஷ்ருதியின் கையை மெதுவாக பிடித்தவன், அவள் கையை மெதுவாக வருடிக்கொண்டு... ஷ்ருதியையே பார்க்க அவளும் அவனையே பார்த்துகொண்டிருந்தாள், எவ்வளவு நேரம் அப்படியே நின்றார்கள் என்று இருவருக்கும் தெரியாது, முரளியின் செல்லுக்கு கார்த்திக் மிஸ்டு கால் கொடுத்தான், கார்த்திக் எதற்காக மிஸ்டு கால் கொடுத்தான் என்று யோசித்த முரளி, அங்கிருந்தே கார்த்திக்கை எட்டி பார்க்க... கார்த்திக்குடன் கௌதம் நின்று பேசிக்கொண்டிருந்தான். ஷ்ருதியின் கையை மெதுவாக அழுத்தி விடுவித்த முரளி போகலாமா கௌதம்... வந்துட்டான் என்றதும், இருவரும் திரும்பி நடக்க ஆரம்பித்தனர்.***

***வரும் வழியில் முரளி ஷருதியிடம்"என்னால்... எப்ப இங்க வரமுடியும் என்று தெரியலை, எப்ப முடியுதோ... அப்ப கண்டிப்பா வரேன், அதே மாதிரி ப்ரீயா இருக்கும் போது.... நானே போன் பண்றேன் இல்லைனா மெயில் அனுப்புறேன், உனக்கு என் கூட பேசணும் என்றால் மெசேஜ் பண்ணு. மனசுல எதையாவது நினைச்சி பீல் பண்ணாம நல்லா படி, CA எக்ஸாம் நல்லா எழுது சரியா..."***

***அவன் தன் மீது வைத்திருக்கும் அன்பை பார்த்து நெகிழ்ந்த ஷ்ருதியின் கண்கள் கலங்க, அதை பார்த்த முரளி"நான் ஊருக்கு போகும் போது, நீ சிரித்த முகமா இருந்தா தான், என்னால அங்க போய் நிம்மதியா இருக்க முடியும்."***

***"நான் நல்லா தான் இருக்கேன், நீங்க மேல படிக்க தானே போறீங்க... நீங்க பெரிய டாக்டர் ஆனால்...எனக்கும் சந்தோஷம் தான், அதனால கவலை படாம போயிட்டு வாங்க."***

***அவர்கள் இருவரும் கௌதம் கார்த்திக் அருகில் வந்ததும், கௌதம், முரளிக்கு கை கொடுத்து வாழ்த்து தெரிவித்தவன், அவனை கட்டியணைத்து தன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டான். முரளியும் கௌதமும் முன்னே பேசிக்கொண்டு நடக்க அவர்களின் பின்னே ஷ்ருதியும், கார்த்திக்கும் சென்றனர். முரளி உணவு அருந்திவிட்டு அனைவரிடமும் சந்தோஷமாக விடைபெற்று சென்றான்.***

***நாட்கள் வேகமாக சென்றது. முரளி கல்லூரியில் சேர்ந்து ஆறு மாதம் முடிவடைந்து விட்டது. அவனுக்கு தியரி வகுப்பை விட பிரக்டிகல் வகுப்பே அதிகம், அதனால் கல்லூரியில் இருந்த மருத்துவமனையில் அவனுக்கு சர்ஜன் ஆவதற்க்கான பயிற்சி வகுப்புகள் நடந்தது.***

***ஷ்ருதி** *CA preliminary* **எக்ஸாம் நல்ல முறையில் எழுதிவிட்டு, இப்போது கல்லூரி தேர்வுக்காக படித்து கொண்டிருந்தாள். அவளும் முரளியும் குறைந்தது வாரத்தில் ஒரு நாலாவது கண்டிப்பாக மொபைலிலோ, மெயிலிலோ தொடர்பு கொண்டு பேசிவிடுவார்கள்.***

***ப்ரியா பன்னிரெண்டாம் வகுப்பு பொது தேர்வு எழுதி முடித்துவிட்டு, லீவில் கம்ப்யூட்டர் கிளாஸ் சென்று கொண்டிருந்தாள்.***

***கௌதமுக்கு கல்லூரியில் இது கடைசி வருடம் என்பதால், அவன் ரொம்ப பிஸியாக இருந்தான். இப்போதும் வர்ஷா அவனை தொடர்ந்து கொண்டுதான் இருந்தாள், ஆனால் கௌதம், அவளை கல்லையும் மண்ணையும் பார்ப்பது போல் பார்த்துவிட்டு சென்றுவிடுவான்.***

***கல்லூரியில் நடக்கும் farewell பார்ட்டியில், இந்த முறை குரூப் சிங்கிங்க் அண்ட் குரூப் டான்ஸ் இருந்தது. கௌதம் எப்போதும் தனியாக தான் பாடுவான், இந்த முறை அவனது நண்பர்கள் அவனை விடவில்லை, இது கடைசி வருடம் என்பதால் கண்டிப்பாக குரூப் பெர்பாமன்ஸ் குடுக்க வேண்டும் என்று விரும்பினார்கள், அதனால் முதல் வருடத்தில் இருந்து கடைசி வருடம் வரை உள்ள மாணவர்களில், நன்றாக பாடி... ஆட தெரிந்தவர்களை... தேர்ந்தடுத்து அவர்களை ஜோடியாக பிரித்து பயிற்சி கொடுத்தனர். கௌதமிற்கு வர்ஷா தான் ஜோடி, அவளோடு ஆடுவதென்றால் தான் கல்லூரிக்கே வர மாட்டேன் என்று கௌதம் சொல்லிவிட, அதனால் அவனுக்கு வேற ஒரு பெண்ணை ஜோடியாக போட்டனர். கௌதம் தன்னுடன் ஆட மாட்டேன் என்று சொன்னதை கேட்ட வர்ஷாவிற்கு கௌதம் மேல் வெறுப்பு இன்னும் அதிகம் ஆகியது.***

***கல்லூரியில் விழா அன்று குரூப் சிங்கிங்க் அண்ட் குரூப் டான்ஸ் தொடங்கியது. மொத்தம் ஆறு ஜோடிகள் முதலில் ஆறு ஜோடிகளும் சேர்ந்து ஆட, பிறகு ஒவ்வொரு ஜோடியாக தனி தனியாக பாடி கொண்டே ஆடினார்கள், கடைசியில் மறுபடியும் ஆறு ஜோடிகளும் சேர்ந்து ஆட, அன்றைய விழாவிலேயே இந்த நிகழ்ச்சி தான் பெரிய ஹிட்.***

***விழா கொண்டாட்டம் முடிந்து, எல்லோரும் இப்போது தேர்வுக்கு தயார் ஆகி கொண்டிருந்தனர். தேர்வும் முடிந்து விட்டது, கடைசி பரிட்ச்சை அன்று கார்த்திக்கிடம், அவனது நண்பன் கல்லூரி விழாவில் எடுத்த சீடியை கொடுக்க... அதை அவன் வாங்கி கொண்டு வந்த ஷ்ருதியிடம் கொடுத்தான். ஷருதிக்கும் இப்போது பரிட்ச்சை முடிந்து விட்டதால், ப்ரியாவோடு சேர்ந்து சீடியை பாப்போம் என்று நினைத்தாள். அந்த சீடியால் கௌதமிற்கும், ப்ரியாவிற்கும் பிரச்சனை வர போவதை அறியாத ஷ்ருதி... ப்ரியாவை போன் பண்ணி வீட்டிற்க்கு அழைத்தாள்.***

***ஷ்ருதி ப்ரியாவை செல்லில், தங்கள் வீட்டிற்க்கு வரும்படி அழைக்க, அதற்க்கு ப்ரியா"வரேன் ஆனா... இன்னைக்கு வரலை, நாளை மறுநாள் வரேன்" என்றாள்."ஏன்?" என்று ஷ்ருதி கேட்க"அன்னைக்கு கௌதமோட பிறந்த நாள், அதனால அன்னைக்கு வந்தால்... அவங்களை நேரில் பார்த்து... பிறந்தநாள் வாழ்த்து சொன்ன மாதிரி இருக்கும், நானே என்ன காரணம் அம்மாட்ட சொல்லிட்டு வர்றது என்று நினைத்தேன், நல்ல வேலை நீயா போன் பண்ணிட்ட... அம்மாட்ட நீ கூப்பிட்டதா சொல்லிட்டு வரேன்" என்றாள் ப்ரியா.***

***ஷ்ருதியும்" சரி... நீ அன்னைக்கே வா..." என்று போன்னை வைத்தாள்.***

***கௌதம் தனது பிறந்தநாள் அன்று ப்ரியாவிடம் இருந்து போன் வரும் என்று எதிர்பார்த்து கொண்டிருந்தான். ஆனால் அவள் போன்னும் பண்ண வில்லை, எப்போதும் செல்லும் கம்ப்யூட்டர் கிளாஸ்க்கு, தங்கள் ஆபீசை தாண்டி தான், ஸ்கூட்டியில் செல்வாள் அதற்கும் வரவில்லை. ஏன்...? என்று தெரியாமல் குழப்பத்தில்***

இருந்தவன் பொறுக்க முடியாமல், அவள் போண்ணுக்கு அழைக்க, ப்ரியா, கௌதம் வீட்டுக்கு வேறு வழியாக வந்தவள், அவன் போன் பண்ணும் போது அவன் வீட்டில் தான் இருந்தாள்.

கௌதம் நம்பரை செல்லில் பார்த்ததும், ஷ்ருதியிடம் சொல்லிவிட்டு அவள் அறைக்குள் சென்று போன்னை ஆன் செய்தாள்

"ஹாய் கௌதம், எப்படி இருக்கீங்க?"

"நல்லாயிருக்கேன் ப்ரியா, ஆமா... நீ இன்னைக்கு கம்ப்யூட்டர் கிளாஸ் வரலை.... "

"ம்ம்... வரலை, இன்னைக்கு எனக்கு கிளாஸ் போக மூட் இல்லை... அதுதான் வரலை..." என்று அலட்ச்சியமாக பதில் சொன்னாள் ப்ரியா.

"அப்படியா சரி, அப்புறம் வேற என்ன விஷயம்? "

"வேற என்ன விஷயம், வேற ஒன்னும் இல்லையே" என்று ப்ரியா தெரியாதது போல் இழுக்க....

"விஷயம் எதுவும் இல்லையா... இதை என்னை நம்ப சொல்ற, ஆமா... நீ ஏன் இன்னைக்கு எனக்கு போன் பண்ணல?" என்று கௌதம் கேட்க....

Ramya Rajan

***"நான் எதுக்கு இன்னைக்கு உங்களுக்கு போன் பண்ணனும்***

***கௌதம்?" என்று ப்ரியா அவன் பிறந்தநாளை மறந்துவிட்டதை போல பேச....***

***பொறுமை குறைய தொடங்கிய கௌதம்"அது உனக்கு தான் தெரியும், நீ தான் இந்த நாள்ல எனக்கு ரெண்டு வருஷமா... போன் பண்ற" என்றான். குரலில் அவனின் கோபம் தெரிந்தது.***

***அப்படி என்ன முக்கியமான நாள் இன்னைக்கு, என்று ப்ரியா யோசிப்பது போல் பாசாங்கு செய்ய...***

***"அது ஒரு மோசமான நாள்.... அதை எதுக்கு நியாபக படித்திட்டு இருக்கணும், சரி போன்ன வச்சிடுறேன்" என்று கௌதம் போன்னை வைக்க போக...***

***"ஏன் கௌதம்?, உங்க பிறந்தநாளை போய் மோசமான நாள் என்று சொல்றீங்க, அப்படி எல்லாம் பேசாதீங்க"*** என்றாள்***ப்ரியா*** வேகமாக....

***"அப்படி வா வழிக்கு, இப்ப உண்மைய சொன்னியா... எனக்கு தெரியும், நீ என் பிறந்தநாள மறக்கமாட்டேன்னு, அப்புறம் எதுக்கு இந்த டிராமா ப்ரியா..."***



Ramya Rajan

*"போன் பண்ணலாம் என்று தான் நினைச்சேன், நீங்களே பண்ணிடீங்க. அது தான் சும்மா விளையாடினேன், எனிவே.. விஷ் யு மெனி மோர் ஹாப்பி பர்த்டே."*

*"தேங்க்ஸ்..." என்ற கௌதம் சரி போன்னை வச்சிடுறேன் என்றான்,*

*"என்ன கௌதம், இன்னும் கோபம் போகலையா...ரொம்ப சூடா இருக்கீங்களா... நான் வேணா ஜில்லின்னு ஐஸ்கிரீம் தரவா" என்றாள் ப்ரியா.*

*"போன்ல எப்படி? ஐஸ்கிரீம் தருவ" என்றான் கௌதம் எரிச்சலுடன்.*

*"அதுதான் நீங்க, அன்னைக்கு எனக்கு தந்தீங்களே... ஊட்டியிலிருந்து" என்றவள், அவன் இவள் எதை சொல்லறா என்று யோசிக்கும் போதே இச்... என்று போன்னில் முத்தம் வைக்க, மயக்கமே வந்துவிட்டது கௌதமுக்கு.*

*"அடிப்பாவி அன்னைக்கே... அது முத்தம்ன்னு தெரிஞ்சு தான், புரியாத மாதிரி டிராமா போட்டியா, அன்னைக்கு எப்படி என்னை மண்ட காய வச்ச?, இரு நேர்ல மட்டும் உன்னை பார்த்தேன் என்று வை அப்புறம் இருக்கு உனக்கு கச்சேரி".*

*என்ன பண்ணுவீங்க அடிபீங்களா(அதுவும் தான், அவன்கிட்ட வாங்க போற)என்றாள் ப்ரியா கேலியாக.*

*"அடிக்கெல்லாம் மாட்டேன், அன்னைக்கு போன்ல கொடுத்த ஐஸ்கிரீம், நேர்ல கொடுப்பேன், வேற ஒன்னும் இல்லை" என்ற கௌதம் போன்னை வைத்துவிட்டான்.*

*ஷாக் ஆன ப்ரியா, சிறிது நேரம் கழித்து தான் கவனித்தாள், கௌதம் போன்னை வைத்து விட்டதை, ப்ரியா அவனை செல்லில் அழைத்தாள்.*

*கார்த்திக்குடன் அவர்கள் ஆபீஸ் வெளியே போய் அமர்ந்த கௌதம், போன்னில் ப்ரியா அழைப்பதை பார்த்து "இப்ப எதுக்குடி?போன் பண்ற..." என்றான்.*

*"கௌதம்.... நீங்க எனக்கு போன் பண்ணுவீங்க என்று நான் எதிர்பார்க்கவே இல்லை, எதோ ப்ளோல அப்படி பண்ணிட்டேன், அதை மனசுல வச்சுக்காதீங்க, நீங்க சொன்ன மாதிரி... எல்லாம் பண்ண மாட்டீங்க தானே" என்றாள் ப்ரியா பாவமாக.*

*"இப்போ எதுக்கு ப்ரியா.... அதை பத்தி கவலைபடர, அது உன்னை நேர்ல பார்க்கும் போது தான், அதுனால டென்ஷன் ஆகாம இரு" என்றான் கௌதம். கார்த்திக் அருகில் இருப்பதால் அவனால் விளக்கமாக பேசமுடியவில்லை.*

*"சும்மா விளையாடாதீங்க கௌதம், நீங்க ரொம்ப நல்லவர் என்று எல்லோரும் நினைச்சிட்டு இருக்காங்க."*

இவ அடங்க மாட்டா போல இருக்கே என்று நினைத்தவன், இருடா கார்த்திக் வரேன் என்று எழுந்து தள்ளி சென்று பேசினான்.

"இங்க பாரு... எப்பவும் என்னோட பிறந்த நாளுக்கு... நீயா தான் போன் பண்ணுவ... இந்த தடவை நீ போன் பண்ணலைன்னு நான் பண்ணேன், அப்பவே ஒழுங்கா வாழ்த்திட்டு விட்ருக்கலாம்... தேவை இல்லாம நீ தான் வம்பிழுத்த... நானா உன்கிட்ட ஐஸ்கிரீம் கேட்டேன்... நீயா தான் கொடுத்த, பண்றதெல்லாம் நீ பண்ணிட்டு... இப்ப என்னை சொல்ற, நீ ரொம்ப கேடி அன்னைக்கு போன்ல... என்கிட்டே கேட்கலை... கேட்கலைன்னு சொல்லி, ரெண்டு தடவை என்னை கொடுக்க வச்ச, இப்பவும் உன்னை பார்க்கும் போது தான்ன்னு சொல்றேன், நீ தான் இப்பவும் வம்பு இழுக்குற. இப்ப என்ன சொல்ல வர, என்னை மத்தவங்க தப்பா நினைக்க கூடாது அவ்வளவு தானே... நான் உனக்கு ஐஸ்கிரீம் தர்றது எப்படி மத்தவங்களுக்கு தெரியும், நான் சொல்ல மாட்டேன், நீ சொல்ல போறியா... " என்று கௌதம் கேட்க...

"ம்ம்... இல்லை..." என்றவள், அப்போதுதான் அவன் சொன்னதன் அர்த்தம் புரிந்து. "கௌதம்..." என்று அலறினாள்.

அவளது அலறல் காதில் விழாதது போல்... போன்னை வைத்துவிட்டான் கௌதம்.

ப்ரியா தலையிலேயே அடித்து கொண்டாள், இன்னைக்கு போய் நான் கௌதமிடம் ஏன் இப்படி பேசினேன்? பேச மட்டுமா

***செஞ்சேன், கடவுளே! சும்மா இருந்தவனை... நானே தூண்டி விட்டுட்டேன். அவன் வருவதற்குள் சீக்கிரமா இங்க இருந்து கிளம்பிடனும் என்று நினைத்தாள். ரூமை விட்டு வெளியே வந்தவள், ஷ்ருதியுடன் சேர்ந்து வேலை செய்தாள்.***

***ப்ரியாவும், ஷ்ருதியும் சாருமதியிடம் இன்று நாங்கள் சமையல் செய்கிறோம், நீங்கள் ரெஸ்ட் எடுங்கள் என்றனர், அவர் நான் ரெஸ்ட் எல்லாம் எடுக்கலை கொஞ்சம் கடைக்கு போகணும், போயிட்டு வரேன் நல்லா சமையல் பண்ணுங்க வந்து சாப்பிடுறேன் என்று சொல்லி வெளியே சென்று விட்டார்.***

***சாருமதி கடைக்கு சென்றதும், இவர்கள் இருவரும் சேர்ந்து சமையல் செய்தனர். ப்ரியா வரும் போதே கேக் செய்ய, தேவையான பொருட்களை வாங்கி வந்திருந்தாள், அதனால் அவள் முதலில் கேக் செய்தாள். பின்பு ஷ்ருதியுடன் சேர்ந்து மதிய சமையலை இருவரும் செய்தனர், அனைத்தும் கௌதமிற்கு பிடித்ததே செய்தனர். ப்ரியா ஷ்ருதியிடம் தனக்கு ரொம்ப தலை வலிக்கிறது அதனால் வீட்டிற்க்கு கிளம்புகிறேன் என்றாள். அவளை ஆச்சர்யமாக பார்த்த ஷ்ருதி "ஏன் ப்ரியா? கௌதமிற்க்காக எல்லாத்தையும் பார்த்து, பார்த்து பண்ணிட்டு, இப்ப அவன் வர்றதுக்குள்ள கிளம்புறேன்னு சொல்ற" என்றவள், எதையோ யோசித்து "சரி... இந்த கேக் மட்டும் முடிச்சிட்டு போ..." என்றாள். ப்ரியாவும் சரி என்று கேக்கில் கிரீம் போடும் வேலையை செய்தாள்.***

***ப்ரியாவிற்கு தெரியாமல் கௌதமுக்கு போன் செய்த ஷ்ருதி "டேய் ப்ரியாகிட்ட போன்ல என்னடா சொன்ன? அவ இப்பவே வீட்டுக்கு***

*போறேன்னு சொல்றா..." என்றதும்."ப்ரியா.. நம்ம வீட்லையா இருக்கா... எப்ப வந்தா...?" என்று கௌதம் கேட்க,"நீ... காலையில், அவளுக்கு போன் செஞ்ச போதே.. அவ இங்க தான் இருந்தா... உன் பர்த்டே என்று ஆசையா வந்தா.. ஆனா, இப்ப நீ வர்றதுக்குள்ள கிளம்புறேன்னு சொல்றா.. ஏன்னு தெரியல..நீ எதாவது அவள திட்டினியா" என்றாள் ஷ்ருதி."நான் சும்மா அவள கிண்டல் செஞ்சேன்... அதனால இருக்கும், நான் அங்க பத்து நிமிஷத்துல இருப்பேன், நீ அவள போக விட்றாத" என்றவன் கார்த்திக்கையும் அழைத்து கொண்டு, கௌதம் தங்கள் வீட்டிற்க்கு கிளம்பினான்.*

*போகும் வழியில் கௌதம், மேடம் எங்க வீட்ல தான் இருக்காங்களா, நேர்ல வாழ்த்து சொல்ல தான், போன் பண்ணலியா, இப்ப நேர்ல பார்த்தா ஐஸ்கிரீம் கொடுப்பேன் என்று நினைச்சு தான், மேடம் பயந்து வீட்டுக்கு போறேன்னு சொல்றாளா, போன்ல என்ன அழகா ஐஸ்கிரீம் கொடுத்தா, பதிலுக்கு நான் கொடுக்க வேண்டாம். இருடி செல்லம் நேர்ல வர்றேன் என்று நினைத்து கொண்டே சென்றான்.*

*கௌதம் கார்த்திக்குடன் வீட்டிற்க்கு வந்தவன், கால்லிங் பெல் அடிக்காமல், தன்னிடம் இருந்த சாவியால் கதவை திறக்க... ஹாலில் யாரும் இல்லை...கார்த்திக்கிடம் சத்தம் போடாமல் இருக்க சொல்லி, சைகை காண்பித்தவன், மெதுவாக டைனிங் ஹாலுக்கு சென்றான்.*

*அங்கே ஷ்ருதி சாப்பிடும் தட்டுக்களை துடைத்து கொண்டிருந்தாள். அவளிடம் ப்ரியா எங்கே என்று சைகையில் கேட்க, அவள் சமையல் அறையை காட்டினாள். மெதுவாக கௌதம் உள்ளே எட்டி பார்த்தான், அங்கே ப்ரியா சமையல் மேடையில்... கையில் கோனை வைத்துக்கொண்டு, கேக்ல் பேர் எழுதிக்கொண்டிருந்தாள்,*

Ramya Rajan

வெள்ளை கலரில்... பிங்க் கலர் பூக்கள்... போட்ட சுடிதார் அணிந்து, தலைக்கு குளித்ததால் இடை வரை இருந்த கூந்தலை, பின்னாமல் தளர்வாகவிட்டு ஒரு பேண்டு மட்டும் அணிந்திருந்தாள், பார்க்கவே தேவதை போல் இருந்தவளை சற்று நேரம் தள்ளி நின்றே பார்த்து ரசித்தவன், இப்ப மட்டும் இவ என்னை பார்த்தா என்ன ஆகும் என்று நினைத்துக்கொண்டிருக்கும் போதே... வந்துட்டியா கௌதம் என்ற சாருமதியின் குரலில், ப்ரியா திடுக்கிட்டு திரும்ப, ப்ரியாவை பார்த்துகொண்டே கௌதம்"இப்பதாமா... அஞ்சு நிமிஷம்... முன்னாடி வந்தேன்" என்றான்.

அஞ்சு நிமிஷமா இங்கயா நிற்கிறான் என்று நினைத்தவள், மறுபடியும் தான் பார்த்து கொண்டிருந்த வேலையை தொடர... மனதிற்குள் நான் போறதுக்குள்ள... வந்துட்டானே, இனிமே கிளம்பினா... நல்லா இருக்காது, அதுதான் கூட அத்தை, ஷ்ருதி இருக்காங்களே... அவங்க முன்னாடி ஒன்னும் பண்ண முடியாது என்று நினைத்தவள், அதன்பிறகு சற்று தைரியமாகவே இருந்தாள்.

வேலையை முடித்துக்கொண்டு ப்ரியாவும், ஷ்ருதியும் ஹாலில் வந்து அமர, அங்கு கௌதமமும் கார்த்திக்கும் டிவி பார்த்துக்கொண்டிருந்தனர். ப்ரியாவை பார்த்த கார்த்திக்"என்ன ப்ரியா எப்படி இருக்க...? எக்ஸாம் நல்லா எழுதிறிகியா...." என்றான், அவனுக்கு பதில் சொன்னாள் ப்ரியா. அப்போது கார்த்திக்"என்ன ப்ரியா? கௌதம் பர்த்டேவ இந்த வருஷம் ரொம்ப கிராண்டா கொண்டாரீங்க போல, நீயே கேக் வீட்ல செஞ்சு இருக்க கலக்கற போ..." என்றான். அப்போது கௌதம்"என்ன செஞ்சி என்னடா... நான் வந்து எவ்வளவு நேரம் ஆகுது... இதுவரை என்னை விஷ் பண்ணலை" என்றான் வேண்டும் என்றே. கௌதமை பார்த்த ப்ரியா எதுவும் சொல்லாமல் அமைதியாக இருக்க, கார்த்திக் "இப்ப நாங்க எல்லாம் இருக்கோம் இல்ல கௌதம்... அதனால தான், அப்புறமா

தனியா உனக்கு விஷ் பண்ணுவா இல்ல ப்ரியா…” என்று கேட்க, அவள் முகத்தில் தெரிந்த கலவரத்தை பார்த்த கௌதம் சிரித்தான்.

கிருஷ்ணகுமார் வந்ததும் கௌதம் கேக் வெட்டினான், அவன் அம்மா அப்பாவிற்கு கொடுத்துவிட்டு, ஷ்ருதிக்கு கொடுத்த போது அவள் கௌதம் வாயில் பெரிய துண்டு கேக்கை திணிக்க, அவன் பதிலுக்கு அவள் முகத்தில் கிரீமை பூசினான், கார்த்திக் இதையெல்லாம் தனது செல்லில் படம் எடுக்க, ப்ரியா அவர்களை பார்த்து சிரித்து கொண்டிருந்தாள். பின் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தினர்.

சாப்பிட்டு முடித்ததும், ப்ரியா வீட்டுக்கு போறேன் என்று கிளம்பினாள், அவளை தடுத்த சாருமதி”இப்படி கொள்ளுத்துற வெயில்ல வெளிய போன்னா அவ்வளுவுதான், அதெல்லாம் சாயங்காலம் போய்க்கலாம், போய் ஷ்ருதி, ரூம்ல ரெஸ்ட் எடு… இன்னைக்கு ரொம்ப வேல செஞ்ச” என்று அவரும் கிருஷ்ணகுமாரும் தங்கள் அறைக்கு ஓய்வெடுக்க சென்றனர்.

ஷ்ருதி ரூம்ல ரெஸ்ட் எடுக்கிறியா ப்ரியா என்று கேட்க, வேண்டாம் நான் டிவி பார்கிறேன் என்றவள், ஷ்ருதியின் அருகில் சென்று அமர்ந்தாள். சிறிது நேரம் கழித்து கௌதம் ஷ்ருதியிடம் “கொஞ்சம் கேக் எடுத்திட்டு வரியா…” என்றான், அவனை ஒரு மாதிரி பார்த்தவள்”ஏன்…? நீயே போய் எடுத்துக்கோ…” என்றாள், அடுத்து கௌதம் ப்ரியாவிடம்”நீ எடுத்துட்டு வரியா…” என்றான், சரி என்றவள் எழுந்து உள்ளே சென்றாள், அவள் சென்றதும் தானும் உள்ளே சென்றவன் அவளருகில் சென்று நிற்க, கௌதமை பார்த்ததும் ப்ரியா அங்கிருந்து ஓட பார்க்க… அவளை கை பிடித்து நிறுத்தியவன், நான் இப்ப ஐஸ்கிரீம் கொடுக்க வரலை அதனால

***பயப்படாம நில்லு என்றவன், அவள் கையில் இருந்த கேக்கை வாங்கி அவளுக்கு ஊட்டிவிட்டான், அவளும் சிறிது கேக் எடுத்து கௌதமுக்கு ஊட்டிவிட்டு ஹாப்பி பர்த்டே என்றாள்.***

***"ரொம்ப தேங்க்ஸ் ப்ரியா. இந்த பர்த்டே தான்.... என்னோட லைப்லேயே மறக்கவே முடியாத பர்த்டே... காலையில ஐஸ்கிரீம் கொடுத்த, இப்ப கேக்.... சூப்பர்!..." என்றவன், அவளை பார்த்து கண் சிமிட்ட, ப்ரியா அவனை பொய்யாக முறைத்தாள்.***

***அவள் முறைத்ததும் "அம்மா தாயே முறைக்காத... உன்னோட முட்ட கண்ண பார்த்தா... பயமா இருக்கு...." என்றவன், "கேக் வேணுமா ப்ரியா..." என்றான். அவளும் ஆம் என்று தலையாட்ட, கேக்கை கையில் எடுத்து, ப்ரியாவின் வாய் அருகே கொண்டு சென்றவன், அவள் எதிர்பார்க்காத நேரம் இச் என்று கன்னத்தில் முத்தம் வைக்க, அவள் அதிர்ந்து நின்றாள். "இப்ப நான் முத்தத்துக்கு கேக்ன்னு பேர மாத்திட்டேன்" என்றவன், அங்கிருந்து சென்று விட்டான்.***

***சிறிது நேரம் கழித்து இயல்புக்கு திரும்பிய ப்ரியா, ஷ்ருதி அருகில் சென்று அமர்ந்தாள். கௌதம் பக்கம் திரும்பாமல் டிவி பார்த்து கொண்டிருந்தவள், ஷருதியிடம் "நீ ஏதோ சீடி பாக்கலாம்ன்னு சொன்ன இல்ல... அதை இப்ப பார்க்கலாமா" என்றாள். ஷ்ருதியும் சரி என்று கார்த்திக் கொடுத்த, கௌதம் டான்ஸ் சீடி எடுக்க சென்றாள். ஷ்ருதி எழுந்து சென்றதும் ப்ரியாவின் பக்கத்தில் வந்து அமர்ந்த கௌதம் என்ன மேடம் கோபமா என்றான்.***

***"என் கூட பேசாதீங்க... நீங்க சொல்றது ஒன்னு... செய்றது ஒன்னு..."***



Ramya Rajan

*"நான் இப்ப என்ன தப்பு செஞ்சேன், நாலு வருஷமா லவ் பண்ற பொண்ணுக்கு, முத்தம் கொடுத்தேன், இது ஒரு தப்பா..."*

*"ஆமா... தப்புதான்."*

*"நான் குழந்தைக்கு கொடுக்கிற மாதிரி கன்னத்துல தான் கொடுத்தேன், ஒரு லவ்வர் மாதிரி உதட்லையா கொடுத்தேன்" என்று கௌதம் ஏக்கமாக சொல்ல....*

*"உங்க கூட பேசி ஜெயிக்க முடியுமா, எப்படியோ போங்க" என்று ப்ரியா சொன்னதும்.*

*"அப்ப... இன்னொரு முத்தம் கொடுக்கட்டுமா..." என்று கௌதம் ஆசையாக அவளை நெருங்க, பொங்கி எழுந்த ப்ரியா எதாவது கையில் கிடைகிறதா என்று பார்த்தாள். அவள் தேடுவதை பார்த்து, என்ன தேடுற என்றான் கௌதம். "உங்களை அடிக்க தான், எதாவது கிடைக்குதான்னு பார்க்கிறேன்" என்றவள், அப்போது தான் கவனித்தாள் கார்த்திக்கும், ஷ்ருதியும் இவர்களை பார்த்து சிரித்து கொண்டிருப்பதை. இவர்கள் இருவரும் பேசுவது கேட்கவில்லை என்றாலும், எதோ சண்டை என்று மட்டும் இருவருக்கும் புரிந்தது.*

*கௌதமும், ப்ரியாவும் சண்டையை நிறுத்தியதும், இப்போ சீடி பார்கலாமா என்று கேட்ட ஷ்ருதி, சீடியை போட... அதில் கௌதமின் டான்ஸ் வந்தது. அவன் ஒரு பெண்ணின் அருகில் நின்று*

***டான்ஸ் ஆடுவதை பார்த்து முறைத்த ப்ரியா"நீங்க பாட தானே செய்வீங்க, எப்ப ஆட வேற ஆரம்பிச்சிங்க" என்றாள் அவள் குரலில் இருந்தே அவளின் பொறாமையை அறிந்த கௌதம், அவளை மேலும் சீண்டும் எண்ணத்தில்,"அந்த பொண்ணு நான் அது கூட ஆடினா... நல்லாருக்கும் என்று சொல்லி ரொம்ப கூப்பிட்டா, மாட்டேன் என்று சொல்லமுடியலை, அது தான் ஆடினேன்" என்று கௌதம் சொல்ல... ப்ரியா பதில் சொல்லாமல், டான்ஸ்சை பார்த்தாள்.***

***அவளுக்கு கௌதம் வேறு ஒரு பெண்ணோடு டான்ஸ் ஆடுவதை பார்க்க... பார்க்க... ஆத்திரமாக வந்தது. டான்ஸ் ஆடும் போது வர்ஷா தன் கூட ஆடுபவனை பார்க்காமல்... கௌதமை தான் பார்த்துக்கொண்டிருந்தாள். அதை கவனித்த ப்ரியா"ஏன் அந்த பொண்ணு, உங்களையே பார்க்குது" என்றாள். யாரை சொல்றா என்று பார்த்தவன், அப்போதுதான் வர்ஷா தன்னை பார்த்துக்கொண்டே ஆடுவதை கவனித்தான். அதை பார்த்து கோபம் வந்தாலும், ப்ரியாவை வெறுப்பேற்ற"அவ பேரு வர்ஷா, அவ தான் எங்க காலேஜ் குயீன் என்றவன், ப்ரியாவின் முக மாறுதலை பார்த்து, அவளுக்கு நான் என்றால் ரொம்ப இஷ்டம், எப்பவும் என் பின்னாடி தான் சுத்துவா" என்றான்.***

***ப்ரியா அவனை சந்தேகமாக பார்க்க,"ப்ராமிஸ் ப்ரியா, நீ நான் சொல்றத நம்ப வேண்டாம், கார்த்திக் சொன்னா நம்புவ இல்ல, நீ அவனையே கேளு அந்த பொண்ணு என்கிட்டே லவ் ப்ரொபோஸ் பண்ணாலா இல்லையான்னு... ஒரு நாள் என்கிட்டே வந்து லவ் பண்றேன்னு சொன்னா.... நான் உன்னை லவ் பண்றதுனால அவளை வேண்டாம் என்று சொல்லற மாதிரி ஆகிடுச்சு, பாவம் அதுக்கப்புறம் ஆளே ரொம்ப டல் ஆகிட்டா" எதோ ப்ரியாவை அவன் லவ் பண்ணவில்லை என்றால், வர்ஷாவின் காதலை ஏற்று இருப்பதை***

***போல் கௌதம் பேச... ப்ரியாவின் உள்ளம் எரிமலையை போல் கொதித்தது, அதில் மேலும் எண்ணெயை ஊற்றுவது போல்"அவ இந்த டான்ஸ் சீடி கேட்டா... நாளைக்கு அவங்க வீட்டுக்கு போய் கொடுக்கணும்"என்றதும்,***

***ப்ரியாவிற்கு எங்கிருந்து தான் அத்தனை ஆத்திரம் வந்ததோ... வேகமாக சீடி பிளேயர் அருகே சென்றவள், அதிலிருந்த சீடியை எடுத்து... அதை உடைக்க பார்த்தாள். அவளது செயலை பார்த்து ஷ்ருதியும், கார்த்திக்கும் திகைத்து நிற்க, கௌதம் அதை அவள் கையில் இருந்து வாங்க பார்த்தான், ஆனால் அவனிடம் கொடுக்க கூடாது என்று வேகமாக இழுத்தவள் கையை... அந்த சீடி கிழித்தது, கையில் இருந்து ரத்தம் வருவதையும்... பொருட்படுத்தாமல் அந்த சீடியை உடைப்பதில், கவனமாக இருந்தவளை பார்த்து கௌதம் மனம் வருந்தினான். ப்ரியாவின் செயலை எப்படி தடுப்பது என்று புரியாமல் திகைத்தவன், அவள் கணத்தில் ஓங்கி ஒரு அறை வைக்க, ப்ரியா அதிர்ச்சியில் கன்னத்தை பிடித்து கொண்டு நின்றாள்.***

## 10

***அதிர்ச்சியில் நின்றிருந்த ப்ரியாவின், கையில் இருந்து சீடியை வாங்கிய கௌதம், அதை இரண்டாக உடைத்து தூக்கி எரிய, ஷ்ருதி ப்ரியாவின் உள்ளங்கையில் இருந்த காயத்துக்கு, ஈர துணியை ... அவள் கையில் வைத்து கட்டினாள். கார்த்திக் திகைத்து நிற்க...***

Ramya Rajan

***அப்போது அறையில் இருந்து வெளியே வந்த கிருஷ்ணகுமாரை பார்த்ததும், இவர்கள் அனைவரும் டிவி பார்ப்பது போல் பாசாங்கு செய்தனர்.***

***கௌதம் ப்ரியா முகத்தையே வேதனையோடு பார்க்க... அவள் அமைதியாக டிவி பார்த்து கொண்டிருந்தாள். ஷ்ருதி போட்டு கொடுத்த டியை குடித்துவிட்டு கிருஷ்ணகுமார் கிளம்பியதும்.***

***கௌதம் ப்ரியா அருகில் சென்று அமர்ந்தவன், கையில் இருந்த துணியை எடுத்துவிட்டு காயத்தை பார்க்க, உள்ளங்கையில் கோடு இழுத்தது போல் காயம் இருந்தது. ஷ்ருதி மருந்து கொண்டு வந்து தர, அதை அவள் கையில் மெதுவாக தடவியவன்”சாரி ப்ரியா... நான் எதோ விளையாட்டுக்கு.. உன்னை சீண்டலாம் என்று நினைத்தேன், ஆனா... அது உன்னை இவ்ளோ ஹர்ட் பண்ணும் என்று நினைக்கலை” என்றான். அவன் சொன்னதுக்கு ப்ரியா பதில் எதுவும் சொல்ல வில்லை, ஆனால் அவள் கண்ணில் இருந்து கண்ணீர் வழிந்தது. அதை பார்த்துகொண்டிருந்த ஷ்ருதியும் கார்த்திக்கும் வருத்தம் அடைந்தனர்.***

***”உனக்கு என்னை பற்றி தெரியாதா ப்ரியா, நான் சும்மா உன்னிடம் விளையாடினேன் டா... உன்னிடம் பொய் சொல்ல விரும்பலை... அந்த பொண்ணு என்னிடம் லவ் பண்றேன் என்று சொன்னது உண்மை தான், ஆனா நான் அவகிட்ட தெளிவா சொல்லிட்டேன், எனக்கு அவ மேல விருப்பம் இல்லைன்னு தேவதை போல நீ எனக்கு இருக்கும் போது... நான் ஏன்டா வேற யாரையும் பார்க்க போறேன். ”***

Ramya Rajan

***"எனக்கு தெரியும் கௌதம் உங்களை பத்தி, ஆனா... உங்களை வேற ஒரு பொண்ணு கூட பார்த்ததும், என்னால தாங்க முடியலை" என்றாள் ப்ரியா அழுகையுடன்.***

***அவள் சொன்னதை கேட்ட ஷ்ருதி"வேண்டாம் ப்ரியா... இவனை நம்பாதே... அந்த பொண்ணு கூட என்ன ஆட்டம் போட்ருக்கான், நல்லா மொத்து... நீ கோப படுவேன்னு பார்த்தா... இப்படி உட்கார்ந்து அழுற" என்று ப்ரியாவை ஏத்தி விட்டாள், அவள் அருகில் வந்த கௌதம் மெதுவாக"ஏண்டி, அவளை இப்பதான் ஒரு அறை கொடுத்து அடக்கி வச்சிருக்கேன், அடுத்து உனக்கு வேணுமா" என்றதும் வாயை மூடிக்கொண்டாள் ஷ்ருதி. கௌதம் சொன்னதை கேட்டு கார்த்திக் சிரிக்க... அவர்கள் என்ன பேசினார்கள் என்று தெரியாத ப்ரியா முழிக்க அவளிடம் வந்த கௌதம் "நீ போய் ஷ்ருதி ரூம்ல, முகம் கழுவி தலை வாரிட்டு வா, அம்மா தூங்கி எழுந்துகிற டைம் ஆகிடுச்சு" என்றான். அவளும் சரி என்று உள்ளே சென்றாள். அவளோடு ஷ்ருதியும் செல்ல, கௌதம் கார்த்திக் அருகில் சென்று அமர்ந்தான்.***

***திடிரென்று கார்த்திக் சிரிக்க, ஏன் என்று கௌதம் பார்க்க"டேய் ப்ரியாவ நீ செல்லமா எப்படி கூப்பிடுவ, குட்டி மஹாலக்ஷ்மின்னு தானே இனிமே குட்டி பத்ரகாளின்னு கூப்பிடு, ஹப்பா.. ஒரு நிமிஷத்துல... எல்லாரையும் என்னமா கதிகலங்க வச்சா... மச்சான் இனிமே நீ டைம் என்னன்னு ஒரு பொண்ண பார்த்து கேட்டா கூட... மகனே உனக்கு மாத்து தான், நியாபகம் வச்சுக்கோ" என்றவன் மறுபடியும் சிரிக்க கௌதமும் சேர்ந்து சிரித்தான்.***

***அப்போது சாருமதி தூங்கி எழுந்து வந்தவர், கௌதமிடம் கோவிலுக்கு போகணும் நீயும், ஷ்ருதியும் கிளம்புங்க என்று உள்ளே சென்று நாலு பேருக்கும்... குடிக்க காபி கொண்டு வந்து வைத்தவர், நானும் போய் ரெடி ஆகிறேன் என்று சென்றுவிட்டார்.கார்த்திக் நானும் வீட்டுக்கு கிளம்பறேன் என்று சொல்லி சென்று விட்டான்.***

***சாருமதி கிளம்பி வந்ததும், ப்ரியா தானும் வீட்டுக்கு கிளம்புவதாக சொல்ல, அவர்" நாங்க உங்க வீட்டு பக்கத்தில இருக்கிற, கோவிலுக்கு தான் வரோம், அதனால உங்க வீட்டுக்கு போயிட்டு, உங்க அம்மாவை கூடிட்டு போகலாம் என்றவர், நீ வண்டியில வரியா" என்றார். அப்போது ஷ்ருதி"அம்மா! அவ காய் நறுக்கும் போது கைய அறுத்துக்கிட்டா, அவளால வண்டி ஓட்ட முடியாது, அதனால நாம சேர்ந்து கார்ல போகலாம்" என்றாள்.***

***ப்ரியா கையை அறுத்துகிட்டா என்று சொன்னவுடன் பதறிய சாருமதி, அவள் கையை பார்த்தவர் "என்ன ப்ரியா...? இவ்வளவு பெரிய காயமா இருக்கு, ஏன்...? என்கிட்டே சொல்லலை" என்றவர், ரொம்ப வறுத்தபட "அதெல்லாம் சின்ன காயம் தான் அத்தை, நீங்க வறுத்தபடாதீங்க... ரெண்டு நாள்ல சரி ஆகிடும்" என்று அவரை சமாதனம் படுத்தினாள் ப்ரியா.***

***அனைவரும் காரில் ப்ரியா வீட்டுக்கு சென்றனர், அங்கே ஜானகி ப்ரியாவை பார்த்ததும்"ஏன் அழுதியா என்ன?..." என்று கேட்க, என்ன சொல்வது என்று தயங்கியவள், சட்டென்று தன் கையை காண்பித்தாள், சாருமதி ஷ்ருதி சொன்ன கதையை உண்மை என்று நினைத்து சொன்னவர், ஜானகியிடம் ரொம்ப வருத்தப்பட, அதற்க்கு ஜானகி வேலை செய்யும் போது, இப்படி எதாவது அடி பட தான் செய்யும், இதையெல்லாம் பெரிசா நினைச்சா... அப்புறம் ஒரு***



Ramya Rajan

வேலையும் பார்க்க முடியாது என்றவர் கோவிலுக்கு செல்ல கிளம்பி வந்தார்.

ப்ரியாவும் உடை மாற்றி வர, அனைவரும் கோவிலுக்கு சென்றனர். காரின் கண்ணாடி வழியாக கௌதம், ப்ரியாவை பார்த்துக்கொண்டு வர, அவள் ஜன்னலில் சாய்ந்து கொண்டு எதோ யோசனையாக வந்தாள்.

அவர்கள் சென்றது முதன் முதலில் கௌதமும் ப்ரியாவும் சந்தித்து கொண்ட கோவிலுக்கு. அங்கே சென்றதும் கௌதமுக்கு ப்ரியாவை

முதல் நாள் சந்தித்தது நியாபகம் வர, அவன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். ப்ரியா ஒவ்வொரு சந்நிதியிலும் நின்று தீவிரமாக பிராத்தனை செய்தாள், அம்மன் சந்நிதியில் பிராத்தனை முடித்து கண்ணை திறந்தவள், கௌதம் தன்னையே பார்ப்பதை பார்த்ததும், அவனை பார்த்து லேசாக புன்னகைத்து சென்றாள். கௌதமுக்கு அவள் சிரித்ததும் மனசு சற்று லேசானது.

சாமி கும்பிட்டு வெளியே வந்தவர்களிடம் ஷ்ருதி, இன்று கௌதம் பர்த்டே, அதனால ஓட்டல்ல போய் சாப்பிடலாம் என்றாள், சரி என்று ஒரு பெரிய ஓட்டலுக்கு சாப்பிட சென்றனர். ஓட்டலில் ப்ரியா சாப்பிடாமல் சாப்பாடை ஸ்பூன்னால் அளந்து கொண்டு இருந்தாள், அதை பார்த்த கௌதமும் சாப்பிடாமல் இருக்க... இவர்கள் இருவரையும் பார்த்த ஷ்ருதி, ப்ரியாவை லேசாக தட்டி... ஜாடையாக கௌதமை காட்ட... அவனும் சாப்பிடாமல் இருப்பதை பார்த்ததும் ப்ரியா, இன்று அவன் பிறந்தனாலும் அதுவுமாக ஏற்க்கனவே அவனை வருத்தப்பட வைத்துவிட்டோம், இதற்க்கு மேலும்

***அவனை வருந்தவிட கூடாது என்று நினைத்தவள், ஒழுங்காக சாப்பிட.. அதை பார்த்த கௌதமும் சாப்பிட்டான்.***

***சாப்பிட்டு முடித்ததும் ஐஸ்கிரீம் வேண்டும் என்று ஷ்ருதி சொல்ல, கௌதம் யாருக்கு எந்த ஐஸ்கிரீம் வேண்டும் என்று கேட்டு ஆர்டர் செய்தான். கடைசியாக ப்ரியாவிடம் உனக்கு எந்த ஐஸ்கிரீம் வேண்டும் என்று கேட்க, அவள் முகம் சிவந்துவிட்டது. அதை பார்த்த கௌதமுக்கு மனதில் உல்லாசம் தோன்ற, அவளிடம் வேண்டும் என்றே மீண்டும் எந்த ஐஸ்கிரீம் வேண்டும் என்று கேட்க, கௌதம் முகத்தை பார்க்காமல்"எனக்கு வேண்டாம்..." என்றாள்,"ஏன்...?" என்று கௌதம் கேட்டான்,"இல்லை... ஜுரம் வரா மாதிரி இருக்கு அதனால தான்" என்றாள் ப்ரியா. சரி என்றவன் மற்றவர்கள் சாப்பிட்டதும் காரில் அழைத்துக்கொண்டு கிளம்பினான்.***

***கௌதம் காரை ஒரு மருத்துவமனை முன்பு நிறுத்தியவன், ப்ரியாவை பார்த்து"இறங்கு... டாக்டர்ட்ட கையை காமிச்சிட்டு வந்துடலாம்" என்றான்."இல்லை... சின்ன காயம் தான்... இதுக்கு எதுக்கு டாக்டர், நாம வீட்டுக்கு போகலாம்" என்றாள் ப்ரியா, அப்போது ஜானகி "டாக்டர பார்க்கிறது நல்லதுதான் ப்ரியா, நீ வேற ஜுரம் வர்ற மாதிரி இருக்குன்னு" சொல்ற என்றார்.***

***"நான் போய் டாக்டர் இருக்காறான்னு பார்த்துட்டு வரேன்" என்று சென்றான் கௌதம்.***

***மருத்துவமனை உள்ளே சென்று வந்தவன் "டாக்டர் இருக்கார்... இன்னும் மூன்னு பேர் வெளியே வெயிட் பண்றாங்க... எப்படியும் அரை மணி நேரம் ஆகும்" என்றான்.***

Ramya Rajan

***ஜானகி"நீயே அவளை டாக்டர்ட்ட கூடிட்டு போ கௌதம், வீடு பக்கத்தில தானே இருக்கு, நாங்க நடந்து போறோம், ஏன்னா ப்ரியா அப்பாவுக்கும், உங்க அப்பாவுக்கும் ராத்திரிக்கு சமைக்கணும்" என்றார். "இல்ல அத்தை... நான் உங்களை கார்ல ட்ரோப் பண்றேன், பத்து நிமிஷம் தான் ஆகும்" என்றவன் சாருமதியையும், ஜானகியையும் வீட்டில் இறக்கி விட்டவன், ஷ்ருதியிடம்"எங்களோட வரியா..." என்று கேட்க, "நான் வரலை எனக்கு தலை வலிக்குது, நீங்க போயிட்டு வாங்க..." என்றாள், சரி என்றவன் ப்ரியாவை அழைத்து கொண்டு மருத்துவமனை சென்றான்.***

***மருத்துவமனை செல்லும் வழியில் கௌதம் "என்ன ப்ரியா... ரொம்ப டல் ஆகிட்ட, என்னால தான உனக்கு காய்ச்சல்... சாரி" என்றதும்***

***"தப்பு என்மேல தான், நான் தான் நீங்க விளையாட்டுக்கு சொல்றீங்கன்னு தெரிஞ்சும், தேவையில்லாம எல்லோரையும் கஷ்ட்ட படுத்தி, உங்க பர்த்டே அதுவுமா... உங்களை ஹாஸ்பிடல் வர வச்சிட்டேன், சாரி கௌதம்" என்றாள் ப்ரியா வருத்தத்துடன்.***

***"உன் மேல ஒரு தப்பும் இல்ல... நான் தான் உன்னை டென்ஷன் பண்ணேன் சாரி" என்று கௌதம் சொன்னதும், சரி என்றவள் ஹாஸ்பிடல் வந்துவிட்டதால்... காரில் இருந்து இறங்கி கௌதமுடன் உள்ளே சென்றாள்.***

***உள்ளே இன்னுமிரண்டு பேர் வெளியே காத்திருக்க, அப்போதே மணி ஒன்பது, இவர்களும் சென்று அவர்களுடன் அமர்ந்தனர்.***

***ப்ரியாவிற்கு கண்கள் தூக்கத்தில் சுழல... கட்டுபடுத்த முடியாமல்... கௌதம் தோளில் சாய்ந்து தூங்க, தன் மீது சாய்ந்தவளை தோளோடு சேர்த்து அணைத்தபடி அமர்ந்திருந்தான் கௌதம்.***

***மருத்துவர் இவர்களை உள்ளே அழைக்க... ப்ரியாவை எழுப்பி உள்ளே கூட்டி சென்றான், மருத்துவர் காயம் ஆழம் தான்... இப்படியே விட்டிருந்தால் கண்டிப்பாக காய்ச்சல் வந்திருக்கும் என்றவர், ஒரு ஊசி போடவேண்டும் என்றார், ஊசி என்றதும் ப்ரியா வேண்டாம் என்று மறுக்க, அவளை சமாளித்து ஊசி போட்டு முடிப்பதற்குள் டாக்டருக்கும்,கௌதமிற்கும் வியர்த்து விட்டது.***

***ப்ரியாவை அழைத்துக்கொண்டு வெளியே வந்த கௌதம், அவளை காரில் உட்காரவைத்துவிட்டு... டாக்டர் கொடுத்த மருந்துக்களை வாங்கி வந்தான். இருவரும் வீடு நோக்கி காரில் சென்றனர், அப்போது ப்ரியா கௌதம் முகத்தையே பார்த்து கொண்டு வந்தாள். அவள் தன்னையே பார்ப்பதை பார்த்து கௌதம் காரை ஓரமாக நிறுத்துவிட்டு அவள் பக்கம் திரும்பி அமர்ந்தவன்***

***"என்னடி, என்னையே பார்க்கிற... என்ன விஷயம்?"***

***"இல்லை... இன்னைக்கு என்னால உங்க பர்த்டே ஸ்பாயில் ஆகிடுச்சு இல்ல கௌதம். "***

***"அதெல்லாம் ஒன்னும் இல்லை, இன்னைக்கு நான் நல்லா தான், என் பர்த்டேவ கொண்டாடினேன்... நீ அப்படி ரொம்ப பீல் பண்ணா...***

***எனக்கு ஒரு ஐஸ்கிரீம் கொடு, எல்லாம் சரி ஆகிடும்" என்று கௌதம் ப்ரியாவை ஆசையாக பார்க்க...***

***"நான் என்ன சொன்னா... நீங்க என்ன கேட்கறீங்க, அதெல்லாம் முடியாது" என்றாள் ப்ரியா.***

***"சரி நீ கொடுக்க வேண்டாம், நான் கொடுக்கட்டும்மா" என்ற கௌதம் ப்ரியா முகத்தை பார்க்க.. அவள் முகத்தில் வெட்கம் தான் தெரிந்தது மறுப்பு இல்லை... அவளை தன் அருகில் இழுத்தவன், அவள் முகத்தை தன் முகத்தின் அருகே கொண்டு வந்து, அவள் இதழ்களில் தன் முதல் முத்தத்தை அழகாக... ஆழமாக... பதித்தான்.***

***தன்னுடைய உயிரானவன் தனக்கு தந்த முத்தத்தில் மயங்கினாலும், பின் சுதாரித்த ப்ரியா அவனை தள்ளி விட்டு... ஜன்னலின் ஓரம் சென்று அமர்ந்தாள். ப்ரியா விலகியவுடன் சிரித்து கொண்டே காரை கிளப்பிய கௌதம்***

**"போதாதே முத்தம் போதாதே**

**ரத்தம் சூடானதே, நாணமே நாணுதே**

**முத்தம் போதாதே, சத்தம் போடதே**

**ரத்தம் சூடானதே, நாணமே நாணுதே**

**இதழ் முத்தம் தரும்**

Ramya Rajan

அதில் பித்தம் வரும்

இதழ் முத்தம் தரும்

அதில் பித்தம் வரும்

என்னையே உன்னிலே தேடினேன் அழகே"

என்று பாட, அவன் பாடிய பாடலை கேட்ட ப்ரியா அவனை அடிக்க... அவன் "ஹப்பாடா... எப்ப உன் கை என்மேல படும் என்று இருந்தேன். இப்பவாவது நடந்துதே..." என்றான் சந்தோஷமாக. "உங்களை திருத்த முடியாது..." என்ற ப்ரியா அவர்கள் வீட்டின் முன் நின்ற காரில் இருந்த இறங்கினாள். அன்றைய நாள் கௌதம் மற்றும் ப்ரியாவிற்கு தங்கள் வாழ்வில் மறக்க முடியாத நாட்களில் ஒன்றானது.

மே மாதத்தில் ப்ரியாவிற்கு ரிசல்ட் வர அவள் நல்ல மதிப்பெண் பெற்று தேர்வானாள். அவள் தன் விருப்பபடி சிவில் இன்ஜினியரிங் படிக்க, கௌதம் படித்த கல்லூரியில் சீட் கிடைக்க காத்திருந்தாள். வீட்டில் அனைவரும் ப்ரியாவிற்கு ஆதரவு தர, ஆதரிப்பான் என்று நினைத்த முரளி எதிர்த்தான்.

11

Ramya Rajan

ஷ்ருதி இப்போது கல்லூரியில் இரண்டாம் ஆண்டில் இருந்தாள். *CA preliminary* தேர்வில் வெற்றி பெற்றதால்... அடுத்த பரிட்ச்சைக்கு தயார் செய்து கொண்ருந்தாள். ஷ்ருதிக்கு இப்போது எல்லாம் நேரமே இல்லை, காலையில் ஆடிட்டிங் கம்பெனியில் இன்டர்ன்ஷிப் சென்று கொண்டிருந்தாள், மாலையில் கல்லூரிக்கும்...விடுமுறை நாட்களில் *CA* கோச்சிங் கிளாஸ்ம் என்று நேரம் சரியாக இருந்தது. முரளியோடு வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே போனில் பேச முடிந்தது, முரளியை பார்த்து கிட்டதட்ட ஒன்பது மாதங்கள் ஆகியிருந்தது.

அன்று கல்லூரி முடிந்து வீட்டுக்கு வந்தவளிடம், சாருமதி”இந்த வாரம் கோச்சிங் கிளாஸ்க்கு லீவ் சொல்லிவிடு ...”என்றார்,”ஏன்?” என்று கேட்டவளிடம்,”நாம நம்மளோட குலதெய்வம் கோவிலுக்கு போறோம்... அதனால தான்” என்றார்.”என்ன திடிர்ன்னு கிளம்பறோம்” என்றதற்கு,”ரொம்ப நாளா போகணும் என்று நினைச்சது தான், ஆனா.. போக முடியல இந்த வர்ஷம் கண்டிப்பா போகணும் என்று இருந்தோம், நல்ல வேலை முரளி நாலு நாள் லீவ்ல வரானாம்...அவன் வரும் போதே போகலாம்ன்னு“ தான் என்றார். அடப்பாவி என்கிட்டே வரபோறதா சொல்லவே இல்ல, வரட்டும் நேர்ல பாத்துகிறேன் என்று நினைத்த ஷ்ருதி சந்தோஷமாக தன் அம்மாவிடம் சரி என்றாள்.

ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் தங்கள் வேலையின் காரணமாக குலதெய்வ கோவிலுக்கு செல்ல முடியாமல் இருந்தனர். இருவரின் குலதெய்வமும் அடுத்த அடுத்த ஊரில் இருப்பதால் சேர்ந்து செல்வோம் என்று நினைத்தனர். தங்கள் தொழிலும் நல்லபடியாக நடக்கிறது, முரளி *M.B.B.S* நல்ல படியாக முடித்து *MS* சேர்ந்துவிட்டான், கௌதமும் நல்ல படியாக இன்ஜினியரிங் முடித்து விட்டான், ஷ்ருதியும், ப்ரியாவும் படித்து கொண்டிருகிறார்கள்,

***இப்போதாவது கோவிலுக்கு சென்று பொங்கல் வைத்துவிட்டு வர வேண்டும் என்று நினைத்தவர்கள் அதற்க்கான ஏற்பாட்டில் கவனம் செலுத்தினர்.***

***ப்ரியாவும்,கௌதமும் இரண்டு நாட்கள் சேர்ந்த இருக்க போகும் மகிழ்ச்சியில் இருந்தனர். வெள்ளி இரவு ரயிலில் கிளம்பினார்கள். வரமாட்டேன் என்று சொன்ன கார்த்திக்கை,வந்துதான் ஆக வேண்டும் என்று கௌதம் இழுத்து வந்திருந்தான். தாம்பரம் ரயில் நிலையத்தில் கிருஷ்ணகுமார் குடும்பத்துடன், ராமமூர்த்தியின் குடும்பமும் சேர்ந்து கொண்டது. முரளியும்,கௌதமும் கட்டி பிடித்து பாசமழை பொழிய அவர்களோடு கார்த்திக்கும் சேர்ந்து கொண்டான்.***

***ஷ்ருதி... முரளியின் பக்கம் திரும்பவே இல்லை, அதை பார்த்த முரளி மேடம் ரொம்ப கோபமா இருக்காங்க போலிருக்கு என்று நினைத்துக்கொண்டான். ப்ரியா, கௌதம் இருவர் முகமும் சந்தோஷத்தில் மலர்ந்து இருந்தது, இருவரும் பிறர் அறியாமல் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டிருந்தனர். ரயில் வந்தவுடன் தனது பெட்டியை தூக்கி கொண்டு ரயிலில் ஏறப்போன ஷ்ருதி, தனது பெட்டியை யாரோ பிடித்து இழுப்பதை போல் இருந்ததும் திரும்பி பார்த்தாள் அங்கே முரளிதான், அவள் பெட்டியை பிடித்து கொண்டிருந்தான். அவனை பார்த்து முறைத்தவள் ''என்ன....'' என்று கேட்க,''நான் தூக்கிட்டு வரேன்...'' என்றான் முரளி.''ஓ... பெட்டி தூக்கதான் டெல்லியில் இருந்து வந்திருக்கீங்களா... அப்ப சரி...'' என்றவள் பெட்டியோடு, தன் கையில் இருந்த ஹன்ட்பாக்கையும் அவனிடம் கொடுத்தவள், அவள் பாட்டுக்கு ரயில் உள்ளே சென்றுவிட்டாள்.***

*முரளி அடிப்பாவி இப்படி மானத்தை வாங்கிட்டாளே என்று நினைத்தவன், யாரவது தன்னை பார்கிறார்களா... என்று சுற்றி பார்க்க... ஏற்க்கனவே எல்லோரும் ரயிலில் ஏறி இருந்தனர், கார்த்திக் மட்டும் தான் நின்று கொண்டிருந்தான், அவன் வேறு எங்கோ பார்த்து கொண்டிருந்தாலும்... அவன் எல்லாவற்றையும் பார்த்திருக்கிறான் என்று அவனின் முகத்தில் இருந்த சிரிப்பே.. சொல்லியது. கார்த்தி தானே பரவாயில்லை என்று நினைத்த முரளி, ஷ்ருதியின் ஹண்ட்பாக்கை தோளில் மாட்டிக்கொண்டு ...அவனுடைய பாக் ஒரு கையிலும்... ஷ்ருதியின் பெட்டி ஒரு கையிலுமாக... ரயிலில் ஏறினான்.*

*கௌதம் எல்லோருடைய பொருட்களையும் சீட்டுக்கு அடியில் அடுக்கி முடித்தவுடன், ஆளுக்கு ஒரு சீட்டில் அமர்ந்தனர்.*

*ப்ரியா, ராமமூர்த்தி, முரளி ஒரு பக்கம் அமர, அவர்களுக்கு எதிரில் ஷ்ருதி, கிருஷ்ணகுமார், கௌதம் மற்றும் கார்த்திக் அமர்ந்தனர், பக்கவாட்டு இருக்கையில் சாருமதியும், ஜானகியும் அமர்ந்திருந்தனர்.*

*ப்ரியா அவளின் அம்மாவை பார்த்து ”அம்மா...”, என்று கூப்பிட்டதும் அவர் ஒரு பையை எடுத்து அவளிடம் கொடுக்க, அதை பிரித்தவள் அதிலிருந்த முறுக்கை எடுத்து... ஷ்ருதிக்கு வேண்டுமா என்று கேட்க, அவள் வேண்டாம் என்றதும் ப்ரியா, அவள் பாட்டுக்கு சாப்பிட்டு கொண்டே மற்றவர்கள் பேசுவதை கேட்டு கொண்டிருந்தாள். முதலில் முரளியின் படிப்பை பற்றி பேசியவர்கள், அடுத்து கௌதம் இனி என்ன செய்ய போகிறான் என்பது பற்றி பேசினார்கள்.*

***இப்போது ப்ரியா பிஸ்கட் சாப்பிட்டு கொண்டிருந்தாள். ப்ரியா சாப்பிடுவதை பார்த்து ஷ்ருதிக்கு சிரிப்பு வந்தது... அதை கவனித்த முரளி "ப்ரியாவுக்கு... ட்ரைன்ல போகும் போது... சாப்பிட பிடிக்கும் அதனால ஊருக்கு போனா... அவளுக்கு ட்ரைன்ல தான் போகணும்" என்றான். அவன் சொன்னதை கேட்டு மற்றவர்கள் சிரிக்க.... கார்த்திக் கௌதமிடம் ரகசியமாக "டேய்... கல்யாணத்துக்கு அப்புறம், நீ இவள கூடிட்டு ட்ரைன்ல போய்டாத... டிக்கெட் செலவ விட ...தீனி வாங்கற செலவு அதிகமா இருக்கும் போல இருக்கு" என்றான். அதை கேட்டு சிரித்து கொண்டே கௌதம்"நானும் அதேதான் நினைச்சேன்..." என்றான்.***

***ப்ரியா இதை எல்லாம் கவனிக்கும் நிலையில் இல்லை, இப்போது வேர்கடலை சாப்பிட்டு கொண்டிருந்தாள்.***

***ராமமூர்த்தி ப்ரியா சிவில் இன்ஜினியரிங் படிக்க இருப்பதாக சொல்ல...அதை கேட்ட முரளி"அதெல்லாம் லேடீஸ்க்கு ஒத்து வராது... வேற எதாவது படிக்கட்டும்" என்றான்.***

***அவன் சொன்னதை கேட்ட ப்ரியா சாப்பிடுவதை நிறுத்தி விட்டு,"ஏன்...?" என்றாள்.***

***"என்ன... ஏன்..? உனக்கு தெரியாதா , அது ஒரு இடத்தில உட்கார்ந்து பார்க்கிற வேலையா... ரொம்ப அலையணும்...அதுவும் இல்லாம கரெக்ட்டா வேலைய முடிக்கணும் என்று டென்ஷன் வேற அதிகமா இருக்கும், அதெல்லாம் உன்னால முடியாது" என்றான் முரளி.***

Ramya Rajan

***என்னால முடியும் என்ற ப்ரியா"ஏன் AC ரூம்ல கம்ப்யூட்டர் முன்னாடி உட்கார்ந்து பார்க்கிற வேலையில டென்ஷன் இல்லையா, அவங்களுக்கும் தான் சொன்ன தேதியில ப்ராஜெக்ட் முடிக்கணும்ன்னு டென்ஷன் இருக்கும். ஷ்ருதி பார்க்க போற ஆடிட்டிங் வேளையிலும், ஏன் நீங்க பார்க்கிற டாக்டர் வேலையிலும் தான் டென்ஷன் இருக்கும், அப்படி பார்த்தா... ஒரு வேலையும் பார்க்க முடியாது" என்று தன் கருத்தை தெளிவாக சொல்ல,***

***ப்ரியாவா இப்படி பேசுவது என்று ஆச்சர்யபட்ட மற்றவர்கள் அவளையே பார்க்க, அவள் முரளியை பார்த்து கொண்டிருந்தாள்.***

***அதையே நினைத்த முரளியும்"நீ சொல்லறது கரெக்ட் ப்ரியா, எங்க வேளையிலும் டென்ஷன் இருக்கு... இல்லைன்னு சொல்லலை, ஆனா நாங்க ஒரு எடத்துல இருந்து வேலை பார்ப்போம். சரி நீ சிவில் இன்ஜினியரிங் படிச்சிட்டு என்ன பண்ண போற...?"***

***"நாம் கம்பெனில தான் வேலை பார்ப்பேன், ஏன் கேட்கறீங்க..."***

***"நம்ம கம்பெனியில... எவ்ளோ வேலை இருக்கும் தெரியும்ல, ஆபீஸ்ல உட்கார்ந்தே பொழுத போக்க முடியுமா... என்ன வேலை நடக்குது...எப்படி வேலை நடக்குது என்று போய் பார்க்காம தெரியுமா.. அதுக்கெல்லாம் அலையணும், உன்னால முடியுமா..." என்று முரளி கேட்க...,***

***"அப்பா, மாமா, கௌதம் எல்லோரும் இருக்காங்க, நான் என்ன தனியாவா எல்லா வேலையும் பார்க்க போறேன், இங்க பாருங்க***



Ramya Rajan

***முரளி அண்ணா... நம்ம ஆபீஸ்ல வேலை பார்த்தா... நான் நினைத்த நேரம் வரலாம், போகலாம் அப்புறம் நான் எதாவது வேலையில தப்பு செஞ்சா கூட யாரும் ஒன்னும் சொல்ல மாட்டாங்க, அதனால நான் நம்ம கம்பெனில வேலை பார்க்கிறது தான் நல்லது" என்றாள் ப்ரியா.***

***"அப்ப நீ உண்மையா வேலை பார்க்க நினைக்கலை, அவங்க எல்லாம் வேலை பார்ப்பாங்க... நீ டைம் பாஸ்சுக்கு வந்துட்டு போவ... அப்படிதானே..."***

***"என்ன அண்ணா நீங்க, நான் ரொம்ப வேலை பார்க்கிறது, உங்களுக்கு பிடிக்கலைன்னு நினைச்சு... இப்படி சொன்னா.... அதுக்கும் நீங்க எதாவது சொல்றீங்க. நான் நல்லாத்தான் வேலை பார்ப்பேன்... ரொம்ப கஷ்டமான வேலைய கௌதம் பார்த்துபாங்க" என்றாள்.***

***அவள் சொன்னதை கேட்ட ஜானகி "கௌதம், இப்ப பார்த்துப்பான்.. அவனுக்கு நாளைக்கு கல்யாணம் ஆனதுக்கு அப்புறம், அவன் பொண்டாட்டி, நீங்க ஏன்...? அவ வேலைய பார்க்கணும் என்று கேட்டா, நீ என்ன பண்ணுவ?" என்று வேடிக்கையாக கேட்க....***

***ப்ரியா முகம் வாடிவிட்டது. அதை பார்த்து கௌதம் தவிக்க... முரளி சிரிக்க... ஷ்ருதி வேகமாக "பேசாம ப்ரியாவ கௌதமுக்கே கல்யாணம் பண்ணி வச்சிடுங்க அத்தை, அப்ப பிரச்சனை இருக்காது இல்ல..." என்றாள்.***

ஷ்ருதி பேசி முடித்ததும் தான் என்ன பேசினோம் என்பதை உணர்ந்தாள், தவிப்பாக மற்றவர்களை பார்க்க... ப்ரியாவும்,கௌதமும் டென்ஷனாக இருக்க... மற்றவர்கள் திகைப்பில் இருந்தனர். இப்போது எதாவது பேசினால் தப்பாகி விடுமோ என்று நினைத்த பெரியவர்கள் அமைதி காக்க... அமைதியாக இருந்தாலும் தப்பாகி விடுமோ என்று நினைத்த ஜானகி, சாருமதியின் முகத்தை பார்க்க, அதில் கோபம் இல்லாமல் ஆர்வமே இருப்பதை உணர்ந்தவர்”நீ சொல்றது போல் நடந்தால் சந்தோசம் தான் ஷ்ருதி, ஆனா... அதுக்கு இன்னும் சில வருஷங்கள் போகணும், அப்ப எல்லோருக்கும் விருப்பம் என்றால்,

நீ சொன்னபடியே செஞ்சுடலாம்” என்றார்.

ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைக்க, கௌதமும், ப்ரியாவும் இழுத்து பிடித்து வைத்திருந்த மூச்சை நிம்மதியாக விட்டனர். முரளி இன்னும் திகைப்பில் இருக்க ஷ்ருதி சந்தோஷத்தில் இருந்தாள்.

கார்த்திக் கௌதமை அழைக்க, இருவரும் எழுந்து... அது *ac* கோச் என்பதால்... கதவை திறந்து கொண்டு... வெளியே சென்று... அங்கிருந்த வெளி கதவின், அருகில் சென்று நின்றனர். கார்த்திக் கௌதமுக்கு கை கொடுத்து வாழ்த்து சொல்ல, கௌதம் இன்னும் நடந்ததை நம்ப முடியாமல் இருந்தான், அப்போது அங்கே முரளி வர வேறு விஷயம் பேச தொடங்கினர். மூவரும் சற்று நேரம் நின்று பேசியவர்கள் உள்ளே வர, அங்கே இரவு உணவை சாப்பிட எடுத்து வைத்து கொண்டிருந்தனர்.

***ப்ரியா அவளின் அப்பாவின் மடியில் தலை வைத்து காலை நீட்டி, தூங்கி கொண்டிருந்தாள். அதை பார்த்த கௌதம் முகத்தில் புன்னகை பூத்தது, முரளி ப்ரியாவின் காலை தூக்கி தன் மடியில் வைத்துகொண்டு அமர, ஷ்ருதியின் அருகில் அமர்ந்த கௌதம் அவளின் கையை மெதுவாக அழுத்தி... தேங்க்ஸ் என்றான், பதிலுக்கு அவனை பார்த்து புன்னகைத்தாள் ஷ்ருதி.***

***ஜானகி எல்லோருக்கும் உணவு பொட்டலத்தை கொடுக்க, அதை பிரித்து அனைவரும் உன்ன தொடங்கினர், அப்போது கார்த்திக்"ப்ரியாவுக்கு... ட்ரைன்ல சாப்பிட பிடிக்கும்ன்னு சொன்னீங்க சாப்பிடாமலேயே தூங்கிட்டா..." என்றான்.***

***"கவலைபடாதீங்க கார்த்திக், எழுந்து சாப்பிட்டு தான் தூங்குவா.... அப்படி எழுப்பாம விட்டுடோம் என்று வச்சுக்கோங்க, அவ்ளோதான் எல்லோரையும் ஒரு வழி பண்ணிடுவா" என்ற முரளி ப்ரியாவை எழுப்ப, அவள் எழுந்திருக்காமல் திரும்பி படுத்தாள்.***

***உடனே முரளி அவளின் காது அருகில் குனிந்து"அம்மா... அவ எந்திரிக்க மாட்றா... பரவாயில்லை விட்ருங்க...,அதுதான் நொறுக்கு தீனி சாப்பிட்டாள போதும்" என்றதும் வேகமாக எழுந்து அமர்ந்த ப்ரியா"அம்மா என்னோட சாப்பாட தாங்க, ரெட் கலர் ரப்பர் பேண்ட் போட்டது..." என்றாள்."அது என்ன உனக்கு மட்டும் ஸ்பெஷல் சாப்பாடு...." என்று ஷ்ருதி கேட்க."எல்லோருக்கும் இட்லியும், மிளகா சட்னியும் தான், ஆனா... என்னோடதுல இட்லி பொடியும் வச்சிருக்கேன்,அதனால்தான் அடையாளம் தெரியறதுக்கு ரெட் கலர் ரப்பர் பேண்ட் என்றாள், அதை கேட்ட கார்த்திக்"உன்கிட்ட நம்ம நாட்டோட உளவுத்துறை பிச்சை வாங்கணும் ப்ரியா..." என்றான்.***

அவன் சொன்னதை கேட்டு அனைவரும் சிரிக்க, அவனை முறைத்த ப்ரியா தாங்கமா என்றாள்.

"என்னத்த தர்றது... எனக்கு என்ன தெரியும்... நீ பண்ண வேலை... நான் எல்லாம் ஒன்னுதான்னு நினைச்சு... எடுத்து கொடுத்திட்டேன், அதனால இத சாப்பிடு" என்று, வேறொரு பொட்டலத்தை அவளிடம் கொடுத்தார் ஜானகி. அவர் சொன்னதை கேட்டு எல்லோரும் அவரவர் பொட்டலத்தை பார்க்க... கௌதம், தன்னுடையதை அப்போது தான் பிரித்திருந்தவன், அதில் இருந்த இட்லி பொடியை பார்த்து"இந்தா ப்ரியா, என்கிட்டே தான் வந்திருக்கு... நான் இன்னும் சாப்பிடல... நீ சாப்பிடு..." என்று கொடுக்க,

"அவ கிடக்கிறா, ஒரு நாள் பொடி இல்லாம சாப்பிட்டா... ஒன்னும் ஆகாது, நீ சாப்பிடுப்பா பரவாயில்லை" என்றார் ஜானகி, ஆனால் ப்ரியா... கௌதம் கொடுத்ததை வாங்கிக்கொள்ள, அவளை பார்த்து ஜானகி முறைத்தார். அவரின் முறைப்பை கண்டுகொள்ளாமல்... அவளிடம் இருந்த மற்றொரு பொட்டலத்தை பிரித்தவள்... அதில் கொஞ்சம் இட்லி பொடியை வைத்து கௌதமிடம் கொடுத்தாள், "நான் இட்லி பொடி மட்டும் வைக்கலை, வெறும் மூன்னு இட்லி தான் வச்சேன்... அது எப்படி அவங்களுக்கு பத்தும்" என்றாள். அவளின் பதிலில் அனைவரும் அமைதியாக உன்ன தொடங்கினர்.

அனைவரும் சாப்பிட்டு முடித்ததும்"சரி... சீக்கிரம் தூங்கலாம் காலையில நாலு மணிக்கு எல்லாம் ஸ்டேஷன் வந்துடும் இப்ப தூங்கினா தான் விடிய காலையில எழுந்துக்க முடியும்" என்றார் ராமமூர்த்தி.

ப்ரியா முரளியை பார்த்து "அண்ணா..." என்றவுடன் புரிந்து கொண்டு அவளோடு சென்ற முரளி, அவள் ரெஸ்ட்ரூம் சென்றுவிட்டு வந்தவுடன், அவள் மேல் பர்த்தில் ஏறி படுக்க உதவி செய்தான். ஜானகியும், சாருமதியும் கீழ் பர்த்தில் படுக்க, ராமமூர்த்தியும்,

கிருஷ்ணகுமாரும் நடு பர்த்தில் படுத்தனர். மீதம் இருந்த மூன்று சீட்டும் சைடு பர்த்து தான். கௌதம் உயரத்திற்கு சைடு பர்த்தில் படுப்பது கஷ்டமாக இருக்கும் என்று நினைத்த ஷ்ருதி"அண்ணா நான் இங்க சைடு பர்த்துல படுத்துகிறேன், நீ மேல் பர்த்துல படு" என்றாள் ஆனால் முரளி"நீ... போய் மேல படு ஷ்ருதி, இங்க ஆளுங்க போயிட்டு வந்துட்டு இருப்பாங்க, ஒரு நாள் தானே நாங்க அட்ஜஸ்ட் பண்ணிக்கிறோம், அதோடு நீ... நைட் எந்திரிச்சா தனியா எங்கேயும் போகாதே கௌதமை எழுப்பு" என்றான். சரி என்றவள் மேலே ஏறி படுத்தாள்.

முரளி படுத்ததும், மீதி இருந்த இரண்டு சீட்டில்.. கௌதம் ஒன்றிலும்... கார்த்திக் ஒன்றிலும்... படுத்தனர். விடிய காலையில் முழித்த ப்ரியா, முரளி என்று நினைத்து கார்த்திக்கை எழுப்ப, அவன் எழுந்ததும் தான் அவளுக்கு தெரிந்தது மாற்றி எழுப்பி விட்டோம் என்று ஆனால்... அவள் ஏன் எழுப்பினாள் என்று புரிந்து கொண்ட கார்த்திக்"பரவாயில்லை ப்ரியா... நான் துணைக்கு வரேன்" என்றவன் எழுந்து அவளுடன் வெளியே வர... அங்கே வெளிக்கதவை திறந்து வைத்துகொண்டு கௌதம் நின்றியிருந்தான். கௌதமை பார்த்ததும் கார்த்திக் திரும்பி சென்றுவிட ப்ரியா ரெஸ்ட்ரூம் சென்றுவிட்டு வந்தவள், கௌதமை பார்த்து"நீங்க தூங்கல..." என்றாள். கதவை சாற்றி விட்டு அவள் அருகில் வந்த கௌதம்

*"நான் இன்னைக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா, நம்ம வீட்ல... நம்ம கல்யாணத்துக்கு... எதிர்ப்பு இல்லை என்று தெரிந்ததும் எனக்கு ரொம்ப சந்தோஷம், அதுல எனக்கு தூக்கம் கூட வரலை, ஆனா... நீ அப்பவே தூங்கிட்ட" என்றான் குறையுடன்.*

*"நான் எங்க தூங்கினேன்... நீங்க பாட்டுக்கு கார்த்திக் அண்ணாவோட வெளிய போய்டீங்க, அங்க இருக்கிறவங்க எல்லாம் ஏன் முகத்தையே பார்க்கிறாங்க சந்தோஷத்த வெளிய காமிக்கவும் முடியல, முகத்தை டல்லா வச்சிருந்தா இஷ்டமில்லைன்னு நினைப்பாங்கன்னு நினைச்சு, கண்ண மூடி படுத்திருந்தேன்" என்றாள் ப்ரியா.*

*அவள் அபிநயத்துடன் சொன்ன பதிலில் மயங்கிய கௌதம், அவள் இதழ்களில் சட்டென்று முத்தமிட... திரும்பி யாரவது வருகிறார்களா என்று பார்த்த.. ப்ரியா யாரும் வரவில்லை என்றதும் நிம்மதியானவள், கௌதமை பார்த்து முறைத்துவிட்டு... கதவை... திறந்துகொண்டு... உள்ளே சென்றுவிட்டாள்.*

*அவள் பின்னே உள்ளே வந்த கௌதமிடம் கார்த்திக் மெதுவாக"டேய்... எவ்ளோ நேரம்டா பேசுவ... இங்க யாரவது எந்திரிச்சிட்டா, என்ன பண்றதுன்னு நானே பயந்துட்டு இருந்தேன்" என்றவன் மறுபடியும் படுத்து தூங்க ஆரம்பித்தான். ப்ரியா தண்ணீர் குடித்துவிட்டு மணி பார்த்தவள்... இன்னும் அரை மணி நேரம் தான் இருக்கிறது ஸ்டேஷன் வர... எதுக்கு மறுபடியும் மேல ஏறி படுக்கணும் என்று நினைத்தவள், தூங்காமல் கௌதம் படுத்திருந்த சீட்டில் சென்று அமர்ந்து தலை வார ஆரம்பித்தாள்.*

Ramya Rajan

***அவளின் எதிரில் வந்து அமர்ந்த கௌதம் அவளையே பார்த்து கொண்டிருக்க"என்ன...?" என்றாள் ப்ரியா,"கோபமா..." என்று கௌதம் கேட்க, ப்ரியா ஆமாம் என்று தலை ஆட்டினாள்,"சாரி... இனிமே அப்படி பண்ணலை... ரெஸ்ட்ரூம் கூட தனியா போகமாட்டியா..." என்று சிரித்து கொண்டே கேட்க, ப்ரியாவின் முகம் மாறி விட்டது.***

***"உங்க அண்ணனுக்கு, உன் மேல ரொம்ப பாசம் தான். ஒத்துக்கிறேன், அதுக்காக ரெஸ்ட் ரூம் போகும் போது... கூட துணைக்கு வரணுமா" என்றான் கௌதம் கிண்டலாக,***

***"நீங்க சொன்னாலும், சொல்லாட்டியும், முரளி அண்ணாவுக்கு, என் மேல் பாசம் அதிகம் தான். அவங்களவிட நான் ஆறு வயசு சின்னவ, அதனால சின்ன வயசுலேயே... அவங்க என்னை நல்லா பார்த்துப்பாங்க. நான் எங்க அண்ணன் கோயம்புத்தூர் போகும் போது எப்படி அழுதேன் தெரியுமா"***

***"இருந்தாலும் ரெஸ்ட்ரூம்க்கு, துனைக்கு வர்றது... கொஞ்சம் அதிகம் தான்" என்றான் கௌதம் விடாமல், அவனுக்கு இதில் வேறு எதோ இருப்பதாகவே பட்டது, ப்ரியாவின் முகமே சரியில்லை என்று தான் மீண்டும் அதையே கேட்டான்.***

***அவன் மீண்டும் கேட்டதும் ப்ரியாவிற்கு கோபம் வந்துவிட்டது, உடனே அவள்"நான் செவன்த் படிக்கும் போது... இதே மாதிரி ட்ரைன்ல ஊருக்கு போகும் போது... நைட்... நான் தனியா ரெஸ்ட்ரூம் போனேன்னா... அப்ப ஒருத்தன், என் பின்னாடியே வந்தான்... எனக்கு ரொம்ப பயமா இருந்தது, நான் திரும்பி வரலாம்ன்னு நினைச்சா... அவன் நான் திரும்பி வர வழியும் விடலை, எனக்கு***

***என்ன பண்றதுன்னே தெரியலை, நான் போய் ரெஸ்ட்ரூம் கதவ சாத்திகிட்டேன், கதவை திறக்க பயந்து... நான் உள்ளேயே இருந்தேனா... நல்ல வேலை முரளி அண்ணா, நான் எந்திரிச்சு போறத... பார்த்திட்டு தான் இருந்திருக்காங்க. அவங்க நான் ஏன் இன்னும் வரலைன்னு நினைச்சு... வந்தவுங்க... ஒரு ஆள் வெளிய நிக்கிறத பார்த்ததும் சந்தேகப்பட்டு கிட்ட வர, அண்ணனை பார்த்ததும் அவன் ஓடிட்டான், அப்புறம் முரளி அண்ணா குரல் கொடுத்து கதவை தட்டினதும் தான், நான் கதவை திறந்தேன். எனக்கு அப்போயிருந்து தனியா போக பயம், முரளி அண்ணாவும் என்னை தனியா விட மாட்டாங்க, அதனால தான் துணைக்கு வராங்க போதுமா" என்றவள் அழ தொடங்க, கேட்டு கொண்டிருந்த கௌதமிற்கு ரத்தம் கொதித்தது.***

***ப்ரியா பேச ஆரம்பித்த போது, மெதுவாக ஆரம்பித்தாலும்... போக... போக... அவள் குரல் உயர்ந்ததால்... அவள் பேசியதை தூங்கி கொண்டிருந்த ராமமூர்த்தி, கிருஷ்ணகுமார் மற்றும் ஜானகியை தவிர மற்ற அனைவருக்கும் கேட்க, அவள் அழுவதை தாங்க முடியாத சாருமதி எழுந்து ப்ரியாவை அனைத்து ஆறுதல் படுத்தினர்.***

***"அதை எல்லாம் கெட்ட கனவா நினைச்சு மறந்திடணும் ப்ரியா, நீ அந்த வயசுலேயே எவ்வளவு சுதாரிப்பா இருந்திருக்க... இப்ப என்ன, தைரியமா இரு" என்றார்.***

***இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஷ்ருதிக்கு, கண் கலங்கினாலும், சமாளித்து கொண்ட ஷ்ருதி, அப்போது தான் எழுந்ததை போல... கீழே இறங்கி வந்தவள்..."என்ன மாமியாரும், மருமகளும்... விடிய காலையிலேயே... ஒரே கொஞ்சல்ஸ்" என்றாள், அவளுக்கு துணை போவது போல் கார்த்திக்"ஏன்மா அவங்க மேல***

Ramya Rajan

***உனக்கு பொறாமை, நீயும் உன் மாமியார போய் கட்டிபிடி" என்றான். "நான் எங்க போவேன் கார்த்தி அண்ணா மாமியாருக்கு" என்றாள் ஷ்ருதி, "நல்லா தேடி பாரு... இங்க தான் எங்கயாவது படுத்து தூங்கிட்டு இருப்பாங்க" என்றான் கார்த்திக். அவர்கள் இருவரும் பேசுவதை கேட்டு.. ப்ரியா இயல்புக்கு திரும்ப, சாருமதி "இப்ப நீங்க ரெண்டு பேரும் என்கிட்ட ஒத வாங்க போறீங்க" என்றவர், ப்ரியாவின் கண்களை துடைத்து விட்டு, அவள் கையில் இருந்த சீப்பை வாங்கி அவளுக்கு தலை வார ஆரம்பித்தார்.***

***கௌதமின் முகத்தை பார்த்த கார்த்திக் "இந்த மாதிரி பொறுக்கீங்க தெருவுக்கு ஒன்னு இருக்கு... நாம தான் எச்சரிக்கையா இருக்கணும் அத விட்டு தேடி கண்டுபிடிச்சு... அடிக்க எல்லாம் முடியாது. நீ அந்த மாதிரி ஐடியால இருந்தா... விட்டுட்டு, ஆகவேண்டிய வேலைய பாரு, பாவம் ப்ரியா, மூட் அவுட்டா இருக்கா அவகிட்ட பேசிட்டு இரு" என்றான்.***

***முரளி படுத்திறிந்த இடம் காலியாக இருக்க, ஷ்ருதி அவனை தேடிக்கொண்டு வெளியே வந்தவள், அங்கும் அவனை காணாமல் உள்ளே வர, கார்த்திக் அவளிடம் மறு பக்கத்தில் இருந்த கதவை காண்பித்தான். ஷ்ருதி மறுபக்கத்தில் இருந்த கதவை திறந்து கொண்டு வெளியே சென்று பார்த்தாள், அங்கே திறந்திருந்த வெளிக்கதவின் அருகில் முரளி நின்றிருந்தான்.***

***அவனருகில் சென்று அவன் தோளை ஷ்ருதி தொட்டவுடன், திரும்பி பார்த்தவன் கண்கள், கலங்கி இருந்தது. அவனின் நிலையை அறிந்த ஷ்ருதி "ஏன் முரளி, எப்பவோ நடந்தத...இப்ப நினைச்சி.. கஷ்டபடலாமா" என்று கேட்க,***

*"உனக்கு தெரியாது ஷ்ருதி, அன்னைக்கு நீ ப்ரியா முகத்தை பார்க்கலை, அவள் முகம் பயத்துல் எப்படி இருந்துச்சு தெரியுமா, அதுக்கப்புறம் வெளி ஆம்பிளைங்க, யாரையாவது பார்த்தாலே... அவ உடம்பு நடுங்கும், காம வெறி பிடிச்ச மிருகங்ககிட்ட மாட்டி, ஒரு நாளைக்கு எத்தனை சின்ன பொண்ணுங்க... ஹாஸ்பிடலுக்கு வருதுங்க தெரியுமா.. அவங்களுக்கு என்ன நடந்துச்சு என்று சொல்ல கூட தெரியாது, எனக்கு அவங்களை பார்க்கும் போது, ப்ரியா நியாபகம் தான் வரும். அப்புறம் நான் எப்படி மறக்க முடியும் சொல்லு" என்றவன் தொடர்ந்து,*

*"நல்ல வேளை, அன்னைக்கு அவளுக்கு எதுவும் ஆகலை, சின்ன வயசுல ப்ரியா, எல்லோர்ட்டையும் நல்லா பேசுவா... இந்த சம்பவத்துக்கு, அப்புறம் தான் அமைதி ஆகிட்டா... இப்ப தான் பழையபடி பேச ஆரம்பிக்கிறா... எனக்கு தெரிஞ்சு... அவ கௌதம்கிட்டயும், கார்த்திக்கிட்டயும் தான் நல்லா பேசுறா, கௌதம்ட்ட அவ பயம் இல்லாம... பேசுறத பார்த்து தான், நான் நாம வெளிய போகும் போது, அவளை கௌதம் கூட இருக்கவிடுவேன்" என்றான் (கடவுளே என் அப்பாவி முரளிய காப்பாத்து என்று மனதில் நினைத்த ஷ்ருதி)*

*"சரி போதும் முரளி, இனிமே நோ பீலிங்க்ஸ்... இப்ப உங்க தங்கச்சிக்கு ஒரு பாடிகார்ட் வந்தாச்சு... அதனால நம்ம கதைக்கு வரலாமா...நீங்க ஏன் சென்னைக்கு வர்றதா.. என்கிட்ட சொல்லலை..."*

Ramya Rajan

***"சர்ப்ரைஸ்ஸா இருக்கட்டும் என்று நினைச்சேன், எனக்கே நாம சேர்ந்து ஊருக்கு போறது... இங்க வந்த பிறகுதான் தெரியும்."***

***இவர்கள் இருவரும் பேசிகொண்டிருக்கும் போது அங்கு வந்த கார்த்திக், "ஷ்ருதி போதும் நீ ட்ரைன் விட்டது, உங்க அம்மா உன்னை தேடிட்டு இருக்காங்க, வா ஸ்டேஷன் வர போகுது" என்றான்.***

***முரளி உள்ளே சென்றுவிட, "என்னை மட்டும் கொஞ்சம் கூட ரொமான்ஸ் பண்ண விடாதிங்க" என்றாள் ஷ்ருதி சலிப்பாக,***

***"ஆமா.. இது உனக்கு ரொமான்ஸ் பண்ணற டைம், நான் தான் அன்னைக்கே சொன்னேனே... உனக்கு உங்க அண்ணன் போல சாமர்த்தியம் பத்தாது" என்று சொல்லி கார்த்திக் ஷ்ருதியை வம்பு இழுக்க,***

***"நான் தான் அவன் கல்யாணத்துக்கே, எல்லோர்கிட்டயும் சம்மதம் வாங்கியிருக்கேன், தெரிஞ்சிக்கோங்க" என்றாள் ஷ்ருதி கெத்தாக,***

***"கிழிச்ச... கௌதம், இன்னும் கொஞ்ச நாள்ல.. அவங்க வாய்யில் இருந்தே, நீ தான் எங்க வீட்டு மாப்பிள்ளைன்னு வர வச்சிருப்பான், நீ தான் தேவை இல்லாம.. வாயவிட்ட இன்னும் எதாவது உளறின கொன்னுடுவேன், பேசாம வா" என்று கார்த்திக் உள்ளே செல்ல, ஷ்ருதி முகத்தை தொங்க போட்டு கொண்டு அவனோடு உள்ளே சென்றாள்.***

ஷ்ருதியை பார்த்த சாருமதி"எங்கடி போன... ஸ்டேஷன் வர போகுது, உன் பெட்டிய தூக்கு" என்றார். அதற்கு கார்த்திக்"வரும் போது இவளா பெட்டிய தூக்கிட்டு வந்தா.." என்றதும் ஷ்ருதி கோபமாக, தன் பெட்டியை தூக்க, முரளி அவள் கையில் இருந்த பெட்டியை வாங்கி கொண்டான். அனைவரும் ரயிலில் இருந்து இறங்கி, அவர்களுக்காக காத்திருந்த டாட்டா சுமோவில் சென்று ஏறினர்.

லக்கேஜ்ஜை வண்டியின் மேல் ஏற்றிவிட்டு, டிரைவரின் அருகே கிருஷ்ணகுமாரும், கார்த்திக்கும் அமர, நடுவில் இருந்த இருக்கையில் ராமமூர்த்தி, ஜானகி மற்றும் சாருமதி அமர்ந்தனர். பின் சீட்டில் முரளி அருகே கௌதம் அமர எதிர்புறம் ஷ்ருதியும், ப்ரியாவும் அமர்ந்தனர். அங்கும் சில பெட்டிகள் இருந்ததால், அவர்களுக்கு அமர சிரமமாக இருந்தது.

ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் தங்களின் சொந்த ஊரில் ஒரு நாள் தங்கிவிட்டு, அடுத்த நாள் கோவில்களுக்கு, சென்று பொங்கல் வைப்பது என்று எண்ணியிருந்தனர். அதன்படி இப்போது மதுரையில் இருந்து தங்கள் ஊருக்கு சென்றுகொண்டிருந்தனர்.

முரளியும், கௌதமும் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து, உறங்கி கொண்டு வர, ஷ்ருதிக்கு விவரம் தெரிந்து... அவள் சொந்த ஊருக்கு இப்போது தான் வருகிறாள், அதனால் அவள் ஆர்வத்தோடு வேடிக்கை பார்த்து கொண்டு வர, ப்ரியாவும் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தாள்.

***எதிரில் இருந்த ஜன்னலின் வழியாக, மயிலை பார்த்த ப்ரியா, அதை ஷ்ருதிக்கு காட்ட... சரியாக தெரியாததால்... எழுந்து நின்று இருவரும் பார்க்க...ஏற்கனவே குண்டும்... குழியுமாக... இருந்த ரோட்டில், பெரிய பள்ளம் வேறு இருந்தது. அதை கவனிக்காமல் டிரைவர் வண்டியை அந்த குழியில் இறக்க, தூங்கி கொண்டிருந்த முரளி மீது ஷ்ருதியும், கௌதம் மீது ப்ரியாவும் பொத்.. என்று விழுந்தனர்.***

***அம்மா........என்று முரளியும், கௌதமும் போட்ட அலறலில்.. டிரைவர் வண்டியை நிறுத்தியே விட்டார். எல்லோரும் என்ன? என்று பின்னாடி பார்க்க... அவர்கள் இருவரும் போட்ட அலறலில்... அரண்டு... அவர்கள் மேல் அப்படியே கிடந்த ஷ்ருதியும், ப்ரியாவும் முழிக்க, அப்போது தான் தங்களின் கண்களை திறந்து நன்றாக பார்த்த, முரளியும், கௌதமும்... அய்யய்யோ! சொதப்பிட்டோமே என்று நினைத்தனர். அவர்களிடம் இருந்து விலகிய ஷ்ருதியும், ப்ரியாவும் இப்படி மானத்தை வாங்கிடாங்களே என்று முறைக்க, கார்த்திக் சிரிப்பை அடக்கி கொண்டு அமர்ந்திருந்தான். வண்டியை டிரைவர் மறுபடியும் கிளப்பினார்.***

***முதலில் ராமமூர்த்தியின் வீட்டுக்கு வந்தவர்களை, அவரின் அம்மா இப்போது ஊரில் தான் இருக்கிறார், அவர் வரவேற்றார். அங்கே சிறிது நேரம் இருந்து, காபி குடித்துவிட்டு... கிருஷ்ணகுமாரின் குடும்பம் மட்டும், தங்களின் வீட்டுக்கு கிளம்பினர், அவர்கள் வீடு இரண்டு தெரு தள்ளி இருக்கிறது. கிருஷ்ணகுமாரின் பெற்றோர்கள் இப்போது இல்லை, ஆனால் அவர்கள் பூர்வீக வீடு இருக்கிறது, அதில் ஒரு பகுதியில் கிருஷ்ணகுமாரின் சித்தப்பா குடும்பம் இருக்கிறது.***

Ramya Rajan

***கிருஷ்ணகுமாரை அவரது குடும்பத்தினர் சிறப்பாக வரவேற்றனர். கிருஷ்ணகுமாரின் சித்தப்பா, அவரது இரண்டு மகன்களுடன் கூட்டு குடும்பமாக வசித்து வந்தார். அவர்கள் எல்லோரும் இவர்களை அன்பாக கவனித்தனர். இவர்களுக்கு மாடியில் இருக்கும் அறைகளை கொடுத்தனர். கௌதமும், ஷ்ருதியும் டெல்லியில் பிறந்து வளர்ந்ததால், இந்த கிராமத்து சுழல் அவர்களுக்கு மிகவும் பிடித்தது.***

***குளித்து முடித்து.. நன்றாக மூக்கு பிடிக்க சாப்பிட்டுவிட்டு பெரியவர்கள் பேச தொடங்க, ஷ்ருதி மாடிக்கும், கௌதம் கார்த்திக்குடன் ஊரை சுற்றிவிட்டு வருவதாக சொல்லி வெளியே சென்றான்.***

***மாலை 7 மணிக்கு... கிருஷ்ணகுமார் தனது குடும்பத்தினரை.. அழைத்து கொண்டு... தங்கள் ஊரில் இருக்கும், அம்மன் கோவிலுக்கு வர, அப்போது அங்கே ராமமூர்த்தியின் குடும்பமும் வந்தது. அழகான பாவாடை தாவணியில்... தலை நிறைய பூ வைத்து... தேவையான நகைகள் அணிந்து... மிதமான ஒப்பனையில் வந்த ப்ரியாவை, பார்த்ததும் கௌதம் சிலையாக நின்றான்.***

***இரு குடும்பமும் கோவிலில் அர்ச்சனை செய்தனர். சாமி கும்பிட்டுவிட்டு கோவிலை சுற்றி வரும் போது... பெரியவர்கள் முன்னே செல்ல... இளையவர்கள் சேர்ந்து சுற்றினார்கள். அப்போது முரளி”ஷ்ருதியிடம் நீயும் தாவணி போட்டிருக்கலாம்” என்றான். கௌதம் ப்ரியாவையே பார்த்து கொண்டு வர... அவன் பார்வையில் முகம் சிவந்தவள் என்ன வென்று கேட்க,”இன்னும் நாலு வருஷம் எல்லாம் வெயிட் பண்ண முடியாது... சீக்கிரம் கல்யாணம்***

பண்ணிக்கலாமா ப்ரியா" என்றான், அவன் சொன்னதை கேட்ட ப்ரியா வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

கோவிலை சுற்றி முடித்து பிரகாரத்தில் வந்து அனைவரும் அமர்ந்தனர். சிறிது நேரம் அடுத்த நாள் குல தெய்வ கோவிலுக்கு செல்வது பற்றி பேசிவிட்டு கிளம்பினார்கள். இவர்கள் வெளியே வரும் போது எதிரில் அந்த ஊரிலேயே மிகவும் செல்வாக்கான குடும்பத்தை சேர்ந்த ராகவன், தனது மனைவி, மகன் மற்றும் மகளுடன் கோவிலுக்கு வந்திருந்தார்,

அவர் ராமமூர்த்தியையும், கிருஷ்ணகுமாரையும் நலம் விசாரித்தவர், அவர்கள் குடும்பத்தை பற்றியும் கேட்டு தெரிந்து கொண்டார், அவரின் மகனை எல்லோருக்கும் அறிமுகம் செய்தார். அவரின் மகன் ரவி மாநிறத்தில் பார்க்க ஆள்... நன்றாகவே இருந்தான். அவன் வெளிநாட்டில் வேலையில் இருப்பதாக சொன்னவர். அடுத்து அவரின் மகளை அறிமுகம் செய்தார், பேர் மிருதுள்ளா என்றும்... சென்னையில் ஹாஸ்டலில் தங்கி... be படிப்பதாக சொன்னார். மிருதுள்ளாவின் கண்கள் எல்லோரையும் ஒரு முறை சுற்றி வந்து... சற்று தள்ளி நின்றிருந்த கார்த்திக்கை, பார்த்ததும் ஆச்சிரியத்தில் விரிந்தது. சிறிது நேரம் பேசிவிட்டு அவர்கள் விடைபெற்று செல்ல... இவர்களும் வீட்டை நோக்கி நடந்தனர்.

மறுநாள் விடிய காலையில் ராமமூர்த்தி, கிருஷ்ணகுமார்.. இருவர் குடும்பமும், கோவிலுக்கு கிளம்பியது. ப்ரியா, ஷ்ருதி இருவருமே இன்று பாவாடை தாவணியில்... பார்க்க.... தேவதைகள் போல் இருந்தனர். கௌதமும், முரளியும் தங்கள் காதலியை நன்றாக சைட் அடித்து கொண்டிருந்தனர். முதலில் கிருஷ்ணகுமாரின் குல தெய்வ கோயில் இருந்ததால்... அங்கே சென்றனர். ப்ரியா லீவில் அடிக்கடி

தனது அப்பத்தாவுடன், ஊருக்கு வருவதால்... அவளுக்கு இங்கிருக்கும் பழக்க வழக்கங்கள் அத்துப்படி, அதனால்.. அவள் சாருமதி மற்றும் ஜானகியுடன், அவள் அப்பத்தா சொல்வதை கேட்டு வேலை செய்தாள். சாருமதியும், ஜானகியும் பொங்கல் வைக்க, ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் சாமி கும்பிடுவதற்கு தேவையான வேலைகள் செய்து கொண்டிருந்தனர்.

ப்ரியா இருபக்கமும் உதவி கொண்டிருந்தாள். ஷ்ருதி வேலை செய்யாமல் எல்லாவற்றையும் சுற்றி பார்த்து கொண்டிருந்தாள். அப்போது... அவள் அருகே வந்த முரளி "நீயும் போய் வேலை செய், அப்பத்தான் எங்க பாட்டிக்கு உன்னை பிடிக்கும்" என்றான். அவன் சொன்னதை கேட்டு தலை ஆட்டிய ஷ்ருதி, ப்ரியாவின் அருகே சென்று நின்று... எனக்கும் எதாவது வேலை கொடு ப்ரியா என்றாள், ப்ரியா அவளுக்கும் சில வேலைகள் கொடுக்க, ஷ்ருதியும் அக்கறையாக செய்தாள்.

கௌதம், முரளி மற்றும் கார்த்திக் சுள்ளி கொண்டு தருவது... தண்ணீர் படித்து வருவது... கடைகளுக்கு சென்று வருவது... போன்ற வேலைகளை செய்தனர். சாமிக்கு அலங்காரம் முடிந்து, பொங்கலையும் வைத்து படைத்து சாமி கும்பிட்டனர்.

சாமி கும்பிட்டு முடித்து, எல்லோரும் சாப்பிட அமர்ந்தனர், காலைக்கு இட்லி கட்டி கொண்டு வந்திருந்தனர்... அதோடு இவர்கள் வைத்த பொங்கலையும் சேர்த்து சாப்பிட்டனர். இளையவர்கள் பரிமாற பெரியவர்கள் அமர்ந்து சாப்பிட்டனர்... ஷ்ருதியும், பரிமாறி கொண்டிருந்தாள், அப்போது அவளை கண் ஜாடையில் அழைத்த முரளி, அவளை அழைத்து கொண்டு கோவிலின் பின்னே வந்தவன்,

***"ஏய்... நீ ஒழுங்கா தாவணி போட மாட்டியா..."***

***"ஏன்...? ஒழுங்கா தானே போட்டிருக்கேன்"***

***"எங்க ஒழுங்கா போட்டிருக்க... இங்க பாரு... எப்படி தெரியுது" என்று முரளி அவள் இடுப்பை காட்ட...நிஜமாகவே தாவணி இறங்கி, அவள் இடை தெரிந்து கொண்டு தான் இருந்தது.***

***"நான் என்ன செய்யறது முரளி, எனக்கு நிக்கவே மாட்டேங்குது" என்றாள் ஷ்ருதி பாவமாக.***

***"நான் தான் உன்னை ஆசை பட்டு தாவணி போட சொன்னேன், ஆனா... எப்ப அவிழ்ந்திடுமோன்னு, இப்ப எனக்கு பயமா இருக்கு, ப்ரியாவும் தாவணி தானே போட்டிருக்கா... அவ ஒழுங்கா தானே போட்டிருக்கா, ஏன்...? உனக்கு மட்டும் இறங்குது, சரி நான் போய் ப்ரியாவையே வர சொல்றேன், நீ இங்கேயே இரு" என்று சிறிது தூரம் சென்று விட்டு திரும்பி வந்த முரளியை பார்த்து ஷ்ருதி "என்ன*** *வந்துடீங்க?"* ***என்று கேட்க...***

***"இல்லை... ஒன்னு மறந்துட்டேன்" என்றவன், அவள் இடையை அழுந்த கிள்ளிவிட்டு செல்ல... அதை சற்றும் எதிர் பார்க்காத ஷ்ருதி துள்ள, முரளி அங்கிருந்து வேகமாக சென்றுவிட்டான்.***

ஷ்ருதிக்கு நடந்தது கனவா... நிஜமா.. என்றே புரியவில்லை, உணவு பரிமாறி கொண்டிருந்த ப்ரியாவிடம் வந்த முரளி"ப்ரியா, உன்னை ஷ்ருதி கூப்பிடுறா, கோவிலுக்கு பின்னாடி இருக்கா... நீ போய் பாரு" என்றான். சரி என்ற ப்ரியா, ஷ்ருதியை தேடி சென்று... என்ன வென்று கேட்க, அதற்கு அவள் தாவணிய ஒழுங்கா கட்டிவிடு என்றாள், இது அவளின் அண்ணனின் வேலை என்று நன்றாக அறிந்த ப்ரியா, எதுவும் சொல்லாமல்... ஷ்ருதிக்கு தாவணியை கட்டிவிட்டு, அதில் இன்னும் இரண்டு ஊக்கையும் மாட்டிவிட்டாள்.

அனைவரும் உண்டு முடித்ததும், அங்கிருந்து கிளம்பி ராமமூர்த்தியின் குலதெய்வ கோவிலுக்கு வந்தனர். அங்கே ஏற்கனவே இவர்கள் வருவது தெரிந்து... எல்லா வேலையையும் பார்த்து வைத்திருந்தனர், அதனால் இவர்களுக்கு பொங்கல் வைக்கும் வேலை மட்டும் தான் இருந்தது. ஜானகியும், சாருமதியும் பொங்கல் வைக்க. பொங்கல் வைத்ததும், சாமி கும்பிட்டனர்.

மத்திய உணவு சாப்பிட்டு விட்டு கிளம்புவதால், சற்று நேரம் ஓய்வெடுக்க பெரியவர்கள் நினைத்தனர். மத்திய உணவு கோவிலிலேயே தயார் செய்வதால், இவர்களுக்கு எந்த வேலையும் இல்லை, கிருஷ்ணகுமார், ராமமூர்த்தி, ராமமூர்த்தியின் அம்மா இன்னும் மற்ற உறவினர்கள் சேர்ந்து, கோவில் உள்ளே இருக்கும் மண்டபத்தில் அமர்ந்து பேசி கொண்டிருந்தனர். ஜானகியும், சாருமதியும் ஒரு மூலையில் பாயை விரித்து படுத்துவிட்டனர்.

இளையவர்கள் ஐவரும் சும்மா வேடிக்கை பார்த்து கொண்டிருந்த போது, ப்ரியா... முரளி திரும்பி டெல்லிக்கு சென்றாள், அடுத்து எப்ப

***வருவனோ, ஷ்ருதி கூட கொஞ்ச நேரமாவது தனியாக பேசட்டும் என்று நினைத்தவள், முரளியிடம்"நீங்க இவங்களுக்கு வெளிய தோப்பை சுத்தி காமிங்க அண்ணா..." என்றாள். சரி என்று எல்லோரும் கிளம்ப ப்ரியா மட்டும்"நான் இங்கேயே இருக்கேன், வரவில்லை" என்றாள். கௌதம் ப்ரியாவை முறைத்துவிட்டு கார்த்திக்குடன் சென்றான்.***

***"ஏன்டா கோபமா இருக்க" என்று கார்த்திக் கேட்க"பாருடா நேத்து நான் போன் பண்ண சொல்லியும் பண்ணலை, இப்பவும் நம்ம கூட வரலை... இவ ஏன் இப்படி பண்றான்னு ஒண்ணுமே புரியலை" என்றான் கௌதம். உடனே கார்த்திக்"இரு.. நான் வரேன்" என்று ப்ரியாவிடம் வந்தவன்"நீயும் எங்களோட வா ப்ரியா" என்று அழைக்க,"நான் உங்க கூட வந்தா... எங்க அப்பத்தா எதாவது சொல்வாங்க, அதுவும் இல்லாம... நான் வந்தா... சீக்கிரம் வேற திரும்பி வரணும், முரளி அண்ணாவும் ஷ்ருதியும் கொஞ்சம் நேரம் தனியா பேசட்டும், அதுக்காக தான் நான் வரலை கார்த்திக் அண்ணா".என்று ப்ரியா சொல்ல,"அப்ப உனக்கு அவங்க விஷயம் தெரியுமா...." என்று கார்த்திக் கேட்க,"தெரியும்... எனக்கு தெரிஞ்ச மாதிரி காமிச்சிகாதீங்க" என்றாள் ப்ரியா, சரி என்ற கார்த்திக் திரும்பி செல்ல, கௌதம்"என்னடா, எதோ நீ போய்.. அவள கூடிட்டு வர மாதிரி போன இப்ப தனியா வர" என்றதும்"இல்ல அவங்க பாட்டி எதாவது சொல்வாங்களாம் ,சரி வா நாம போகலாம்" என்றான் கார்த்திக். "நீ போ... நான் வரலை" என்ற கௌதம் அவர்கள் வந்த சுமோவில் சென்று, சீடி பிளேயரில் பாட்டை போட்டு விட்டு, படுத்து விட்டான். முன்னே சென்று கொண்டிருந்த முரளி, ஷ்ருதியுடன் கார்த்திக்கும் சேர்ந்து கொண்டான்.***

***சிறிது தூரம் அவர்களுடன் சேர்ந்து சென்ற கார்த்திக் "நீங்க போங்க.. நான் இங்கேயே இருக்கேன்" என்று சொல்ல. முரளி"இல்ல***

***கார்த்திக், நாங்க அப்படி என்ன பேசிட போறோம், நீயும் வா" என்றான் ஆனால் கார்த்திக்"பரவாயில்லை முரளி, நான் இங்க இருக்கேன்... நீங்க கொஞ்சம் தூரம் நடந்துட்டு வாங்க" என்று அங்கேயே அமர்ந்து விட்டான். முரளியும், ஷ்ருதியும் தங்கள் கதைகளை பேசிக்கொண்டே தென்னந் தோப்புக்குள் சென்றார்கள்.***

***"இந்த இடம் எவ்வளவு சுப்பரா... இருக்கு இல்ல, இங்கேயே எப்பவும் இருந்திட மாட்டோமான்னு இருக்கு" என்று ஷ்ருதி ரசித்து சொல்ல...***

***"ரொம்ப அழகான இடத்தில ஆபத்தும் இருக்கு தெரியுமா... "***

***" அப்படி என்ன ஆபத்து வர போகுது, திருடன் வருவானா" என்றாள் ஷ்ருதி நடந்து கொண்டே,***

***"திருடனும் வரலாம், ஆனால் நான் சொன்னது திருடன் இல்லை... பாம்பு" என்று முரளி சொன்னதும், ஷ்ருதி பாம்பா என்று பயந்தவள், முரளியின் கையை பற்றிக்கொண்டு, அவனை நெருங்கி நடந்தாள். கீழேயே பார்த்து கொண்டு வந்தவளை பார்த்த... முரளி, மேடம் ரொம்ப பயந்துட்டாங்க போலருக்கு என்று நினைத்தவன், வேண்டுமென்றே"ஆமா... தோப்புல, நிறைய பாம்பு இருக்கும்... எதற்கும் பார்த்து வா ஷ்ருதி" என்று அவளை மேலும் பயம்காட்ட,"சரி வாங்க திரும்பி போகலாம்" என்று முரளியை அழைத்தாள் ஷ்ருதி.***

Ramya Rajan

***முரளியும் சரி என்று திரும்பி நடந்தவன்,"ஷ்ருதி, கீழ பாரு பாம்பு" என்றதும் திரும்பி அங்கிருந்து ஓட்டம் எடுத்த ஷ்ருதி, வேகமாக ஓடினாள்."நில்லு ஷ்ருதி" என்று முரளி கத்த, ஆனால் ஷ்ருதி நிற்கவே இல்லை, அவளை விரட்டி பிடித்தான் முரளி. பாம்பு இல்லை என்று தான் அவன் சொல்ல வந்தான், ஆனால்... அவன் பாம்பு என்று ஆரம்பித்தவுடன்... முரளியை, இறுக்க அனைத்து...கண்களையும் மூடி கொண்டாள் ஷ்ருதி, சுற்றி யாரவது இருகிறார்களா என்று பார்த்த முரளி, யாரும் இல்லை என்றதும், தானும் அவளை அனைத்தவன், அப்படியே சிறிது நேரம் நின்றான். சிறிது நேரம் கழித்து கண்ணை திறந்து பார்த்த ஷ்ருதி, தாங்கள் நிற்கும் நிலையை பார்த்து, அவனை தள்ளி விட்டு விலக பார்க்க, அவளை தன்னிடம் இழுத்த முரளி அவளின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு அவளை விடுவித்தான்.***

***ஷ்ருதி அவனை பார்த்து முறைத்துவிட்டு வேகமாக நடக்க, முரளி அவளுடன் சேர்த்து நடந்தான். முரளி சிரித்துக்கொண்டே"இன்னும் உனக்கு வேற எதுக்கெல்லாம் பயம் ஷ்ருதி, இல்லை எப்பவெல்லாம் உன்னை கட்டிக்கனும்ன்னு தோணுதோ... அப்ப யூஸ் பண்ணிக்கலாம்" என்றவுடன், ஷ்ருதியின் முகம் மாறிவிட்டது, அதை பார்த்த முரளி"சும்மா விளையாட்டுக்கு சொன்னேன்டா... என்றவன், ஆனாலும் நீ இப்படி பயப்புடுவேன்னு தெரியாது". ஷ்ருதி எதுவும் பேசாமல் நடக்க, முரளி மெதுவாக"ஆனா... நல்லாத்தான் இருந்துச்சு" என்று அவள் முகம் பார்த்தவன் அது சிவப்பதை பார்த்து..."தேங்க்ஸ் ஷ்ருதி..." என்றான். இருவரும் மௌனமாகவே நடந்தார்கள் ஆனால்... இருவருமே சற்றுமுன் நடந்தை நினைத்து கொண்டிருந்தனர்.***

***எல்லோரும் சேர்ந்து மதிய உணவை அருந்தியவுடன், தங்கள் வீட்டுக்கு வந்து சிறிது நேரம் ஓய்வு எடுத்துவிட்டு சொந்தங்களிடம்***

விடைபெற்று மதுரைக்கு கிளம்பி சென்றனர். கௌதம் ப்ரியாவிடம் அதற்குபிறகு பேசவேயில்லை, இன்னும் முறைத்து கொண்டுதான் இருந்தான். மதுரையில் ஓட்டலில் சாப்பிட பெரியவர்கள் ஒரு மேஜையிலும், இளையவர்கள் ஒரு மேஜையிலும் அமர்ந்தனர்.

முரளி பரோட்டாவும்.... சால்னாவும் கொண்டு வர சொன்னான், வந்தவுடன் சாப்பிட ஆரம்பித்த கௌதம், கார்த்திக் மற்றும் முரளி ஆளுக்கு, பத்து பரோட்டாவை உள்ளே தள்ள...அதை பார்த்து கொண்டிருந்த ப்ரியாவும், ஷ்ருதியும் வாயை பிளந்தனர்.

அனைவரும் ரயிலில் ஏறி அமர்ந்த பின், அங்கு ராகவன் தனது மகள் மிருதுள்ளாவுடன் வந்தவர், இவர்களை பார்த்ததும் தனது மகள் இன்று சென்னைக்கு செல்வதால், ரயிலில் ஏற்ற வந்தேன் என்றார். இவர்களும் அதே ரயில் என்பதால் இவர்களிடம் மகளை விட்டுவிட்டு நிம்மதியாக கிளம்பி சென்றார்.

ரயிலில் எங்கே அமர்வது என்று யோசித்த மிருதுள்ளாவை, ப்ரியாவை வெறுப்பேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் வேண்டும் என்றே தன் அருகில் உட்கார சொன்ன கௌதம், அவள் அமர்ந்ததும்... ப்ரியா முகத்தை பார்க்க... அவள் சிரித்து கொண்டிருந்தாள்.

முட்ட கண்ணி முறைப்பான்னு பார்த்தா... சிரிகிறாளே என்று நினைத்த கௌதம், மிருதுள்ளாவிடம் நன்றாக பேசினான், அதை பார்த்த ஷ்ருதியும், கார்த்திக்கும் அய்யய்யோ... இவன் வம்ப விலை கொடுத்து வாங்கிறானே என்று நினைத்தனர். மிருதுள்ளா

***கௌதமுடன் பேசிக்கொண்டே அவ்வபோது கார்த்திக்கை பார்த்தாள்.***

***சிறிது நேரம் பேசி கொண்டிருந்து விட்டு அனைவரும் படுத்தனர். நடு ராத்திரியில் எழுந்த ப்ரியா கௌதமை எழுப்ப, எழுந்து ப்ரியாவை பார்த்தவன், அவள் மேல் கோபத்தில் இருந்ததால்"என்ன ரெஸ்ட்ரூம் போகனுமா, உங்க அண்ணனை எழுப்பு" என்று மறுபடியும் தூங்க முயல, அவனை ப்ரியா நன்றாக அடித்து எழுப்பியதும், அவளுடன் எழுந்து சென்றவன், வெளியில் வந்து கதவை சாற்றியதும்,***

***"என்னடி... கொழுப்பா?" என்று கேட்க, ஆமா... என்று தலை ஆட்டிய ப்ரியா, அவன் சட்டை காலரை பிடித்து... அவனை அருகில் இழுத்து... எட்டி... அவன் இதழ்களில் முத்தம் வைத்தாள், முதலில் திகைத்த கௌதம், பின்பு அவனும் பதிலுக்கு முத்தமிட தொடங்க... சிறிது நேரம் கழித்து பிரிந்த இருவரும்... ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்தனர்.***

***ப்ரியா கௌதமை பார்த்து கோபம் போச்சா என்று கேட்க, இல்லை என்று தலை ஆட்டியவன் "நீ இன்னைக்கு தாவணியில எவ்வளவு அழகா இருந்த, கிட்ட பார்க்கலாம்னா... வந்தியாடி" என்று கேட்க"ஏன் இந்த டிரஸ்ல.. நான் நல்லா இல்லையா" என்று ப்ரியா தனது சுடிதாரை காட்டி கேட்டாள்."நல்லாத்தான் இருக்கே... என்று இழுத்தவன், ஆனா இந்த டிரஸ்ல பார்த்தா ஒரு பீலிங்க்ஸ்ம் வர மாட்டேங்குது, அதுவே தாவணினா தனி தான்" என்றவன், அவளை பார்த்து கண்ணடிக்க, அவளும் பதிலுக்கு அவனை பார்த்து கண்ணடித்து விட்டு உள்ளே சென்றாள்.***

Ramya Rajan

***மறுநாள் காலையில் தாம்பரம் ரயில் நிலையத்தில், அனைவரும் இறங்கினர். மிருதுள்ளா தனது கல்லூரி தாம்பரம் தாண்டி இருப்பதாகவும், அவள் தன் கல்லூரி ஹாஸ்டலில் தங்கி படிப்பதாக சொன்னவள், அனைவரிடமும் விடை பெற, ஜானகியும், சாருமதியும் அவளை அடிக்கடி வீட்டுக்கு வர சொல்லி விடை தந்தனர். அவள் சற்று தூரம் தள்ளி சென்றதும், கார்த்திக்கை திரும்பி பார்த்துவிட்டு சென்றாள்.***

***முரளி அடுத்த நாளே டெல்லி கிளம்பி சென்றான், ஒரு செமினார்க்காக அவன் உடனே செல்லவேண்டி இருந்தது. ஷ்ருதி தனது படிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்தாள்.***

***ப்ரியாவிற்கு, கௌதம் படித்த... அதே இன்ஜினியரிங் காலேஜ்ல்... சிவில் இன்ஜினியரிங் சீட் கிடைத்தது, அவளோடு அவள் தோழி காவ்யாவும் அதே கல்லூரியில் BE.,(EEE) சேர்ந்தாள். இப்போது காலேஜ்ம் துவங்கி பத்து நாட்கள் ஆகிவிட்டது. கௌதம் MBA மார்க்கெட்டிங்கும், கார்த்திக் ஆர்கிடெக்ட் கோர்ஸ்சும், அதே காலேஜ்ல் சேர்ந்தனர். அவர்களுக்கு இன்னும் காலேஜ் திறக்கவில்லை.***

***கௌதம் தங்கள் கம்பெனியிலேயே வேலை பார்க்க ஆரம்பித்தான், அவனுக்கு என்று தனியாக கேபின் ஒதுக்கப்பட்டது. கார்த்திக் கௌதமின் கம்பெனியிலேயே வேலை பார்க்கும் ஆர்கிடெக்ட் ஒருவரிடம் ட்ரைனீ ஆக சேர்ந்தான். இப்படியே சிறிது நாட்கள் செல்ல, இவர்களுக்கும் கல்லூரி திறந்தது.***

Ramya Rajan

**வர்ஷா இப்போது மூன்றாம் ஆண்டில் இருந்தாள், இப்போதும் அவள் தான் காலேஜ் அழகி என்ற நினைப்பில் தான் இருந்தாள், அவள் அழகில் மயங்காமலே கௌதம் காலேஜ் முடிந்து சென்றுவிட்டது, அவளுக்கு தோல்வி தான் ஆனால் அதை ஒத்துக்கொள்ள மனமில்லாமல், அவனுக்கு அதிர்ஷ்ட்டம் இல்லை என்று சொல்லி கொண்டு திரிந்தவள், அவன் மீண்டும் இதே கல்லூரியில் சேர்ந்திருப்பதை நினைத்து கொதித்தாள்.**

**கௌதமும், ப்ரியாவும் ஒரே கல்லூரி தான் என்றாலும் இருவருக்கும் கல்லூரி நேரம் வேறு.. வேறு... ப்ரியாவிற்கு காலை 9.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை, கௌதமிற்கு மதியம் 2 மணியிலிருந்து ஐந்து மணி வரை. கல்லூரியில் தங்களை பற்றி தெரிந்தால் மாணவர்கள் கேலி செய்து ஓட்டுவார்கள் என்று நினைத்து இருவருமே ஒருவருக்கொருவர் தெரியாதது போலவே நடந்து கொள்வார்கள். ப்ரியா கல்லூரிக்கு தனது தோழி காவ்யாவுடன் பஸ்சில் தான் வந்து செல்வாள், கௌதமும், கார்த்திக்கும் பைக்ல் வந்து செல்வார்கள்.**

**கௌதம், ப்ரியாவை கல்லூரியில் வைத்து பார்க்கவோ, பேசவோ மாட்டான். காலையில் கௌதம் வெளி வேலைக்கு செல்லவில்லை என்றால், அவர்கள் ஆபீஸ் முன் நின்றிருப்பான், அப்போது இருவரும் பார்த்து கொள்வார்கள், அதே மாதிரி மாலையில்.. கல்லூரிக்கு அடுத்த ஸ்டாப்பில் கார்த்திக்கோடு பேசுவது போல் நின்று கொண்டிருப்பான், அப்போது ப்ரியா பஸ்சில்... அந்த வழியாக தான் வருவாள், அவள் வரும் பஸ் அந்த ஸ்டாபிலும் நிற்கும், அப்போது இருவரும் ஒருவரை, ஒருவர்**



Ramya Rajan

பார்த்துகொள்வதோடு சரி, வெளியில் வேறெங்கும் சந்தித்து கொள்வதில்லை ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கும் போது ஒருவர் வீட்டுக்கு மற்றவர் செல்வது உண்டு. ஜானகி ப்ரியாவிற்கும், கௌதமிற்கும் திருமணம் செய்யும் எண்ணம் இருப்பதால் அவர்கள் வீட்டிற்க்கு அவளை ரொம்ப அனுப்புவதில்லை.

இப்படியே ஆறு மாதங்கள் செல்ல...கல்லூரி அருகில் இருக்கும் அநாதை ஆஷ்ரமம் ஒன்று, நிதி பற்றாக்குறையால் அதை நடத்த முடியாமல் தவித்தது, அதில் நூறுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தனர், அவர்களின் எதிர்காலம் கேள்விகுறி ஆனதால்... அவர்களுக்கு உதவும் நோக்கத்தில்... நிதி திரட்டி தரும்படி, கல்லூரி நிர்வாகம் மாணவர்களை கேட்டுக்கொண்டது.

Ramya Rajan

12

முதல் கட்டமாக அனைத்து மாணவர்களிடமும், அவர்களால் முடிந்த பணத்தை வசூலித்தனர். ஆனால்.. அந்த தொகை இப்போதைக்கு தான் போதும், எதிர்காலத்திற்கு பத்தாது... அதனால் தங்கள் கல்லூரியிலேயே, ஒரு விழா நடத்துவது என்றும், வரும் அனைவரிடமும் டிக்கெட் காசு வசூலிப்பது என்றும் தீர்மானித்தனர்.

விழாவுக்கு ஒரு மாதம் முன்பே விழா ஏற்பாடுகள் ஆரம்பம் ஆகியது. தங்கள் கல்லூரியில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் ஆளுக்கு ஐந்து டிக்கெட் கொடுக்க பட்டது, அவர்கள் அந்த டிக்கெட்டை வேறு கல்லூரி மாணவர்களுக்கும் விற்கலாம், அல்லது

***தங்கள் குடும்பத்தினரையும் அழைத்து வரலாம், ஆனால் டிக்கெட்டுக்கு பணம் கொடுக்க வேண்டும். அதோடு விழாவிற்கு வர விரும்பும் மற்ற கல்லூரி மாணவர்கள், விழா அன்று நேரிலும் வந்து டிக்கெட் வாங்கி கொள்ளலாம், இது சுற்று வட்டாரத்தில் இருந்த அனைத்து கல்லூரிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.***

***விழா நிகழ்ச்சிகளாக பாட்டு, நடனம், நாடகம் போன்றவற்றை தீர்மானித்தனர். பாட்டு என்றதும் அனைவருக்கும் கௌதம் தான் நினைவுக்கு வந்தான். மொத்தம் மூன்று மணி நேர விழா, அதில் பாட்டுக்கு என்று ஐந்து நிகழ்ச்சிகள் ஒதுக்கபட்டது, தனியாக பாடுவது, டுயட் பாட்டு, குரூப் சாங், மெட்லி சாங்க்ஸ் மற்றும் பாட்டும், நடனமும் சேர்ந்தது ஒரு நிகழ்ச்சி, இதே போல் நடனத்துக்கும், நாடகத்துக்கும் தனித்தனியாக நிகழ்ச்சிகள் ஒதுக்க பட்டது.***

***கௌதமை அழைத்த விழா குழுவின் தலைவன் வினோத், விழாவை பற்றியும் அதில் இருக்கும் பாட்டு நிகழ்சிகள்... பற்றியும் சொன்னவன், கௌதமை அனைத்திலும் பங்கு பெற சொல்ல, அணைத்திருக்கும் ஒத்துக்கொண்டவன், கடைசி நிகழ்ச்சியான பாட்டும், நடனமும் சேர்ந்த நிகழ்ச்சிக்கு மட்டும் ஒத்துக்கொள்ளவில்லை. அதை சீடியில ப்ரியா பார்த்திட்டு, ஆடின ஆட்டம், ஹம்மா... சீடியில பார்த்ததுக்கே... அந்த ஆட்டம் ஆடினவ, இப்ப இதே காலேஜ் வேற படிக்கிறா, நேர்ல வேற பார்த்தா... அவ்வளவு தான், நேரா மேடைக்கே வந்து மொத்திடுவா என்று கௌதம் மனதில் நினைத்து கொண்டான்.***

***கௌதமுடன் கார்த்திக்கும் வினோத்தை பார்க்க சென்றிருந்தான், அவனிடம் வினோத்"நீ நல்லா பேசுவ... அதனால நீ விழா நிகழ்ச்சிய தொகுத்து வழங்கு, உன் கூட ஒரு அழகான பொண்ணும் நிகழ்ச்சிய தொகுத்து வழங்க போகுது, நீ மட்டும் நின்னு பேசினா பசங்க எல்லாம் சத்தம் போட்டு, ஆடுவாங்க... அதே அந்த பொண்ணும் கூட இருந்தா... சைலெண்டா இருப்பாங்க, அதுக்குதான் அந்த பொண்ணு" என்றான்.***

***யார்...? அந்த பொண்ணு ஒரு வேலை வர்ஷாவை சொல்றானோ என்று பயந்த கார்த்திக் "யாருப்பா... அந்த பொண்ணு" என்று கேட்க,***

***"தர்ஷினி..." என்றான் வினோத், தர்ஷினியா யாரு என்று கார்த்திக் யோசிக்க,"நம்ம காலேஜ்ல BE., முதல் வருஷம் படிக்கிறா... உனக்கு தெரியாது... நம்ம காலேஜ்கே தெரியும், உனக்கு தெரியாதுன்னு சொல்ற, இப்ப 5.30 பஸ்ல போகும் பாரு, என்ன ஹோம்லி ஆன அழகு தெரியுமா, அது மாதிரி பொண்ணு மனைவியா வரணும்ன்னு தான் எல்லோரும் ஆசை படுவான், யாருக்கு கொடுத்து வச்சிருக்கோ" என்று பெருமூச்சு விட்டபடி வினோத் செல்ல. கௌதமும், கார்த்திக்கும் யாருடா அந்த பொண்ணு என்று நினைத்து கொண்டே சென்றனர்.***

***காலேஜ் முடிந்து கௌதமும், கார்த்திக்கும் பைக்கில் வெளியே வர, அவர்கள் அருகில் மற்றொரு பைக்கில் வந்த வினோத் "கார்த்திக் வா... உனக்கு தர்ஷினியை காமிக்றேன்" என்றவன் காலேஜ் பஸ் ஸ்டாப் எதிரில் சென்று நிற்க,"டேய், நீ வேணா போய் பாரு... நான் வரலை" என்றான் கௌதம், அதற்க்கு கார்த்திக்"ரொம்ப பண்ணாத... அது யாருன்னு தெரிஞ்சிக்க தான் பார்க்க போறோம்,***

Ramya Rajan

***வினோத் அந்த பொண்ண பத்தி தப்பா சொல்லலை... நல்ல விதமா தான் சொன்னான். யாரு அந்த குடும்ப குத்து விளக்குன்னு பார்ப்போம், உனக்கு இஷ்டம் இல்லைனா... நீ பார்க்காத... ப்ரியாவும் அங்க தான் இருப்பா... நீ அவளை பாரு" என்று கௌதமையும் தன்னுடன் அழைத்து சென்றான்.***

***வினோத் இவர்களிடம் "அவ இன்னும் வரலை" என்றான், அப்போது ப்ரியா, காவ்யாவுடன் பேசிக்கொண்டே பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்து வந்தாள்... ப்ரியாவிற்கு, கௌதம் அங்கே நிற்பது தெரியாததால்.. அவன் பக்கம் திரும்பாமல், அவள் பாட்டுக்கு காவ்யாவுடன் பேசிக்கொண்டே வந்தாள். அவளை பார்த்த கௌதம் கொஞ்ச நேரமாவது வாயை மூடுறாளா பாரு.. என்று நினைத்து கொண்டிருந்தான்.***

***பஸ் ஸ்டாண்டில் வந்து நின்ற ப்ரியாவை பார்த்த வினோத், கார்த்திக்கிடம் "டேய்.. அந்த ப்ளூ சுடிதார் தான் தர்ஷினி" என்றான், யாரோ என்று நினைத்து பார்த்த கார்த்திக்கும், கௌதமும், அவன் ப்ரியாவை காட்டியதும் அதிர்ந்தனர். அப்போது தான் இருவருக்கும் அவள் முழு பெயர் ப்ரியதர்ஷினி என்பது நினைவுக்கு வந்தது. இருவரும் மீண்டும் ப்ரியாவை பார்க்க... அப்போது பார்த்து ஒரு மாணவன், ப்ரியாவிடம் ஹாய் சொல்ல... அவளும் பதிலுக்கு சிரித்துக்கொண்டே ஹாய் சொன்னவள், மறுபடியும் காவ்யாவுடன் பேச ஆரம்பித்தாள். பஸ் வந்ததும் ப்ரியா அதில் ஏறி செல்ல அங்கு நின்றிருந்த மாணவர்கள் சிலர்... வேறு பக்கம் சென்றனர்... அதை பார்த்தே கௌதமும், கார்த்திக்கும் புரிந்து கொண்டனர், அவர்கள் பஸ்சிற்க்காக நிற்கவில்லை, ப்ரியாவிற்காக நின்றார்கள் என்று.***

Ramya Rajan

ஒருத்தனுக்கு சும்மாவே கோபம் வரும், அதுவும் இப்ப கேட்கவே வேண்டாம், எரிமலையாக கௌதம் நிற்ப்பதை அறியாத வினோத்"நல்லா இருக்கா இல்ல" என்று வேறு கேட்க, இதுக்கு மேல இங்க இருந்தா ரணகளம் ஆகிடும் என்று உணர்ந்த கார்த்திக், வேகமாக வினோத்திடம் விடைபெற்று கௌதமை, வண்டியில் ஏற்றி கொண்டு புறப்பட்டான்.

ப்ரியா, கௌதம் எப்போதும் நிற்கும் இடத்தில் இல்லை என்றதும் அவன் மொபைலுக்கு அழைக்க அதை எடுத்த கௌதம்,''என்ன ...? என்று கோபமாக கேட்க...

"இல்ல சும்மா.. காணமேன்னு நினைச்சேன்"

கார்த்திக்கிடம் பைக்கை ஓரமாக நிறுத்த சொன்னவன் இறங்கி தள்ளி சென்று "ஆமா ...நீ படிக்க தானே காலேஜ்க்கு வர" என்றான்,

"ஆமா... என் கேட்கறீங்க? "

"நீ பண்றது எல்லாம் பார்த்தா... அப்படி இல்ல, இன்னைக்கு ஒருத்தன் பஸ் ஸ்டாண்ட்ல் உனக்கு ஹாய் சொன்னான் இல்ல, அவனை உனக்கு தெரியுமா...? "

" இல்லை...ஆனா, நம்ம காலேஜ்" என்று இழுக்க,

Ramya Rajan

*"எதாவது பேசின... கொன்னுடுவேன், படிக்க அனுப்பினா... கண்டவன் கிட்ட, பல்லை காட்றியா... பல்லை தட்டிடுவேன், ஜாக்கிருதை, நீ யார் கிட்டயும் பேச மாட்டியே... இப்ப என்ன? காலேஜ் வந்ததும், தைரியம் வந்துடுச்சா" என்று கௌதம் மூச்சுவிடாமல் பேச,*

*"இல்ல ஷ்ருதி தான் சொன்னா... நீ பேசலைனா தான் உன்கிட்ட வம்பு பண்ணுவாங்க, அதனால உன்கிட்ட எதாவது கேட்டா... நீ பாட்டுக்கு பதில் சொல்லிட்டு போயிட்டே இருன்னு..."*

*"உனக்கு அந்த மேடம் தான் டீச்சரா... இருக்கட்டும் கவனிக்கறேன், ஆமா... உன்னை பதில் தான சொல்ல சொன்னா... நீ ஏன் பல்லை காட்ற... இங்க பாரு உன் கிளாஸ் பசங்ககிட்ட பேசுறது ஒன்னும் தப்பில்லை, ஆனா... தெரியாதவன பார்த்து, நீ பல்லை காட்டறத அடுத்த தடவை பார்த்தேன்னு வையு, கொன்னேபுடுவேன், நியாபகம் வச்சுக்கோ" என்று கௌதம் போன்னை வைத்து விட.*

*கௌதம் பேசியதை ப்ரியாவின் பக்கத்தில் இருந்து கேட்ட காவ்யா"என்னடி... இப்படி பேசுறாங்க" என்று கேட்க, அவளிடம்"அவங்க எப்பவும் அப்படி தான், என்ன ரொம்ப லவ் பண்றாங்க இல்ல... அதனால தான்" என்றாள் ப்ரியா, காவ்யா சந்தேகமாக பார்க்க"உனக்கு நிருபிக்கவா, பாரு... நான் ரெண்டு நாள் அவங்களை பார்க்கலைனா... எப்படி பீல் பண்ணுவாங்கன்னு... நீயே பாரு" என்றவள் அடுத்த இரு நாட்கள் கௌதமை பார்க்கவே இல்லை, பஸ்ல் குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தாள். கௌதம் போன் செய்தாலும் எடுக்கவில்லை, இரு நாட்கள் பொறுத்த கௌதம், கார்த்திக்கிடம்"என்னடா... பார்க்கவே மாட்றா...*

அன்னைக்கு நான் ரொம்ப திட்டிட்டேனோ" என்றான்."என்னை கேட்டா... நீ தானே பேசுன" என்றான் கார்த்திக்.

அடுத்த நாள் காலை ப்ரியாவும், காவ்யாவும் வந்த பஸ் அவர்கள் ஆபீஸ்சை கடக்கும் போது, ப்ரியா பார்க்காதது போல் அமர்ந்திருக்க, காவ்யா பார்த்துவிட்டு கௌதம் அங்கு இல்லை என்றாள், உடனே ப்ரியாவும் பார்க்க, கௌதம் அங்கு நிஜமாகவே இல்லை, அன்று மாலை திரும்பி வரும் போதும் இல்லை என்றவுடன் ப்ரியா கவலை பட தொடங்கியவள், போன்னில் கௌதமை அழைக்க, அவன் இப்போது போன்னை எடுக்கவில்லை. இப்படியே இரு நாட்கள் செல்ல ப்ரியா வருத்தப்படுவதை பார்த்த காவ்யா, இது தன்னால் தான் என்று நினைத்தாள்.

ஒரு நாள் காலேஜ்ல் காவ்யா, மதிய உணவு இடைவேளையில் லைப்ரரி சென்றவள், திரும்பி வரும் போது வகுப்பு தொடக்கி விட்டது, அதனால் வெளியில் யாரும் இல்லை, அப்போது காவ்யா தூரத்தில் சென்று கொண்டிருந்த கார்த்திக்கை பார்த்துவிட்டு, கௌதம் ஏன் வரவில்லை என்று கேட்ப்போம் என்று நினைத்தவள், அவனை எப்படி அழைப்பது என்று தெரியாமல்... ஒரு கல்லை தூக்கி அவன் மேல் எரிய... அது சரியாக அவன் நடு முதுகில் பட்டதும், அவனுக்கு சுள்ளென்று வலித்து விட்டது.

திரும்பி பார்த்தவனுக்கு தூரத்தில் நிற்பது காவ்யா என்று தெரியவில்லை, வேகமாக திரும்பி வந்தவன், அங்கே கிழே கிடந்த பெரிய கல்லையும் கையில் எடுத்து கொண்டு வர, கார்த்திக் நெருங்கி வந்ததும் தான் அவன் முகத்தில் தெரிந்த கோபத்தையும், கையில் இருந்த கல்லையும், பார்த்த காவ்யா பயத்தில், அங்கிருந்த மரத்தின்

அடியில் காதிரண்டையும் பொத்தி கொண்டு, கண்ணையும் மூடிகொண்டு அமர்ந்துவிட்டாள்.

அவள் அருகில் வந்ததும் தான் அது காவ்யா என்பதை உணர்ந்த கார்த்திக், அவள் பயப்படுவதை பார்த்ததும் தான் தன் கையில் இருந்த கல்லை தூக்கி எறிந்தான், தனக்கு ஏன் இவ்வளவு கோபம் வந்தது என்று தன்னையே நொந்து கொண்டு, காவ்யாவை பார்க்க... அவள் அப்போதும் அப்படியே தான் அமர்ந்திருந்தாள். மெதுவாக கார்த்திக்"காவ்யா..." என்று அழைக்க ஒரு கண்ணை மட்டும் திறந்து பார்த்தவள், அவன் கையில் கல் இல்லை என்பதை பார்த்ததும் தான் அவளுக்கு நின்றிருந்த மூச்சு வந்தது, மெதுவாக எழுந்தவள், வேகமாக அங்கிருந்து ஓடிவிட்டாள்.

அன்று மாலை ப்ரியாவோடு பஸ் ஸ்டாண்ட்டிற்கு வந்த காவ்யா, எதுவும் பேசாமல் அமைதியாக வர... அவளிடம் ப்ரியா"நான் சொன்னேன்ல... உனக்கு ப்ரூப் பண்றேன்னு" என்று ஆரம்பித்தவுடன் கோபம் வந்துவிட்டது காவ்யாவுக்கு"நீ ஒன்னும் ப்ரூப் பண்ணி கிழிச்சிட வேண்டாம், நீ யார லவ் பண்ணா எனக்கு என்ன?, லவ் பண்ணா அவன் என்ன வேணா பேசுவானா, அவன் உன்ன திட்டினா நீ வாங்கு... அது உன் தலை எழுத்து... எனக்கு என்ன வந்தது" என்று கேட்க... அதற்க்கு மேல் பொறுக்க முடியாத ப்ரியா"காவ்யா நீ என் ப்ரண்ட், அதனால.. நீ என்னை என்ன வேணா பேசலாம், ஆனா... கௌதம் பத்தி பேசினா... நான் சும்மா இருக்க மாட்டேன்" என்று சொன்னவள் பஸ் வந்ததும் அதில் ஏறி, எப்போதும் போல் ஜன்னல் ஓரம் அமர, அவள் அருகில் அமராமல் அடுத்த சீட்டின் ஜன்னல் ஓரத்தில் காவ்யா அமர்ந்தாள்.

அடுத்த ஸ்டாப்பிங்கில் பஸ் நிற்க... எப்போதும் போல் கௌதமும், கார்த்திக்கும் நின்றிருந்தார்கள். ஆனால் ப்ரியாவும், காவ்யாவும் தனித்தனியாக அமர்ந்திருந்ததை பார்த்தவர்கள், ஏன் என்று நினைத்து கொண்டு இருவர் முகத்தையும் பார்க்க, அப்போது தான் கவனித்தார்கள் இருவருமே அழுது கொண்டிருப்பதை.

"என்னடா... ரெண்டு பேரும் தனித்தனியா உட்கார்ந்து போறாங்க, அதுவும் ரெண்டும் அழுதுங்க, என்ன பிரச்சனைன்னு வேற தெரியல...?" என்று கௌதம் புலம்ப, கார்த்திக்கும் என்ன பிரச்சனை என்று புரியவில்லை, மதியம் நாம அப்படி நடந்துகிட்டது தான், எதுவும் பிரச்சனை ஆகிடுச்சோ... இப்ப என்ன செய்வது என்று யோசித்தான்.

கௌதம் உடனே ப்ரியாவை செல்லில் அழைக்க, போன்னை எடுத்த ப்ரியா அமைதியாக இருந்தாள். கௌதம்"என்ன ப்ரியா.. நீயும் காவ்யாவும் தனித்தனியா உட்கார்ந்து போறீங்க" என்று கேட்க"எல்லாம் உங்களால தான்" என்றவள் போன்னை வைத்து விட்டாள்.

"என்னடா என்னாலன்னு சொல்றா... என்று கார்த்திக்கிடம் சொன்ன கௌதம், இப்போ எதுவும் பேச முடியாது, சரி வா கிளம்பலாம்" என்று இருவரும் கிளம்பினார்கள்.

வீட்டுக்கு வந்த ப்ரியாவை கௌதம் மறபடியும் அழைக்க போன்னை எடுத்தவள், இந்த முறையும் பேசாமல் இருந்தாள்.

***"கோபமா ப்ரியா என்ற கௌதம், அன்று கல்லூரியில் வினோத் பேசியதை சொன்னவன், அதை கேட்டு ஏற்க்கனவே கோபத்தில் இருந்தேனா... இதுல பஸ் ஸ்டாண்ட்ல.. பசங்க வேற உன்னையே பார்த்ததும், இன்னும் கோபம் வந்துடுச்சு... அதனால தாண்டா உன்கிட்ட கத்திட்டேன் சாரி..."***

***வினோத் லூசு கௌதம்கிட்ட போய் இப்படியா சொல்லிவைக்கும் என்று நினைத்த ப்ரியா"எனக்கு உங்களை பத்தி தெரியும் கௌதம், எனக்கு உங்க மேல கோபமே இல்ல" என்றவள் காவ்யாவுடன் நடந்த விவாதத்தை சொல்ல,***

***"எனக்கு உன் மேல இருந்த கோபம், உடனே போய்டுச்சு ப்ரியா... ரெண்டு நாளா... நாங்க வீடு கட்ட போறோம் இல்ல... அதுக்கான வேலை இருந்தது, அதுதான் அலைஞ்சிட்டு இருந்தேன், நீ போன் பண்ணும் போது யாரவது கூட இருப்பாங்க, அதுதான் பேச முடியலை ஆனா... நான் உனக்கு மெசேஜ் பண்ணேனே, நீ அத பார்க்கலையா..."***

***"சாரி... கௌதம், நான் பார்க்கவேயில்லை, என் மேல தப்ப வச்சிக்கிட்டு... நான் உங்க மேல கோப பட்டுட்டேன், இப்ப காவ்யா வேற கோபமா இருக்கா" என்று ப்ரியா புலம்பினாள்.***

***அதை கேட்ட கௌதம் இதுல காவ்யா கோபபட என்ன இருக்கு என்று நினைத்தவன்"சரி, நீ அதுக்காக அவகிட்ட பேசாம இருக்காதே..."***

Ramya Rajan

*"சரி..."*

*"வர்ற சண்டே, எங்க வீடு கட்ட... வாஸ்த்து பூஜை பண்றோம், நீ வருவதானே..."*

*"தெரியலை..."*

*"நீ வந்தா தான், நம்மோட பெட்ரூம் நல்லா கட்டுவேன், அப்புறம் உன் இஷ்டம் யோசிச்சிக்கோ..."*

*"அதெல்லாம்... நீங்க நல்லாத்தான் கட்டுவீங்க" என்று சிரித்து கொண்டே சொல்லிவிட்டு ப்ரியா போன்னை வைத்தாள்.*

*ஞாயிறு காலை தனது பெற்றோருடன் தாம்பரத்தில், கிருஷ்ணகுமார் கட்டவிருக்கும் புது வீட்டிற்க்கு... வாஸ்த்து பூஜை செய்ய... ப்ரியா கௌதமிற்கு பிடிக்கும் என்று டிசைன்னர் பாவாடை, தாவணி அணிந்து சென்றாள். ப்ரியாவை பார்த்ததும் கௌதம் முகத்தில் சந்தோஷம் வெளிபடையாக தெரிய,*

*கார்த்திக் ஷ்ருதியிடம்"உங்க அண்ணன் முகத்தில் எரியும் பல்ப்ப வச்சே... முழு சென்னைக்கும் கரண்ட் சப்பளை பண்ணலாம் போல, என்ன வெளிச்சம்" என்று சொன்னதும் ஷ்ருதியும்"கரண்ட் சப்ளை மட்டுமா, கூடவே அவன் விடுற வாட்டர் பால்ஸ்( ஜொள்) வச்சு முழு சென்னைக்கும் வாட்டர் சப்ளையும் பண்ணலாம்" என்றாள். அவர்கள் இருவரும் பேசுவதை கவனிக்கும் நிலையில் கௌதமும்,*

*ப்ரியாவும் இல்லை. ப்ரியா சாருமதிக்கு செங்கல்லில் மஞ்சள் குங்குமம் வைக்க உதவிக்கொண்டே... கௌதமை சைட் அடிக்க... அவனும் அவள் செய்வதை தான் செய்து கொண்டிருந்தான்.*

*ஆளுக்கு ஒரு கல்லை எடுத்து கொடுத்து... பூஜையை நல்லபடியாக செய்து முடித்தனர். கௌதம் வீட்டின் வரை படத்தை ப்ரியாவிற்கு காட்டி கொண்டிருந்தான், ஷ்ருதியும், கார்த்திக்கும் அவர்கள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தனர், அப்போது ப்ரியாவிடம் கௌதம்"இதுதான் நம்ம பெட்ரூம், எல்லா ரூமையும் விட இந்த ரூம் ரொம்ப கிராண்டா இருக்கும்" என்றவுடன் ப்ரியா"அப்ப ஷ்ருதியொட ரூம்" என்றாள்,"அவ தான் கல்யாணமாகி, வேற வீட்டுக்கு போய்டுவா இல்ல, அதனால சும்மா சின்ன ரூம் தான் அவளுக்கு" என்று வேண்டுமென்றே கௌதம் சொல்ல, ஷ்ருதி அவன் சொன்னதை கேட்டும், கண்டுகொள்ளாமல் இருந்தாள். ஆனால் ப்ரியா"அதெல்லாம் இல்ல... நீங்க அவ பெட்ரூமையும் நல்லா போடுங்க, அது என் அண்ணாவோட ரூமும் தான்" என்றாள். அவள் சொன்னதை கேட்டு ஷ்ருதிக்கு ஷாக் அடிக்க, கார்த்திக் தலையில் அடிக்க, கௌதம்"உங்க அண்ணனா" என்று கேட்க, வேகமாக ப்ரியா"ஷ்ருதி, யார கல்யாணம் பண்ணிகிட்டாலும்... அவங்க எனக்கு அண்ணன் முறை தானே, அதத்தான் சொன்னேன்" என்றாள். ஷ்ருதி நிம்மதியாக மூச்சு விட... கார்த்திக் பரவாயில்லை சமாளிசிட்டா... என்று நினைத்தவன், ஷ்ருதியை பார்க்க... ஷ்ருதிக்கு அவனின் பார்வை புரிந்தது. கௌதமிடம் தன் காதலை மறைப்பது தவறு என்று புரிந்தாலும், அவளுக்கு அவன் அண்ணனிடம் காதலிக்கிறேன் என்று வெளிப்படையாக சொல்ல முடியவில்லை, இதே நிலை தான் ப்ரியாவிற்கும், இருவரும் தங்கள் காதலை தங்களின் அண்ணன்களிடம் சொல்ல தயங்கினர், இது ஒரு நாள் எவ்வளவு பெரிய சிக்கலை கொண்டு வர போகிறது என்று இருவரும் அறியவில்லை.*

Ramya Rajan

பூஜை முடிந்து ராமமூர்த்தியின் குடும்பத்தை கிருஷ்ணகுமார், தங்கள் வீட்டில் மதிய உணவு சாப்பிட வேண்டும் என்று சொல்லி இருந்தார். அதனால் அவர்கள் அனைவரும் கிருஷ்ணகுமார் வீட்டிற்கு வந்தனர். கௌதம் ஒரு வேலையாக வெளியே சென்றுவிட்டான், கார்த்திக்கும் அவனுடன் செல்ல, ஷ்ருதியும், ப்ரியாவும் தங்கள் காலேஜ் கதைகளை பேசி கொண்டிருந்தனர். சாருமதியும், ஜானகியும் பேசிக்கொண்டே மதிய சமையலை முடித்தனர்.

மதிய உணவு வேலை வந்தும் கௌதம் வீட்டுக்கு வரவில்லை, அவனைத்தவிர மற்றவர்கள் உணவு அருந்தி முடித்ததும், ராமமூர்த்தியும், ஜானகியும் அவர்கள் உறவினர் வீட்டில் ஒரு விசேஷம் அதற்கு சென்றவர்கள், ப்ரியாவை திரும்பி வரும் போது அழைத்து செல்வதாக சொல்லி அங்கேயே விட்டுசென்றனர்.

கிருஷ்ணகுமாரும், சாருமதியும் அவர்கள் அறைக்கு ஓய்வு எடுக்க சென்றவுடன், ப்ரியாவும், ஷ்ருதியும் ஷ்ருதியின் அறையில் படுக்கையில் படுத்து கொண்டே... பேசிக்கொண்டிருந்தனர். வெளியே சென்றுவிட்டு வந்த கௌதம், கிழே ராமமூர்த்தியின் கார் இல்லை என்றதும், ப்ரியா வீட்டுக்கு போய்விட்டாள் என்று நினைத்து கொண்டே வந்தவன், இது சாருமதி தூங்கும் நேரம் என்பதால் தன்னிடம் இருந்த சாவியால் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

கௌதம் தனது அறைக்கு சென்று சட்டையை கழட்டிவிட்டு, முகம், கை, கால் கழுவி கொண்டு... அவனே சாப்பாட்டை தட்டில் போட்டுக்கொண்டு சாப்பிட... அமர்ந்தான்.

***வெளியில் பாத்திரம் உருட்டும் சத்தம் கேட்டதால்... ப்ரியா திரும்பி ஷ்ருதியை பார்க்க... அவள் தூங்கி கொண்டிருந்தாள், ஷ்ருதியின் தூக்கம் கலையாமல் மெதுவாக எழுந்து, கதவை திறந்து கொண்டு வெளியே வந்த ப்ரியா, அங்கே கௌதம் தனியாக அமர்ந்து சாப்பிட்டு கொண்டு இருப்பதை பார்த்து, அவன் அருகே செல்ல... தற்செயலாக நிமிர்ந்து பார்த்த கௌதம் ப்ரியாவை பார்த்ததும், முகம் மலர்ந்தவன்"ஹாய் ப்ரியா, நீ வீட்டுக்கு போயிட்டேன்னு நினைச்சேன், வா உட்காரு" என்று தன் பக்கத்து இருக்கையை காட்ட... அவன் அருகில் சென்று அமர்ந்தவள், தனது அம்மாவும்,அப்பாவும் வெளியில் சென்றிப்பதாகவும், திரும்பி வந்து தன்னை அழைத்து செல்வார்கள் என்றாள்.***

***கௌதம் சாப்பிட்டு கொண்டிருந்தவன், ப்ரியாவிற்கு ஒரு வாய் ஊட்ட... அவளும் வாங்கி கொண்டாள், இப்படியே அவன் சாப்பிட்டு கொண்டே அவளுக்கும் ஊட்ட... அவளும் சாப்பிட்டாள். சாருமதி கௌதம் வந்துவிட்டானா என்று பார்க்க வெளியே வந்தவர், அங்கே கௌதமும், ப்ரியாவும் சாப்பிடும் அழகை பார்த்து ரசித்தவர், மெதுவாக உள்ளே சென்று... படுத்திருந்த கிருஷ்ணகுமாரை, வெளியே அழைத்து வந்து காட்ட... அவரும் அவர்களை பார்த்து சிரித்தார்.***

***மறுபடியும் தங்கள் அறைக்கு வந்த... இருவரும் கட்டிலில் சென்று அமர, அப்போது சாருமதி"எனக்கு நீங்க, இப்படி ஒரு நாளாவது ஊட்டி இருக்கீங்களா... என் பையன் பாருங்க... இப்பவே அவன் வருங்கால பொண்டாட்டிக்கு, என்ன அழகா ஊட்டி விடுகிறான்" என்று சண்டைக்கு செல்ல,***

Ramya Rajan

***கிருஷ்ணகுமார்"உன் பையனுக்கு வரும் கோபத்தை பொறுத்து போறதுக்கு, அவன் இப்படி அவன் பொண்டாட்டிக்கு ஊட்டி தான் விடனும். நான் தான் ஏற்கனவே பொண்டாட்டியே சரணம் அப்படின்னு நீ சொல்றத தானே கேட்கிறேன், அப்புறம் உனக்கு ஊட்டி வேற விடனுமா" என்றார்.***

***அவரை பார்த்து முறைத்த சாருமதி "ஆமா... இதுங்க ரெண்டும் எப்ப இருந்து இப்படி ஆச்சுங்க, ஒரு வேலை அன்னைக்கு ட்ரைன்ல ஷ்ருதியும், ஜானகியும் பேசினதுல இருந்து இப்படி ஆகிட்டான்களோ" என்று நினைக்க,***

***"எனக்கு என்னவோ ரெண்டு போரையும் பார்த்தா... இது ரொம்ப நாளாவே நடக்கிற மாதிரி தான் இருக்கு, ஒரு வேலை இவங்க விஷயம் தெரிஞ்சு தான், ஷ்ருதி அப்படி பேசினாலோ என்னவோ... நீ எதுக்கும் ஷ்ருதிகிட்ட கேட்டு பாரு" என்றார் கிருஷ்ணகுமார்.***

***"யாரு...உங்க பொண்ணுதானே சொல்லிட்டு தான் மறுவேலை பார்ப்பா... அதெல்லாம் அவகிட்ட இருந்து ஒரு வார்த்தை வாங்க முடியாது, எப்படியோ... ப்ரியா நம்ம வீட்டுக்கு மருமகளா வந்தா சந்தோசம் தான், சரி வாங்க அவங்க ரெண்டு போரையும் கொஞ்சம் மிரட்டிட்டு வரலாம்" என்ற சாருமதி க்ரிஷ்ணகுமாருடன் சத்தமாக பேசிக்கொண்டு வெளியே வர, அப்போது தான் ப்ரியாவிற்கு வாயில் உணவை கொடுத்துவிட்டு கையை எடுத்துகொண்டிருந்தான் கௌதம்.***

***கிருஷ்ணகுமாரும், சாருமதியும் திடிரென்று அவர்கள் எதிரில் சென்று அமர, அதை எதிர்பாராத கௌதமும்,ப்ரியாவும் முழித்தனர்.***

ப்ரியா கௌதம் கொடுத்த உணவை, மெல்ல முடியாமல்... ஆடு திருடின கள்ளன் அகப்பட்டதை போல் அமர்ந்திருந்தாள்.

சாருமதி "என்ன ப்ரியா கௌதமுக்கு சாப்பாடு போடறியா" என்றதும் வாயில் உணவு இருந்ததால் தலையை மட்டும் ஆமாம் என்று ஆட்டினாள். கௌதமிடம் "கார்த்திக், அவங்க வீட்டுக்கு போயிட்டானா" என்று கேட்ட சாருமதி, அங்கிருந்த சாப்பாடு பாத்திரத்தை திறந்து பார்க்க அதில் சாதம் காலியாகி இருந்தது.

"பரவாயில்லை ப்ரியா நீ சாப்பாடு போட்டதும், கௌதம் ரெண்டு ஆள் சாப்பாடு சாப்பிட்டிருக்கான். நான் கார்த்திக்கும் சேர்த்து செஞ்சிருந்தேன்" என்று சாருமதி சொன்னதும்,

ப்ரியாவிற்கு புறை ஏறி இருமலோடு, வாயில் வைத்திருந்த சாப்பாடும் சேர்ந்து வெளியில் வர, கௌதம் அவள் தலையில் தட்ட... சாருமதி அவளுக்கு தண்ணிரை புகட்டியவர் "நீயும் சாப்பிடுறியா... ஆனால் உன் கையில் தட்டு இல்லையே" என்று கேட்க, ப்ரியாவிற்கு திரும்பவும் புறை ஏறியது.

"அம்மா! தெரிஞ்சிகிட்டே ஏன் கேட்கறீங்க, நீங்க எங்கள பார்த்திட்டு தானே அப்பாவையும் கூடிட்டு வந்தீங்க, அப்புறம் என்ன தெரியாத மாதிரி கேட்கறீங்க, இப்ப உங்களுக்கு என்ன தெரியனும் நேரடியா கேளுங்க" என்று கௌதம் சொன்னதும்,

"அப்படி வா வழிக்கு, எத்தனை நாளா இது நடக்குது..."

"அது நடக்குது ரொம்ப வருஷமா... " என்றான் கௌதம்.

"அடப்பாவி! எவ்ளோ தைரியம் உனக்கு, சரி எனக்கு ப்ரியாவை பிடிக்கலைனா என்ன பண்ணுவ" என்று சாருமதி கேட்க,

"எனக்கு பார்க்கிற பொண்ணு எப்படி இருக்கனும்ன்னு, என்னை கேட்பீங்க இல்ல, எனக்கு ப்ரியா மாதிரி பொண்ணுதான் வேணும், முடிஞ்சா போய் கண்டு பிடிச்சு கூட்டிட்டு வாங்க, அப்புறம் பார்க்கலாம்" என்று கௌதம் சவால்விட இப்போது சாருமதி முழித்தார்.

"எனக்கு தெரியும் மா... உங்களுக்கு ப்ரியாவ ரொம்ப பிடிக்கும்ன்னு, ஏன் எனக்கே ப்ரியாவ நேர்ல பார்க்காமலே பிடிச்சதுக்கு, நீங்க தான் காரணம். எப்பவும் இவளை பத்தி தான் நீங்க பேசுவீங்க, அப்புறம் உங்களுக்கு ப்ரியாவ பிடிக்காதா... எதாவது நம்புற மாதிரி சொல்லுங்க" என்றான் கௌதம்.

"அவன் தெளிவா தான் இருக்கான்" என்ற கிருஷ்ணகுமார் ப்ரியாவை பார்த்து, நீ சாப்பிடுமா என்றவர், சாருமதியை அழைத்து கொண்டு அவர்கள் அறைக்கு செல்ல, சாருமதியும் சிரித்து கொண்டே சென்றார்.

அவர்கள் உள்ளே சென்றதும் கௌதம், ப்ரியாவை பார்க்க, அவள் முகம் முழுதும் சிவந்து இருந்தது. கௌதம் ப்ரியா என்று அழைக்க

***அவனை நிமிர்ந்து பார்த்த ப்ரியா"அத்தை எங்க அம்மாட்ட சொல்லிடுவாங்களா..." என்று கேட்க,"அதெல்லாம் சொல்ல மாட்டாங்க, நீ கவலை படாதே..." என்றவன் கையை கழுவிவிட்டு, அவளை அழைத்து கொண்டு... ஹாலுக்கு வந்து டிவியை போட்டுவிட்டு அவளுடன் சோபாவில் அமர்ந்தான்.***

***சிறிது நேரம் தங்கள் காலேஜ் கதைகளை பேசியவர்கள்... நடக்கவிருக்கும் விழாவை பற்றி பேச.... ப்ரியா தன்னை வினோத் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க சொல்லி இருப்பதாக சொன்னவள், தனக்கு பயமாக இருப்பதாக சொல்ல, கௌதம்"பயப்படாத உன்கூட கார்த்திக்கும் இருப்பான்" என்றதும், ப்ரியா மகிழ்ச்சி அடைந்தாள்.***

***இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது ப்ரியா கௌதமிடம் அவனது முதல் வருடம் நோட்ஸ் கேட்க, கௌதம் ப்ரியாவை அழைத்து கொண்டு அவனது அறைக்கு சென்றான், பரண் மேல வைத்திருந்த நோட்ஸை எடுத்து ப்ரியாவிடம் கொடுக்க, அவள் அதை பிரித்து பார்த்துகொண்டிருக்கும் போது ப்ரியாவின் செல் அடித்தது... அவளது அம்மா தான் அழைத்து இருந்தார், தாங்கள் கிழே இருப்பதாகவும் ப்ரியாவையும் அங்கே வர சொன்னார், சரி என்றவள் கௌதமிடம்"நான் போகணும் அம்மா வந்துட்டாங்க" என்றாள்.***

***ப்ரியா கிளம்ப வேண்டும் என்றதும் கௌதம் முகம் வாடிவிட்டது, அதை கவனித்த ப்ரியா அவனின் தோள் சாய, அவளை இறுக அனைத்து பின் விலகிய கௌதம்"சரி.. கிளம்பு ப்ரியா" என்றான். அவள் அவனை விட்டு விலகாமல் அவன் முகம் பார்க்க... அவளது நெற்றியில் முத்த மிட்டவன், பின்பு அவளது இதழ்களிலும்***

***முத்தமிட்டு"டைம் ஆகிடுச்சு... அப்புறம் அத்தை உன்னை தேடிட்டு மேல வரப்போறாங்க" என்றதும் அவனை பார்த்து சிரித்த ப்ரியா அவனை திரும்பி திரும்பி பார்த்துக்கொண்டே செல்ல... வெளியே வரை அவளோடு சென்ற கௌதம் நாளைக்கு காலேஜ்ல பார்க்கலாம் என்றதும் சரி என்று தலை ஆட்டிவிட்டு ப்ரியா சென்றாள்.***

13

***மறுநாள் காலை பஸ்சில் செல்வதற்காக ப்ரியா நிற்க, அப்போது அங்கே வந்த காவ்யா அவளோடு நிற்காமல் விலகி நின்றாள், ப்ரியா அவளோடு பேச செல்ல... அதை கண்டு கொள்ளாமல் பஸ்சில் ஏறியவள், ப்ரியாவுடன் அமராமல் வேறு இருக்கையில் அமர, ப்ரியா முகம் வாடிவிட்டது.***

***கௌதம் வழக்கம் போல் கார்த்திக்குடன் ஆபீஸ் முன் நின்றவன், இன்றும் இருவரும் வேறு வேறு இருக்கையில் அமர்ந்திருப்பதையும், ப்ரியாவின் கண்கள் கலங்கி இருப்பதையும் பார்த்து கார்த்திக்கிடம் நடந்ததை சொல்ல, இவ ஏன் என் மேல இருக்குற கோபத்தை ப்ரியா மீது காட்டுகிறாள் என்று நினைத்த***

Ramya Rajan

***கார்த்திக், இருடி நேர்ல வந்து உன்னை கவனிச்சிக்கிறேன் என்று நினைத்து கொண்டான்.***

***கல்லூரியில் நடக்கவிருக்கும் விழாவிற்காக வினோத், கௌதம், கார்த்திக் மற்றும் இன்னும் சிலரும் ஆடிட்டோரியத்தில் கூடி இருந்தனர். வினோத் கௌதமிடம் ஒரு லிஸ்ட்டை கொடுத்து இதில் பாட விருப்பம் இருக்கிறவர்களின் பெயர்கள் இருக்கிறது, இவர்களில் யார் நன்றாக பாடுகிறார்களோ... அவர்களை அவனையே தேர்வு செய்ய சொல்லி, அவர்களுக்கு பயிற்சி அளிக்க சொன்னான்.***

***அதே போல் கார்த்திக்கிடம் அவனும், ப்ரியாவும் என்ன பேசவேண்டும், எப்படி நிகழ்ச்சி தொகுத்து வழங்க வேண்டும், என்பதை அவனையே முடிவு பண்ண சொன்னவன், மற்ற வேலையை பார்க்க செல்ல. மற்றவர்களும் அவனுடன் சென்றுவிட்டனர்.***

***கௌதம் லிஸ்ட்டில் இருந்த பெயர்களை பார்த்தவன், தனது பேனாவை எடுத்து லிஸ்டில் காவ்யா என்ற பெயரையும் சேர்த்து, இவர்களை எல்லாம் கூப்பிட்டு வரும்படி ஜூனியர் மாணவன் ஒருவனிடம் சொல்ல, எதுக்கு அவள் பேர எழுதுறான் என்று கார்த்திக் நினைத்தான்.***

***ஆடிட்டோரியம் உள்ளே பயந்து கொண்டே வந்த ப்ரியா அங்கே கௌதமையும், கார்த்திக்கையும் பார்த்து முகம் மலர்ந்தாள், அவளை***

பார்த்த வினோத்"ஹாய் ப்ரியா" என்றவுடன், அவன் அருகில் சென்று நின்றவள்"வர சொன்னிங்களா" என்று கேட்க"ஆமாம்... இங்கே வா" என்று அவளை அழைத்து கொண்டு கார்த்திக் அருகே சென்றவன், ப்ரியாவை அவனுக்கு அறிமுகம் செய்தான். கார்த்திக் ப்ரியாவை தெரியும் என்பதை காட்டி கொள்ளாமல்"இவங்க தான் நீ சொன்ன குடும்ப குத்து விளக்கா" என்று வினோத்திடம் கேட்க ஆமாம் என்றவன் ப்ரியாவிடம்"கார்த்திக் உனக்கு எல்லாம் சொல்லி தருவான் சரியா, கார்த்திக் பார்த்துக்கோ" என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

வினோத் சென்றதும் கார்த்திக்கை பார்த்து ஹாய் என்ற ப்ரியா அவனுடன் நின்று கொண்டிருந்த கௌதமை காட்டி"இவங்க யாரு, பேர் என்ன?" என்று குறும்பு புன்னகையுடன் கேட்டாள், கார்த்திக்"உனக்கு இவனை தெரியாது" என்று கேட்க, ப்ரியா இல்லை என்று தலை ஆட்டினவள், கௌதமை வம்பு இழுக்க எண்ணி"பார்த்ததும் தெரிஞ்சிக்க... இவங்க என்ன அவ்வளவு பெரிய ஆளா" என்று கேட்க, கார்த்திக்"உனக்காவது இந்த பொண்ணு யாருன்னு தெரியுமா" என்று கௌதமிடம் கேட்டான். கௌதம் ப்ரியாவை பார்த்துக்கொண்டே"தெரியாது... ஆனா ...ஒரு ரெண்டு மூணு தடவை... முத்தம் மட்டும் கொடுத்திருக்கேன்" என்றதும் ப்ரியா முகம் ஜிவ் என்று சிவந்துவிட்டது, இவன்கிட்ட போய் வாயை கொடுத்தேனே என்ன சொல்லணும் என்று நினைத்தவள், கார்த்திக்கை நிமிர்ந்து பார்க்க முடியாமல் நிற்க, கார்த்திக் சத்தமாக சிரித்தவன்"இது உனக்கு தேவையா ப்ரியா" என்றதும் கௌதமை பார்த்து முறைத்தவள், ஓரமாக இருந்த பெஞ்ச்சில் சென்று அமர்ந்துவிட்டாள்.

*"ஏண்டா... அவளை போட்டு படுத்துற பாரு... கோவிச்சிகிட்டா" என்று கார்த்திக் கௌதமிடம் சொல்ல...*

*"நானா அவள வம்பிழுத்தேன், சும்மா நின்னவன தேவை இல்லாம சீண்டினா இப்படிதான் ஆகும், அதெல்லாம் கொஞ்ச நேரத்தில சரி ஆகிடுவா" என்றான் கௌதம். அப்போது அங்கே கௌதம் அழைத்து வர சொன்னவர்கள் அனைவரும் வந்தனர், அவர்களோடு வந்த காவ்யா நான் பேரே கொடுக்கலை, அப்புறம் என் பெயர் எப்படி லிஸ்டில் வந்தது என்று யோசித்தவள், வேறு யாரவது காவ்யாவாக இருக்கும் சொல்லிவிட்டு வந்துவிடலாம் என்று நினைத்து வந்தவள், அங்கே கௌதம், கார்த்திக் மற்றும் ப்ரியாவை பார்த்ததும் அமைதியாக நின்றாள்.*

*கௌதம் ப்ரியாவை பார்த்து சத்தமாக"ஹலோ மேடம், இங்க வாங்க" என்று கூப்பிட... திரும்பி பார்த்த ப்ரியா... அவன் வேறு யாரையோ கூப்பிடுகிறான் என்று நினைத்து, அமைதியாக இருக்க"நீங்க தான் இங்க வாங்க" என்றான். திமிர பாரு என்று மனதில் திட்டி கொண்டே அவன் அருகில் வந்து நின்றாள் ப்ரியா.*

*"சும்மா தானே இருக்கீங்க,,, கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்க என்றவன் அவளிடம் சில பேப்பர்களை கொடுத்து, இந்த லிஸ்ட்ல இருக்குற பேரை எல்லாம் இதுல எழுதி... அப்படியே மார்க் போட... ரெண்டு காலமும் போட்டு தர்றீங்களா ப்ளீஸ்.... எனக்கு ஜட்ஜ் பண்ண ஈசியா இருக்கும்" என்று சொல்ல,*

ஆமா... இவர் பெரிய ஏர்டெல் சூப்பர் சிங்கர்க்கு ஜட்ஜ் மாதிரி கொடுக்கிற பில்ட்அப் பாரு, என்று நினைத்து கொண்டே அவன் கொடுத்த பேப்பர்ரை வாங்கி கொண்டு சென்று பெஞ்ச்சில் அமர்ந்தாள்.

"முதலில் ஒரு பேப்பர்ல பைனல் இயர் படிக்கிறவங்க, பேர் எழுதி கொண்டு வாங்க" என்ற கௌதம், எல்லோரையும் அமர சொல்லி அவர்களுடன் அவனும் அமர்ந்துகொண்டான்.ப்ரியா வேகமாக முதலில் ஒரு பேப்பரில் பெயர்களை எழுதி கோடு போட்டு கொண்டு வந்து கொடுத்துவிட்டு மீதியை எழுத சென்றாள்.

அப்போது காவ்யா கௌதமின் அருகில் வந்து"நான் பாட பேர் கொடுக்கலை" என்றாள் அதற்க்கு கௌதம்"எனக்கு அதெல்லாம் தெரியாது... உங்க பேர் லிஸ்ட்ல இருக்கு, நீங்க பாடித்தான் ஆகணும்" என்று சொல்லிவிட்டு லிஸ்டில் முதலில் இருந்த நபரின் பேரை அழைத்து பாட சொன்னான்.

இப்படியே ஒவ்வொருத்தராக பாட... காவ்யா மெதுவாக

ப்ரியாவின் அருகே சென்றவள்"இது உன் வேலையா" என்று கேட்டதும் காவ்யா சொன்னது புரியாமல் முழித்த ப்ரியா"என்ன வேலை..." என்று கேட்க,

"சும்மா நடிக்காத, நீ தான கௌதம்ட்ட சொல்லி.... என் பேர லிஸ்ட்ல எழுத வச்சி, என்னை வர வச்சிருக்க" என்று கேட்க.

*"நான் அப்படி எதுவும் சொல்லலை காவ்யா, ஆனா... முன்னாடி நீ நல்லா பாடுவேன்னு கௌதம்ட்ட சொல்லி இருக்கேன்" என்றாள் ப்ரியா.*

*இவர்கள் இருவரும் பேசுவதை கார்த்திக் கேட்டு கொண்டிருக்க, தூரத்தில் இருந்து பார்த்து கொண்டிருந்த கௌதம், எழுந்து வந்தவன்"காவ்யா நான் தான் உங்க பேர லிஸ்ட்ல எழுதினேன், ப்ரியா என்னால உங்க ரெண்டு பேருக்கும் சண்டை என்றாள், அதனால சாரி கேட்கலாம்ன்னு நினைச்சி தான் வர சொன்னேன், சாரி காவ்யா" என்றான்.காவ்யா பதில் சொல்லாமல் நிற்க, கௌதம்"நீங்க நல்லா பாடுவீங்கன்னு தெரியும், விருப்பம் இருந்தா பாடலாம்" என்றான். காவ்யா மறுத்துவிட்டு செல்ல, கௌதம் மறுபடியும் சென்று பாடுபவர்களுடன் அமர்ந்தான்.*

*கார்த்திக் ப்ரியாவிடம்"இங்கேயே இரு வரேன்" என்று வேகமாக வெளியே சென்றவன், காவ்யாவின் எதிரில் போய் நின்று"உன்கிட்ட கொஞ்சம் பேசணும் வா" என்றான். அவள் வர மறுக்க"இப்ப நீ வரலைனா.... அன்னைக்கு சும்மா மிரட்ட எடுத்த கல்லை... இன்னைக்கு நிஜமாவே எடுத்து தலைல போட்ருவேன் வா" என்றதும், அவன் பின்னே சென்றவளை வண்டி பார்க் செய்யும் இடத்துக்கு அழைத்து சென்றவன்.*

*"உனக்கு என் மேல தானே கோபம், அதை எதுக்கு நீ ப்ரியா மேலயும், கௌதம் மேலயும் காட்ற. கௌதமுக்கு நல்லா தெரியும், நீ அவன் மேல கோப பட காரணமே இல்லைன்னு, அப்படி இருந்தும் அவன் ப்ரியாவுக்காக உன்கிட்ட சாரி கேட்டான், உனக்கு பாட இஷ்டம்*

***இல்லைனா நீ பாட வேண்டாம், ஆனா ...அவன் உன்கிட்ட சாரி கேட்டதுக்கு, நீ எதாவது மறுப்பு சொல்லி இருக்கலாம். எதோ அவன் தப்பு செஞ்ச மாதிரி பில்ட்அப் கொடுக்கிற. அன்னைக்கு நீ என்னை அடிச்சது, எனக்கு காயமே ஆகிடுச்சு அப்ப எப்படி வலிச்சிருக்கும்ன்னு நினைச்சி பாரு, எதோ கோபத்தில உன்னை அடிக்க வந்தேன் ஆனா அடிச்சேனா, இனிமே நீ இருக்குற பக்கமே வரமாட்டேன், ஆள விடு" என்றவன் வேகமாக அங்கிருந்து செல்ல...***

***காவ்யாவிற்கு தான் செய்த தவறு புரிந்தது. ப்ரியா ஒன்றும் அவளை கார்த்திக்கிடம் பேச சொல்லவில்லை, இவளாக தான் பேச சென்றாள் அப்படி இருக்கும் போது தான் ப்ரியா மீதும், கௌதம் மீதும் கோப பட்டது நியாயம் இல்லை என்று உணர்ந்தவள் மீண்டும் ஆடிட்டோரியம் சென்றாள்.***

***காவ்யா நேராக ப்ரியாவிடம் சென்றவள்"சாரி ப்ரியா, நான் தேவை இல்லாம கோப பட்டுட்டேன்" என்றாள். ப்ரியா"பரவாயில்லை காவ்யா" என்றதும் கௌதம் அருகில் சென்றவள்"சாரி கௌதம் அண்ணா" என்றாள்.கௌதம் திடிரென்று காவ்யா வந்து சாரி கேட்கவும் ப்ரியாவை பார்த்தவன்"பரவாயில்லை காவ்யா, நண்பர்களுக்குள்ள சண்டை வருவது சகஜம்" என்று சொல்ல ஆமாம் என்று தலை ஆட்டினவள்"நான் பாடட்டுமா..." என்று கேட்க சரி என்றான் கௌதம்.காவ்யா சென்று பாடுபவர்களுடன் அமர்ந்தவள், திரும்பி கார்த்திக்கை பார்க்க... அவன் ப்ரியாவுடன் எதோ பேசி கொண்டிருந்தான்.***

***காவ்யா தனது வாய்ப்பு வந்த போது நன்றாகவே பாடினாள், கார்த்திக் நிமிர்ந்து அவளை பார்க்கவில்லையே தவிர, அவள் பாடியதை கேட்டு கொண்டு தான் இருந்தான்.***

Ramya Rajan

கௌதம் அவரவர் பாடி முடித்ததும், மறுநாள் இதே இடத்திற்கு வர சொல்லி அனுப்பினான். காவ்யா பாடி முடித்ததும் ப்ரியாவும் அவளுடன் கிளம்பினாள். ப்ரியாவும்,காவ்யாவும் அன்று மாலை கல்லூரியில் இருந்து ஒன்றாக வீட்டிற்க்கு சென்றார்கள்.

ப்ரியா அன்று இரவு தனது அறையில் வந்து படுத்ததும், கௌதமிற்கு அழைத்தாள்... அவள் எண்ணை போன்னில் பார்த்ததும் கௌதம் திட்ட தான் போன் பண்றா என்று கண்டுபிடித்தவன், எதுவும் தெரியாத மாதிரி,

"ஹாய் ப்ரியா..., என்ன இந்த நேரத்தில போன் பண்ணியிருக்க?" என்று கேட்க...

"உங்களுக்கு கார்த்திக் அண்ணா முன்னாடி என்ன பேசுறதுன்னு தெரியாதா... இப்படியா என் மானத்தை கார்த்திக் அண்ணா முன்னாடி வாங்குவீங்க" என்றவளின் குரல் அழுகையில் தேய.

"ஹே... அழாத ப்ரியா சும்மா விளையாட்டுக்கு சொன்னேன். நம்ம கார்த்திக் தானே இதுக்கெல்லாம் கோவிச்சுக்கலாமா" என்ற கௌதம் "சரி... சாரி ப்ரியா" என்றதும்,

"உங்க சாரியும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம், இனிமே நம்ம கல்யாணம் முடியற வர என்கிட்டயே வராதீங்க, நானும் வரமாட்டேன்" என்று ப்ரியா பொறிய...



Ramya Rajan

***கௌதம் அமைதியாக இருக்க, ப்ரியா என்ன ஒன்னும் சொல்ல மாட்றான் என்று நினைத்தவள் "ஹலோ ..ஹலோ என்று இரு முறை அழைத்தும்" பதில் இல்லை என்றதும்"கௌதம் இருக்கீங்களா" என்று கேட்க"ம்ம்..." என்றவன் குரல் மெதுவாக கேட்டதும், ரொம்ப பீல் பண்றானோ என்று நினைத்த ப்ரியா"கௌதம் என்ன ஆச்சு?" என்று கேட்க....***

***"நீ இப்ப சொன்னது உண்மையாவா ப்ரியா, நான் உன் பக்கத்தில நம்ம கல்யாணம் முடியற வரை வர கூடாதா.... ஹே... அப்ப நாளைக்கே நாம கல்யாணம் பண்ணிக்கலாம்" என்று கௌதம் சந்தோஷமாக போன்னில் கத்த....***

***ப்ரியா இது திருந்தாத கேசு என்று போன்னை வைத்துவிட்டாள்.***

***மறுநாள் கல்லூரி ஆடிட்டோரியத்தில் முதல் நாள் பாட வந்தவர்கள் அனைவரும் வந்திருந்தனர். எல்லோரும் டென்ஷன்னாக இருக்க, கார்த்திக்கும்.... ப்ரியாவும் யார் எல்லாம் தேர்ந்து எடுக்க பட்டார்கள் என்பதை தெரிந்து கொள்ள மிகவும் ஆர்வமாக இருந்தார்கள்.***

***கௌதம் லிஸ்டில் இருந்த பெயர்களை நான்கு பிரிவாக பிரித்தவன், ரொம்ப நன்றாக பாடியவர்களை டூயட் பாட்டுக்கும், மெட்லிக்கும் தேர்ந்தெடுத்தான், பாடுவதுடன் ஆடவும் தெரிந்தவர்களை... சாங் அண்ட் டான்ஸ்க்கு தேர்வு செய்தான், கடைசியாக சுமாராக பாடியவர்களை குரூப் சாங்கில் பாட சொன்னான், ஆக மொத்தம் கௌதம் யாரையும் நீங்க நல்லா பாடலை என்று திருப்பி***



Ramya Rajan

***அனுப்பவில்லை, அவனின் முடிவு அனைவருக்கும் மகிழ்ச்சியை கொடுக்க, எல்லோரும் சேர்ந்து பாடல்களை தேர்வு செய்தனர்.***

***காவ்யா மெட்லி பாடல்களுக்கு தேர்வு செய்ய பட்டிருந்தாள், அவள் இது வரை கௌதமை கோபக்காரன், இவன் எப்படி மென்மையான குணம் கொண்ட ப்ரியாவுக்கு பொருந்துவான் என்று நினைத்து கொண்டிருந்தாள், ஆனால்... இன்று கௌதமின் செயல் அவளுக்கு அவன் மேல் நல்ல மதிப்பை ஏற்படுத்தியது.***

***காவ்யா ப்ரியாவிடம் "கௌதம் அண்ணா ரொம்ப நல்லவங்க, நான் தான் அவங்களை தப்பா நினைச்சிட்டேன், கௌதம் அண்ணாவோட ப்ரண்ட் கார்த்திக் கூட நல்லவங்க தான் இல்ல" என்றாள்.***

***காவ்யா கௌதமை அண்ணா என்றதையும் கார்த்திக்கை அண்ணா என்று சொல்லவில்லை என்பதையும் குறித்து கொண்ட ப்ரியா"ஆமா... ரொம்ப நல்லவங்க" என்றாள்.***

***ஆடிடோரியத்தில் நடன பயிற்சி செய்ய சில மாணவ மாணவிகள் வந்தனர். அவர்களுடன் வந்த வர்ஷா சுபாவிடம்"இவ என்னடி பண்றா இங்க" என்று ப்ரியாவை காட்டி கேட்க, சுபா"இவளும் பாட்டு பாடறா போல" என்றாள் அப்போது அங்கே வந்த வினோத் எல்லோரையும் அழைத்தவன்"வரும் சனிக்கிழமை அன்று காலேஜ் லீவ், ஆனா... பிரக்டீஸ் பண்ண எல்லோரும் 10 டு 4 கண்டிப்பா வரணும்" என்றவன் கார்த்திக் மற்றும் ப்ரியாவிடம்"நீங்களும் தான், காம்பியரின்க் தானே பண்றோம் என்று நினைக்காமல் வந்து பிரக்டீஸ் பாண்ணுங்க" என்றான்.***

***ப்ரியா காம்பியரின்க் பண்ணுகிறாள் என்பதை கேட்டு திடுகிட்ட வர்ஷா வினோத்திடம்"நீங்க எப்படி காம்பியரின்க் பண்ண பஸ்ட் இயர் பொண்ண போடலாம்?" என்று கேட்க"இது ஒன்னும் காலேஜ் கல்ச்சுரல்ஸ் இல்ல வர்ஷா, இது நம்ம மொத்த கல்லூரியும் சேர்ந்து ஒரு நல்ல விஷயத்துக்காக பணம் சேர்க்க, ஒரு ப்ரோக்ராம் செய்றோம் இதுல சீனியர்... ஜூனியர்... அப்படின்னு ஏன் பார்க்கணும்" என்றான் வினோத்,***

***அப்போது அங்கிருந்த நான்காம் வருடம் மாணவன் ஒருவன்"வர்ஷா சொல்றது கரெக்ட் தான்" என்றதும், வர்ஷா கர்வத்தோடு எல்லோரையும் ஒரு பார்வை பார்க்க, அந்த மாணவன் தொடர்ந்து"நமக்கு கூட்டம் சேரனும் அதனால முதல் பாதி ப்ரியா காம்பியரின்க் பண்ணட்டும். டிக்கெட் எல்லாம் வித்ததும், வர்ஷா காம்பியரின்க் பண்ணட்டும், வந்த கூட்டம் எல்லாம் ஓடிடும்... நாமளும் ப்ரீயா இருக்கலாம் சிம்பிள்" என்றதும், எல்லோரும் சிரிக்க... வர்ஷா கோபமாக வெளியே சென்றுவிட்டாள். அவளோடு வந்த சுபா"நீயே ஏன்டி வாயை கொடுத்து வாங்கி கட்டிக்கிற" என்றதும்"இருடி எனக்குன்னு ஒரு காலம் வராமையா போய்டும், அப்ப பார்த்துகிறேன்" என்றாள்.***

***ஆடிட்டோரியத்தில் இருந்து எல்லோரும் சென்று விட்டனர். கார்த்திக்கும், ப்ரியாவும் விழாவில் நடக்கும் நிகழ்சிகளை பேப்பரில் எழுதி கொண்டிருந்தனர், ப்ரியா பக்கத்தில் காவ்யா அமர்ந்து இருந்தாள். அப்போது அவர்கள் அருகில் வந்த கௌதம்"என்னடா... முடிஞ்சுதா கிளம்பலாமா" என்று கேட்டவன், ப்ரியா அவனை நிமர்ந்து பார்க்காமல் இருப்பதை பார்த்து, வேண்டுமென்றே"டேய் கார்த்திக், அந்த பையனுக்கு கண்ணு தெரியாதாடா... அந்த வர்ஷா***

பொண்ணு எவ்வளவு அழகா இருக்கு... அவன் இந்த பொண்ண போய் அழகுன்னு சொல்றான்" என்று ப்ரியாவை காட்டி கேட்டவன். நான் வர்ஷாவுக்கு தான் சப்போர்ட் பண்ணுவேன்" என்றான்.

ப்ரியா"கார்த்திக் அண்ணா சும்மா இருக்க சொல்லுங்க" என்றாள் ஆனால் அவள் சொன்னதை கண்டுகொள்ளாமல் கௌதம், மேலும்"இந்த வருஷம் வர்ஷா சாங் அண்ட் டான்ஸ்க்கு வரலை, அதனாலதான் நானும் போகலை" என்றதும் எழுந்து அவள் பையை தோளில் மாட்டிய ப்ரியா, கௌதம் அருகில் செல்ல, கார்த்திக்கும், காவ்யாவும் அவளையே பார்த்து கொண்டிருந்தனர். சுற்றிலும் ஒரு முறை பார்த்தவள்... யாரும் இல்லை என்றதும், கௌதம் கையை பிடித்து இழுத்து... வாயில் வைத்து நறுக்கென்று கடித்தாள், கௌதம் வலியில்"டேய்.... நிஜமாவே கடிகிறாடா..." என்று கத்த கார்த்திக்கும், காவ்யாவும் விழுந்து, விழுந்து சிரித்தனர்.ப்ரியா கையை விட்டதும் அவளை கௌதம் அடிக்க துரத்த, அவள் காவ்யாவை இழுத்து கொண்டு வேகமாக வெளியே சென்றுவிட்டாள்.

பஸ்சில் ஏறி அமர்ந்த பின்னரும் ப்ரியாவாலும், காவ்யாவாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை, அவர்கள் சிரித்து கொண்டே இருந்தனர்.

வீட்டுக்கு வந்த கௌதம் நேராக சாருமதியிடம் சென்றான், கார்த்திக் ஷ்ருதியிடம் இன்று காலேஜ்ல் நடந்ததை சொல்ல, அவளால் நம்பவே முடியவில்லை"ப்ரியா வா அப்படி செஞ்சா... " என்று அவள் கார்த்திக்கிடம் திரும்ப திரும்ப கேட்டாள், அப்போது சாருமதியுடன் வந்த கௌதம் போன்னை அவர் கையில் கொடுத்து"அம்மா

அவளுக்கு போன் போட்டு திட்டுகம்மா...எதுக்குடி என் பையன கடிச்சேன்னு கேளுங்க அம்மா?" என்றான்.

"டேய் என்னடா இது, நீ LKG படிக்கும் போதும் இப்படி தான் யாரவது கடிச்சிட்டாங்கன்னு வருவ, இப்ப MBA படிக்கும் போதுமா கடிசிட்டாங்கன்னு வருவ... அவ கடிச்சா... நீயும் பதிலுக்கு கடி" என்றார்.

ப்ரியா மனம் கேளாமல் கௌதமை போன்னில் அழைக்க, போன்னை எடுத்தவன்"என்னடி... இன்னைக்கு நைட் டின்னெர் சாப்பிட்டு இருக்க மாட்டியே" என்றான்.

"ஆமா... உங்களுக்கு எப்படி தெரியும்" என்று ப்ரியா ஆச்சர்யப்பட,

"நீ தான் என் கைல இருந்து, அரை கிலோ கறிய கடிச்சே திண்ணுட்ட... அப்புறம் எப்படி உனக்கு பசிக்கும்"

ப்ரியா"நான் சும்மா லேசா தான் கடிச்சேன், ஓவர் ஆக்ட் பண்ணாதீங்க."

"சின்ன கடியா... எனக்கு தானே தெரியும் வலி எப்படி இருக்குன்னு" என்று கௌதம் புலம்ப...

"சாரி கௌதம்..."

Ramya Rajan

*"யாருக்கு வேணும் சாரி"*

*"இப்ப என்ன பண்ணனும்ன்னு சொல்றீங்க" என்று ப்ரியா முடிவாக கேட்க ....*

*"நானும் உன்ன பதிலுக்கு கடிப்பேன்" என்றான் கௌதம்*

*"சரி கடிச்சு தொலைங்க" என்று தான் அவனிடம் மாட்டி கொள்ள போவதை அறியாமல் சொன்னாள் ப்ரியா.*

*கல்லூரியில் விழாவிற்காக மாணவர்கள் தீவிரமாக பயிற்ச்சி செய்து கொண்டிருந்தனர். சனிக்கிழமையும் பயிற்ச்சி இருந்ததால் ஆடிட்டோரியத்தில் ஆளுக்கு ஒரு பக்கம் பயிற்ச்சி செய்து கொண்டிருந்தனர். கார்த்திக்கும், ப்ரியாவும் பயிற்ச்சி செய்யும் போது ப்ரியாவோடு பேசவேண்டும் என்று ஆசைப்பட்ட சில பேர், எதாவது பேச வேண்டும் என்பதற்காக ப்ரியாவுக்கு ஜூஸ் வேண்டுமா, காபி வேண்டுமா என்று ஒரே தொந்தரவு, வேண்டாம் என்றால் ஏன் என்று பேச்சை வளர்க்க, அதற்க்கு அவர்கள் கொடுப்பதை தேங்க்ஸ் என்று சொல்லி வாங்கி வைத்து கொண்டாள்.*

*ப்ரியா பயிற்ச்சி செய்வதும்... சிறிது நேரம் தீனி தின்பதுமாக இருந்தாள், அவளை பார்த்து கார்த்திக் சிரித்து கொண்டிருந்தான். தூரத்தில் இருந்து கௌதம் ப்ரியாவை பார்க்கும் போது எல்லாம் அவள் எதாவது சாப்பிட்டு கொண்டிருந்தாள்.*

Ramya Rajan

***சற்று நேரம் மற்றவர்களை ஒய்வு எடுக்க சொன்ன கௌதம் கார்த்திக்கும், ப்ரியாவும் இருக்கும் இடத்திற்கு வந்தான், அப்போது அங்கே ஒருவன் ப்ரியாவிடம் எதோ பேசிக்கொண்டே ஜூஸ் கொடுக்க அவளும் வாங்கி கொண்டே நிமிர்ந்து பர்ர்த்தவள், கௌதம் கண்களில் தெரிந்த கோபத்தை பார்த்து பயந்து வேகமாக"ஜூஸ்.. கார்த்திக் அண்ணாக்கு" என்று கார்த்திக்கிடம் கொடுக்க, முதலில் முழித்த கார்த்திக் பின்பு அவளின் முகத்தில் தெரிந்த கலவரத்தை பார்த்ததும் வாங்கி கொண்டான். கௌதம் எதுவும் பேசாமல் வெளியில் சென்றுவிட,***

***ப்ரியா கார்த்திக்கிடம்"நான் என்ன பண்றது கார்த்தி அண்ணா, நானா கேட்டேன் அவங்களா கொண்டு வந்து தறாங்க.... சாப்பாடு வேஸ்ட் பண்ண கூடாது இல்ல... அதனால தான் சாபிடுறேன்" என்று சொல்ல, கார்த்திக் "வேஸ்ட் பண்ண கூடாதுன்னு தான் சாப்பிடுற... இல்லைனா சாப்பிட மாட்ட" என்று கேட்க, ப்ரியா ஆமாம் என்று தலை ஆட்டினாள், கார்த்திக் "நம்பிட்டேன்..." என்று சொல்லி சிரிக்க***

***அப்போது காவ்யா ப்ரியாவின் அருகில் வர, அவளை பார்த்த கார்த்திக் ப்ரியாவிடம்"நான் கௌதம் என்ன பண்றான்னு பார்த்திட்டு வரேன்" என்று வெளியில் சென்றான்.***

***தன்னை தவிர்க்க தான் அவன் வெளியில் செல்கிறான் என்று நினைத்த காவ்யாவின் முகம் வாட, அதை ப்ரியாவும் கவனித்தாள். சிறிது நேரம் கழித்து உள்ளே வந்த கார்த்திக் ப்ரியாவிடம்"கௌதம் எங்க போன்னான்னு தெரியல" என்றான்."அவங்க வந்திடுவாங்க, அண்ணா... உங்களுக்கு காவ்யாவை தெரியும், இருந்தாலும் நான் இதுவரை அவளை நேரடியா உங்ககிட்ட அறிமுகபடுத்தினது***

***இல்லை, அதனால இப்ப உங்களுக்கு அறிமுகபடுத்துறேன்" என்ற ப்ரியா இருவரையும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்தாள்.***

***கார்த்திக் காவ்யாவிடம் ஹாய் என்றவன் எதாவது பேச வேண்டும் என்பதற்காக"BE., EEE படிகிறிங்களா" என்று கேட்க"ஆமாம்.." என்றாள் காவ்யா, அப்போது அங்கே வந்த கௌதம் ப்ரியாவிடம் ஒரு கவரை கொடுக்க அதில் முறுக்கு, வேர்கடலை, பிஸ்கட், சிப்ஸ், ஜூஸ் என்று எல்லாம் இருந்தது. ப்ரியா கௌதமை கேள்வியாக பார்க்க, அவன்"இதுல எல்லாம் இருக்கு.... இனிமே யாரவது எதாவது கொண்டு வந்து கொடுத்தா வாங்கினே, தொலைச்சிடுவேன்" என்று மிரட்டிவிட்டு"ஆமா... உனக்கு ட்ரைன்ல தானே சாப்பிட பிடிக்கும், இப்ப ஆடிட்டோரியம் உள்ளேயும் சாப்பிட பிடிக்குது போல" என்று சொல்லிவிட்டு செல்ல, ப்ரியா அவனை முறைத்து கொண்டு நிற்க கார்த்திக்கும், காவ்யாவும் வந்த சிரிப்பை அடக்கி கொண்டு நின்றனர்.***

***மதிய உணவு நேரத்தில் மறுபடியும் அனைவரும் ஒன்று சேர்ந்தனர். கார்த்திக்கிடம் கௌதம் வெளியே போய் சாப்பிடுவோமா என்று கேட்க, ப்ரியா"நான் உங்க ரெண்டுபேருக்கும் சேர்த்து சாப்பாடு கொண்டு வந்திருக்கேன்" என்றதும், நான்கு பேரும் வெளியே மரத்தடியில் சென்று சாப்பிட அமர்ந்தனர்.***

***அப்போது அங்கே வந்த வினோத் ப்ரியாவிடம்"நீ எனக்கும் சேர்த்து கொண்டு வந்திருப்பேன்னு, நான் சாப்பாடு கொண்டு வரலை" என்றான்.அவன் சொன்னதை கேட்டு அடப்பாவி இன்னைக்கு என்னை அடி வாங்க வைக்காம போக மாட்டான் போலிருக்கு என்று நினைத்த ப்ரியா வினோத்திடம்"உங்களுக்கு இல்லாமையா வினோத் அண்ணா, வாங்க நீங்களும் எங்களோட சாப்பிடுங்க"***

Ramya Rajan

என்றாள், அவள் அண்ணா என்றதும் வினோத்துக்கு ஷாக் அடிக்க, கௌதம் மனதில் தென்றல் அடித்தது.

வினோத்"இல்ல சும்மா கேட்டேன், நான் வெளிய போய் சாப்பிட போறேன் என்று கிளம்பியதும்" நிம்மதியாக மூச்சுவிட்ட ப்ரியா, தான் கொண்டு வந்த சாப்பாட்டை, பேப்பர் ப்ளேட்டில் வைத்து கௌதமிற்கும், கார்த்திக்கும் கொடுத்தாள். காவ்யாவும் அவள் கொண்டு வந்த சாப்பாட்டை கௌதமிற்கு வைத்தவள், கார்த்திக்கு வைக்க போக அவன் வேண்டாம் என்றான்.

கார்த்திக் காவ்யா கொடுத்த சாப்பாட்டை வாங்கி கொள்ளவில்லை என்றதும், காவ்யாவின் முகம் வாடிவிட்டது. அனைவரும் சாப்பிட காவ்யா சாப்பிடாமல் அமர்ந்து இருந்தாள். அவளுக்கு கார்த்திக் தன் மேல் உள்ள கோபத்தில் தான், தன்னுடைய சாப்பாட்டை வேண்டாம் என்று சொல்லிவிட்டான், என்று நினைத்து அழுகையாக வந்தது. கௌதமும் ப்ரியாவும் அருகருகே அமர்ந்திருந்ததால் தங்களுக்குள் மெதுவாக பேசிக்கொண்டே சாப்பிட்டனர், அதனால் அவர்கள் மற்ற இருவரையும் கவனிக்கவில்லை, கார்த்திக் காவ்யாவின் எதிரே இருந்ததால்... அவனால் அவளை நன்றாக பார்க்க முடிந்தது. குனிந்து தனது சாப்பாட்டையே பார்த்து கொண்டிருந்தவள், கண்கள் கலங்கி இருந்தது.

காவ்யா அன்று லெமன் ரைஸ் கொண்டு வந்திருந்தாள். கார்த்திக்குக்கு லெமன் ரைஸ் பிடிக்காது, அவன் அதுக்காக தான் வேண்டாம் என்றான் ஆனால் காவ்யாவின் முகத்தை பார்த்ததும், இவளோட அழுகைக்கு லெமன் ரைஸ்சே பரவாயில்லை என்று

Ramya Rajan

நினைத்தவன்"காவ்யா...." என்று அழைத்தான் அவள் நிமிர்ந்து பார்த்ததும்"கொஞ்சம் உன் சாப்பாடு தறியா..." என்று கேட்டதும், காவ்யாவின் முகம் 1000 வாட்ஸ் பல்பு போல் ஒளிர்ந்தது, அவள் வேகமாக தனது டிபன் பாக்ஸ்சை கொடுக்க கார்த்திக் அதிலிருந்து கொஞ்சம் லெமன் ரைஸ் எடுத்து கொண்டான், அதை பார்த்து ஆச்சர்யம் அடைந்த ப்ரியா"காவ்யா... கார்த்திக் அண்ணாவுக்கு, லெமன் ரைஸ் பிடிக்காது... ஆனா இன்னைக்கு நீ கொடுத்ததும் சாப்பிடுறாங்க" என்றாள்.

ப்ரியா சொன்னதை கேட்ட காவ்யா"உங்களுக்கு பிடிக்காதுன்னா பரவாயில்லை கார்த்திக், வச்சிடுங்க" என்றதும்"இல்ல நல்லாத்தான் இருக்கு" என்று அவன் சாப்பிட, கௌதம்"இருடா எங்க அம்மாட்ட சொல்றேன், நீங்க லெமன் ரைஸ் நல்லா பண்ண மாட்றீங்க... அதனாலதான் கார்த்திக் சாப்பிட மாட்றான்னு" என்றவுடன் கார்த்திக்"டேய் ஒரு ஸ்பூன் லெமன் ரைஸ் சாப்பிட்டதுக்கு, ஏன்டா குடும்பத்துல பிரச்சனைய கிளப்புற" என்றதும் அனைவரும் சிரிக்க, அப்போது அந்த வழியாக வந்த வர்ஷா சுபாவிடம் கௌதமை காட்டி"இவனுக்கு நம்ம கூட பேச பிடிக்காது, ஆனா புதுசா வந்த பொண்ணுகிட்ட மட்டும் நல்லா சிரிச்சு சிரிச்சு பேசுறான் பாரு" என்றாள்.

கார்த்திக் அன்று இரவு தனது அறையில் படுத்துக்கொண்டே, கல்லூரியில் நடந்ததை நினைத்து கொண்டிருந்தான். தான் ஏன் இன்று அவளுக்காக எனக்கு பிடிக்காத லெமன் ரைஸ் சாப்பிட்டேன். அவ முகம் வாடினா எனக்கு என்ன? என்று நினைத்தவன், மேற்கொண்டு யோசிக்க பிடிக்காமல்... போர்வையை இழுத்து மூடி கொண்டு தூங்கினான்.

Ramya Rajan

14

***திங்கள் அன்று பயிற்சிக்கு காவ்யா வந்த போது அங்கு கார்த்திக் மட்டும் தான் இருந்தான், மற்றவர்கள் யாரும் வந்திருக்கவில்லை. இது தான் நல்ல சமயம் என்று நினைத்த காவ்யா, கார்த்திக் அருகில் சென்று"ஹாய்..." என்றாள்,***

***பதிலுக்கு கார்த்திக் ஹாய் என்றதும்,***

***"அன்னைக்கு உங்களை எப்படி சத்தமா கூப்பிடரதுன்னு தெரியாம, கல்லால அடிச்சிட்டேன், சாரி..."***

***"நல்லவேளை உன் கைல சின்ன கல்லு கிடச்சுது இல்லைனா, என் நிலைமை" என்று சொல்லி சிரித்தவன்,"நீ என் மேல கல்ல தூக்கி போட்டதை ப்ரியாட்ட தயவு செய்து சொல்லிடாத..."***

***"ஏன் அவ உங்களை என்ன சொல்ல போறா...தெரிஞ்சா, என்னை தான் திட்டுவா... அதனால தான் நான் சொல்லலை..."***

***"உன்கிட்ட கொஞ்சம் லெமன் ரைஸ் வாங்கி சாப்பிட்டதை, இந்த சின்ன பிசாசு ப்ரியா, அந்த பெரிய பிசாசு ஷுருதிகிட்ட போட்டு***

**கொடுத்துடுச்சு, நேத்து புல்லா... அவ என்னை ஒருவழி பண்ணிட்டா" என்றான் கார்த்திக் சோகமாக....**

**"அப்படி என்ன பண்ணாங்க" என்று ஆர்வமாக காவ்யா கேட்க....**

**கார்த்திக்... உன்னையும், என்னையும் சேர்த்து வச்சு கிண்டல் பண்றா என்பதை சொல்லாமல்"வேணும்னே நேத்து அவளும், சாருமாவும் சேர்ந்து லெமன் ரைஸ் செஞ்சு வச்சு, என்னை சாப்பிட சொன்னாங்க, அவங்க லெமன் ரைஸ் சாப்பிட சொன்னதுமே எனக்கு தெரிஞ்சிடுச்சு, இது ப்ரியா வேலைன்னு, சாப்பிடலைனா கிண்டல் பண்ணுவாங்கன்னு நினைச்சு சாப்பிட்டா... அதுக்கும் கிண்டல் பண்றாங்க... "**

**கார்த்திக் சொன்னதை கேட்ட காவ்யா"சரி... உங்களுக்கு எந்த சாப்பாடு பிடிக்கும்ன்னு சொல்லுங்க, நான் இனிமே அதை கொண்டு வரேன், அப்ப கிண்டல் செய்ய முடியாது இல்லை" என்றதும்,**

**கார்த்திக்"எனக்கு பரோட்டாவும், சால்னாவும் பிடிக்கும்" என்றான், காவ்யா"நாங்க என்ன முனியாண்டி விலாசா நடத்தறோம், ஈசியா செய்ற மாதிரி எதாவது சொல்லுங்க" என்றாள். அடுத்து கார்த்திக் சிக்கன் பிரியாணி என்றதும் காவ்யா அவனை பார்த்து முறைக்க தொடங்க, வரிசையாக மீன் குழம்பு, மட்டன் ப்ரை, நண்டு வறுவல், ஏறா தொக்கு என்று எல்லாத்துக்கும் காவ்யா முறைக்க, கார்த்திக் என்ன பிடிக்கும்ன்னு கேட்டுட்டு எது சொன்னாலும் முறைக்கிற என்றதும்,**

Ramya Rajan

காவ்யா கார்த்திக்கிடம்"உங்களுக்கு லெமன் ரைஸ் தவிர, வேற என்ன பிடிக்காது" என்று கேட்க, கார்த்திக்"ம்ம்... மத்த எல்லாம் பிடிக்கும்" என்றதும்"அப்ப நானே பார்த்து கொண்டு வரேன் நீங்க ஒன்னும் சொல்ல வேண்டாம்" என்றாள். "சரி நீயே பார்த்து கொண்டு வா, ஆனா... எதுக்கும் நான் சொன்னதையும் நியாபகம் வச்சுக்கோ" என்றான் கார்த்திக். அவர்கள் பேசி கொண்டிருக்கும் போதே மற்றவர்கள் வர தொடங்க, காவ்யா கார்த்திக்கிடம் சொல்லிக்கொண்டு பயிற்சிக்கு கிளம்பினாள். கார்த்திக்கும் காவ்யாவுக்கும் இடையே இருந்த தயக்கம் மறைந்து இருவரும் ஒருவரோடு ஒருவர் இயல்பாக பழகினார்கள்.

ஷ்ருதி முரளியிடம் போன்னில் பேசும் போது"எப்போ இங்க வரீங்க உங்களை பார்த்து ஆறு மாசத்துக்கு மேல ஆகுது" என்றதும்

"இப்ப வர முடியாது ஷ்ருதி" என்றான் முரளி.

"எப்ப தான் வருவீங்க" என்று கேட்ட ஷ்ருதியின் குரலில் தெரிந்த ஏக்கத்தை உணர்ந்து,

"சீக்கிரமா வர பார்க்குறேன்டா, ரொம்ப ஆர்வமா கூப்பிடுற வந்தா என்ன தருவ?"

"என்ன வேனும் நீங்களே சொல்லுங்க.... "

Ramya Rajan

*"நீ சொல்றத பார்த்தா... என்ன கேட்டாலும் கிடைக்கும்ன்னு அர்த்தமா ஷ்ருதி... "*

*"நீங்க எதோ வில்லங்கமா கேட்க போறீங்க, அப்படின்னு புரியுது என்னன்னு தான் தெரியல.... "*

*"உனக்கு தெரியல... இத என்னை நம்ப சொல்ற" என்ற முரளி "சரிவிடு ஒரு பாம்ப எடுத்துவிட்டா... தானா கிடைக்க போகுது, உன்கிட்ட போய் எதுக்கு கேட்கணும்" என்றான்.*

*"சரி அத அப்புறம் பார்க்கலாம், ப்ரியா காலேஜ் விழாவுக்காவது வர பாருங்க முரளி என்றவள், கௌதம், ப்ரியா, கார்த்திக் அண்ணா மூன்னு பேருமே கலந்துகிறாங்க, நீங்க வரலைனா நல்லா இருக்காது, நாம போறது அவங்களுக்கு ரொம்ப சப்போர்ட்டா இருக்கும், அதனால கண்டிப்பா வாங்க ப்ளீஸ்" என்றாள்.*

*"முரளி நீ ப்ளீஸ்ன்னு என்னை கெஞ்ச வேண்டாம் ஷ்ருதி, எனக்கே வரணும்ன்னு ஆசை தான், கண்டிப்பா வரேன்னு சொல்லிட்டு வரலைனா... உனக்கு கஷ்ட்டமா இருக்கும், அதனால கண்டிப்பா வர பார்க்கிறேன் ஓகே... "என்றதும்*

*ஷ்ருதி சரி என்று போன்னை வைத்ததாள்.*

*கல்லூரியில் விழாவுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. விழாவில் கலந்து கொள்ளும் அனைவருக்கும்*

இடையே... நல்ல நட்பு உருவானது, வர்ஷாவை தவிர. ப்ரியா யாரிடமும் விழுந்தும் பழகவில்லை, வேண்டாம் என்று முறுக்கி கொள்ளவும் இல்லை, அனைவரிடமும் நன்றாக பழகினாலும், தனது எல்லையை அறிந்தே நடந்தால், தேவை இல்லாத பிரச்சனை இல்லை.

ப்ரியா வினோத்தை வார்த்தைக்கு வார்த்தை அண்ணா... அண்ணா... என்று அழைக்க அவன்"ப்ரியா, நான் உன்கிட்ட ப்ரொபோஸ் பண்ண போறேன்னு, யாரவது சொன்னாங்களா... அப்புறம் எதுக்கு இப்படி அண்ணான்னு கூப்பிட்டு கொல்ற" என்றதும், கௌதம்"ஒரு வேளை உன்ன பார்த்தா... அவங்க அண்ணனை பார்ப்பது போல் இருக்கும், அதனால தான் இல்ல ப்ரியா" என்று கேட்க, அவளும் ஆமாம் என்று தலை ஆட்டினாள்.

விழாவுக்கான உடைகள் பற்றி பேச்சு வந்ததும் வினோத் ப்ரியாவிடம்"நீ முதல் பாதி ஒரு உடையிலும், இரண்டாம் பாதி வேறு உடையிலும் வா" என்றான், உடனே கௌதம்"அவ என்ன பேஷன் ஷோக்கா போறா... அதெல்லாம் வேண்டாம், ஒரு டிரஸ் போதும்" என்றான்.

அடுத்து வினோத் ப்ரியாவிடம்"காலையிலேயே வந்துடு ப்ரியா ப்ராக்டிஸ் முடிச்சு.... மதியம் லஞ்ச் சாப்பிட்டுவிட்டு, நீ தான் கோலம் போடணும், அதன்பின் இங்கேயே விழாவுக்கு டிரஸ் பண்ணிக்கலாம்" என்றான் அதற்கும் கௌதம்"அவ கோலம் போட்டுட்டு, வீட்டுக்கு போய் டிரஸ் மாத்திட்டு வருவா" என்றதும் கோபம் வந்துவிட்டது வினோத்துக்கு "நான் அவளை தானே கேட்கிறேன், நீ ஏன்டா நடுவுல வர"என்று கேட்க,"அத அவ சொல்லட்டும்" என்றான் கௌதம். வினோத் ''எத அவளை சொல்ல

சொல்ற..." என்றதும்"நான் அவ விஷயத்துல தலையிட வேண்டாம்ன்னு ப்ரியா சொல்லட்டும், நான் நடுவுல வரலை" என்று கௌதம் சொல்ல, வினோத் ப்ரியாவை பார்க்க"அவள் கௌதம் சொன்னா நல்லதுக்கு தான், வினோத் அண்ணா சொல்வாங்க அதனால நான் அவங்க சொல்றபடியே பண்றேன்" என்றாள்.

கௌதமும், ப்ரியாவும் சென்றதும் வினோத் கார்த்திக்கிடம்

"லவ் இஸ் ப்ளைண்ட் அப்படின்னு சொல்றது... உண்மை தான் இல்ல, ஒரு மாசமா தான் ரெண்டு பேருக்கும் ஒருத்தர ஒருத்தர் தெரியும், ஆனா... அதுக்குள்ள கௌதம் சொல்றத தான், ப்ரியா கேட்கிறா" என்று சொல்ல....

கார்த்திக்"தெரியாம பேசாத வினோத்... லவ் பண்றாங்கன்னு, நீ சொன்னது கரெக்ட். ஆனா ...ஒரு மாசமா இல்லை... நாலு வருஷமா..."

"என்னது நாலு வருஷமாவா.... அப்படின்னா நான் ப்ரியாவ உங்களுக்கு அன்னைக்கு காட்டும் போதே.... அவங்க ரெண்டு பேரும் லவ்வர்ஸா, அப்புறம் எப்படி கௌதம் என்னை அடிக்காம விட்டான்?"

கார்த்திக்"அது நான் அங்க இருந்ததுனால நீ தப்பிச்ச, இல்லைனா அன்னைக்கு கௌதமுக்கு இருந்த கோவத்துக்கு, நல்லா வாங்கி இருப்ப...""ரொம்ப தேங்க்ஸ்டா... இனிமே ஒரு பெண்ணை பத்தி சரியா தெரிஞ்சிக்காம, யார்கிட்டயும் அவள பத்தி பேசமாட்டேன்" என்றான் வினோத்.

Ramya Rajan

*ஷ்ருதியுடன் சேர்ந்து விழாவுக்கான உடையும், அணியும் ஆபரணங்களையும் தேர்ந்தெடுத்த ப்ரியா, அவற்றை கௌதமிடம் காட்டி சரி பார்க்க எண்ணி, அவன் வீட்டிற்க்கு வந்திருந்தாள். ஷ்ருதியுடன் அவளது ரூமில் பேசி கொண்டிருக்கும் போது, அங்கே வந்த கௌதமிடம் அவளது உடையை காண்பிக்க, அவன் நல்லா இருக்கு என்றான். அவர்கள் இருவரும் தனியாக பேசட்டும் என்று ஷ்ருதி வெளியே செல்ல,*

*அவள் சென்றதும் ப்ரியாவிடம் திரும்பியவன்"அன்னைக்கு நீ என்னை கடிச்சதுக்கு, பதிலுக்கு உன்ன நான் இன்னும் கடிக்கல இல்ல" என்றதும்,*

*ப்ரியா தனது கையை கௌதமிடம் நீட்டி"இந்தாங்க கடிச்சிகோங்க..." என்றாள்.*

*அவள் கையை தட்டிவிட்டவன்"நீ கைல கடிச்சா.... நானும் கைல கடிக்கனுமா" என்று அவளை தலை முதல் கால் வரை பார்க்க,*

*அவன் பார்வையில் முகம் சிவந்த ப்ரியா"என்னது இது ஒழுங்கா கைல கடிக்கிறதா இருந்தா... கடிங்க, இல்லைனா தள்ளுங்க நான் போகணும்" என்றவள் வெளியே செல்ல, அவள் கையை பிடித்து இழுத்த கௌதம் அவள் கன்னத்தில் கடித்துவிட்டு, அவள் இதழ் தேட... அவனை கட்டிலில் பிடித்து தள்ளிவிட்ட ப்ரியா"போதும் நான் கடிச்சதுக்கு பதிலுக்கு நீங்களும் கடிச்டீங்க, அவ்வளவு தான் அதுக்கு மேல எல்லாம் கிடையாது" என்றவள், அறையை விட்டு*

Ramya Rajan

***வெளியே ஓடிவிட, இருடி என்கிட்டே மாட்டாமையா போக போற, அப்ப பார்த்திக்குறேன் உன்னை என்று கௌதம் நினைத்து கொண்டான்.***

***கல்லூரியில் விழா அன்று காலை நடந்த ரிகர்சலில் எல்லோரும் சிறப்பாக செய்தனர். அதை தொடர்ந்து ப்ரியா, காவ்யா மற்றும் இன்னும் சிலர் சேர்ந்து கொண்டு, கல்லூரியில் ரங்கோலி போட்டு முடித்ததும், தங்கள் வீட்டுக்கு சென்று விழாவுக்கு ரெடி ஆக நேரம் இருக்காது என்பதால் ஏற்கனவே முடிவி செய்தபடி ப்ரியாவும், காவ்யாவும் உடை மாற்ற கௌதம் வீட்டுக்கு சென்றனர்.***

***அங்கே சாருமதி அவர்களுக்கு மதிய உணவு தயார் செய்திருந்தார். கௌதம், கார்த்திக், ப்ரியா, ஷ்ருதி, காவ்யா மற்றும் சாருமதி ஒரே இடத்தில் இருந்தால், அங்கே கலகலப்புக்கு கேட்கவா வேண்டும், இவர்கள் அடித்த கொட்டத்தில் வீடே சும்மா அதிர்ந்தது.***

***சாப்பிடும் போது ப்ரியாவின் பக்கத்தில் சென்று கௌதம் அமர, சாருமதி எல்லோருக்கும் தட்டு வைத்தவர், கௌதமிடம்"உனக்கும் ப்ரியாவுக்கும் தனித்தனி தட்டா, இல்லை அன்னைக்கு மாதிரியா" என்று கேட்க, கௌதம் அவரை பார்த்து முறைக்க.... கார்த்திக்கும், ஷ்ருதியும்"எங்களுக்கு தெரியாம எதோ நடந்திருக்கு என்னன்னு சொல்லுங்க அம்மா..." என்று சாருமதியை துளைக்க,"அவர் ஒன்னும் இல்லை சும்மா கேலி செஞ்சேன், நீங்க சாப்பிடுங்க" என்றார்.***

***ஷ்ருதி அன்று தான் முதல் தடவையாக காவ்யாவை பார்க்கிறாள். காவ்யா சரியான அளவு உயரத்தில், ஆள் கொஞ்சம் மெலிவாக, மாநிறத்தில், கலையான முகத்துடன் பார்க்க அழகாக இருந்தாள். ஷ்ருதிக்கு அவளை ரொம்ப பிடித்தது, கார்த்திக்கு சரியான ஜோடி என்று நினைத்தாள்.***

***அனைவரும் சாப்பிட்டு முடித்ததும் ஹாலில் சென்று அமர, கௌதம் ஒரு வேலை இருப்பதாக சொல்லி வெளியே கிளம்பிவிட்டான். கார்த்திக்கும், ஷ்ருதியும் அருகருகே அமர்ந்து கொண்டு தங்களுக்குள் மெதுவாக பேசினார்கள். ”எங்க உன் ஆள் வரலையா” என்று கார்த்திக் ஷ்ருதியிடம் கேட்க, ”வர முடியலையாம்” என்றவளின் குரலில் இருந்த வருத்தத்தை உணர்ந்த கார்த்திக்....***

***”ஹே... இதுக்கெல்லாம் பீல் பண்ணலாமா, முரளி வர முடிஞ்சா கண்டிப்பா வந்திருப்பாரு, உனக்காவது நாங்க இவ்வளவு பேர் கூட இருக்கோம். ஆனா... முரளி பாவம் அங்க தனியா இருக்கார், அவருக்கும் வரணும்ன்னு ஆசை இருக்கும், ஆனா... அவரால வர முடியல, நீ தான் புரிஞ்சிக்கணும் ஷ்ருதி, அவர்கிட்ட கோப படாம பேசு” என்றான், அவன் சொன்னதுக்கு சரி என்று தலை ஆட்டினாள் ஷ்ருதி.***

***கார்த்திக்கும், ஷ்ருதியும் பேசி கொண்டிருப்பதை பார்த்த காவ்யாவின் கண்களில் தெரிந்த பொறாமையை ஷ்ருதியும், ப்ரியாவும் கவனித்து கொண்டு தான் இருந்தனர், அவர்கள் மட்டும் இல்லை கார்த்திக்கும் பார்த்தான். ஐயோ இவளுங்க முன்னாடி இப்படி பார்கிறாளே, இதுக்கு மேல இங்க இருந்தா ஆபத்து என்று நினைத்தவன் ”சரி... வீட்டுக்கு போய் நான் ரெடி ஆகிட்டு வரேன்” என்று கிளம்பிவிட்டான்.***

Ramya Rajan

***சாருமதி அவரது அறையில் ஓய்வு எடுக்க, ஷ்ருதியின் அறையில் அவளோடு ப்ரியாவும் காவ்யாவும் இருந்தனர். ப்ரியா கிளம்புவதற்கு முன் இன்னொரு தடவை குளித்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தவள், ஷ்ருதிடம் சொல்ல,"நானும் குளிக்கணும் ப்ரியா, அதனால நீ போய் கௌதம் ரூம் பாத்ரூம்ல குளி" என்றாள். ப்ரியா தயங்க, ஷ்ருதி"உனக்கே தெரியும், நான் குளிக்க போனா வர லேட் ஆகும், அதனால தான் சொல்றேன். அவன் ரூம்ல நான் போய் குளிச்சா... எதுக்கு என் சோப்பு எடுத்த, ஷாம்பூ எடுத்தன்னு சண்டைக்கு வருவான், அதே நீனா ஒன்னும் சொல்ல மாட்டான். அவன் எப்படியும் வர இன்னும் ஒரு மணி நேரம் ஆகும், அதனால நீ போய் அங்க குளி டைம் ஆகிடுச்சு" என்று ப்ரியாவை பிடித்து வெளியே தள்ளினாள் ஷ்ருதி.***

***தனது உடைகள் இருந்த கவரை எடுத்துக்கொண்டு, கௌதம் ரூமிற்கு வந்தாள் ப்ரியா. அறைக்குள் வந்தவள் சுற்றி பார்க்க... எல்லாம் அதன் அதன் இடத்தில் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டு, பார்க்க அறை நன்றாக இருந்தது. கௌதம் வருவதற்குள் குளித்து விட வேண்டும் என்று நினைத்தவள், வேகமாக அவள் கொண்டு வந்த கவரை பிரித்து அதில் இருந்த உடைகளை எடுத்து வெளியே கட்டில் மேல் வைத்த போது தான், குளித்த பின் துடைப்பதற்கு துண்டு கொண்டு வரவில்லை என்று தெரிந்தது, ஷ்ருதியிடம் கேட்போமா என்று நினைத்தவள், கௌதம் ரூம் கப்போர்டை திறந்து பார்க்க, அதில் ஒரு பக்கம் நிறைய துண்டுகள் மடித்து இருந்தது. அதில் இருந்து ஒன்றை எடுத்துகொண்டு குளிக்க சென்றாள்.***

***கௌதம் வெளியே சென்று விட்டு வந்தவன், எப்போதும் போல் தன்னிடம் இருக்கும் சாவியால் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்து நேராக அவனது அறைக்கு சென்றான். உள்ளே வந்ததும் கதவை சாற்றிவிட்டு சட்டையை கழட்டியவன், பாத்ரூமிற்கு செல்ல அங்கே உள்ளே நீர் விழுகும் சத்தம் கேட்டதும், ஷ்ருதி தான் உள்ளே இருக்கிறாள் என்று நினைத்து கட்டிலில் சென்று படுத்துவிட்டான்.***

***ப்ரியா காலையில் தலைக்கு ஊற்றி இருந்ததால், இப்போது உடம்புக்கு மட்டும் குளித்தாள். குளித்து முடித்ததும் உள்ளேயே ஈரம் இல்லாத இடமாக பார்த்து, நின்று அங்கேயே உடையை அணிந்துகொண்டு கதவை திறந்தாள். கதவு திறக்கும் சத்தம் கேட்டதும் கௌதம் கண்களை மூடிக்கொண்டான். ஷ்ருதி எப்போது பாத்ரூமில் இருந்து வந்தாலும் அரைகுறை உடையோடு தான் வருவாள், அதனால் கண்களை மூடி படுத்திருந்தான்.***

***பாத்ரூமில் இருந்து வந்த ப்ரியா நேராக சென்று அறை கதவை திறக்க, அந்த சத்தத்தில் கண்விழித்த கௌதம் ப்ரியாவை பார்த்ததும் திகைத்தான். இவளா உள்ளே குளித்தாள் என்று நினைத்தவன் அவளையே பார்த்து கொண்டிருதான்.***

***ப்ரியா கட்டிலில் படுத்திருந்த கௌதமை பார்க்காமல், தனது ஹண்ட் பாக்கை எடுத்து கொண்டு கப்போர்ட் அருகில் சென்றாள். அதில் பதித்திருந்த கண்ணாடி முன் ஒரு ஸ்டூலை போட்டு அமர்ந்தவள், தனது பாக்கில் இருந்து கிரீம், பவுடர், ஐ-லைனர் என்று எடுத்து ஒவ்வொன்றாக போட்டு கொண்டே வந்தவள், லிப்ஸ்டிக் மட்டும் காலேஜ்ல் சென்று போட்டுக்கொள்வோம் என்று நினைத்து பொட்டை நெற்றியில் ஒற்றிவிட்டு, தலையை வார ஆரம்பித்தாள்.***

கௌதமிற்கு ப்ரியா இயல்பாக அவனது அறையில் இருப்பதை பார்த்ததும், தங்கள் திருமணம் முடிந்தால் ப்ரியா இப்படிதான் எப்போதும் தனது அறையில் தன்னுடனே இருப்பாள் என்ற நினைவே சந்தோஷத்தை தர, மெதுவாக எழுந்து அவள் பின்னால் சென்று நின்றான்.

கண்ணாடியில் கௌதமை பார்த்த ப்ரியா எழுந்து நிற்க, கௌதம் அவளை இடையோடு சேர்த்து ஆணைத்தவன், அவள் கழுத்து வளைவில் முகம் புதைக்க, அவன் கைகளில் திமிறிய ப்ரியா ”விடுங்க கௌதம், யாராவது வர போறாங்க” என்றாள்.அவளை அணைத்திருப்பதை விடாமல் அவனது முகத்தை மட்டும் நிமிர்த்தியவன், கண்ணாடியில் அவள் முகம் பார்த்து கலக்குறடி என்றவன், அவளை பார்த்து கண்சிமிட்ட, அவன் பார்வையில் முகம் சிவந்தவள் ”விடுங்க நான் போகணும்… ” என்றாள்.

”போகலாம் கொஞ்ச நேரம் ப்ளீஸ்… என்னோட சோப்பா போட்ட ” என்று கேட்க ப்ரியா ஆமாம் என்று தலை ஆட்டினாள். ”நான் போடும் போது இவ்ளோ வாசனை இருக்காது, ஆனா நீ போட்டதும் வாசனை ஆளை தூக்குது” என்றவன் அவள் கன்னத்தில் முத்தம் வைக்க, அவனை பார்த்து முறைத்தவள் ”நீங்க ஒழுங்கா சோப்பு தேச்சு குளிச்சிருக்க மாட்டீங்க ” என்றாள் ப்ரியா.

”அப்படியா சரி… அப்ப நீயே எனக்கு சோப்பு தேச்சு விடு ” என்றதும் மறுபடியும் கண்ணாடியில் அவனை பார்த்து ப்ரியா முறைக்க, கௌதம் ”கல்யாணத்துக்கு அப்புறம்டி ” என்றான்.

***"நீங்க எப்ப உள்ள வந்தீங்க" என்று ப்ரியா கேட்க, கௌதம்"நீ குளிச்சிட்டு இருக்கும் போது வந்தேன். ஷ்ருதின்னு நினைச்சு கட்டில்ல படுத்திருந்தேன், பார்த்தா நீ வர... ஆமா... உனக்கு குளிச்சிட்டு வெளியே வந்து டிரஸ் பண்ணும் பழக்கம் இல்லையா, இப்படி எல்லா டிரஸ்ம் உள்ளேயே போட்டுட்டு வந்துட்ட" என்றான் கௌதம்.***

***அவனை சந்தேகமாக பார்த்த ப்ரியா"ஏன் உள்ளே டிரஸ் பண்ணா என்ன?"என்று கேட்க,"இல்ல உள்ளே தரை ஈரமா இருக்குமேன்னு" கேட்டேன் என்றதும்"எங்க வீட்ல என்னோட ரூம்ல, நீங்க சொன்ன மாதிரி தான் வருவேன், ஆனா இது உங்க வீடு, உங்க ரூம், இங்க நான் எப்படி அப்படி வருவேன்னு எதிர் பார்த்தீங்க" என்றாள்.***

***கௌதம்"ஏன் எங்க வீடு, உங்க வீடுன்னு பிரிச்சு பார்க்கிற ப்ரியா, எங்க வீட்டையும் உங்க வீடுன்னே நினைக்க வேண்டியது தானே" என்றதும், அவன் எதற்காக சொல்கிறான் என்று புரிந்து கொண்ட ப்ரியா கண்ணில் நீர் வரும் வரை சிரித்தவள்"சில நேரம் சுட்டெரிக்கும் சூரியனா இருக்கீங்க.... சில நேரம் குளுமையான சந்திரன போல் இருக்கீங்க" என்றாள். அவள் கன்னத்தோடு தன் கன்னத்தை உரசி கொண்டே"உனக்கு நான் எப்படி இருக்கிறது பிடிச்சிருக்கு ப்ரியா" என்று கௌதம் கேட்க,"எனக்கு நீங்க எப்படி இருந்தாலும் பிடிக்கும் கௌதம்" என்றவள் திரும்பி அவன் முகம் பார்க்க, அவள் இதழ்களில் அழுந்த முத்தமிட்டான். கௌதமிடமிருந்து விலகிய ப்ரியா"போதும் போய் ரெடி ஆகுங்க டைம் ஆகிடுச்சு" என்றதும்,"இன்னும் ஒரே ஒரு தடவை" என்ற கௌதம், ப்ரியாவை தன்னுடன் இழுத்து இறுக அணைத்தவன், அவள் முகமெங்கும் முத்தமிட, அவனிடம் இருந்து விலகுவது ப்ரியாவிற்கு பெரும் பாடாக இருந்தது.***

***ஒருவழியாக கௌதம் குளிக்க செல்ல, வேகமாக தலை வாரி... மீண்டும் ஒரு முறை முகத்தில் பவுடர் போட்டு கொண்டு ப்ரியா, ஷ்ருதியின் அறைக்கு சென்றாள். அங்கே ஷ்ருதியும், காவ்யாவும் ரெடியாக இருந்தனர்.***

***அன்று மூன்று பேருமே ஒரே மாதிரியான நெட்டட் சுடிதார், வேறு வேறு நிறங்களில் அணிந்திருந்தனர். ப்ரியா சிகப்பு கலர் அணிந்து இருந்தாள், அதில் தங்க நிறத்தில் இருந்த பூக்களில், வெள்ளை கற்கள் பதித்திருந்தது, அவளுடைய நிறத்திற்கு அந்த உடை மிக எடுப்பாக இருந்தது. ஷ்ருதி பச்சை நிறத்தில் கண்ணுக்கு குளுமையாகவும், காவ்யா நீல நிறத்தில் நிறைவாகவும் இருந்தாள்.***

***ப்ரியாவின் முக சிவப்பை பார்த்து காவ்யா"நீ ரோஸ் பவுடரா போட்டிருக்க" என்று கேட்க, ப்ரியா"இல்லையே" என்றவள் கண்ணாடியை பார்க்க, அவள் முகம் கௌதம் அடித்த கூத்தில் இயற்கையாகவே சிவந்து தான் இருந்தது, ஷ்ருதி ப்ரியாவிடம்"கௌதம் வந்துவிட்டானா" என்று கேட்க, ப்ரியா வந்துட்டாங்க என்று ஷ்ருதியை பார்க்காமல் சொன்னாள், அதிலிருந்தே புரிந்து கொண்ட ஷ்ருதி காவ்யாவை பார்க்க, அவள் முகத்தில் இருந்தே இன்னும் அவளுக்கு புரியவில்லை என்று உணர்ந்தவள், நீ இன்னும் வளரனும் காவ்யா என்றதும் காவ்யா"நான் குள்ளமா இருக்கேன்னா ஷ்ருதி அக்கா" என்று கேட்க, ஷ்ருதி சுத்தம் கார்த்திக் அண்ணா என்னையே ப்ரியாகிட்ட டியூஷன் போகணும்ன்னு சொல்வாங்க, உன்ன என்ன சொல்ல போறாங்களோ என்று நினைத்து கொண்டாள்.***

கௌதமும், கார்த்திக்கும் ரெடியாகி வந்ததும், முதலில் இளையவர்கள் ஒரு காரில் கிளம்பினார்கள். பெரியவர்கள் விழா ஆரம்பிக்கும் நேரம் இன்னொரு காரில் வருவதாக இருந்தனர். கல்லூரிக்கு வந்தவர்கள் நேராக மேடைக்கு பின்புறம் செல்ல, அங்கே ஏற்கனவே எல்லோரும் வந்திருந்தனர்.

ப்ரியா, ஷ்ருதி மற்றும் காவ்யாவை பார்த்த வினோத்"நீங்க மூனு பேரும் தான், அந்த மூன்னு பேரா" என்று கேட்க எந்த முன்னு பேர் என்று அனைவரும் முழிக்க,"அது தான் ரம்பை, மேனகை, ஊர்வசி" என்று வினோத் சொன்னதும் மூன்று பெண்களும் அவனை பார்த்து முறைத்துவிட்டு சென்றனர்.

வினோத்"பச்சை நிறமே.... பச்சை நிறமே...." என்று ஷ்ருதியை பார்த்து பாட, கார்த்திக் வினோத்திடம்"டேய்.... அவ கௌதமோட தங்கச்சி" என்றான். அதற்க்கு வினோத்"பரவாயில்லை இனிமே கௌதமை மச்சான்னு கூப்பிடுறேன்" என்றதும், முழுசா கேளு லூசு என்ற கார்த்திக்"ப்ரியாவுக்கு ஒரு அண்ணன் இருக்கான் தெரியுமா" என்று கேட்க,"நீ இப்ப என்ன சொல்ல வர, அவ அண்ணனும்... இவளும் லவ் பண்றாங்களா" என்று கேட்க,"ஆமாம்..." என்றான் கார்த்திக்.

"டேய் இந்த அழகான பொண்ணுங்க எல்லாம், மாமா பையன லவ் பண்ணா... என்னை மாதிரி பசங்க எல்லாம் என்னடா பண்றது? ரத்த சொந்தத்துக்குள்ள கல்யாணம் பன்னகூடாதுன்னு இவங்களுக்கு தெரியாதா" என்று வினோத்து குமுற,

***கார்த்திக்”அது சொந்த அத்தை பையனை, மாமா பையனை தான் கல்யாணம் பண்ண கூடாது, இவங்க ரத்த சொந்தம் இல்ல, அதனால கவலைபடாதே” என்றான்.***

***வினோத்”நான் கொடுத்து வச்சது அவ்ளோ தான் என்றவன், தள்ளி நின்றிருந்த காவ்யாவை பார்த்து, அந்த ப்ளூ சுடிதார் ஒகேவா…” என்று கேட்க, யாரை சொல்றான் என்று நிமிர்ந்து பார்த்த கார்த்திக், அவன் காவ்யாவை சொல்கிறான் என்று தெரிந்ததும் வினோத்தை பார்த்து”உன்னை கொலை பண்ணிடுவேன்” என் றான்.”அவ உன் ஆளா…சாரி… ” என்று வினோத் சொல்ல, கார்த்திக் என்ன சொல்வது என்று தெரியாமல் நின்றான்.***

***இன்னும் விழா தொடங்க நிறைய நேரம் இருந்ததால், ப்ரியா மீண்டும் ஒரு முறை தலை வாரி, முகத்தில் மேக்அப் போட்டு கொண்டிருந்தாள். அவள் அருகில் நின்று கொண்டிருந்த கௌதம்”எத்தனை தடவை மேக்கப் போடுவ” என்று கேட்க, அவனை செல்லமாக முறைத்தவள், அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில்”நீங்க தான் போட்ட மேக்கப் எல்லாம் அழிச்சி விட்டீங்க” என்றாள். அவள் எதை சொல்கிறாள் என்று புரிந்து கொண்டவன்”ஏன் மேடம், இன்னைக்கு நீங்க வீட்ல லிப்ஸ்டிக் போடலை” என்றதும்,”அது …. அப்பவே போட்டா அழிஞ்சிடும்ன்னு போடலை” என்று சமாளித்தாள் ப்ரியா.***

***”ஏய்… நீ சரியான கேடின்னு எனக்கு தெரியும், ரீல் சுத்துற வேலையெல்லாம் வேற எங்கையாவது வச்சுக்கோ, உனக்கு நான் வருவேன்னு தெரியும், வந்தா என்ன நடக்கும்ன்னும் தெரியும் அதனால லிப்ஸ்டிக் போடாம இருந்துட்டு, எதோ எனக்கு மட்டும்***

Ramya Rajan

***தான் ஐஸ்கிரீம்ல இஷ்ட்டம், உனக்கு அது பிடிக்காத மாதிரி பேசின கொன்னுடுவேன்" என்றான் கௌதம்.***

***ப்ரியா கண்டு பிடிச்சிட்டானே என்று நினைத்தவள்"கார்த்திக் அண்ணா எங்க காணோம்" என்று பேச்சை மாற்ற, கௌதம் அவளை பார்த்து சிரிக்க அப்போது அங்கே வர்ஷா வந்தாள்.***

***வர்ஷா கரு நீல உடையில் அங்கங்கே வெள்ளையிலும், கறுப்பிலும் பூ போட்ட ஸ்லீவ்லெஸ் ப்ராக்கில், பார்க்க அழகாக மட்டும் இல்லை கவர்ச்சியாகவும் இருந்தாள். அந்த ப்ராக் அவளது முட்டி வரை மட்டுமே இருந்தது.***

***ப்ரியா கௌதமிடம்"இவள் குளிச்சிட்டு டிரஸ் போட மறந்துட்டு வந்துட்டா போல, நீங்க அவளை பார்க்காதீங்க" என்றாள் அதற்க்கு கௌதம்"இல்ல ப்ரியா... அது அந்த டிரஸ் மாடலே அப்படிதான்" என்றதும்,"அப்ப நீங்க அவளை பார்த்திட்டீங்க, நீங்க எப்படி அவளை பார்க்கலாம்" என்று ப்ரியா கௌதமிடம் சண்டைக்கு செல்ல, கௌதம்"கண்ணு முன்னாடி நிற்கும் போது, எப்படி பார்க்காம இருக்க முடியும்" என்று கேட்க, அப்போது அங்கே வந்த வினோத்"உங்க குடும்ப சண்டை எல்லாம் அப்புறம் வச்சிக்கோங்க" என்றான்.***

***கார்த்திக் அவனது பெற்றோர்கள் கல்லூரி அருகே வந்துவிட்டோம் என்று போன் செய்ததால் அவர்களை பார்க்க வந்தவன், எதிரே காவ்யா அவளது பெற்றோருடன் வருவதை பார்த்ததும் நிற்க, காவ்யா அவனை பார்த்தும் பார்க்காத மாதிரி அவர்களுடன் சென்றுவிட்டாள். கார்த்திக் என்ன ஆச்சு இவளுக்கு...? ஏன்***

பார்த்தும்... பார்க்காத மாதிரி போறா? என்று குழம்பி கொண்டே தன் பெற்றோரை பார்க்க சென்றான்.

அப்போது எதிரே மிருதுள்ளா தனது தோழிகளுடன் வந்தவள், கார்த்திக்கை பார்த்ததும்"ஹாய்... என்னை நியாபகம் இருக்கா" என்று கேட்க, கார்த்திக் நியாபகம் இருக்கு"நீ மிருதுள்ளா தானே... அன்னைக்கு ட்ரைன்ல எங்களோட வந்தியே" என்றதும்,"அப்போ மட்டும் தான் நீங்க என்ன பார்த்து இருக்கீங்களா... அதுக்கு முன்னாடி நீங்க என்ன பார்த்ததில்லையா" என்றதும்,"எதுக்கு நல்லதை மட்டும் நினைப்போமே" என்றவன்"என்னோட அப்பா அம்மா வந்திருக்காங்க.... நான் இப்ப போகணும், அப்புறம் பார்க்கலாம்" என்று கார்த்திக் மிருதுள்ளாவிடம் விடைபெற்று சென்றான்.

அவனையே திரும்பி திரும்பி பார்த்து கொண்டு மிருதுள்ளா வர, கூட வந்த தோழிகள்"யாருடி அது.." என்று கேட்க, மிருதுள்ளா"நமக்கு நல்லா தெரிஞ்சவங்க கூட உதவி பண்ண யோசிக்கும் போது, என்னை யாருன்னே தெரியாமலே, எனக்கு உதவி செஞ்சவர்" என்றதும்,அவள் தோழி"நீ அவரை லவ் பண்றியா" என்று கேட்க,"அதுக்கெல்லாம் அதிர்ஷ்ட்டம் பண்ணி இருக்கணும், நான் அவ்வளவு அதிர்ஷ்ட்டசாலி இல்லை" என்றாள் மிருதுள்ளா.

ஷ்ருதியும், ப்ரியாவும் தங்கள் பெற்றோர்கள் வந்து விட்டார்களா என்று பார்க்க வெளியே வந்தவர்கள், அங்கேயே ஓரமாக நின்று பேசி கொண்டிருந்தனர், அப்போது ராமமூர்த்தியின் கார் கல்லூரி உள்ளே நுழைய... அதில் இருந்து இறங்கிய முரளியை பார்த்ததும் ஷ்ருதிக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை, அவள் அவனையே பார்த்து கொண்டு இருக்க, ஷ்ருதி அப்படி யார

Ramya Rajan

***பார்க்கிறா என்று திரும்பி பார்த்த ப்ரியா, அங்கே முரளியை பார்த்ததும் மகிழ்ச்சியில்"அண்ணா..." என்று அழைத்து, ஓடி சென்று அவன் எதிரில் நிற்க, தங்கையை லேசாக அனைத்து, அவள் தலையை வருடியவன்"எப்படி இருக்கடா" என்று கேட்க,"நல்லா இருக்கேன் அண்ணா... நீங்க எப்படி இருக்கீங்க" என்றாள் ப்ரியா,***

***"நல்லா இருக்கேன், என் தங்கச்சி முதல் தடவை மேடை ஏற போறா அதை பார்க்க ஓடிவந்துட்டேன், இந்த டிரஸ்ல அழகா இருக்க ப்ரியா" என்றான் முரளி.***

***ஷ்ருதி அதே இடத்தில் நின்று முரளியையே பார்த்து கொண்டிருக்க, முரளியுடன் அவனது பெற்றோரும், கௌதமின் பெற்றோரும் வந்திருந்தனர். எல்லோரும் விழா நடக்கவிருக்கும் இடத்திற்கு செல்ல, முரளி மெதுவாக ப்ரியாவிடம்"எங்கே அந்த வாலு..." என்று கேட்டான்.***

***ப்ரியா ஷ்ருதி நின்று கொண்டிருக்கும் இடத்தை காட்ட,***

***தன்னவளை ஆறு மாதத்திற்கு பிறகு பார்த்த முரளி பார்வையால் அவளை வருடியவன், முகத்தில் புன்னகை மலர தன்னையே பார்த்து கொண்டிருந்தவளை அருகே வரும்படி தலை அசைத்து கூப்பிட, ஷ்ருதியும் ஆனந்த அதிர்ச்சியில் இருந்து மீண்டு, முரளியை நோக்கி சென்றாள்.***

***முரளியின் அருகே சென்றவள் ப்ரியாவிடம்"யாரு ப்ரியா இது" என்று முரளியை காட்டி கேட்க, ப்ரியாவும், முரளியும் சிரிக்க, ப்ரியா சிரித்து கொண்டே"எங்க அண்ணா... தெரியலையா"***

Ramya Rajan

***என்றதும்,"ஓ..டாக்டர் சாரா... அடிக்கடி பார்த்தா தான் நியாபகம் இருக்கும், எப்பவாவது பார்த்தா எப்படி நியாபகம் இருக்கும்" என்றாள் ஷ்ருதி, அப்போது அங்கே கார்த்திக் தனது பெற்றோருடன் வந்தான்.***

***கார்த்திக் முரளியிடம் நலம் விசாரித்துவிட்டு, அனைவரையும் இருக்கைகளில் அமர சொல்ல, ஷ்ருதியின் கை பிடித்து நிறுத்திய முரளி அவளை தன் அருகில் அமர்த்தி கொண்டான். கார்த்திக் ப்ரியாவை அழைத்து கொண்டு செல்ல, முரளி மெதுவான குரலில் ஷ்ருதியுடன் பேசி கொண்டிருந்தான்.***

***ப்ரியா வந்து இருந்த கூட்டத்தை பார்த்தவள் மிரண்டு கார்த்திக்கிடம்"நீங்க மட்டும் ப்ரோக்ராம் பண்றீங்களா, எனக்கு ரொம்ப பயமா இருக்கு" என்றாள். கார்த்திக் அவளை சாமதானம் செய்து கொண்டிருக்கும் போது அங்கே கௌதமும், வினோத்தும் வந்தனர். ப்ரியா முகத்தை பார்த்த கௌதம் என்னவென்று கேட்க, கார்த்திக்"ஒன்னும் இல்லை" என்று சமாளிக்க, ப்ரியா"எனக்கு ரொம்ப பயமா இருக்கு வினோத் அண்ணா, நான் ப்ரோக்ராம் பண்ணலை" என்றதும், வினோத்"இது உனக்கு முதல் தடவை இல்லையா... அதனால தான் பயப்படற" என்று அவளுக்கு தைரியம் சொல்ல, ப்ரியா அழுவதற்கு தயாராக இருந்தாள்.***

***ப்ரியாவின் முகத்தை பார்த்த கௌதம், இவ மெதுவா சொன்னா கேட்க மாட்டா என்பதை உணர்ந்தவன்"என்ன பயம் உனக்கு? வந்திருக்கவங்க எல்லாம் மனுஷங்க தான, நீ என்னால ப்ரோக்ராம்***

***பண்ண முடியாதுன்னு முன்னாடியே சொல்லி இருந்தா... வேற யாரையாவது வச்சு பண்ணி இருக்கலாம், ஆனா இப்ப கடைசி நேரத்தில வந்து பயமா இருக்குன்னா என்ன பண்ண முடியும், உன் இஷ்டத்துக்கு இருக்க... இது ஒன்னும் உங்க வீடு இல்ல, காலேஜ். உன்னால இப்ப எல்லோருக்கும் கஷ்ட்டம். வினோத் எத்தனை பேர எதிர்த்துகிட்டு உன்ன ப்ரோக்ராம் பண்ண சொன்னான்னு எனக்கு தெரியும், உங்க அண்ணன் உன் ப்ரோக்ராம் பார்க்க... டெல்லில இருந்து ஆசையா வந்திருக்காரு, அவரால ஒரே ஒரு நாள் தான் இங்க இருக்க முடியும், இருந்தாலும் உனக்காக வந்திருக்காரு, போ... போய் நீயே உங்க அண்ணன்கிட்ட சொல்லு, என்னால ப்ரோக்ராம் பண்ண முடியாதுன்னு" என்றவன் வேகமாக அங்கிருந்து வெளியே சென்றான்.***

***கௌதம் போட்ட சத்தத்தில் அந்த இடமே குண்டு ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவு ரொம்ப அமைதியாக இருந்தது. காவ்யா ப்ரியாவை பரிதாபமாக பார்க்க, வர்ஷா கேலியாக பார்த்தாள். வினோத் ப்ரியாவிடம்"அவன் எதோ கோபத்தில கத்துறான், நீ பயப்படாத" என்றதும்,"இல்ல வினோத் அண்ணா, கௌதம் மேல தப்பு இல்ல, நான் தான் கொஞ்சம் டென்ஷன் ஆகிட்டேன், இப்ப எனக்கு பயம் இல்ல நான் ப்ரோக்ராம் பண்றேன்" என்றாள் ப்ரியா. வினோத் அவளை ஆச்சர்யமாக பார்த்து கொண்டே சென்றான்.***

***கௌதம் கோபமாக வெளியே வந்தவன், நேராக சென்று ஷ்ருதியின் அருகே அமர்ந்து விட்டான். ஷ்ருதி கௌதமிடம்"முரளி வந்திருக்காங்க" என்றதும்,"தெரியும்...நான் தான் மதியம் முரளிய ஏர்போர்ட்ல இருந்து கூடிட்டு வந்து, அவங்க வீட்ல விட்டேன்"***

***என்றான்"அப்ப நீயும் கூட்டு களவானியா! ஆமா... நீ ஏன் இங்க வந்து உட்கார்ந்திருக்க" என்று ஷ்ருதி கேட்க,"ம்ம்... உன் அண்ணிக்கு ப்ரோக்ராம் பண்ண பயமா இருக்காம்" என்றதும், கவலை அடைந்த ஷ்ருதி மறுபக்கம் அமர்ந்திருந்த முரளியிடம் ப்ரியாவின் பயத்தை சொல்ல... அவனும் கவலை கொண்டான்.***

***நிகழ்ச்சி தொடங்க... முதலில் வந்திருந்த விருந்தினர்களை மேடைக்கு பேச அழைக்க வந்த ப்ரியாவின் முகத்தை பார்த்தால், எப்போது வேண்டுமானாலும் மயங்கி விழுந்துவிடுவாள் போல இருந்தது. கௌதம், முரளி மற்றும் ஷ்ருதி கவலையுடன் அவளையே பார்த்து கொண்டிருக்க, மேடைக்கு வந்த ப்ரியா மெதுவாக மூச்சை நன்றாக இழுத்துவிட்டவள், மைக் முன் நின்று தெளிவான ஆங்கில உச்சரிப்பில் அழகாக பேசினாள். ப்ரியா பேசி முடித்ததும் அவள் எதோ பெரிய சொற்பொழிவு ஆற்றியது போல் அனைவரும் அவளுக்கு கைதட்டினார்கள். அடுத்து வந்த பேசிய கல்லூரி முதல்வருக்கு கூட யாரும் அந்த அளவுக்கு கை தட்டவில்லை.***

***கௌதம் சந்தோஷமாக எழுந்து உள்ளே செல்ல... அங்கே ப்ரியா ஒரு ஓரமாக அமர்ந்து கொண்டு ஜூஸ் குடித்து கொண்டிருந்தாள். கௌதமை பார்த்த வினோத்"டேய்... நீ இனிமே அவளை திட்டாத நாங்க அவளோட ஒரு டீலிங் போட்டிருக்கோம், எப்ப எல்லாம் ப்ரியா மேடைக்கு போயிட்டு வராலோ... அப்ப எல்லாம் அவளுக்கு ஒரு ஜூஸ் கரெக்டா ப்ரியா..." என்று வினோத் கேட்க, உறிஞ்சி கொண்டிருந்த ஸ்ட்ராவில் இருந்து வாயை எடுக்காமல் தலையை மட்டும் ஆட்டினாள் ப்ரியா. அவளை பார்த்த கௌதமிற்கு அவளை கட்டி அனைத்து முத்தம் கொடுக்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் இருக்கும் இடத்தை உணர்ந்து கட்டுபடுத்தியவன், ப்ரியாவின் அருகில் சென்று அவளையே பார்த்து கொண்டு நிற்க, கௌதமிடம் ஜூஸ் வேண்டுமா.... என்று ப்ரியா செய்கையில்***



Ramya Rajan

கேட்க, அவன் வேண்டாம் என்று தலை ஆட்டினான். அங்கே வந்த வினோத் போதும்டா உன்னோட ரொமான்ஸ், போய் ரெடியாகு என்றதும் சிரித்து கொண்டே சென்றான் கௌதம்.

காவ்யா ப்ரியாவிடம் ”உனக்கு கௌதம் அண்ணா மேல கோபம் இல்லையா, உன்ன எல்லார் முன்னாடியும் எப்படி திட்டினாங்க” என்று கேட்க, இல்லை என்று தலை ஆட்டினாள் ப்ரியா, காவ்யா பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த கார்த்திக்”கௌதம் மட்டும் அப்படி திட்டலைனா ப்ரியா பயந்து அழுதுட்டு ப்ரோக்ராமே பண்ணி இருக்க மாட்டா, என்ன ப்ரியா?”என்று சொல்ல,”ஆமா காவ்யா, கார்த்திக் அண்ணா சொல்றது கரெக்ட். கௌதம் மட்டும் கோபமா பேசாம அமைதியா பேசி இருந்தா... என்னோட பயம் போய் இருக்காது” என்றாள் ப்ரியா.

விருந்தினர்கள் பேசி முடித்ததும் முதல் நிகழ்ச்சி கௌதமின் பாட்டு தான், இப்போது ப்ரியாவுடன் கார்த்திக்கும் மேடைக்கு வந்தான், ப்ரியாவின் முகம் இப்போது அழகாக புன்னகையில் மலர்ந்து இருந்தது. இருவரும் அடுத்த வரவிருக்கும் நிகழ்ச்சியை பற்றி பேசினார்கள், ப்ரியா இப்போது பாட இருப்பது கௌதம் வாசுதேவன் என்று மைக்ல் அறிவித்ததும், கௌதம் மேடைக்கு வந்தவன் தனுஷ் நடித்த படிக்காதவன் படத்தில் இருந்து...

“ஹே வெற்றி வேலா

எங்க ஆட்டம் தான் எகிறுது ஜோரா

ஹே அடி தூலா நாம எப்போதும் ஜெயிக்கணும் தோழா"

என்ற பாட்டை ஆடிக் கொண்டே பாட, அரங்கத்தில் இருந்த எல்லோரும் கை தட்டி கொண்டே அவன் பாடலை கேட்டனர். பாட்டின் நடுவே வரும் ட்ராக் பாட வினோத்தும் மேடைக்கு வர, கௌதமும், வினோத்தும் சேர்ந்து பாடிக்கொண்டே போட்ட ஆட்டத்தில்... பார்வையாளர்களில் இருந்த நிறைய பேர் எழுந்து ஆடினார்கள். ஷ்ருதி விட்டால் எழுந்து ஆடிவிடுபவள் போல இருந்தாள், அவளை உட்கார வைப்பதே முரளிக்கு பெரும் பாடாக இருந்தது. ப்ரியா கௌதமின் பாட்டை இமைக்க மறந்து பார்த்து கொண்டிருந்தாள்.

பாட்டு முடிந்து நெடு நேரம் வரை கைதட்டல் தொடர்ந்தது, அடுத்த... அடுத்த... நிகழ்ச்சிகளும் களைகட்ட விழா முடிய இரவு ஒன்பது மணி ஆனது. காவ்யா பாடி முடித்ததுமே அவளது பெற்றோர் அவளை அழைத்து சென்றுவிட்டனர்.

ஷ்ருதி ப்ரியாவை கட்டி பிடித்து சூப்பரா பண்ண ப்ரியா என்றாள், அதற்க்கு ப்ரியா "கார்த்திக் அண்ணா தான் சொல்லி தந்தாங்க, நான் அவங்க சொன்ன மாதிரி தான் செஞ்சேன்" என்றாள். முரளி கௌதமிடம்" உன்னோட பாட்டு தான் இன்னைக்கு ஹைலைட்" என்று பாராட்டியவன், கார்த்திக்கிடம்" பின்னிட்ட கார்த்திக் உன்னோட வர்ணனை... ரொம்ப நல்லா இருந்துச்சு" என்று வாழ்த்த," ஆமா... கார்த்தி அண்ணா சூப்பர்" என்றாள் ஷ்ருதி. கார்த்திக்கின் பெற்றோருக்கு தங்கள் மகன் மேல் அவர்கள் அனைவரும் காட்டும் அன்பை பார்த்து மிகவும் சந்தோஷமாக இருந்தது. இவர்கள் அனைவரும் எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று கார்த்திக்கின் அம்மா கடவுளிடம்

**வேண்டிகொண்டார். ஆனால் அவருக்கு தெரியவில்லை, இனி தான் இவர்கள் சோதனையை சந்திக்க போகிறர்கள் என்று.**

**தொடரும்...**

Ramya Rajan